# உள்ளங்கையில் உலக இலக்கியம்



சாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளங்கையில் உலக இலக்கியம்

○

**சாந்தன்**

**இருவாட்சி**

(இலக்கியத் துறைமுகம்)

41, கல்யாணசுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011.
அலைபேசி : 9444640986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❒ Ullankayil Ulaka Ilakkiyam

❒ Essay - A. Santhan

❒ First Edition : 24-4-2010

❒ Pages : 180

❒ Cover Design : Mouse Point

❒ Laser : New Paris Desk Top Publishing,
Chennai-99. Ph. : 9444 21 31 52

❒ Printed at : Bharathi Achagam, Chennai-5.

●

Published by : **Iruvaatchi**
41, Kalyana Sundaram Street,
Perambur, Chennai - 600 011.
Cell : 9444640986
bookudaya@rediffmail.com

●

Price : **100/-** (Rupees One Hundred Only)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தனின் தேடல்

உலக இலக்கியம் என்று வரும்பொழுது அது ஒரு சமுத்திரம். இருபதாம் நூற்றாண்டை எடுத்துக் கொண்டாலும், உடனிகழ்கால இலக்கியங்கள் பற்பல மொழிகளில், பல்வேறு நாடுகளினின்றும் பரிமளித்துள்ளன. அத்தனையையும் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் படித்துச் சுவைப்பது சாத்தியமானதொன்றல்ல. எனவேதான் ஒரு தேர்வு முறையிலான வகைப்படுத்தல் அவசியமாகிறது. அந்தத் தெரிதலுக்கு இணங்க நண்பர் ஐயாத்துரை சாந்தன் தாம் படித்தவற்றுள் சிலவற்றைத் தேர்ந்து அத்தியாவசிய விபரங்களுடன், சிறு குறிப்புகளாக ஓரளவு திறனாய்வு அடிப்படையில் நமக்குத் தந்திருக்கிறார்.

உலக இலக்கியங்களை இவ்வாறு இதுவரை யாரும் தொகுத்து அறிமுகம் செய்திருப்பதை நான் அறியேன். தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும் மறைந்தவருமான க.நா.சுப்பிரமணியம் படித்திருக்கிறீர்களா? I, II ஆகிய நூல்களையும், உலகத்துச் சிறந்த பத்து நாவல்கள் என்ற நூலையும் தந்துள்ளார். உலக இலக்கியம் தொடர்பாக எழுத்து என்ற சிற்றேட்டிலும், 'கல்கி' யிலும் சில கட்டுரைகளை அவர் எழுதியதாக ஞாபகம். அவை நூல்களாக வெளிவந்தனவா தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது நமக்கு ஐ.சாந்தனின் உள்ளங்கையில் உலக இலக்கியம்- என்ற பெறுமதியான நூல் கிடைத்திருக்கிறது. 'பெறுமதியான' -ஏனெனில், வேறு எந்த நூலும் இம்மாதிரியாக நமக்குக் கிடைக்காததால், தமிழ் மட்டுமே தெரிந்த நம்மவர்களில் பலருக்கு, இந்நூல் சிறிய அளவில் பெரிய எழுத்தாளர்கள் பற்றிய விபரங்களை அறிந்து பயன்பெற பெரிதும் உதவும். சாந்தன் இப்பணியைச் செய்துள்ளதால் அவருக்கு நமது பாராட்டுதல்களையும் நன்றியையும் செலுத்துவோம். சாந்தன் ஓர் ஆக்க இலக்கிய எழுத்தாளர் என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் எழுதி வெளியிட்ட நூல்கள் அவர் ஆற்றலைப் பறை சாற்றும். இலங்கையில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலும், உயர்மட்ட ரசனையுடைய வாசகர்கள் சாந்தனின் நுண்ணிதான பார்வைகள் அவருக்கே பிரத்தியேகமானவை என்பதனையும், தமிழ் மொழிக்கே மிகவும் அபூர்வமானது என்பதனையும் அறிந்து வைத்திருப்பர். சாந்தனின் தனித்தன்மையான எழுத்துவன்மைக்குக் காரணம் மொழியின் சிறப்புகளை அறிந்துவைத்து தக்க இடத்தில் தக்க சொல்லைப் பயன்படுத்தித் தனது வெளிப்பாட்டுத்திறனை நமக்கு உணர்த்தி நம்மைப் பரவசப்படுத்துபவராக அவர் இருப்பதால்தான். அது மாத்திரமல்ல, அவர் ஓயாது, சிறந்தவற்றைச் சிறுவயது முதலே தேர்ந்தெடுத்து' வாசிக்கும் பழக்கமுடையவருமாவர்.

இதற்கு ஓர் உதாரணம்: தி.ஜானகிராமன் நினைவு குறுநாவல் போட்டியில் கலந்து கொண்டு பரிசுக்கதையாக அவர் எழுதிய 'தேடல்' கதையைக் குறிப்பிடலாம். அறிவுப்பசி, தேடல் முயற்சி, சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்தல், படித்தனுபவித்தல், நமக்கெல்லாம் அவசியம் என்பதை நம்மில் பலர், குறிப்பாக இளைய பரம்பரையினர் உணர்ந்து செயற்படத் தவறிவிடுகிறோம். மிகவும் சுவாரஸ்யமான முறையில் சாந்தன் தன் சொந்த அனுபவத்தையே, படிக்கத்தவறிவிட்ட குறிப்பிட்ட சில நாவல்களைத் தேடும் முயற்சி பற்றி இக்கதையில் விபரித்திருக்கிறார். அவசியம் படித்துப் பாருங்கள்.

இனி, உள்ளங்கையில் உலக இலக்கியம் என்ற இந்த நூலுக்கு நாம் வருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தனின் தேர்வு முறையில் நின்று பார்க்கும்பொழுது அவர் சார்பு எத்தகையது என்பதை நாம் விரைவிலேயே அறிந்து கொள்கிறோம். இடதுசாரி சார்பான இலக்கியங்களுக்கும், போராட்டங்களைச் சித்தரிக்கும் படைப்புகளுக்கும் அழுத்தம் கொடுக்கும் விதத்தில் அவர் தேடலும், நாட்டமும் இருப்பதை நாம் அவதானிக்கிறோம். அதே சமயம், பிறவகையிலான எழுத்துகள் பற்றிய தனது பார்வை சார்ந்த திறனாய்வுக் குறிப்புடன் கூடிய அறிமுகத்தையும் அவர் செய்யத் தவறவில்லை.

இந்நூலில் அவர் எழுதிய 'ஒருவரி' என்ற எழுத்துப் பதிவைப் படித்துப்பாருங்கள். பின்னர், நாம் நூலுக்குள் நுழைந்தால் சோவியத் இலக்கியம், சீன இலக்கியம், வியட்நாம் இலக்கியம், பிந்திய கால ருஷ்ய இலக்கியம் போன்றவை பற்றிய முன்னுதாரணங்களை நமக்குக் காட்டிப் பின் பிற தொடர்பான விபரங்களைத் தருகிறார்.

ஜெர்மனி, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க மாநிலங்கள் போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களின் முக்கியத்துவம் குறித்து விளக்குகிறார். பின்னர் கறுப்பர் இலக்கியம், செவ்விந்தியர் இலக்கியம், இலத்தின் அமெரிக்க எழுத்தாளர்கள், ஸ்பானிய எழுத்தாளர்கள், பிரெஞ்சு எழுத்தாளர்கள், போர்த்துகேய எழுத்தாளர்கள், இத்தாலிய எழுத்தாளர்கள், ஹங்கேரி எழுத்தாளர்கள், யூத எழுத்தாளர்கள், பலஸ்தீன எழுத்தாளர்கள் என்றெல்லாம் எழுதி அறிமுகஞ் செய்துவிட்டு ஆபிரிக்க, தென்னாபிரிக்க எழுத்தாளர்களுக்கு வருகிறார்.

கியூபா, கரிபியத் தீவுகள், அண்மைக்காலப் புதிய நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்த எழுத்தாளர்களையும் அவர் விட்டு வைக்கவில்லை. கிழக்கே, ஜப்பானிய மற்றும் அவுஸ்திரேலிய, நியூஸிலாந்து, தென்கொரியா, ஐக்கிய ராச்சிய நாடுகள், இந்தியா, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளின் முக்கிய எழுத்தாளர்கள் பற்றியும் அவர் அறிமுகங்களைத் தருகிறார்.

சில கவிதைகளை அவர் தமிழில் தந்திருப்பதும், அவை பற்றிய தனது பார்வையை வெளிப்படுத்தியிருப்பதும் முக்கியமானது, கூட்டுமொத்தமாக அவரது நோக்கம் நிறைவேறியிருப்பதையும் நாம் இலகுவில் கவனித்துக் கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைச் சொன்னால் நான் இதுவரையறிந்திராத பல செய்திகளை சாந்தனின் இந்த நூல் மூலம் அறிந்து கொண்டேன். அவருடைய பார்வை பரந்து விரிந்ததொன்று. தமிழிலேயே உலக இலக்கிய வலத்தை மேற்கொள்ள சாந்தனின் இச்சிறு நூல் பெரிதும் பயனளிக்கிறது.

**கே. எஸ். சிவகுமாரன்**

*21, முருகன் பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு - 06.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வரி

எழுத்தாளனாக அறியப்பட்டிருந்தாலும், நான் முதலிலும் முற்றிலும் ஓர் வாசகன். வாசிப்புத்தான் என்னை எழுத்துக்கு இட்டு வந்தது.

சின்ன வயதிலிருந்தே நூல்கள் நிறைந்த வீட்டுச் சூழல். அதைவிட, பாட்டனாரும் பெற்றோரும் போட்டி போட்டு வாங்கித்தந்த கண்ணன், கரும்பு, சாக்லேட், பாலபாரதி, அம்புலிமாமா, கல்கண்டு இதழ்கள், கண்ணன் வெளியீடுகள், கழகக் கதைத் தொகுப்புகள்... இன்னும் நினைவில் நிலைத்து இனிக்கும் தூங்கும் அழகி, மாஸ்டர் பாலகுமார், சமர்த்து மைனா, லீடர் மணி... பூ வண்ணன், வாண்டு மாமா, ஆர்வி, அழ.வள்ளியப்பா என்றிருந்து பிறகு தமிழ்வாணன் வழியாக கல்கி, அகிலன், நா.பா, ஜெயகாந்தன் என்றாகிய போது படிப்பு நிமித்தம் ஊரை விட்டுக் கொழும்போடு வாசம். பிறகு, வேலையும் அங்கு.

அக்காலம், அசோகமித்திரன், ஜானகிராமன், நீல. பத்மநாபன், கணையாழி, தீபம், ஞானரதம் என்று தொடர்ந்தது. கூடவே, வாசிப்பு ஊடகம் கூடியதன் ப்யனாய் அப் புது முனைப்புடன், சோவியத் கலாசார இல்லம், பிரிட்டிஷ் கௌன்சில், அமெரிக்கன் சென்ரர், பொதுநூலகம் - என்றெல்லாம் வாராந்த யாத்திரைத் தலங்களாகின. நடைபாதை வியாபாரிகள் புண்ணியத்தில் புதிய சேகரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83ல் ஊரோடு மீண்டும் வந்த பின், யாழ் மாநகர சபை நூலகம் ஒன்று மட்டுமே. எனினும் பின்னர் தொழிநுட்பக் கல்லூரிகளின் நூலகங்கள், எதிர்பாரா அளவிற்குத் தம்மை வெளிப்படுத்தின. தொண்ணூறுகளிலிருந்த பழைய புத்தகக் கடைகள் ஒவ்வொன்றிலுமே எண்ணியும் பார்த்திராத எத்தனை! என் மதிப்பிற்குரிய ஏ.ஜே.அவர்களும், ஆசான் ராஜசிங்கம் அவர்களும் அவ்வப்போது 'படிக்கத்' தந்த பொக்கிஷங்கள்...

போர்ச்சூழலும் தொடர்ந்த ஊரடங்குகளும்கூட - செய்வதற்கு வேறொன்றுமில்லாமல் - வாசிப்பு விஷயத்தில் நன்மையே செய்தன! நிறைய நேரங்கிடைத்தது. இடம் பெயர்ந்த வேளைகளிலும் எங்கெங்கிருந்தோ ஏதேதோ கிடைக்கவே செய்தன - இரவில் மண்ணெண்ணெய்க் கை விளக்கில் படித்துக் கண்ணைப் பழுதாக்கும் வரை!.

'அமைதிப்படை' காலத்தில் வட்டுக்கோட்டையில் கிடைத்த பெர்ள்.எஸ்.பக்கின் 'நல்ல நிலம்' வண்ணார்பண்ணையிலிருந்த போது படித்த ஷோலகோவின் 'கன்னிநிலம்' சாவகச்சேரியில் கிடைத்த வி.எஸ்.நைபோலின் பல நாவல்கள்....

தொண்ணூற்றைந்து தொண்ணூற்றாறு பெரும் பெயர்வில் எல்லாவற்றையும் விட்டு விட்டுப் புறப்பட்ட போதும், அலுமாரிகளின் நினைவுதான். ஆறுமாத காலம்! எதிர்பாராவிதமாகத் திரும்ப முடிந்த போது எதிர்பாரா விதமாக அலுமாரிகளும் பத்திரமாகவே இருந்தன. ஆக, இக்னேஷியோ ஸிலோனியின் 'நரியும் கமெலியாப் பூக்களும்' நாவலை - யாரோ, எதற்கோ, எப்படியோ - எடுத்து வெளியே கதிரையில் போட்டிருந்ததைவிட ! ஆனால், விரைவிலேயே, ஒரு 'அன்ரி - க்ளைமாக்ஸ்' போல அத்தனை புத்தகங்களையுமே கை விட நேர்ந்த கவலை!

அரைமணியாவது வாசியாமல் இரவில் தூக்கம் வராதென்ற பழக்கம், எந்த அனுபவம் சித்திக்கும் போதும் அதை ஏற்கனவே எதிர்கொண்டு விட்ட உணர்வு; இந்த வாழ்விலேயே ஓராயிரம் வாழ்க்கைகளை வாழ்ந்து விட்ட திருப்தி!

தொண்ணூற்று ஐந்து, மார்ச்சில் கலை பண்பாட்டுக் கழகம் நடத்திய மூன்று நாள் இலக்கியக் கருத்தரங்கிற்காக 'உலக விடுதலைப் போராட்ட இயக்கம்' பற்றி இரண்டே நாள் அவகாசத்தில் ஆயத்தப்படுத்த நேர்ந்த அந்த 25 பக்கக் கட்டுரை பலரின் பாராட்டையும் பெற்றது. இதுநாள் வரையில் 'இரவிரவாய்க் கண்விழித்து' எழுதியது அப்போதுதான்; அதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு தொண்ணூற்று ஏழிலாக இருக்க வேண்டும். 'இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்' பற்றி ஆற்ற நேர்ந்த உரை.

ஏதாவது எழுதுங்களேன் என்ற அழைப்பின் விளைவாய் இவ்விரு பேச்சுக்களையும் இணைத்து ஐந்தாறு இதழ்களில் எழுதிவிடலாம் எனப் புறப்பட்ட 'இருபதாம் நூற்றாண்டில் உலக இலக்கியம் - சில குறிப்புகள்' தன் பாட்டில் இருபத்தெட்டு வாரங்கள் தொடர்ந்தது. 'சஞ்சீவி'யில் தொண்ணூற்று ஒன்பதில்.

எழுதும் போது மறந்தவை, எழுதிய பிறகு படித்தவை எல்லாம் சேர்த்துப் பிறகு பார்க்கலாம் என்று புத்தகமாக்குவது பற்றி அப்போது கேட்டவர்களுக்கெல்லாம் சொன்னாலும். முழுமை'யாக்கிவிட முடிந்த விஷயமா, இது? ஏதோ அப்பெருங்கடலில் அள்ள முடிந்த ஒரு 'சிறங்கை', ஒரு பதச்சோறு. அவ்வளவே,

ஒரு நீண்ட வாசிப்பின் நினைவுப் பதிவுகள் மட்டுமே இவை இலக்கிய ஆர்வமிக்க இளைய தலைமுறையொன்றிற்கு ஓரளவாவது பயன்படுமென்ற நம்பிக்கையில் எழுத்திலும் பதியப்பட்டன. மொழி, மற்றும் தேச வாரியாகவோ, கால ஒழுங்கிலோ கூறுகட்டி நிரற்படுத்தாமல் இயல்பான சிந்தனையோட்டத்திலமைந்த கட்டுரையாகி விட்டது. இலக்கியச் கட்டுரையொன்று அப்படியிருப்பதில் ஆட்சேபிக்க எதுவுமில்லையென்றும், அதுவே அதன் அழகென்றுங் கூடப் படுகிறது.

தமிழில் மட்டுமே படிக்கும் வாசகர்களுக்கானவையே இக்குறிப்புகள். உலகத்தரத்திற்கு எழுதிய, எழுதிக்கொண்டிருக்கிற எத்தனையோ தமிழ் எழுத்தாளர்கள் பற்றி நாம் பெருமை கொள்ள இயலும். அவர்களை எம் வாசகர்கள் நன்கறிந்திருப்பார்கள் என்பதால் ஏனைய மொழிப்படைப் பாளிகளே இந்நூலில் இடம் பெற்றுள்ளனர் என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

ஏலவே சிறப்புடன் பிரசுரித்த 'சஞ்சீவி'யின் வ. கானமயில்நாதன், ந. வித்தியாதரன், முதல் பதிப்பாளர், 'மூன்றாவது மனிதன்' எம். ஃபௌஸர் ஆகியோர்க்கும், இப்போது ஆர்வத்துடன் அழகுற நூலாக்கும் உதய கண்ணன் மற்றும் முன்னுரை எழுதிய கே.எஸ். சிவகுமாரன் ஆகியோர்க்கும் என் அன்பு கலந்த நன்றி.

---

**ஐ. சாந்தன்**

அண்ணாமலை வீதி, சுதுமலை, மானிப்பாய், இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 1

மாக்சிம் கோர்க்கி Maxim Gorky
அலெக்சாந்தர் ஸெரபிமோவிச் Alexander Serafimovich,
நிக்கலாய் ஒஸ்த்ரோவ்ஸ்கி Nikolai Ostrovski,
மிஹயீல் ஷோலக்கவ் Mikhail Sholokhov,
பரீஸ் பாஸ்தர்நாக் Boris Pasternak
அலெக்சேய் தல்ஸ்தோய் Alexei Tolstoi
லேவ் தல்ஸ்தோய் Leo Tolstoi
அந்தோன் சேகவ் Anton Chekhov
விளதீமிர் மாயாகோவ்ஸ்கி Vladimir Mayakovski
அலெக்சாந்தர் புளொக் Alexander Blok

## அத்தியாயம் - 2

லூ சுன் Lu Hsun
தோ ஹூ To Huu
சே லான் வியன் Che Lan Vien
ஹோ சி மின் Ho Chi Minh

## அத்தியாயம் - 3

அன்னா அக்மத்தோவா Anna Akhmatova
வலெந்தின் கத்தாயெவ் Valentin Katayev
பரீஸ் வஸீலியெவ் Boris Vassiliev
பரீஸ் பொலெவோய் Boris Polevoy
அலெக்சாந்தர் சக்கோவ்ஸ்கி Alexander Chakovsky

## அத்தியாயம் - 4

அலெக்சாந்தர் சல்செனித்சின் Alexander Solzhenitsyn
ஜோர்ஜி விளதிமோவ் Georgi Vladimov
இவான் புனின் Ivan Bunin,
யெவ்கெனி ஸம்யாத்தின் Yevgeni Zamyatin,
விளதீமிர் நபொக்கோவ் Vladimir Nabokov



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 5

ஜோசப் கொன்ராட் Joseph Conrad

## அத்தியாயம் - 6

எரிக் மாறியா றிமார்க் Erich Maria Remarque
தோமஸ் மான் Thomas Mann
ஹெர்மன் ஹெஸெ Hermann Hesse
ப்ரான்ஸ் காப்கா Franz Kafka
குந்தர் கிறாஸ் Gunter Grass
ஹென்றிக்போல் Henrich Boll
நெல்லி சாக்ஸ் Nelli Sachs

## அத்தியாயம் - 7

மிலான் குண்டேரா Milan Kundera
ஜான் ஸ்கசல் Jan Skacel
ஜோசப் ஸ்க்வொரொஸ்கி Josef Skvorecky
வாஸ்லாவ் ஹாவெல் Vaclav Havel
ஜாரொஸ்லாவ் ஹாஸெக் Jaroslav Hasek
ஜூலியஸ் பூசிக் Julius Fusik,

## அத்தியாயம் - 8

ஏணெஸ்ற் ஹெமிங்வே Ernest Hemingway
நோமன் மெய்லர் Norman Mailer
ஜோன் ஸ்ரைன்பெக் John Steinbeck
வில்லியம் போக்னர் WilliamFaulkner
ஸோல் பெல்லோ Saul Bellow
ஜோன் ஒஹறா John Ohara
ஜோன் அப்டைக் John Updike
றொபேட் ப்றொஸ்ற் Robert Frost
காள் ஸான்ட்பேக் Carl Sandburg


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 9

றிச்சாட் றைற் Richard Wright,
ஜேம்ஸ் பால்ட்வின் James Baldwin,
லாங்ஸ்ரன் ஹ்யூக்ஸ் Langston Hughes
அலெக்ஸ் ஹேலி Alex Haley,
ஜேம்ஸ் அலன் மக்பெர்ஸன் James Alan McPherson,
அலிஸ் வாக்கர் Alice Walker
ற்ரோனி மொறிஸன் Toni Morrison
ஸ்கொட் மொமாடே Scott Momaday
லெஸ்லி மாமொன் சில்க்கோ Leslie Marmon Silko

## அத்தியாயம் - 10

காப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ் Gabriel Garcia Marquez
ஜோர்ஜ் லூயி போர்ஹே Jorge Luis Borges
ஒக்ராவியோ பாஸ் Octavio Paz
பாப்லோ நெரூதா Pablo Neruda
கார்ஸியா லோர்க்கா Garcia Lorca

## அத்தியாயம் - 11

அல்பர் கமூ Albert Camus
ழீன் போல் சார்த்தர் Jean Paul Sartre
ஸிமோன் த பொவா Simone de Beauvoir
பீலிக்ஸ் பென்யோன் Felix Feneyon
ஸல்லி புரூதம் Sully Prudhomme
அனதோல் பிரான்ஸ் Anatole France
அந்த்ரே மால்றோ Andre Malraux

## அத்தியாயம் - 12

ஜோஸ் ஸரமகோ Jose Saramago
அந்தோனியோ லோபோ அந்தியூன்ஸ் Antonio Lobo Antunes



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 13

இக்னேஷியோ ஸிலோனி Ignazio Silone
லூகி பிராண்டெல்லோ Luigi Pirandello
அல்பேட்டோ மொறாவியா Alberto Moravia
கிறேசியா டெலட்டா Grazia Deledda
நட் ஹாம்ஸன் Knut Hamsun
ரோல்ட் டால் Roald Dahl

## அத்தியாயம் - 14

ஐஸாக் பஷெவிஸ் சிங்கர் Íssac Bashevis Singer
லியோன் யூரிஸ் Leon Uris

## அத்தியாயம் - 15

மஹ்மூத் தர்வீஷ் Mahmoud Darwish,
அபு ஸல்மா Abu Salma
நகீப் மஹ்பவுஸ் Naguib Mahfouz
யூசுப் எல் ஸெபாய் Youssef El-Sebai
றஷாட் அபு ஷாவர் Rashad Abu Shawer

## அத்தியாயம் - 16

கென்னத் கவுண்டா Kenneth Kaunda
ங்குகி வா தியங்கோ Ngugi Wa Thiongo

## அத்தியாயம் - 17

சின்னுவ அச்சிபெ Chinua Achebe,
வோலெ சொயிங்கா Wole Soyinka ,
ப்ரெடெறிக் போஸைத் Frederick Forsyth
சைப்ரியன் எக்வென்ஸி Cyprian Ekwensi
பென் ஒக்ரி Ben Okri
கப்ரியல் ஒக்காரா Gabriel Okara
கென் ஸரோ விவா Ken Saro-Wiva


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 18

ஆய் க்வெய் ஆர்மா Ayi Kwei Armah
லென்றி பீற்றேஸ் Lenrie Peters
அகஸ்தினோ நெட்டோ Agostinho Neto
ஜோஸ் லுவாண்டினோ வியைரா Jose Luandino Vieira
லியோபோல்ட் செடார் செங்கோர் Leopold Sedar Senghor
கமரா லே Camara Laye
அப்துல் ரஸாக் குர்ணா Abdul Razak Gurnah

## அத்தியாயம் - 19

கமராடா ஜோர்ஜ் றெபெலோ Camarada Jorje Rebelo
மொங்கேன் ஸெரோட் Mongane Serote
டொன் மட்டேரா Don Mattera
டென்னிஸ் ப்ரூட்டஸ் Dennis Brutus
ஸொல் ரி பிளாற்ஜே Sol T Plaatje
பீற்றர் ஏப்ரஹாம்ஸ் Peter Abrahams
அலன் பேற்றன் Alan Paton
நடீன் கோடிமர் Nadine Gordimer
ஜே.எம். கொயட்ஸி J.M.Coetzee
ஸ்ரீவ் ஜேக்கப்ஸ் Steve Jacobs
எற்றியன் லெரோ Etienne Leroux
பெவெர்லி நாயுடு Beverley Naidu
அலெக்ஸ் லா குமா Alex La Guma
பாரி பெய்ன்பேக் Barry Feinberg

## அத்தியாயம் - 20

றெனால்டோ கொன்சாலஸ் Reynaldo Gonzalez
அனா மரியா சிமோ Ana Maria Simo
நிக்கொலாஸ் கில்லன் Nicolas Guillen
வி.எஸ்.நைபோல் V.S.Naipaul
ஷிவா நைபோல் Shiva Naipaul
ரோஜர் மெய்ஸ் Roger Mais


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரல்ட் ஸொனி லடூ Harold Sonny Ladoo
வி.எஸ்.றெய்ட் V.S.Reid
டெரெக் வால்கொட் Derek Walcot
எட்வேட் பிராத்வெய்ற் Edward Brathwaite

## அத்தியாயம் - 21

ரசூல் கம்ஸதோவ் Rasul Gamzatov
சிங்கிஸ் ஐத்மத்தோவ் Chinghiz Aitmatov

## அத்தியாயம் - 22

யஸுநரி கவபட்டா Yasunari Kawabata
யுகியோ மிஷிமா Yukio Mishima
ஷுஷாகுஎன்டோ Shusaku Endo
கென்ஸாபுரோ ஓய் Kenzaburo Oe
கசுவோ இஷிகுரோ Kazuo Ishiguro

## அத்தியாயம் - 23

ஜோன் மொறிஸன் John Morrison
பட்றிக் வைற் Patrick White
ரோஜர் மக்டொனால்ட் Roger Mc Donald
குளோரியா ப்றெய்ன்னன் Gloria Brennan
பிராங் சர்கேசன் Frank Sargeson
கத்தறீன் மான்ஸ்பீல்ட் Katherine Mansfield
பாபறா அன்டர்ஸன் Barbara Anderson
ஸியா பிஜியெல் Sia Figiel
கிம் ச்சி ஹா Kim Chi Ha

## அத்தியாயம் - 24

ஜோர்ஜ் பெர்னர்ட் ஷா George Bernard Shaw
ஜேம்ஸ் ஜொய்ஸ் James Joyce
வில்லியம் பட்லர் யீட்ஸ் William Butler Yeats
ஜோன் மில்லிங்ரன் ஸிஞ்ஜ் John Millington Synge


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷொண் ஓ பாலின் Sean O Faolain
சாமுவெல் பெக்கெற் Samuel Beckett

## அத்தியாயம் - 25

ஹரோல்ட் பின்ரர் Harold Pinter
பெர்ரோல்ட் ப்ரெக்ற் Bertolt Brecht

## அத்தியாயம் - 26

டி.எச்.லோறன்ஸ் D.H.Lawrence
ஜோர்ஜ் ஓர்வெல் George Orwell
வேஜீனியா வூல்ப் Virginia Woolf
வில்லியம் கோல்டிங் William Golding
ரி.எஸ்.எலியட் T.S.Eliot
ஓடென் W.H.Auden

## அத்தியாயம் - 27

ரவீந்திரநாத் தாகூர் Rabindranath Tagore
ஆர்.கே.நாராயண் R.K.Narayan
முல்க் ராஜ் ஆனந்த் Mulk Raj Anand
ராஜாராவ் Raja Rao
குஷ்வந்த் சிங் Khuswant Singh
கமலா மார்கண்டேயா Kamala Markandaya
நிஸிம் எஸக்கியேல் Nizzim Ezekiel
அனித்தா தேசாய் Anita Desai
ஏ.கே.ராமானுஜன் A.K.Ramanujan
டொம் மொறாயஸ் Dom Moraes
கமலா தாஸ் Kamala Das
ஸல்மான் ருஷ்டி Salman Rushdie
அருந்ததி ரோய் Arundhati Roy

## அத்தியாயம் - 28

றுத் புரோவர் ஜாப்வாலா Ruth Prawer Jhabvala



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரி அன்ஸ்வேத் Barry Unsworth
பற் பார்க்கர் Pat Barker

## அத்தியாயம் - 29

ஸுல்பிகார் கோஸ் Zulfikar Ghose
சிசில் ராஜேந்திரா Cecil Rajendra

## அத்தியாயம் - 30

கர்தார் சிங் துக்கல் Kartar Singh Duggal
சாதத் ஹஸன் மண்டோ Saadat Hasan Manto
பிரேம் சந்த் Prem Chand
ஆக்யேய Agyeya
அல்தாப் பாத்திமா Altaf Fatima
அதீன் பந்தோபாத்யாய Bandyopadhyaya

## அத்தியாயம் - 31

தகழி சிவசங்கர பிள்ளை Thakazhi Sivasankara Pillai
பி.கேசவ தேவ் P.Kesava Dev
வைக்கம் முகம்மது பஷீர் Vaikom Mohammed Basheer
ஓ.வி.விஜயன் O.V.Vijayan
கே.சிவராம் காரந்த் K.Shivaram Karanth
கிரீஷ் கர்னாட் Girish Karnad
யூ.ஆர்.அனந்தமூர்த்தி U.R.Anantha Murthy

## அத்தியாயம் - 32

தஸ்லீமா நஸ்ரீன் Taslima Nasrin
ஷௌகத் ஒஸ்மான் Shaukat Osman

## அத்தியாயம் - 33

ஜே.எம்.தம்பிமுத்து M.J Tambimuttu
ஜே.விஜயதுங்க J.Vijayatunga
அழகு சுப்பிரமணியம் Alagu Subramaniam


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா புரொக்டர் Raja Proctor
புண்யகாந்தி விஜேநாயக்க Punyakante Wijenaike
ஆன் ரணசிங்ஹ Anne Ranasinghe
ஜீன் அரசநாயகம் Jean Arasanayagam
யஸ்மின் குணரட்ன Yasmine Gooneratna
மைக்கல் ஒண்டாஜ்ஜே Michael Ondaatje
ரொமேஷ் குணசேகர Romesh Gunesekara
ஷ்யாம் செல்வதுரை Shyam Selvadurai
ச்சாளீன் ராஜேந்திரன் Charlene Rajendran
அம்பலவாணர் சிவானந்தன் Ambalavanar Sivanandan
காள் முல்லர் Carl Muller
றெஜி சிறிவர்தன Regi Siriwardena
சோமச்சந்திர விஜேசூரிய Somachandre Wijesuriya
ஜோர்ஜ் அழகையா George Alagiah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01

இருபதாம் நூற்றாண்டின் போது - அதற்கு முந்திய மற்றெந்தக் காலத்தையும் விட - விஞ்ஞான, தொழில் நுட்ப, அரசியல் துறைகளில் மகத்தான மாறுதல்களை இவ்வுலகு காண நேர்ந்தது. மக்கள் வாழ்வும், பண்பாடு - கலை இலக்கியமும் மாற்றங்கண்டன. உலக இலக்கியத்தின் செல்நெறியும் பரிமாணங்களும் பெருமளவிற் பாதிப்புற நேர்ந்தமை இயல்பானதே.

உண்மையில் இந்த வளர்ச்சிகளின் பலனாகவே - மொழி, தேச வாரியாக இலக்கியங்களைப் பார்ப்பதற்கு அப்பால் - உலக இலக்கியம்' என்ற பொதுப் பெயரில் நாம் நோக்கவும் முடிகிறது.

இதற்கு முக்கியமான, பின்வரும் காரணிகளைச் சுட்ட முடியும்.


1. மேற்குறித்த மாற்றங்களும் வளர்ச்சிகளும் உலகை நெருக்கமுற வைத்தமை.
2. இவற்றின் இன்னொரு விளைவாய் மானுட அனுபவங்கள் பொதுத்தன்மை கொள்ள நேர்ந்தமை.
3. உலக மாந்தரிடையேயான கல்வி வளர்ச்சி வீதம் அதிகரித்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மொழி எல்லைகளைத்தாண்டி, இலக்கியப் படைப்புக்கள் விரைவாகவே பரவுவதற்கு மொழி பெயர்ப்பு முயற்சிகள் உடனுக்குடன் உதவியமை.

20-ம் நூற்றாண்டின் மிக முக்கிய நிகழ்வுகளில் ஒன்றும், அதன் பின் ஏற்பட்ட பல நிகழ்வுகளுக்கு உந்து சக்தியாக அமைந்ததுமான ஒன்று, 1917-இல் ருஷ்யாவில் இடம் பெற்றது. அந்த ஒக்ரோபர் சோஷலிஸப் புரட்சியானது. சோவியத் அரசியல்முறை, சோவியத் தேசம் என்பவற்றோடு, 'சோவியத் இலக்கிய'த்தின் பிறப்பிற்கும் காரணமாயமைந்தது.


மாக்சிம் கோர்க்கி

எனினும் உலகையே குலுக்கிய அந்த மொபெரும் புரட்சி இடம்பெறுவதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பே - அதாவது அந்தச் சூறாவளி மையங்கொள்ள முனைந்த வேளையில் - மாக்ஸிம் கோர்க்கியின் தாய் நாவல் வெளியாயிற்று. ஏற்கனவே நமது பல படைப்புக்கள் மூலம் தம்மை ஒரு தலைசிறந்த எழுத்தாளராக நிறுவியிருந்த கோர்க்கியின் கலையாற்றல் அவ்வேளையில் முதிர்ச்சியுற்ற நிலையிலிருந்தது.

உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டெழுந்த தாய், ஒரு விதத்தில் சரித்திரப் பதிவாகவும் அமைந்தது.

அடியடியாக அடக்கு முறைகளுக்கும் நிட்டூரங்களுக்கும் முகங்கொடுக்கும் அமைப்பில் வந்த தாய், புதுவழி நாடிய புரட்சிக்காரனான தன் மகனுடன் இணைந்து போராடுகின்ற கதையை அந் நவீனம் கூறிற்று. 'தாயில்' பிரசாரவாடை அதிகம் வீசுகிறதென்ற விமர்சனம் சிலரால் முன்வைக்கப்பட்ட போதும் உண்மை அதுவன்று. தாயானவள், தன் மகனின் புரட்சி வழிக்குத் திரும்புவது மாக்ஸிஸ சித்தாந்தத்தைப் படித்தல்ல; ருஷ்ய வைதிக திருச்சபையின் கிறிஸ்தவ நெறி நின்ற சிந்தனைகளினூடாகவே, என்பதை வாசகர் உணரும் போது, மேற்கண்ட குற்றச்சாட்டு அடிபட்டுப் போய்விடுகிறது. அத்துடன், தாய் நாவலில் பிரசாரத்தின் வெளிப்பாடாக எந்தக் கோஷமும் எழுப்பப்படவில்லை என்பதும் அதன் இன்னொரு பலமாகிறது. ருஷ்ய இலக்கியத்திலும் சோவியத் இலக்கியத்திலும் மட்டுமன்றி முழு. உலக இலக்கியத்திலுமே தாக்கமேற்படுத்திய படைப்பாகவும் தாய் குறிப்பிடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் இலக்கியத்தினதும், அதன் மையவிசையாயமைந்த 'சோஷலிஸ யதார்த்த வாத'த்தினதும் பிதாமகராகக் கொள்ளப்படுபவர் கோர்க்கி.

அலெக்ஸேய் மாக்ஸிமோவிச் பெஷ்கோவ் - என்ற இயற்பெயர் கொண்ட கோர்க்கி, மனிதன் பிறந்தான், என தோழன், முதற்காதல் போன்ற சிறுகதைகளையும் அர்த்தமானவ் விவகாரம், கிளிம் சம்கினின் வாழ்க்கை ஆகிய நாவல்களையுங்கூட எழுதினார். அவரது சுயசரிதை மூன்று பாகங்களாக வெளியாயிற்று.

புரட்சியைத் தவிர்க்க முடியாத ஒன்றாகக் கருதி, அதற்காகக் காத்திருந்து, அதனை வரவேற்றவர் இன்னொரு மூத்த எழுத்தாளரான அலெக்சாந்தர் ஸெரஃபிமோவிச். அவர் எழுதிய இரும்பு வெள்ளம் நாவல், புரட்சி பற்றி வெளியான ஆரம்பப் படைப்புக்களி லொன்றாகவும், பின்னர் எழுந்த பல ஆக்கங்களுக்கு ஆதர்சமாகவும் குறிப்பிடப்படுகிறது. 'ஸெரஃபிமோவிச் போன்றோரிடமிருந்துதான் நாம் எழுதக் கற்றுக்கொண்டோம்' என ஷோலக்கவ் ஒரு தடவை குறிப்பிட்டார். உண்மைச் சம்பவங்களினடியாக எழுந்த இரும்பு வெள்ளம், சோஷலிஸ யதார்த்த வாதத்தின் செம்மை இலக்கியங்களுள் ஒன்றாகவும் கொள்ளப்படுகிறது. ஆனால் இவற்றிலும் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவை. இலட்சிய வேகமும், புரட்சியில் தம்மை இணைத்துக் கொண்டதால் ஏற்பட்ட பேராட்ட அநுபவங்களும் கொண்டு எழுதப் புறப்பட்ட ஒரு புதிய தலைமுறையினரின் படைப்புக்களாகும். புரட்சி வெற்றி பெற்ற கையோடு - இருபதுகளின் தொடக்கத்திலிருந்து - இவை தோற்றம் பெறலாயின.



**நிக்கலாய் ஒஸ்த்ரோவ்ஸ்கி**

நிக்கலாய் ஒஸ்த்ரோவ்ஸ்கி எழுதிய வீரம் விளைந்தது. திமித்ரி ஃபுர்மானவ் எழுதிய சப்பாயெவ் மற்றும் அலெக்சாந்தர் ஃபதெயெவ் எழுதிய முறியடிப்பு, போன்றவை இம் முனைப்பின் சிறந்த உதாரணங்களாகவும் செம்மை இலக்கியங்களாகவும் அமைந்தன.

ஒஸ்த்ரோவ்ஸ்கியின் வீரமிகு வாழ்வை அடிப்படையாகக் கொண்டெழுந்த உருக்கு எங்ஙனம் உரம் பெற்றது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பிலான நாவலே தமிழில் வீரம் விளைந்தது என்ற பெயரில் வெளியாகிற்று. இந்நாவல் உலகில் நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளில் பெயர்க்கப்பட்டுப் பெரும் வரவேற்பைப் பெற்றது.

எனினும், தமிழ் வாசகர்கள் - விமர்சகர்களால் போற்றப்பட்ட அளவிற்கு, சோவியத் இலக்கியம் பற்றி எழுதிய ஆங்கில விமர்சகர்களால் வீரம் விளைந்தது போற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முக்கியப் பாத்திரமான பாவெலின் படைப்பு சிறப்பாக இருந்தபோதிலும், நாவலின் பிற்பகுதியில் ட்ரொஸ்கியவாதிகள் பற்றிய ஸ்தாலினின் கருத்துகளை ஆசிரியர் அப்படியே எதிரொலிக்க முயன்றமை இதற்குக் காரணமாக இருக்கலாம்.

எப்படியிருப்பினும், சோவியத் நாட்டைப் பொறுத்தளவில் இந்நாவல் புரட்சியின் ஆன்மாவையே படம் பிடித்த ஆக்கமெனப் புகழ்பெற்றது. பின்னாளில், இரண்டாம் உலகப் போரின் போது நாஸிப்படைகளுக்கு எதிராகப் போரிட்ட சோவியத் வீரர்களுக்குப் புதுவீறும் புதுத்தெம்புமளித்த மகத்தான இலக்கியமெனவும் வீரம் விளைந்தது போற்றப்பட்டது. போர்க்களத்தில் காயமடைந்த, மரணமடைந்த வீரர்களின் பைகளிலிருந்து முனை மடிந்தனவும், இரத்தம் ஊறியவையுமான பிரதிகள் கண்டெக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஒக்ரோபர்ப் புரட்சி பற்றிப் பேசுகிற இலக்கியங்களில் தனியிடம் வகிப்பது. நோபல் பரிசு பெற்ற எழுத்தாளரான மிஹயீல் ஷோலக்கவ் எழுதிய தோன் நதி அமைதியாக ஓடுகிறது என்னும் நாவல். இதனை நாவலென்பதிலும் பார்க்க 'வசன காவியம்' என்பதே பொருந்தும். தமது அநுபவ மெய்ம்மை மற்றும் கலையாற்றல் - இவற்றின் பலத்துடன் ஷோலக்கவ் படைத்த தோன்நதி அமைதியாக ஓடுகிறது, மனித வாழ்வின் அழகுகளையும் அவலங்களையும், அக - புறப் போராட்டங்களையும் உயிர்த்துடிப்புடன் படம் பிடித்தது மட்டுமின்றி, போர் என்கின்ற பிரளயத்தையும், மனித இருப்புக்களையே அசைக்கும் அந்த எரிமலைக் குமுறல்களையும் எடுத்துக் காட்டியது. முழுமையான மானுடத்தைத் தரிசிக்க வைப்பதால் - அதில் வெற்றியும் பெறுவதால் - இந்நாவல் ஏனையவற்றிலிருந்து உயர்ந்தே நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிஹயீல்
ஷோலக்கவ்

முதலாம் உலகப்போரிலும், ருஷ்யப் புரட்சியிலு பங்கு கொள்ள நேர்கிற தோன்நதி தீரத் விவசாயக் குடும்பமொன்றில் பிறந்த கிரிகோ மெலிக்கவ் என்ற கொஸாக் இளைஞனின் வாழ் ஒரு தசாப்தத்தினுள் சந்திக்கிற அநுபவங்கை ஷோலக்கவ் காவியமாக்குகிறார். கிரிகோரி வெறு வாய்ப்பாட்டு ரீதியான வரட்டு மனிதனல்லன் சந்தேகங்களுக்கும் ஊசலாட்டங்களுக்கு உள்ளாகிறவன், தவறுகளும் இழைக்க நேர்கிறது இருப்பினும், எல்லாவற்றுக்கும் மேலாக, தல விதியைத் தீரத்துடன் எதிர்கொள்கிறவன், முழு மனிதன் இக்காவியத்தின் நாயகனான அவனுடன் சேர்ந்து நான்கு பாகங்கை - பத்து வருடங்களையும் நாமும் வாழ்ந்து முடிக்கிறோம்.

உலகப் புகழ்பெற்று, இன்றைக்கும் பேசப்படுகிற தோன்ந அமைதியாக ஓடுகிறது நாவலை ஷோலக்கவ் 1925ல் எழு ஆரம்பித்தார். கடைசி நாலாவது - பாகம் 1940ல் வெளியாயிற்று.

ஷோலக்கவின் புகழ்பெற்ற இன்னொரு நாவலான கன்னிநில மற்றும் குறுநாவலான அவன் விதி ஆகியவை தமிழிலும் வெளியா வரவேற்பைப் பெற்றன. எனினும், தோன்நதி தமிழில் முழுமையா வெளி வராது போனமை பெருங்குறையேயாகும். சிறந்த சிறுகை ஆசிரியருமான ஷோலக்கவ், 1965ல் நோபல் பரிசை வென்றார் அவர்கள் தாய் நாட்டிற்காகப் போரிட்டார்கள், என்ற நாவலையு அவர் எழுதியுள்ளார்.

தோன்நதி பேசுகிற அதே புரட்சிக் காலத்தையே பகைப்புலனாய் கொண்டெழுந்த இன்னொரு அற்புதப்படைப்பு, 'டொக்ட ஷிவாகோ'. பரீஸ் பாஸ்தர்நாக் எழுதிய இந் நவீனம், ருஷ் நாவலேயெனினும் 'சோவியத் இலக்கியம்' என்னும் வகைக்குள் அடங்க மறுப்பது, கருத்தியல் தளத்தில் மாறுபட்டதெனக் கூறி இதனைப் பிரசுரிக்க சோவியத் நாட்டில் அனுமதி மாறுக்கப்பட்டது எனினும், ஷிவாகோவின் மொழி பெயர்ப்புக்கள் மேலை நாடுகளில் பெருவரவேற்பை அடைந்தன. ஷிவாகோவுக்காக, பாஸ்தர்நாக், 1958ல் நோபல் பரிசையும் வென்றார். பின்னர், ஷிவாகோ திரைப்படமாகவும் வந்து பெரு வெற்றியீட்டியது:

ஆசிரியர் பாஸ்தர்நாக், முதலில் ஒரு கவிஞர், ருஷ்ய மொழியின் முக்கியமான கவிஞர்களிலொருவர், சோவியத் நாட்டில் பின்னர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற நேர்ந்துவிட்ட அதிகார வர்க்க ஆட்சியுடன் அவர் முரண்பட்டிருந்தாலும்கூட - அவ்வாறு முரண்பட்ட பல ருஷ்ய கலை இலக்கியவாதிகள் செய்தது போல - புலம் பெயர்ந்து சென்று விடாது, தம் வாழ்நாள் முழுவதையும் தாய் நாட்டிலேயே கழித்தவர்.



பரீஸ்
பாஸ்தர்நாக்

கருத்தியல் நோக்கில் மாறுபட்டதென ஷிவாகோ கூறப்பட்டாலும், உண்மையில் ஷோலக் கவ்வினுடைய நாவலின் நாயகன் கிரிகோரிக்கும், பாஸ்தர்நாக் படைத்த நாவலின் நாயகன் டொக்டர் ஷிவாகோவுக்கும் நிறைய ஒற்றுமைகள் உண்டு என்பதைத் தீவிர வாசகர்கள் உணர்ந்து கொள்ள முடியும். இந்த இரு பாத்திரங்களுமே - அவர்களின் சமூகப் பின்னணிகளும் அனுபவங்களும் வெவ்வேறாக அமைந்தாலும் கூட - ஒரே புயலில் அள்ளுண்டு சுழன்ற இரு மனிதர்கள். இருவருமே, உண்மையையும் வாழ்வின் அர்த்தத்தையும் தேடியவர்கள். தத்தம் வாழ்க்கைகளைத் துணிவுடன் எதிர்கொண்டு நின்றவர்கள்.

சோவியத் ருஷ்ய எழுத்தாளர்களில் முன்னணியிலிருந்த ஒருவர், அலெக்சேய் தல்ஸ்தோய். எனினும், தமக்கென்றொரு தனித்துவத்தைப் பேணியவராகவும் கருதப்படுவர். அவருடைய சுயசரிதக் கூறுகளைக் கொண்ட நிகிட்டாவின் குழந்தைப் பருவம் மனதைக் கவரும் தன்மை கொண்டது. குழந்தையின் கண்ணோட்டத்தில் உலகை நோக்குவது மட்டுமின்றி, பனி படிந்த மர வீடொன்றின் புகைபோக்கியிலிருந்து றை தானிய மணங் கமழ வெளியேறும் புகை தெரியும் ருஷ்யக்கிராமத்தையும், ருஷ்யாவின் வாழ்முறைகள், தேவதைக்கதைகளையும் கூட அறிமுகஞ் செய்யும் படைப்பு, அது.

அலெக்சேய் தல்ஸ்தோயின் அக்கினிப்பரீட்சை மூன்று பாகங்கள் கொண்ட நெடு நாவல். தமிழிலும் வந்ததாக நினைவு. இவை தவிர, அவருடைய விஞ்ஞானப் புனைகதையெனக் கொள்ளத் தக்க காரின் அழிவுக்கதிர்கள், மற்றும் எழுதுங்கலை எனுங் கட்டுரை நூல் ஆகியவையுங் கூடத் தமிழில் வந்தன. ஆற்றலும் அநுபவமுமிக்க ஒரு கலைஞனின் அறிவுரைகளாகவே கொள்ளத் தக்கது எழுதுங்கலை. எந்த ஒரு எழுத்தாளனிடமும், சிந்தனையாளன், கலைஞன், விமர்சகன் ஆகிய மூவரும் ஒரே நேரத்தில் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்பட வேண்டும் என்று ஆசிரியர் இதில் வலியுறுத்துவது மிக முக்கியமானது.

மகத்தான இலக்கியங்களை, புரட்சியின் பாதிப்பினால் மட்டுமே ருஷ்ய மொழி பெற்றுவிடவில்லை. அந்த மக்களின் வாழ்வு நெறி, செழுமையும் பெருமையும் கொண்ட இலக்கியப் பாரம்பரியம் என்பவற்றின் தொடர்ச்சியாகவே இப்புத்திலக்கிய உருவாக்கம் இடம் பெற்றது. நவீன ருஷ்ய இலக்கியத்தின் மூலவரெனக் கொள்ளப்படும் புஷ்கின் முதல், தஸ்தயேவ்ஸ்கி, துர்கனேவ், தல்ஸ்தோய், சேகவ் என்று வந்த பாரம்பரியம் அது. உண்மையில் தல்ஸ்தோய், சேகவ் இருவரும் தம் வாழ்நாள்களின் இறுதிச் சில ஆண்டுகளை 20ம்நூற்றாண்டில் கழித்ததுடன், இலக்கிய ஆக்கங்களைப் படைக்கவும் செய்தனர்.

லேவ் தல்ஸ்தோய், இருபதாம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்துடன் தனது வாழ்வை முடித்துக் கொண்டார். அவருடைய வாழ்நாளிலும் படைப்புகளிலும் மிகப்பெரும் பகுதி பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கே யுரியவையாயிருந்தன,

அவருடைய உன்னதங்களான போரும் அமைதியும், அன்னா கரேனினா மற்றும் புத்துயிர்ப்பு போன்றவற்றால் கிடைத்த புகழ் மட்டுமின்றி, அவர் முன்வைத்த ஒழுக்கவியற் கொள்கைகளாலும் தல்ஸ்தோய் உலகப்புகழ் பெற்ற ஒருவராக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மிளிர்ந்தார். ருஷ்யாவில், த்ஸார் மன்னன், ரஷ்ய வைதிக திருச்சபை ஆகிய இரண்டு சக்திகளுக்கப்பால் மூன்றாவது சக்தியாகவும் தோற்றம் பெற்றிருந்தார்.

அவருடைய ஆக்க இலக்கிய முயற்சிகள் இந்தப் பத்தாண்டுகளில் குறைவர்னவையே எனினும், அவரது அல்யோஷா போன்ற சிறந்த சிறுகதைகள் இக்காலகட்டத்தில் உருப் பெற்றன. 'நான் படித்தவற்றில் மேதைமை நிறைந்த ஆக்கம்' எனக் கவிஞர் அலெக்ஸாந்தர் புளொக் இக்கதை பற்றிக் குறிப்பிட்டார். 1905ல் எழுதப்பட்டாலும், ஆசிரியரின் மரணத்திற்கு அடுத்த ஆண்டில் (1911) தான் இக்கதை முதலில் பிரசுரம் பெற்றது.



லேவ் தல்ஸ் தோய்

ருஷ்யாவில், கிஷினேவ் போன்ற இடங்களில் 1903ல் யூதர்களுக்கெதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றால் அவர்கள் நிர்க்கதியுற்ற போது அந்த யூதர்கட்கு உதவிவதற்கெனவும், மூன்று கேள்விகள் போன்ற சில கதைகளை தல்ஸ்தோய் படைத்தார். அவருடைய புகழ்பெற்ற இன்னொரு சிறுகதையாகிய நடனத்திற்குப் பின் என்பதுவும் அதே ஆண்டிலேயே பிரசுரம் பெற்றது.

உலகின் மகத்தான இலக்கிய மேதையாக தல்ஸ்தோய் கருதப்பட்ட போதும், நாவல் இலக்கியத்தின் கொடுமுடியாக அவருடைய போரும் அமைதியும் ஒப்புக்கொள்ளப்பட்ட போதும், இலக்கியத்திற்கான நோபல் பரிசு 1901 லிருந்து அளிக்கப்பட்டு வந்த போதிலும், அவர் உயிருடனிருந்த அந்தப் பத்தாண்டுகளிலோ - அல்லது அதற்குப் பின்னரோ கூட அவருக்கு அந்தப் பரிசு அளிக்கப்படவேயில்லை!

1901ன் இலக்கியத்திற்கான நோபல் பரிசு தல்ஸ்தோய்க்கு வழங்கப்பட வேண்டும் எனக் கருதப்பட்ட போதும், அது ஃபிரெஞ்சுக் கவிஞரான சலி புருதொம் என்பவருக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் சலி புருதொமே முதலாவதாக இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் என்ற பெருமையையும் பெற்றார். அடுத்த ஆண்டிலுங்கூட தல்ஸ்தோய்க்கு நோபல் பரிசு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இலக்கிய வட்டாரங்களில் இருந்த போதும், அதுவும் நிறைவேறவில்லை. 1902ற்கான அப்பரிசு டென்மார்க்கைச் சேர்ந்தவரான தியோடார் மொம்ஸன் என்பவருக்குக் கிடைத்தது. மொம்ஸன், முதன்மையாக வரலாற்றாசிரியராகவே அடையாளங் கொண்டிருந்தாரெனினும், 'அவர் எழுத்துக்களில் மிகுந்திருந்த தனித்துவம் வாய்ந்த இலக்கிய நயத்திற்காக' அப்பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.

தாம் வாழ்ந்த காலத்தில் மட்டுமின்றி, தாம் எழுதிய மொழியில் மட்டுமின்றி, என்றென்றைக்கும் உலக முழுவதிலும் போற்றப்படும் இன்னொரு இலக்கிய மேதை அந்தோன் சேகவ். இருபதாம் நூற்றாண்டின் முதல் நான்கு ஆண்டுகள் மட்டுமே அவர் உயிர்வாழ்ந்திருந்த போதும் அழியாவரம் பெற்ற ஆக்கங்கள் பலவற்றை அவர் இந்த நான்கு ஆண்டுகளிலும் படைத்தளித்தார். அவருடைய உன்னதங்களில் ஒன்றும், ருஷ்யாவின் சமுதாய மாற்றத்தைப் பிரதிபலிப்பதுமான செர்ரிப் பழத்தோட்டம் 1903ல் தான் எழுதி முடிக்கப்பட்டது.

சேகவ்வுடைய சிறந்த சிறு கதைகளிலிரண்டான மணமகள், பிஷப் - ஆகியவையும் இக்காலத்திலேயே எழுதப்பட்டவை. 'பிஷப்'பில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் சொந்த அனுபவங்கள் பிரதிபலிப்பதை உணர முடியும். சேகவ்வுக்கு, அவ்வேளையில் தாம் - மரணத்தை எதிர்நோக்கியிருப்பது தெளிவாகத் தெரிகிறது. கதையில் வருகிற பிஷப் பியோத்தரும் அவ்வாறே. இதனால் கதை, மெய்ம்மையும் உணர்வும் பெற்று உயிர் கொண்டது.



அந்தோன்
சேகவ்

சேகவ், ஏனைய ருஷ்ய இலக்கிய மேதைகளினின்றும் பல விஷயங்களில் வேறுபடுகின்றார். அவருடைய விஞ்ஞான பூர்வமான சிந்தனை தனித்துவமானது. சிறுகதை, நாடகம் ஆகியவற்றில் உலகளவிலேயே மகத்தான மாற்றங்களை நிகழ்த்திய சேகவ் ஒரு நாவலேனும் எழுதவில்லை.

ருஷ்யப் புரட்சி என்றவுடன் நினைவுக்கு வருகிற கவிஞர்கள் இருவர். ஒருவர் விளதீமிர் மாயாகோவ்ஸ்கி, மற்றவர் அலெக்சாந்தர் புளொக்.

மாயாகோவ்ஸ்கி, புரட்சியின் கவிஞன். அக்டோபர் சோஷியலிஸப் புரட்சியை 'என்புரட்சி' என்று உரிமையோடு குறிப்பட்டவர். போர்க்குணமிக்க பாடல்களையும் கவிதைகளையும் படைத்த அதே வேளை, காதலையும் பாடினார் - கவிதைக்கும் வாழ்விற்குமிடையிலான புதிய தொடர்புகளைக் கண்டவர் அவர். புரட்சிகரக் கவிஞர்கள் - எழுத்தாளர்களுக்கு முன்மாதிரியாயமைந்தது அவர் வாழ்வு.



விளதீமிர்
மாயகோவ்ஸ்கி

அலெக்சாந்தர் புளொக், விசேஷ கவனத்திற்குரியவர். அவர் புரட்சியை வரவேற்றவர். எனினும் அவர் புரட்சியைப் பார்த்த விதம் மற்றவர்களினின்று வேறுபட்டது. பன்னிருவர் என்ற தமது கவிதையில், யேசுநாதரே புரட்சியை வழிநடத்துவதாக அவர் எழுதினார். இக்கவிதை பற்றி விபரமாக ஏ.ஜே.கனகரத்தினா, 1977ல் 'செங்காவலர் தலைவர் யேசுநாதர்' என்ற கட்டுரையொன்றினை எழுதியுள்ளார்.

பத்தொன்பது, இருபது ஆகிய இரண்டு நூற்றாண்டுகளிலும் இரண்டு இரண்டு தசாப்தங்கள் வாழந்தவர் புளொக். புரட்சிக்கு முந்திய காலத்துப் பெருங்கவிஞர் பரம்பரையின் கடைசி வாரிசாகக் கொள்ளப்படுவர். அவரது மனைவி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசாயனவியலில் ஆவர்த்தன அட்டவணையைத் தயாரித்து உலகப்பெரும் விஞ்ஞானியாக விளங்கிய மெண்டலியெவின் மகள். இந்தப் பெண்மணியின் காதலுக்காகப் பாடிய கவிதைகளே, 'அழகிய சீமாட்டி' என்ற அவரது முதல் தொகுப்பாய் அமைந்தன. தமது இருபத்து மூன்றாவது வயதில் புளொக் எழுதிய 'தொழிற்சாலை' என்ற கவிதை அவரது வளர்ச்சிப் போக்கின் திருப்பு முனையாகக் கொள்ளப்பட்டது. புரட்சியின் போக்கினை முன்மொழிந்த கவிதை அது.

இந்த நூற்றாண்டின் ஏனைய ருஷ்யக் கவிஞர்களும், புனைகதையாசிரியர்களுக்கு சளைத்தவர்களல்லர். ஏற்கனவே குறிப்பிட்ட கவிஞரும் நாவலாசிரியருமான பாஸ்தர்நாக், மற்றும் அன்னா அக்மத்தோவா, யெவ்கெனி யெவ்துஷென்கோ போன்றவர்கள் தம் கலையாற்றலால் தனியிடம் பெற்றவர்கள்.


அலெக்சாந்தர் புளொக்

இருபதாம் நூற்றாண்டு ருஷ்யக் கவிதையுலகின் மிக முக்கிய பெயர் அன்னா அக்மத்தோவா. அவருடைய காதல் கவிதைகள் பேசப்பட்ட அளவிற்கு, சமூக நோக்குடனும் தீவிரப் பார்வையுடனும் எழுதப்பட்ட அவரது கவிதைகள் கவனம் பெறாது போயின. ஸ்தாலின் ஆட்சிக்காலத்தில் அக்மத்தோவா பெருந் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. எனினும், அவற்றுக்கஞ்சி - அதே விதியை எதிர்நோக்கிய தம் மண்ணையும் மக்களையும் விட்டுவிட்டு - புலம்பெயர அவர் முன்வரவில்லை. தேசப்பற்றுடன் இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் அவர் பாடிய கவிதைகள் மிகவும் போற்றப்பட்டன.

புரட்சிக் காலத்தில் உருவாகியது போன்று பின்னர், இரண்டாம் உலகப் போர்க்காலத்திலும், சிறந்த பல ருஷ்ய இலக்கியங்கள் தோன்றி உலக இலக்கிய வரிசையில் இடம் பிடித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02

**1917**இன் சோவியத் புரட்சியைத் தொடர்ந்து, சீனாவில், 1919 இல், ஏகாதிபத்தியம் மற்றும் அடக்கு முறைகளுக்கெதிரான புரட்சிகர இயக்கம் ஆரம்பமானது. அத்துடன் புத்திலக்கிய இயக்கமும் வளர்ச்சியுறத் தொடங்கிற்று நவீன சீன இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவரான லூ-சுன் இந்தப் புத்திலக்கிய இயக்கத்திற்கு அடிகோலினார். போரட்டத்திற்கான ஓர் ஆயுதமாகவே இலக்கியத்தைக் கருதுவதாகக் குறிப்பிட்டவர், லூ-சுன்.



லூ சுன்

1921 இல சீன கம்யூனிஸ்ட் கட்சி உருவானதைத் தொடர்ந்து, அடுத்தடுத்த இரண்டாண்டுகளுக் குள்ளேயே புரட்சிகர இலக்கியத்தின் அவசியம் வலியுறுத்தப்படலாயிற்று. நாற்பதுகளின் தொடக்கத்தில், ஜப்பானிய ஆக்கிரமிப்புகெதிரான சீனாவின்'போர் தொடங்கிற்று. மா ஓ சேதுங்கின் 'யெனான் கலை இலக்கியக் கருத்தரங்கின்' உரைகள் வெளியிடப்பட்டன. இந்த உரையில், சீன மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்கு ஒரு கலாசாரப் படையும் அவசியமாயுள்ளது, என்று மாவோ குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து, தரமிக்க இலக்கியப் படைப்புக்கள் பல வெளியாகலாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருஷ்யப் புரட்சி, சீனப் புரட்சி - இவற்றிலும் ஒருபடி மேலே நிற்பது என்று கொள்ளத்தக்கது, வீரமிகு வியட்நாமிய மக்களின் விடுதலைப் போராட்டமாகும்.

ஜப்பான், சீனா, பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்க ஆகிய வல்லரசுகளின் தொடர்ந்த ஆக்கிரமிப்புகளுக்கெதிராக நீண்ட நெடுங்காலம் போராடி வியட்நாம் வெற்றி கண்டது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றினைக் கொண்டிருந்த வியட்நாமியக் கவிதை, 1945 புரட்சியின் போது புது உத்வேகம் பெற்றது. அதனைத் தொடர்ந்து வந்த மூன்று தசாப்தங்களின் போதுகூட - வியட்நாம் தனது சுதந்திரத்திற்காக இடைவிடாது போராட்டம் நடத்திய வேளையிலும் - இந்தக் கவிதை இலக்கியம், அதன் வலுகுன்றாமல், மென்மேலும் வீரியம் கொண்டது.

உலகிலேயே போரினாற் பெரும் பாதிப்புக்களுக்குட்பட்ட பூமி என்று கொள்ளப்படத்தக்கது வியட்நாம். அந்த மக்கள், ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக மட்டுமின்றி, நாட்டின் - பூகோள நிலைமை காரணமாக - இயற்கைச் சக்திகளுக்கெதிராகவும் போராட வேண்டியிருந்தது. இந்த இரட்டைப் பரிமாணங்கொண்ட போராட்டத்தைத் தாக்குப்பிடித்து முன்னேறுவதற்கு வியட்நாமியருக்குக் கவிதைகளே ஒரு வகையில் ஆயுதமாகவும் கை கொடுத்தன.

இத்தனைக்கும் மத்தியில், வியட்நாம் கவிஞர்களின் மனிதாபிமானமோ, பல்பரிமாணங் கொண்ட புரிந்து கொள்ளலோ குன்றிவிடாதிருந்தன. தோ ஹு என்பவர் எழுதிய எமிலி, என் சின்ன மகளே! என்ற கவிதை இதற்கு நல்ல உதாரணமாய் அமைந்தது. அர்த்தமற்றுத் தொடர்ந்து கொண்டிருந்த வியட்நாம் போருக்கு எதிர்ப்பைத் தெரிவித்தும், அப்போரை நிறுத்துமாறு வலியுறுத்தியும், அமெரிக்காவில் - 'பென்ரக'னின் (Pentagon) முன்னால் தீக்குளித்து, தர்மவேள்வியில் தம்மை ஆகுதியாக்கிக் கொண்ட, நோமன் மொறிஸன் என்ற அமெரிக்கரின் மகளான சிறுமிக்கு அர்ப்பணிக்கப்பட்ட கவிதை அது. அதை எழுதிய ஹு, சிறந்த கவிஞர் மட்டுமின்றி, போராட்டத்தைத் தீவிரமாக முன்னெடுத்தவர்களில் ஒருவருமாவார்.



தோ – ஹு

போரும் போராட்டமும் நியதியாகிப் போய்விட்டிருந்த அந்த நீண்ட நெடுங்காலத்தின்போது, தினசரி வாழ்க்கைக்கு முகங்கொடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியட்நாமிய மக்களின் மனப்பாங்கு எத்தகைய தீரமும் திடமுங் கொண்டதாயிருந்தது என்பதைக் காட்டும் கவிதைகளுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைவது, சே லான் வியன் என்ற கவிஞர் எழுதிய தாயாயிருப்பது, என்ற கவிதை.

*"தாயாயிருப்பது லேசானதல்ல,*
*வியட்நாமில்.*
*உலகத்து வழமை -*
*தாய்மார் தங்கள் பிள்ளைகளுக்கு*
*பூக்களைக் காட்டி*
*நேசிக்கப் பழகுதல்.*
*இங்கோ -*
*குழந்தைகளுக்கு*
*குண்டுகளிலிருந்து*
*தப்புவதெப்படி?*
*என்பதுங் கூட*
*உலகத்து வழக்கம்.*
*தாய்மார்,*
*தங்கள் பிள்ளைகளுக்கு*
*பாட்டுகளையும்*
*பறவை ஒலியையும்*
*சொல்லிக் கொடுப்பது,*
*இங்கேயென்றால் -*
*B- 52 இரைச்சல் எது.*
*F- 105 உறுமலெது*
*என்பதுங்கூட*
*மனிதராயிருப்பது*
*எங்ஙனமென்று*
*தாய்மார்*
*தங்கள் பிள்ளைகளுக்குச்*
*சொல்லிக் கொடுக்கும்*
*தருணங்களுண்டு.*
*ஆனால் இங்கோ-*
*அது மட்டுமே*
*போதாதென்றும்*
*அவர்கள் சொல்லும்*
*வேளைகளுண்டு.*
*வீரராய் விளங்குதல்*
*எப்படி என்பதைச்*
*சொல்லிக் கொடுக்கவும்*
*வேளைகளுண்டு.*

வியட்நாமியக் கவிதைகளின் முக்கியப் பண்பு, மனிதநேயமும், நம்பிக்கை நிறைந்த புரட்சிகரப் பார்வையுந்தான். அவை, போரைப் பற்றி மட்டுமின்றி, பொருளாதாரத்தைப் பற்றியும் பாடின.

வியட்நாமியக் கவிதை பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய முக்கியமான அம்சங்களுள் ஒன்று என்னவெனில் 45க்கும் 75க்கும் இடைப்பட்ட காலத்தில் கவிதைகளின் நோக்கத்திலோ உள்ளடக்கத்திலோ மாற்றமேதும் ஏற்படாதபோதும், அவற்றின் வடிவிலும் பண்பிலும் மாற்றங்களேற்பட்டதாகும். கல்வியறிவு அதிகம் பெற்றிராத குடியானவர்களே பெரும்பான்மையினராக இருந்த 40களில், அவர்களுக்கேற்ற விதமாக - அவர்கள் மனதைக் கவரவும், மனதில் நிலைக்கவும் கூடியதாக - நாட்டுப்பாடல் வடிவங்களையே கவிஞர்கள் பயன்படுத்தினார்கள். ஆனால், பிற்பட்ட காலத்தில் - அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்தெகிராகப் போர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்த வேளையில் - கவிதை அமைப்பு மாற்றம் பெற்றது. வடிவங்களும் நீளங்களும் மாற்றமுற்றன. ஆனால் அவற்றின் உள்ளடக்கமோ, வியட்நாமிய மொழித்தூய்மையோ பாதிக்கப்படவில்லை என்பது முக்கியமானது. அத்துடன் எளிமையும் பேணப்பட்டது.

இடைவிடாத பெரும் போர் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த வேளையில், போரினால் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகிக் கொண்டிருந்த நாட்டை இளம் உழைப்பாளிகள் மீண்டும் மீண்டும் கட்டியெழுப்பிக் கொண்டிருந்தார்கள். அதற்கேற்ற விதமாக, 'குண்டுகளின் ஓசையைப் பாட்டிசை மூழ்கடிக்கட்டும்' என்பதே வியட்நாமில் அப்போதைய சுலோகமாக இருந்தது.



ஹோ - சி - மின்

'கலைகளெல்லாம் போர்முனைகள்தாம், எழுத்தாளர்களும் கலைஞர்களும் அம்முனையிற் போரிடும் வீரர்களே' என்று கூறியவர், வியட்நாமின் தலைவர் ஹோ-சி-மின். தலைசிறந்த போராளியாக மட்டுமின்றி கவிஞராகவும் விளங்கியவர் அவர். ஹோ-சி-மின் எழுதிய சிறைக்குறிப்புகள் கவிதை நூல், கே.கணேஷ் அவர்களால் தமிழில் பெயர்க்கப்பட்டு 70களில் வெளியாகி வரவேற்பைப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03

ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து, அமெரிக்க ஏகாதிபத்தியமானது வியட்நாம் மக்களின் மீது கட்டவிழ்த்து விட்டிருந்த கொடூர யுத்தத்திலும் பன்மடங்கு கொடிதான போரொன்றை, 1939 இல் ஹிட்லர், உலக மக்கள் மீது திணித்தான். ஆணவம், அடக்குமுறை, அட்டூழியம் - இவற்றில் விளைந்த தன் நாஸிக் கொள்கைகளில் காலூன்றி முழு உலகையும் தன் சர்வாதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரும் வெறியுடன், இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கே மூலகாரணமாக அமைந்தவன் அவன். எத்தனையோ கோடி டொலர் மதிப்புள்ள வளங்கள் அழிவதற்கும், கோடிக்கணக்கான உயிர்கள் அழிவதற்கும் அந்தப் பெரும் போர் காரணமாய் அமைந்தது.

ஐரோப்பாவின் ஏனைய பகுதிகள் மீது அகலக்கால் பரப்பிய ஹிட்லர், சோவியத் தேசத்தையும் தன் பிடிக்குள் வீழ்த்த முனைந்தபோது, அதுவே அவனதும் அவனது அக்கிரமத்தினதும் முடிவாய் அமைய நேரிட்டது. தம்மைத் தேடிவந்த பகையை, சோவியத் மக்கள் கிளர்ந்தெழுந்து முறியடித்தது மட்டுமின்றி, ஹிட்லரை ஒழித்ததன் மூலம், முழு உலகையுமே அவனது நாஸிப் பிடியிலிருந்தும் காப்பாற்றினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாபெரும் தேசபக்த யுத்தம்' என சோவியத் மக்களால் கருதப்பட்ட அந்தப் போர் அனுபவங்களை, அந்தப்போரை எதிர்கொண்ட அவர்களின் தீரத்தை, திடத்தை எல்லாம், இளைய சோவியத் இலக்கியம் பதிவு செய்து கொண்டது. கவிதைகளாகவும் புனை கதைகளாகவும் உருவெடுத்த அந்தப் புத்தாக்கங்கள், உலக இலக்கியச் செழுமையைக் கூட்டவல்ல புதுவரவுகளாகவும் அமைந்ததில் வியப்பில்லை.

ருஷ்ய மொழியின் பெருங்கவிஞர்களிலொருவரும், உலகப் புகழ் பெற்ற கவிதைகளை வடித்தவருமான அன்னா அகமத்தோவா, தம் தாய் நாட்டின் மீதான ஹிட்லரின் ஆக்கிரமிப்புக் கண்டு எழுதிய கவிதைகள் உலகின் எந்த மொழியிலும் எழுந்த தேசபக்திக் கவிதைகளையும் மிஞ்சியவை எனக் கூறப்படுகிறது. 1942 இல் அவர் எழுதிய உறுதி என்னுங் கவிதையில் இவ்வாறு எழுதினார்.


அன்னா
அக்மத்தோவா

*"எது வரினும் உனைக் காப்போம்*
*எம் ருஷ்யா.....*
*எமக்காக மட்டுமல்ல*
*எம் பிள்ளைகள்,*
*பிள்ளைகளின் பிள்ளைகளுக்காகவும்*
*எப்போதைக்குமாய்!"*

புனைகதைகளைப் பொறுத்த மட்டில் வாலெந்தின் கத்தாயெவ் எழுதிய கொடி சிறுகதை, ஷோலக்கவ் எழுதிய அவன் விதி குறுநாவல் மற்றும் அவர்கள் தாய் நாட்டிற்காகப் போரிட்டார்கள் நாவல், அலெக்சாந்தர் ஃபதேயெவ் எழுதிய இளங்காவலர் என்ற நாவல் போன்ற - ஆக்கங்கள், அக்கால கட்டத்தில் எழுந்த செம்மை இலக்கியங்களுக்குச் சிறந்த வகைமாதிரிகளாகும்.

ஐந்தாறு பக்கங்களுக்குள்ளேயே அடங்கி விடுகின்ற ஒரு சிறு கதை கொடி. ஆனால், அது வாசகருக்குத் தருவதோ, அந்த தேசபக்த யுத்தத்தின் ஆத்மாவையே தரிசிக்கிற பரவசத்தை. கத்தாயெவ், தலை சிறந்த கலைஞர். தம் போர்முனை அனுபவங்களை வைத்து அவர் எழுதிய இக்கதை பெரும் வரவேற்பைப் பெற்றது.

பரீஸ் வஸீலியெவ் எழுதிய அதிகாலையின் அமைதியில், பரீஸ் பொலெவோய் எழுதிய உண்மை மனிதனின் கதை மற்றும் அலெக்சாந்தர் சக்கோவ்ஸ்கி எழுதிய முற்றுகை - ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீனங்களும் இங்கு கட்டாயம் குறிப்பிட வேண்டியவையாகும். இவற்றில் முதலில் குறிப்பிடப்பட்ட நாவல், பின்னர் சினிமாவாகவும் வந்து சர்வதேசப் பரிசனை வென்றது. இரண்டாவது, உண்மைக் கதையொன்றினையே வைத்தெழுதப்பட்ட நாவல். இந்தப் போரின் போது, நாஸிப்படைகளால் 900 நாள்கள் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டிருந்த லெனின் கிராத் - இப்போது, மீண்டும் சென்பீற்றேர்ஸ்போர்க் என அழைக்கப்படுகிற - நகரின் கதையைக் கூறுகிற நாவல் முற்றுகை.

மனிதனின் ஆத்மதிடத்தை எடுத்துக் காட்டுவதால் மட்டுமன்றி அதைக் கூறும் கலையழகாலும் தமது இலக்கிய ஸ்தானத்தை நிறுவிக் கொண்ட படைப்புகள் இவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04

இரண்டாம் உலகப் போரின் போது, தனது சோவியத் நாட்டுப் படையில் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்த ஒருவர், பின்னர் சோவியத் அரசுடன் பரஸ்பர அதிருப்தி கொண்டவராகவும், உலகின் கவனத்தை ஈர்த்த எழுத்தாளராகவும் ஆனார். அவர் அலெக்சாந்தர் சல்செனித்சின்.

ஸ்தாலினைப் பற்றி அவதூறு கூறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் 1945-இல் கடூழிய முகாமிற்கு அனுப்பப்பட்டார். முகாம் வாழ்வின் அனுபவங்களின்றும் அவர் படைத்த, இவான் டெனிஸோவிச்சின் வாழ்வில் ஒரு நாள் என்ற சிறிய நாவல் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து வந்த குலாக் தீவுக் கூட்டங்கள், முதல்வட்டம், புற்றுநோய் விடுதி போன்றவை, மேற்கு நாடுகளில் வெளியிடப் பெற்றுப் பெரும் வரவேற்பைப் பெற்றன.

சோவியத் ஆட்சியின் இருண்ட பக்கங்கள் எனக் கூறப்படுபவற்றை வெளிச்சமிட்டுக் காட்டும் படைப்புகள் அவை என மேற்குலகில் பிரபலம் பெற்றன. 1970-இல் சல்செனித்சினுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்து. முரண்பாடுகள் முற்றவே, 1974இல் அவர் சோவியத் நாட்டிலிருந்தும் வெளியேற்றப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலெக்ஸ்சாந்தர் சல்செனித்சின்

சல்செனித்சினின் படைப்புக்கள், சோவியத் அமைப்பிற்கெதிரான ஆயுதமாக மேலை நாடுகளால் பயன்படுத்தப்படுவதற்காக, அவற்றிற்கு அளவுக்கதிகமான பிரபல்யம் கொடுக்கப்பட்டது என்ற கருத்தும் பரவலாக உண்டு. ஆனால், 1920களிலிருந்த - சோவியத் சமுதாயமொன்றைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற - உத்வேகத்துடன், சரியான சோஷலிஸ யதார்த்தத்தினை நோக்கிய வழியை மீளவும் நெறிப்படுத்த முயன்ற ஒரு முக்கிய சக்தியாக அவரைக் கணிப்போரும் உளர்.

எது எப்படியிருப்பினும், அவருடைய வசன கவிதைகள் எனுந் தலைப்பிலான குறுங்கதைகள், மேலே குறிப்பிட்ட ஒருநாள் நாவல், மற்றும் மத்ரயோனாவின் வீடு போன்ற குறு நாவல்கள் போன்றவை, உயர்ந்த இலக்கியத்தரம் மிக்கவை என்பதை மறுதலிக்க இயலாது.

சல்செனித்சினுடைய 'வசன கவிதை'களில் ஒன்று:-

<u>மரக்குற்றி</u>

*விறகுக்காக நாங்கள் மரங்களை அரிந்து கொண்டிருந்தபோது, அந்த எல்ம் மரக்குற்றி கைக்கு வந்தது. வியந்து போய்க் கூவினோம். அந்த மரத்தைத் தறித்து சரியாக ஒரு வருஷம். டிராக்டரின் பின்னால் கட்டி இழுத்து வந்து, குற்றிகளாய் அறுத்து, அவற்றைக் காவி, உருட்டி, அடுக்கி...*

*இத்தனைக்குப் பிறகும் அந்த எல்ம் குற்றி விடுவதாயில்லை பச்சைக் குருத்தொன்று முளை தள்ளி நிற்கிறது. கிளையாயும் - மரமாயுங் கூட - ஆவேனென்று.*

*அரியும் இடத்தில் குற்றியை வைத்தோம். கொலை பீடத்தில் வைப்பது போலிருந்தது. வாளை அதனருகில் கொண்டுபோகவே முடியவில்லை. எமக்கு எப்படி முடியும்? எம்மைப் போலவே அதுவந் தன் உயிரைப் போற்றிக் கொண்டிருக்கிறது. இன்னுஞ் சரியாய்ச் சொன்னால், வாழ்வதற்கான அதன் ஓர்மம், எங்களுடையதிலும் எவ்வளவு பெரிது!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்செனித்சினின் ஒருநாள் நாவல், கடூழிய முகாம் வாழ்க்கையை சித்தரிக்க முயன்றதைத் தொடர்ந்து, 'கடூழிய முகாம் இலக்கியங்கள்' என்ற பிரிவில் அடக்கக்கூடிய ஆக்கங்கள் பல தோன்றலாயின. அவற்றில் மிகப் பல பிரசுரம் பெறமுடியாது போய் விட்டாலுங்கூட, அவ்வாறு பிரசுரம் பெற்று, இலக்கிய அந்தஸ்துடன் வெளியுலகின் கவனத்தை ஈர்த்த ஒரு படைப்பு, விசுவாசமிக்க றுஸ்லான் என்பது. றுஸ்லான் என்கிற காவல் நாயின் கதையை போல, கடூழிய முகாம் வாழ்க்கையொன்றினையும் கலையழகு கெடாமல் காட்டும் நாவல் இது. மனதைத் தொடும் இப்படைப்பின் ஆசிரியர், அதிகம் அறியப்பட்டிராத ஜோர்ஜி விளதிமோவ் என்பவர்

சோவியத் ஆட்சியில் வெளியேற்றப்பட்ட எழுத்தாளர் சல்செனித்சின் என்றால், அந்த அமைப்புடன் உடன்பட முடியாமல் நாட்டை விட்டு வெளியேறிய பலர் அவருக்கு முன் இருந்தார்கள்.


இவான் புனின்

புரட்சியின் காலத்திலிருந்தே இந்த வரிசை தொடங்கியது. முரண் கொண்ட பல எழுத்தாளர்கள், கலைஞர்கள், புலம்பெயர்ந்து 'புலம் பெயர்' ஆக்கங்களையும் படைத்தார்கள்.

இந்த வரிசை, இவான்புனின் இலிருந்து தொடங்குகிறதென்னலாம். ஆரம்ப நாள்களில் கோர்க்கியின் சகாவாகவுமிருந்த புனின், புரட்சியைத் தொடர்ந்து நாட்டைவிட்டு வெளியேறி பிரான்சில் வசித்ததுடன், தம் கருத்துக்களையும் வெளியிட்டு வந்தார். நோபல் பரிசைப் பெற்ற முதலாவது ருஷ்ய எழுத்தாளர் இவர். 1933ல் பெற்றார்.

முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய இன்னொருவர், யெவ்கெனி ஸம்யாத்தின். சோவியத் அரசமைப்பு; அதன் விளைவாய் எதிர்காலத்தில் உருவாகச் சாத்தியப்பட்ட - மானுட உணர்வுகளை மழுங்கடிக்கப்பட்ட - வெறும் இயந்திரமயமான வாழ்வு பற்றிய ஆபத்து; இவற்றை வைத்து அவர் எழுதிய நாம் என்ற நாவல் செம்மை இலக்கியமாகப் பெருங் கணிப்பைப் பெற்றது மட்டுமன்றி பின்னர் ஆங்கிலத்தில் எழுந்த உலகப் பிரபல்யம் மிக்க நாவல்களான, ஆல்டஸ் ஹக்ஸ்லியின் வீரமிகு புத்துலகு மற்றும் ஜோர்ஜ். ஓர்வெல் எழுதிய 1984 ஆகியவற்றிற்கு ஆதர்சமாகவும் முன்னோடியாகவும் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சியை அடுத்து வெளியேறியவர்களில் முக்கியமான இன்னொருவர் விளதீமிர் நபொக்கோவ் (Vladimir Nubuhov), ருஷ்யனிலும் எட்டு நாவல்கள் எழுதியிருந்த நபொக்கோவ் ஆங்கிலமும் நன்கறிந்திருந்தார். பின்னர் கேம்பிறிட்ஜில் பெற்ற கல்வி, அவரை ஆங்கிலப் பேராசிரியராக மட்டுமின்றி ஆங்கில மொழி எழுத்தாளருமாக்கியது. லொலிற்ரா போன்ற நாவல்களை எழுதிய நபொக்கோவ், இந்த நூற்றாண்டின் முக்கியமான ஆங்கில எழுத்தாளர்களில் ஒருவராகக் கொள்ளப்படுகிறார்.


விளதீமிர்
நபொக்கோவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05

விளதீமிர் நபொக்கோவ் பற்றிப் பேசும் போது உடனே நினைவுக்கு வருகின்ற இன்னொருவர் ஜோசப் கொன்ராட். போலிஷ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர் எனினும், பின்னர் ஆங்கிலத்தில் நிறைய எழுதியதுடன் முன்னணி நாவலாசிரியராகவும் திகழ்ந்தார். நபொக்கோவ் அமெரிக்காவில் குடியேறினாரென்றால்; கொன்ராட் பிரிட்டிஷ் பிரஜையானார். கொன்ராட்டின் பெரும்பாலான படைப்புக்கள் இந்த நூற்றாண்டில் வெளிவந்தவை. அவருடைய கடலோடி வாழ்வின் அனுபவங்கள் அவற்றில் பிரதிபலித்தன.



ஜோசப் கொன்ராட்

கடலோடியாகவும் கதை சொல்லியாகவும் நிபுணர் எனப்படும் கொன்ராட் எழுதிய மிகப் பிரபலமான நாவல்களிலொன்று இருள் இதயம். இது முதலில் நூலுருப் பெற்றது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலாகும். இன்றுவரை மிகவும் பேசப்படும் நாவலாக இது இருக்கிற போதிலும், இதில் இனவாதமும் காலனித்துவ ஆதிக்க உணர்வும் இழையோடுவதை, ஆபிரிக்க நாவலாசிரியர் அச்சிபே உட்படப் பல விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் உலகப் போர்க் காலத்தில் கொன்ராட் எழுதிய நிழற்கோடு ஒரு மிகச் சிறிய நாவலேயெனினும் அவரது உன்னதப் படைப்பாகவும், போரென்றால் என்ன என்பதைக் காட்டுவதாகவும் விளங்கிற்று, கப்பல் தலைவனான ஓர் இளைஞன் எதிர்கொள்ளும் புற - அகப் போராட்டங்களையும் அவற்றினூடு அவன் எவ்வாறு இளமைக்கும் முதிர்ச்சிக்குமிடையிலான நிழற்கோட்டைத் தாண்டுகிறான் என்பதையும் இக்கதை கூறுகிறது. ஒரு விதத்தில் குறியீட்டு நாவலாகவும் கொள்ளப்படத்தக்கது நிழற்கோடு. கப்பலில் உருவாகும் நெருக்கடியை எதிர்கொள்ளக் கூட்டமாகவும் தனியாகவும் ஒவ்வொருவருக்கும் தேவைப்படுகிற தன்மைகள்தாம், ஒட்டுமொத்தமாக மனித வாழ்விலும் - அக்கிரமங்களையும் அழிவுகளையும் எதிர் கொண்டு முகங்கொடுக்க - அவசியமானவை.

கொன்ராடின் படைப்புகளில் பொதுவான ஒரு விஷயமென்னவெனில், அர்த்தமற்றவை போற் தோன்றுந் திருப்பங்களும், தொடர்பற்றவை போலத் தோன்றும் சம்பவங்களுமாகும். பொறுமையான, அக்கறையான வாசிப்பு ஒன்றினை நாடி நிற்பவை அவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06

**1914-1918** இல் இடம்பெற்ற முதலாவது உலகப்பெரும் போரினைத் தொடர்ந்து - அந்த அனுபவங்களினூடாக - போரின் கொடுமையை விளக்கும் வேறு பல குறிப்படத்தக்க புனைகதை இலக்கியங்களும் பிறந்தன. அவற்றுள் முதலில் குறிப்பிடப்பட வேண்டியது எறிக் மாறியா றிமார்க் எழுதிய 'மேற்கு முனையில் எல்லாம் அமைதியாக இருக்கிறது' என்ற ஜெர்மன் நாவலாகும். கொன்ராடின் நிழற் கோடு போலவே இதுவும் நூற்றைம்பது பக்கங்களுள் அடங்குகிற சிறிய படைப்பு. எனினும் முதலாம் உலகப் போர்பற்றி எழுந்த உலகின் மிகச் சிறந்த படைப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

றிமார்க்கை ஓர் உன்னதப் படைப்பாளியாக நிறுவியது மட்டுமின்றி, இரண்டு உலகப் போர்களிலுமே அசுரகணங்களாக உலகால் கணிக்கப்பட்ட ஜெர்மன் படையினரில் ஒருவனை மனிதனாகக் காட்டியதிலும் மேற்குமுனையில் எல்லாம் அமைதியாக இருக்கிறது, வெற்றி பெற்றது. நாவலின் நாயகனான போல் என்கிற பத்தொன்பது வயதே நிரம்பிய இளைஞனின் பார்வையில் நகர்கிறது கதை. ஜெர்மனியரின் நோக்கில் கூறப்பட்டாலும், உலகளாவிய மனிதப்பண்பு கொண்ட காரணத்தால் இந்நாவல் சாகாவரம் பெற்று மிளிர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்நூல் ஒப்புதல் வாக்குமூலமோ, குற்றச்சாட்டோ அல்ல. சாகசம் என்பதும் எள்ளளவும் ஏற்றதன்று; ஏனெனில் சாவுடன் முகத்தோடு முகம் நோக்கி நிற்போர்க்கு, சாவென்பது சாகசமன்று. போரின் எறிகணைகளுக்குத் தப்ப முடிந்திருந்தாலும் கூட, போரால் அழிபட நேர்ந்த ஒரு தலைமுறை பற்றிக் கூறமட்டுமே இது முயல்கிறது' - என்று நாவலின் முன்னே குறிப்படப்படுவது மனதைத் தொடுவது மட்டுமன்றி, போருக்கெதிரான பிரகடனமாகவும் ஒலிக்கிறது.



எறிக் மாறியா
றிமார்க்

இப்படைப்பின் போர் எதிர்ப்பு நிலைப்பாட்டின் காரணமாக இது எரிக்கப்பட வேண்டுமென பின்னர், சர்வாதிகாரி ஹிட்லர் கட்டளையிட்டான். இதே காரணத்திற்காக, ஸ்தாலினின் ஆட்சியின் கீழிருந்த சோவியத் நாட்டிலும் இந்நூல் தடை செய்யப்பட்டதாக அறிய முடிகிறது. மேற்குமுனையில் எல்லாம் அமைதியாக இருக்கிறது, பின்னர் திரைப்படமாகவும் வந்தது. 20ம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் எழுதப்பட்ட இந்நாவலின் மூலக் கையெழுத்துப்பிரதி, எழுபத்தைந்து ஆண்டுகள் கழிந்து, ஏறத்தாழ நாலேகால் லட்சம் டொலருக்கு விற்பனையானது.

பிரெஞ்சுப் புரட்சியுடன் பிரான்ஸை விட்டு வெளியேறி, ஜெர்மனியில் குடியேறிய குடும்பமொன்றின் வழித்தோன்றல் றிமார்க். அவர் முற்று முழுதான ஜெர்மனியர் என்றாலும், ஜெர்மன் ஆட்சியின் நாஸிக் கொள்கைகளின் கொடுமையினால் யூதமக்கள் பட்ட சொல்லொணாத் துயரங்களையும் தமது படைப்புகளில் வெளிக் கொணர்ந்திருக்கிறார். ஓர் உண்மையான இலக்கியவாதி என்பவன், மெய்யான மனிதாயதவாதி என்பதை அவர் நிரூபித்தார்.

இதற்கு ஒரு நல்ல உதாரணமாக அமைவது, றிமார்க்கின் அகதி என்ற நாவல். இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே இந்த அற்புதப்படைப்பு தமிழில் பெயர்க்கப்பட்டு வெளியாகியது என்பதும் ஓர் அற்புதமான செய்திதான். எஸ்.எஸ்.மாரிசாமி மொழி பெயர்த்து, பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடாக, 1967ல் இது பிரசுரமாகியது. நாடும் வீடுமின்றி நாஸிகளால் துரத்தப்பட்டு வேட்டையாடப்பட்ட யூதர்கள் நாடு நாடாக அலையும் அவலத்தைக் கூறும் கதை, அகதி, புலம் பெயர்ந்து, போக்கிடந் தேடி மேற்குலகெங்கும் அலையும் இன்றைய இலங்கைத் தமிழரின் நிலையிலும் எவ்வளவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசமான நிலைகளை இந்த நாவல் எமக்குக் காட்டுகிறது. றிமார்க் எழுதிய, லிஸ்பனில் இரவு நாவலும் ஏறத்தாழ இதே தொனிப் பொருளைக் கொண்டது.

ஜெர்மன் இலக்கிய மேதைகளில் முக்கயமானவரான தோமஸ் மான் எழுதியவற்றுள் மாறிய தலைகள் என்ற ஒரு சிறு படைப்பு மட்டுமே தமிழில் வந்ததாக நினைவு. 19ம் நூற்றாண்டில் பிறந்தவராயினும் மானின் வாழ்வில் மூன்றிலிரண்டு பகுதி கழிந்ததும், முக்கியமான படைப்புக்கள் வெளியானதும், அவர் நோபல் பரிசு பெற்றதும் 20ம் நூற்றாண்டிலேயே. செழிப்புமிக்க வணிகர் பரம்பரையொன்றில் பிறந்த மான் தம் இயல்பான நாட்டங்காரணமாக கலையும் இலக்கியமும் பயின்று, பின்னர் முழுநேர எழுத்தாளராகவே ஆனார்.

19ம் நூற்றாண்டின் இறுதியில் (1900) வெளியான அவரது முதல் நாவலே மானுக்குப் பெரும்புகழ் தேடிக்கொடுத்த படைப்பாயமைந்தது. பட்டன்புரூக்குகள் என்ற பெயர் கொண்ட இந்நாவல், அதே பெயர் கொண்ட ஒரு குடும்பத்தின் சரிவைக் கூறும் கதையைக் கொண்டது. ஓரளவுக்கு ஆசிரியரின் சொந்தப் பின்னணிகளின் சாயல் அடிப்படையில் தெரிவதாகக் கூறுகிறார்கள். ஜெர்மனியில் பெரும் வரவேற்பைப் பெற்ற இந்நாவல் பின்னர் சர்வாதிகாரி ஹிட்லரால் தடை செய்யப்பட்டதுடன் எரிக்கவும் பட்டது.


தோமஸ் மான்

மானின் இன்னொரு பெரும் படைப்பான மந்திரமலை, முதலாம் உலகப் பெரும் போரைப் தொடர்ந்து ஐரோப்பாவில் ஏற்பட்ட வீழ்ச்சிகளைச் சித்தரிப்பது. 'இயங்கியல் நாவல்' என ஆசிரியரின் சொந்த வார்த்தைகளாலேயே வர்ணிக்கப்பட்ட இந்நாவல் சற்று வித்தியாசமானது. சுவிற்ஸர்லாந்தின் ஆல்ப்ஸ் மலையடிவாரத்திலுள் காசநோய் விடுதியொன்றில் 'கதை' நிகழ்கிறது. பல்வேறு பின்னணிகளும் வயதும், தேசீயமுங்கொண்ட நோயாளிகளின் சம்பாஷணைகளூடாக அது நகர்கிறது. வெளியுலகின் தொடர்பற்றுப்போன அவர்களின் பேச்சில் போர், காதல் உணர்ச்சிகள் - எல்லாமே அலசப்படுகின்றன. மானுக்கு 1929 இல் நோபல் பரிசைப் பெற்றுக் கொடுத்தது மந்திர மலை. தம் வாழ்வின் பிற்பகுதியில், அமெரிக்காவில் மான் குடியேறினார். தூயபாவி, கறுப்பு அன்னம் ஃபீலிக்ஸ் குறுலின் ஒப்புதல்கள் போன்ற படைப்புகளை அவ்வேளையில் அவர் உருவாக்கினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகத்தைப் பற்றிய விமர்சகனாகவும் அதே வேளை அச்சமூகத்திலேயே வாழ வேண்டியவனாகவும் இருக்கிற படைப்பாளியின் நிலையிலுள்ள முரணை - பிரச்சினையை - மான் உணர்ந்திருந்தார். அவருடைய ஆரம்பகால வாழ்வை இது பெரிதும் பாதித்ததாகவும் அறியமுடிகிறது. இப்பிரச்சினை, பின்னர் - நாஸிகள் ஆட்சிக்கு வந்ததும் - இன்னும் உக்கிரம் பெற்றது. இதன் விளைவாய் அவருக்கும் ஆட்சியாளருக்குமிடையில் உருவான விரிசல் அவரை ஜெர்மனியை விட்டு வெளியேறத்தூண்டிற்று. மானின் ஜெர்மன் குடியுரிமையும் முப்பதுகளில் நாஸிகளால் பறிக்கப்பட்டது.



ஹெர்மன் ஹெஸெ

ஆனால், அதற்கு முதலே, முதலாம் உலகப் பெரும் போரினைத் தொடர்ந்து, தம் ஜெர்மன் குடியுரிமையைத் தாமே துறந்து வெளியேறிய இன்னொரு இலக்கியமேதை இருந்தார். அவர், ஹெர்மன் ஹெஸெ. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருந்த இளைஞர்களை அரை நூற்றாண்டு காலம் ஆட்டிப்படைத்த படைப்பாளி ஹெஸெ. தம் உள்ளார்ந்த வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து எதிரொலிக்கும் ஒருவர் என ஒரு தலைமுறையே அவரை நம்பிக்கையுடன் எதிர்பார்த்தது என்று மான் ஹெஸெயைப் புகழ்ந்தார்.

இந்தியாவில் பலகாலம் புரொட்டஸ்தாந்து மிஷனரிகளாகப் பணியாற்றிய தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் ஹெஸெ. தம் பெற்றோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், தம் எழுத்தார்வத்திற்குத் துணைபுரியுமென நம்பி, புத்தக விற்பனையாளர் தொழிலை மேற் கொண்டார் அவர். எனினும் அந்த இந்திய அனுபவங்களினுடாகச் சுவறிய கீழைத்தேய தத்துவ ஞானத்தின் விளைவாய், குறிப்பிடத்தக்க இரு படைப்புக்களை ஹெஸெ உருவாக்கினார். சித்தார்த்த, ஸ்தெப்பி ஓநாய் என்ற அவ்விரு நாவல்களும், இருபதுகளில் வெளியாகின. வாழ்வின் அர்த்தத்தையும் நிறைவையும் நாடி அலைந்த இரண்டு மனிதர்களின் கதைகளையே அவ்விரு நாவல்களும் பேசின.

கீழைத்தேயத் தத்துவத்தில் மட்டுமின்றி இசையிலும், ஜுங்கின் உளவியல் கொள்கைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகவும் ஹெஸெ விளங்கினார். படைப்பாற்றல் வற்றாத அவருடைய நீண்ட வாழ்வின் பிரதிபலிப்பான ஐந்து தசாப்தங்களின் கதைகள் மற்றும் அவருடைய தத்துவ நோக்கும் பிரபஞ்சப் பார்வையும் பிரதிபலிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடிமணி விளையாட்டு போன்ற படைப்புகள் இன்னமும் பேசப்படுபவை. ஹெஸெக்கு 1946 இல் நோபல் பரிசு கிடைத்தது.

மான், ஹெஸெ - இருவரின் சம காலத்தவராகவும் அதே அளவு இலக்கிய மேதைமை வாய்ந்தவராகவும் திகழ்ந்த ஜெர்மென் மொழி எழுத்தாளர் இன்னுமொருவர் இருந்தார். அவர் ஃபிரான்ஸ் காஃப்கா. செக் இனத்து யூதராக இருந்தபோதும், காஃப்கா, தமது படைப்புகளனைத்தையும் ஜெர்மன் மொழியிலேயே படைத்தார். மேற்குறிப்பிட்ட மற்றிருவரிலும் பார்க்க, தீவிர தமிழ் வாசகர்களுக்கு அதிகம் அறிமுகமானவராக காஃப்கா விளங்குகிறார். அவருடைய மிகவும் கனதியும் புகழும் வாய்ந்த நாவலான விசாரணை தமிழிலும் வெளியாயிற்று.

என்னவென்றே கூறப்படாத ஒரு குற்றத்துக்காக கைதுசெய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டுக் கொல்லப்படும் ஒரு மனிதனின் கதை 'விசாரணை'. காஃப்காவின் மரணத்தின் பின்னரே இந்நாவல் வெளியிடப்பட்டது.


ஃப்ரான்ஸ் காஃப்கா

சட்டத்துறையில் கலாநிதி பட்டம் பெற்றவராக இருந்தும் தம் இலக்கியச் செயற்பாடுகளுக்குக் குந்தகமாய் அமைகிறதெனத் தம் தொழிலைத் துறந்தவர் காஃப்கா. சொந்த வாழ்வின் பிரச்சினைகளுடன் காசநோயும் கூடவே, தமது 41ஆவது வயதில் அவர் காலமானார். அரண்மனை, அமெரிக்கா, சீனப்பெருஞ்சுவர் ஆகிய படைப்புகயையும் தந்த அவரது உருமாற்றம் எனும் கதை இலக்கிய வாசகர்களிடையே பெரும் கவனத்ததை ஈர்த்தது. காஃப்காவின் உலகநோக்கு எந்த வரையறைக்குள்ளுக்கும் அடங்காதெனினும், மிகையதார்த்த வாதம், இருத்தலியல் - இவற்றின் சாயல்களை அதில் இனங்காண முடியும். என்னவென்றே புரிந்து கொள்ள முடியாதவற்றுடன் போராடுகின்ற பாத்திரங்களை காஃப்கா .படைத்தார். அவருடைய அரண்மனை பல்வேறு தளங்களில் பொருள் தரும் ஒரு படைப்பெனக் கூறப்படுகிறது.

இம்மூவரின் பிறகு இலக்கிய உலகின் கவனத்தை ஈர்த்த இன்னொரு ஜெர்மனியர், குந்தர் கிறாஸ்; தம்முடைய தகரமேளம் நாவலின் மூலம் பெரும்புகழ் பெற்றவர். இக் கட்டுரையைத் தொடராக எழுதிக் கொண்டிருந்த வேளையில் (1999, செப்டம்பர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியில்) ஓர்நாள், கேட்க நேர்ந்த வானொலிச் செய்தி தற்செயலானது. 1999ன் இலக்கியத்திற்கான நோபல் பரிசு குந்தர் கிறாஸ் அவர்களுக்குக் கிடைத்திருப்பதை அது கூறிற்று.

'சரித்திரத்தின் மறக்கப்பட்ட பக்கங்களைச் சித்திரிக்கும் அவருடைய சிருஷ்டிகளுக்காக, இப்பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. இது மிகவும் பிந்தி வழங்கப்பட்ட கௌரவம். தகரமேளம் ஒன்றிற்காகவே அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்க வேண்டும், என இன்னொரு பிரபல ஜெர்மன் எழுத்தாளரான மாட்டின் வல்ஸர் குறிப்பிட்டார். தகரமேளம் 1959ல் முதலில் வெளியாயிற்று.

இந்த இடைப்பட்ட காலத்தில், அந்நாவல் பல்வேறு பதிப்புகளைக் கண்டுள்ளது. சினிமாவாகவும் வெளியாகி 'தங்கத் தெங்கு' விருது மற்றும் சிறந்த வெளிநாட்டுச் சினிமாவுக்கான 'ஒஸ்கார்' விருது போன்றவற்றையும் பெற்றிருந்தது.

1927 இல் ஜெர்மனியின் டான்ஸிக் நகரில் பிறந்த கிறாஸ், வரைவல்லுநராக, சிற்பியாக, மேடை அமைப்பாளராக, நாடகாசிரியராக, கவிஞராக விளங்கியவர். இரண்டாம் உலகப் போரின் போது ஜெர்மன் படையில் சேர்ந்து போரிட்ட அவர் அமெரிக்கரால் சிறைப்பிடிக்கப்பட்டார். போரின் பிறகு பாரிஸிலும் சிறிது காலம் வசித்தார். தகரமேளம் பிரசுரிக்கப்படுவதற்கு முன், அவரை அதிகம் பேருக்குத் தெரியாதிருந்தது. தீவிர இலக்கியவாதிகளுக்கும் பரீட்சார்த்த நாடக முயற்சிகளை மேற்கொள்வோருக்கும் மட்டுமே அவர் அறிமுகமானவராயிருந்தார். தகரமேளம் ஜெர்மன் மொழியில் மாத்திரமின்றி, ஆங்கில, பிரெஞ்சு மொழிகளிலும் மிகப் பெரும் வரவேற்பைப் பெற்றது.

அதன் பிறகு பூனையும் எலியும், வரட்சி வருடங்கள், நத்தையின் தினக் குறிப்பிலிருந்து போன்ற நாவல்களும், கவிதைத் தொகுதி, நாடகப் பிரதி, ஆகியவையும் பிரசுரம் பெற்றன. தகரமேளம் 21ம் நூற்றாண்டிலும் தன் செல்வாக்கைச் செலுத்தப் போகும் படைப்பாக மிளிரும் எனப் பரிசுக் குழு அறிக்கை நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.


குந்தர் கிறாஸ்

இரண்டாம் உலகப் பெரும் போரின் முழுமுதற் காரணியாகிய அன்றைய ஜெர்மனியின் நிலைப்பாடு பற்றிய நிறைந்த பிரக்ஞையும் அது பற்றிய தீவிர விமர்சனங்களும் கிறாஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குண்டு. அவற்றின் வெளிப்பாடே அவரின் எழுத்துக்கள். தகரமேளத்தில் வருகிற சிறுவன் ஒஸ்கார் அதிரச் செய்வது அந்த மேளத்தை மட்டுமல்ல ஜெர்மனியின் மனச் சாட்சியையுந்தான்.

எப்போதும் ஒரு இடது சாரியாகவே இருக்கிறவர் கிறாஸ். ஒரு எழுத்தாளன் தனது இலக்கியக் கடப்பாடுகளை மட்டுமின்றி, 'ஒரு பிரஜை என்ற முறையில் தனது அரசியல் கடப்பாடுகளையும் நிறைவேற்ற வேண்டியவன்' என்கிறார், அவர். தமது இளவயதில் - நிர்ப்பந்தங் காரணமாக - நாஸிகளுடன் சேர்ந்தியங்க வேண்டி வந்தமை பற்றிய குற்ற உணர்வு அவருக்குண்டு - அப்போது அதிலிருந்து தப்புவதென்பதை எண்ணிப்பார்த்தே இருந்திருக்க முடியாது என்றபோதும்.

கிறாஸைப் போலவே கட்டாயத்தின் நிமித்தம் ஹிட்லரின் சேனையில் சேர்க்கப்பட்டு, ருஷ்யாவின் மீதான 'ஒப்பரேஷன் பாபறோஸா' ஆக்கிரமிப்புப் போரிலும் பங்கு பற்ற வேண்டி நேரிட்டு, பல தடவை காயமும் பட்டு மீண்ட இன்னொரு ஜெர்மனியரும் பின்னர் எழுத்தாளராகி 1972 ல் இலக்கியத்திற்கான நோபல் பரிசையும் பெற்றார்! அவர் ஹென்றிக் போல். நாவல், சிறுகதை, நாடகம் - என எல்லா வடிவங்களிலும் சிருஷ்டித்த போல், ஜெர்மனியில் மட்டுமின்றி, சோவியத் நாட்டிலும் பெரும் வரவேற்புப் பெற்ற ஒரு படைப்பாளியாகத் திகழ்ந்தார்.

ஹிட்லரின் கொடுங்கோன்மைக்குட்பட்டு, 1940ல் ஜெர்மனியை விட்டோடிய இன்னொருவரும் 26 ஆண்டுகள் கழித்து - 1966ல் நோபல் இலக்கியப் பரிசை வென்றார் என்பது ருசிகரமானது. நெல்லி சாக்ஸ் என்ற இப் பெண்மணி ஒரு ஜெர்மனிய யூதர். ஸ்வீடனைத் தமது வாழ்விடமாக்கிக் கொண்ட அவர், தமது பரிசினை 'எஸ்.வை.அக்னொன்' எனப் புனைபெயர் கொண்ட இன்னொரு யூதருடன் பகிர்ந்து கொண்டார். சாமுவல் யூசஃப் ஜக்ஸ் என்ற இயற்பெயர் கொண்ட அவர் போலந்தில் பிறந்து பின்னர் இஸ்ரேலில் குடியேறியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07

செக் எழுத்தாளரான மிலான் குண்டேராவும், செக்கோஸ் லோவாக்கியாவை விட்டு பிரான்சுக்கு குடி பெயர்ந்த ஒருவராவர். செக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராகவுமிருந்த குண்டேரா, செக்கோஸ்லாவாக்கியாவில் ருஷ்யா 60களின் பிற்பகுதியில் ஆக்கிரமிப்பு நிகழ்த்தியதையடுத்து இடம்பெற்ற நிலைமைகளின் கீழ் தம் நாட்டை விட்டகன்றார்.

அவருடைய முதலாவது நாவலான பகடி வெற்றி கரமானதாயமைந்தது. அது ஒரு அரசியல் நாவல். ஸ்தாலினிஸ்டான தன் காதலிக்கு, ஓரிளைஞன் பகடியாக அனுப்பிய 'ட்ரொஸ்கி நீடூழி வாழ்க' என்ற அஞ்சலட்டை உருவாக்கிய துன்பங்களை அது விபரிக்கிறது. 'நூற்றாண்டின் மகத்தான நாவல்களிலொன்று' என பிரெஞ்சு விமர்சகர் அரகனால் போற்றப்பட்ட பகடி, 1967ல் வெளியானது. இக்கால கட்டத்தில் தம் தொழிலை இழக்க நேரிட்டதுடன், குண்டேராவின் ஆக்கங்கள் புத்தக விற்பனை நிலையங்களிலிருந்தும், நூலகங்களிலிருந்தும் அகற்றப்பட்டன. எனினும், 'பிரியாவிடை விருந்து', 'வாழ்வு வேறெங்கோ உள்ளது' ஆகிய நாவல்களையும் சிறந்த பல சிறுகதைகளையும் அவர் இக்காலகட்டத்தில் எழுதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிலான்
குண்டேரா

புலம் பெயர்ந்த பின், சிரித்தலும் மறத்தலும் பற்றிய புத்தகம், தாங்கொணா இலகுத்தன்மை போன்ற நாவல்களையும் அவர் எழுதினார். அவருடைய ஆன்மாவும் உடலும், எங்கோ பின்னால் போன்ற கதைகள், அவரது சொந்த நாட்டை நிலைக்களனாய்க் கொண்டெழுந்த, கலையழகு மிகுந்த ஆக்கங்கள். அரசியல் பிரக்ஞை, நகைச்சுவை, கிண்டல், பாலுணர்வு எனப் பலவும் பின்னியிருக்கும் படைப்புகளை குண்டேரா உருவாக்கினார். அவருடைய எங்கோ பின்னால் கதையின் ஆரம்பத்தில் ஜான் ஸ்கசல் என்பவர் எழுதிய புதுக்கவிதை ஒன்றுள்ளது.

*'கவிஞர்கள் கவிதைகளை*
*சிருஷ்டிப்பதில்லை*
*கவிதை எங்கோ*
*இருந்து கொண்டிருக்கிறது*
*அது*
*அங்கே*
*நீண்ட காலமாக*
*இருக்கிறது*
*கவிஞன் அதைக்*
*கண்டு பிடிக்க மட்டுமே செய்கிறான்'.*

'தன்னுடைய நூல்களிலொன்றில், என் நண்பர் ஜோஸஃப் ஸ்க்வொரொஸ்கி உண்மைக் கதையொன்றைக் கூறுகிறார்', என்று எங்கோ பின்னால் தொடங்குகிறது. இங்கே குண்டேரா குறிப்பிடும் அவர் நண்பர் ஸ்க்வொரொஸ்கியும் நவீன செக் இலக்கியத்தின் முக்கிய படைப்பாளிகளில் ஒருவர்.

செக்கோஸ்லாவாக்கியாவுக்குள் சோவியத் ராணுவம் ஊடுருவியதை அடுத்து உண்டான நிலைமைகளின் கீழ் குண்டேரா எவ்வாறு ஃபிரான்சுக்குச் சென்றாரோ அவ்வாறே ஸ்க்வொரொஸ்கியும் செக் நாட்டை விட்டு கனடாவுக்குப் புலம் பெயர்ந்து சென்றார். ஆங்கிலத்திலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தவராதலால் அங்கே ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். எனினும் செக் இலக்கிய வளர்ச்சிக்காகத் தொடர்ந்தும் பாடுபட்டார். அவருடைய கோழைகள் என்னும் நாவல், 1945ல் செக்கோஸ்லாவாக்கியாவில் ஜெர்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகள் பின் வாங்குகிற - செஞ்சேனை முன்னேறுகிற - நிலைமைகளை விபரிப்பது. அச்சரித்திர நிகழ்வுகளிடையில் சிக்கிக் கொண்ட டனி·எனும் இளைஞனின் கதையைக் கூறுகிறது. புகழ் பெற்ற இந்நாவலை, ஸ்க்வொரொஸ்கி, 1948ல், தமது 24 வது வயதில் எழுதினார். தொடர்ந்து ஸக்ஸஃபோன் நாவல் வெளியாயிற்று.

எழுபதுகளில் வெளியான அவருடைய ஆறு கதைகளின் தொகுதியில் அவர் ஒர் கேள்வியை எழுப்புகிறார். என்னை ஏன் நீ தண்டிக்கிறாய், இறைவா? ஒரு நல்ல கிறிஸ்துவன் இளம் பெண்களில் கை வைக்கக் கூடாது என்றால், அந்த இளம் பெண்களைப் பிறகேன் நீ படைத்தாய்? பெண்கள் மட்டுமன்றி, ஸ்க்வொரொஸ்கியின் கதைகளில் கணிதமும், ஜாஸ் இசையும் கூட வருகின்றன.



வாஸ்லாவ் ஹாவெல்

எழுத்தாளர் ஒருவர் தம் எழுத்துக்களால் வெகுசனங்களைக் கவர்ந்து அவர் தம் மனங்களை வென்று பின்னர் நாட்டின் ஜனாதிபதியாகவும் ஆனார்! இது நடந்தது எண்பதுகளில்; செக்கோஸ்லோவாக்கியாவில். இதைச் சாதித்த வாஸ்லாவ் ஹாவெல் ஒரு செக் நாடகாசிரியர். முப்பதுகளின் பிற்பகுதியில் பிராக்கில் பிறந்த ஹாவெல், பள்ளிப்படிப்பு, இராணுவ சேவை ஆகியவற்றின் பின்னர் நாடக உலகின்பால் ஈர்க்கப்பட்டார். அங்கு பல்வேறு பணிகளின் பின்னர் நாடகாசிரியராக முகிழ்த்தார். அவருடைய முதல் நாடகமான நந்தவன விருந்து வெற்றிகரமானதாயமைந்ததைத் தொடர்ந்து, இரண்டாண்டுகளுக்கிடையில் - 1965ல் 'மகஜர்' என்ற நாடகம் உலகெங்கும் மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. இக்கால கட்டம், செக்கோஸ்லாவாக்கியாவில் அரசியல் அடக்கு முறைகளுக்கெதிரான போராட்டங்கள் நிரம்பிய கொந்தளிப்பான காலகட்டமாயிருந்தது. அதனைப் பிரதிபலித்த மகஜர், சிறந்ததோர் அரசியல் கிண்டல் இலக்கியமாக அமைந்ததுடன் ஹாவெலின் மேதைமையை வெளிப்படுத்துவதாயும் அமைந்தது. ப்ற்ரிடெப்பி என்கிற புதிய மொழியொன்று அதிகாரவர்க்கத்திற்கெனக் கண்டுபிடிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படுவதனை மையமாகக் கொண்டு நாடகம் நிகழ்கிறது.

அறுபதுகளின் பிற்பகுதியிலிருந்து, ஹாவெலின் நாடகங்கள் பிரசுரிக்கப்படுவதும், மேடையேற்றப்படுவதும் அரசினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைசெய்யப்பட்டன. 79ல் மனித உரிமைப் போராட்டங்களில் ஈடுபட்டமைக்காக, ஹாவெலுக்கு நாலரை ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தொடர்ந்த மக்கள் கிளர்ச்சிகளின் பின்னர், நாட்டில் நிலைமை மாறுகிறது. விடுதலை பெற்று வெளியே வருகிற ஹாவெல் 89ல் ஜனாதிபதியாகிறார். அதன் பின்னரும் அவரது இரு நூல்கள் வெளியாகின.

சோவியத் மேலாதிக்கதிற்கெதிராகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் எழுச்சி ஏற்பட்ட வேளையில் நடந்தது இது. இந் நிகழ்வுக்கு சற்று முன்னதாகத்தான் போலந்தில் லேக் வலெஸ்ஸா தலைமையில் ஆட்சி மாற்றம் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

செக் மொழி எழுத்தாளரான ஜாரொஸ்லாவ் ஹாஸெக் எழுதிய நல்ல சிப்பாய் ஷ் வாய்க் என்ற நீண்ட நாவல், முதலாம் உலகப் போர்ப் பின்னணியை வைத்தெழுந்தது. நகைச்சுவை மிளிரும் செம்மை இலக்கியம் இது. போரின் கொடுமை பற்றி அதிகம் கூறாவிட்டாலும், அதிகாரத்துவத்திற்கும் அதனின்றும் கிளைவிடும் ஊழலுக்குமெதிராக, ஒரு சாமானியன் எதிர்த்து தாக்குப்பிடிப்பதை ஹாஸெக் அதில் நன்கு சித்திரித்தார். திட்டமிட்டிருந்தபடி படைப்பை முழுமையாக்க முதலே ஹாஸெக் மரணித்து விட்டாலும் - முக்கால் பங்கே முடிந்த நிலையிலும் - அந்நாவல் இலக்கியத்தரங் குன்றாது, கனதியும் அழகுங் கொண்டு மிளிர்ந்தது.

புனைகதையோ நாவலோ அல்லாத - ஆனால் அவற்றிலும் பார்க்க விறுவிறுப்பும் உயிர்த்துடிப்பும் கலை நயமுங் கொண்ட - உண்மைப் பதிவுகளின் தொகுப்பொன்றும் செக்மொழியின் செம்மை இலக்கியமாப் புகழ் பெற்றது. இதனை எழுதியவர் செக்மொழி எழுத்தாளரும் பத்திரிகையாளருமான ஜுலியஸ் ஃபூசிக். நாஸி ஆக்கிரமிப்பிற்கெதிரான தீவிர போராளியாக விளங்கியதால் ஜெர்மனியரால் கைது செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார். சிறைச்சாலையிலிருந்து - சாவை எதிர் நோக்கிய நிலையில் - அவர் எழுதிய தூக்கு மேடைக்குறிப்புகள் நூல் சாகாவரம் பெற்று மிளிர்கிறது. இந்நூல் தமிழிலும் வெளிவந்து தீவிரவாசகர்களிடை பெரும் வரவேற்பைப் பெற்றது.

செக் மொழி இலக்கியம் பற்றித் தெரிய நேர்ந்த அளவிற்கு ஸ்லோவாக்கிய இலக்கியம் பற்றி அறிய முடியாது போனமை துரதிருஷ்டமே - ஏறத்தாழ 20ம் நூற்றாண்டின் பெரும் பகுதியில் இரு மொழிகளும் ஒரே நாட்டிலேயே வழங்கி வந்திருந்தபோதிலுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட, மேலே குறிப்பிடப்பட்ட செக் இலக்கியங்களால் யாவும் ஆங்கில மொழி பெயர்ப்பில் வெளிநாட்டுப் பதிப்பகங்களால் வெளியிடப்பட்டவை. ஸ்லோவாக்கிய இலக்கியத்தைப் பொறுத்தளவில் 80களில் பிராட்டிஸ்லாவாவிலிருந்து வந்து கொண்டிருந்த ஸ்லோவாக் எழுத்தாளர் சங்க வெளியீடான அட்சரேகை 12 -23 சஞ்சிகை பற்றிக் குறிப்பிடலாமெனினும் அது அரசு கட்சி கட்டுப்பாட்டிலிருந்தமையால் பெரிதாக சாதிக்க இயலவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08

**போ**ரின் கொடுமையைக் கூறும் அற்புதப் படைப்பு, ஆயுதங்களுக்குப் பிரியாவிடை - உலகம் நன்கறிந்த அமெரிக்க எழுத்தாளரான ஏணஸ்ற் ஹெமிங்வே எழுதிய இந்த ஆங்கில நாவல், ஏறத்தாழ முப்பத்தைந்தாண்டுகளுக்கு முன்பு, தமிழில் போரே நீ போ என்ற தலைப்பில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியானது. இந்த நூற்றாண்டின் மகத்தான இலக்கியங்களுள் ஒன்றெனப் போற்றப்படும் இப்படைப்பு, மேலெழுந்த வாரியாக ஒரு வெறும் காதல் கதையாகப் படலாம்.

ஆனால், போர்பற்றிக் கூறும் பெரும்படைப்பாகவே அது கணிப்புப் பெறுகிறது. சாதாரண நீளமே கொண்ட இந்நாவலில் விவரங்கள் பற்றி வீணே விஸ்தரிக்காமல், அவற்றைத் தொட்டும், கோடிகாட்டியும் செல்வதால் மட்டுமே போரின் குரூரங்களைக் காட்டுவதில் ஆசிரியர் வெற்றி பெறுகிறார். இன்னொரு விதத்தில் சொல்வதானால், போர் ஒரு பாத்திரமாகவே வருகிறது.

முதலாம் உலகப் போரில் நேரடிப் பங்கு பெற்றவர் ஹெமிங்வே. அந்த அனுபவ மெய்ம்மையானது முழுக்கலை வடிவம் பெற்றுப் பரிணமிக்கப் பத்தாண்டுகள் பிடித்தன. இதேபோல் பின்னர் 30 களில் இடம்பெற்ற ஸ்பானிய உள்நாட்டுப் போரின் போது ஹெமிங்வே போர்முனை நிருபராகப் பணிபுரிந்த அனுபவங்களின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு குறிப்பிடத்தக்க நாவல் பிறந்தது. அது யாருக்காக சாவுமணி ஒலிக்கிறது? இதுவும் போர் நாவலேயெனினும் கூறும் சேதி சற்று வித்தியாசமானது: விடுதலைவாதிகளுக் கிடையிலான ஒத்துழைப்பையும் ஒற்றுமையையும் இது முன்மொழிந்தது.



ஏணஸ்ற்
ஹெமிங்வே

ஹெமிங்வே பற்றிக் கூறுகையில் அவரது கிழவனும் கடலும் பற்றிக் குறிப்பிடாமலிருக்க முடியாது. அவருக்கு நோபல் பரிசு பெற்றுத் தந்த நாவல் அது. நாவலா? நீண்ட சிறுகதை என்றாலும் பொருந்தும். தெளிந்த, எளியநடையில் நகரும் கதையில் நாலே பாத்திரங்கள், ஒரு சிறுவன், ஒரு கிழவன், ஒரு கடல், ஒரு மீன். இவர்களைவிட, சில சுறாக்களும். இப்பாத்திரங்கள் யாவும் யதார்த்தமானவை. கதை நகர்வும் அப்படியே. எனினும் இவற்றுக்குப் பல்வேறு பொருளுண்டு. பார்வையின் கோணத்தையும் ஆழத்தையும் பொறுத்து, தரிசனங்கள் மாறுபடும்.

மேதைமை நிறைந்த நாவலாசிரியராக மட்டுமின்றி, மிகச்சிறந்த சிறுகதை ஆசிரியராகவும் தம்மை நிறுவிக் கொண்டவர் ஹெமிங்வே. பல்வேறுபட்ட ஆர்வங்களும், அனுபவங்களும் அவரது கலையாற்றலுடன் இணைந்து தொகையிலும், தரத்திலும் மிக்க படைப்புகளைத் தந்தன. கதைகூறும் முறை, வசன நடை, உரையாடல் - இவற்றிலெல்லாம் தமக்கெனத் தனிப்பாணியை அவர் உருவாக்கினார்.

முதலாம் உலகப்போரை வைத்து எவ்வாறு ஹெமிங்வே ஒரு சிறந்த இலக்கியத்தை உலகுக்கு அளித்தாரோ, அதேபோல் இரண்டாம் உலகப்போரை வைத்தும் இன்னொரு அமெரிக்கர், ஒரு சிறந்த நாவலைப் படைத்தார். அவர் நோமன் மெய்லர்.

நாவலின் பெயர் நிர்வாணிகளும் இறந்தோரும். மெய்லரும், போரில் பங்கு பெற்றவர். பசிஃபிக் கடலில் அனோபொப்பி என்கிற கற்பனைத் தீவை உருவாக்கி அவர் கதையை நகர்த்தினாலும், நாவல் மிக யதார்த்தமானது. மெய்லரும் நிறைய எழுதினார். மான் பூங்கா நாவல் மற்றும் எனக்கான விளம்பரங்கள் என்ற தலைப்பிலான சிறுகதைகள், கட்டுரைகள் போன்றவற்றையும் எழுதி, தமக்கென்றொரு ஸ்தானத்தைத் தேடிக் கொண்ட மெய்லர், மிகச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபத்தில் தம்மை ஒரு சர்ச்சைக்குட்படுத்திக் கொண்டுள்ளாரென அறிய முடிகின்றது.

எவ்வாறு சாத்தானின் வேதங்கள் எழுதி சல்மான் ருஷ்டி முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்தினாரோ, அவ்வாறே மெய்லரும் தமது முதிர்ந்த வயதில் தொண்ணூறுகளின் பிற்பகுதியில் எழுதிய ஒரு நாவல் மூலம் கிறிஸ்தவர்களின் மனதை நோகச் செய்துள்ளார் என்று தெரிகிறது.

இருபதாம் நூற்றாண்டின் அமெரிக்க இலக்கியம் என்று பார்க்கையில் ஹெமிங்வேக்கு அடுத்தபடியாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் ஜோன் ஸ்ரீன் பெக். தம்முடைய கோபக்கனிகள் நாவல் மூலம் கவனத்தை ஈர்த்த ஸ்ரீன்பெக், தொடர்ந்தும் சிறப்பு மிக்க பல படைப்புகளைத் தந்தவர். முப்பதுகளில் இடம் பெற்ற அமெரிக்காவின் பொருளாதார மந்தநிலையின் நெருக்கடிகளைப் பதிவு செய்த ஒரு வரலாற்று ஆவணமாக கோபக்கனிகள் புகழ்பெற்றது. பலவந்தமான இடப் பெயர்வுக்கும் எங்குமே எதுவுமில்லாத நிலைக்கும் ஆளாகிற மக்களின் கதை இது.


ஜோன்
ஸ்ரீன்பெக்

ஸ்ரீன்பெக் நிறைய எழுதினாலும் தரத்தையும் பேணிக் கொண்ட ஒருவர். 62இல் நோபல்பரிசு பெற்றார். அவருடைய ஏனைய படைப்புகளுள் முத்து என்ற குறுநாவல் அற்புதமானது. கடல் முத்து என்ற பெயரில் இது தமிழிலும் பின்னர் வெளியாயிற்று. ஏழை மீனவன் ஒருவனுக்கு கிடைக்கின்ற பெறுமதி வாய்ந்த முத்தொன்றினால் அவன் படுகிற அல்லல்கள்; அதன் பயனாய் அவன் இருந்தவற்றையும் - கடைசியில் அந்த முத்தையும் கூட - இழக்க வேண்டிய வருகிற நிலை. இவற்றை அந்தக் குறுநாவல் கூறிற்று. ஆனால் இதனூடாகத் தெரிகிற அர்த்தங்கள் வேறு. முத்து கூட குறியீட்டுப் படைப்புத்தான். ஒரு விதத்தில் கிழவனும் கடலும் நாவலுடன் ஒப்பிட வேண்டியது அது.

இருபதாம் நூற்றாண்டின் ஏனைய அமெரிக்க இலக்கிய மேதைகள் எனும் போது வில்லியம் ஃபோக்னர், ஸோல் பெல்லோ, ஓஹரா, ஜோன் அப்டைக் ஆகியோர் பெயர்களை அவசியம் குறிப்பிடவே வேண்டும்.

புகழ்மிக்க நாவலாசிரியரான வில்லியம் ஃபோக்னர், 1949ல் நோபல் பரிசு பெற்றவர். சிறந்த சிறு கதையாசிரியராகவும் திகழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃபோக்னர், வெள்ளை இனத்தவரேயெனினும், கறுப்பினத்தவரின் வாழ்வையும் உணர்வுகளையும் செம்மையுற இலக்கியமாக்கியவரெனப் போற்றப்படுபவர். அவருடைய வரண்ட செப்ரம்பர் கறுப்புக் காற்சட்டை, போன்ற சிறுகதைகள் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். யொக்னபத்தாஃபா என்ற கற்பனையூரைத் தமது கதைகள் மூலம் ஃபோக்னர் சிருஷ்டித்தார்.

கனடாவில் பிறந்த ஸோல் பெல்லோ, சிக்காகோவில் வளர்ந்தார். சுயசரிதப் பாங்கிலான ஒகி மார்ச்சின் சாகசங்கள் என்ற தமது நாவல் மூலம் பரவலான அங்கீகாரம் பெற்று, பின்னர் ஹெர்ஸொக் போன்ற நாவல்கள் மூலம் புகழ் பெற்றவர். 1976ல் 'புலிட்ஸர்' பரிசு மற்றும் நோபல் பரிசு ஆகியவற்றை பெல்லோ பெற்றார்.

ஜோன் ஓஹறா அமெரிக்காவின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகக் கொள்ளப்படுபவர். சிறுகதைகளையும் நாவல்களையும் அற்புதமாக எழுதியவர். சமர்ராவில் சந்திப்பு என்ற அவரது நாவலைப்பற்றி ஹெமிங்வே குறிப்பிடுகையில், 'தாம் என்ன எழுதுகிறோம் என்பதைத் துல்லியமாக அறிந்து, அதனை அற்புதமாக எழுதிய படைப்பு' என்றார். தொகையில் மட்டுமின்றித் தரத்திலும் கூடிய நாவல்களை ஓஹறா சிருஷ்டித்தார்.

அப்டைக், முப்பதுகளில் பிறந்தவர். ஒப்பீட்டளவில் இளையவர் என்பதுடன் அவர் நடையும், சித்திரிப்புகளுங்கூட நவீனத்துவம் கொண்டவையாக உள்ளன. 'அதே கதவு', 'புறாச்சிறகுகள்' போன்ற கதைத்தொகுதிகளையும்; 'ஜோடிகள்', 'இசைப்பள்ளி' போன்ற நாவல்களையும்; கவிதைகளையும் எழுதினார். ஐம்பதுகளின் பிற்பட்ட அமெரிக்க சமூகத்தின் வாழ்வையும் பண்பாட்டையும் அவர்ஆக்கங்கள் பிரதிபலித்தன. முதலாளித்துவ கலாசாரச் சீரழிவைத் தெளிவுறக் காட்டும் நாவல் 'ஜோடிகள்'; அப்டைக்கின் நோக்கம் அதுவல்ல என்றாலும் அச் சீர்கெட்ட மேல்தட்டுச் சமூக வாழ் முறைகளுக்கிடையிலும் மழுங்கடிக்கப்பட முடியாத மனித உறவு முனைப்புகள் இழையோட முடியும் என்பதைக் காட்டுவதில் அவர் வெற்றி பெறுகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் அமெரிக்கக் கவிஞர்கள் என்றதுமே, றொபேட் ஃப்றொஸ்ற், காள் ஸான்ட்பேக், ஆகியோரையே முதலில் நினைவு வரும். இவர்களில் முதன்மையானவரான ஃப்றொஸ்ற் ஏறத்தாழ 'அமெரிக்காவின் தேசியக் கவிஞர்' என்ற நிலையில் வைத்து மதிக்கப்படுபவர். அரசினாலும் மக்களாலும் அங்கீகரிக்கப்பட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயியான ஃப்றொஸ்ற், தன்சூழல், அனுபவம் பற்றிக் கூறுவது போலத் தோற்றங்காட்டும் கவிதைகளைப் படைத்தாரெனினும், அவை பல்வேறு தளங்களில் புரிந்து கொள்ளப்பட வேண்டியவை. இதற்குச் சிறந்த உதாரணமாக, அவரின் பிரபலமான படைப்பாகிய பனிவிழும் மாலையொன்றில் தோப்பருகில் தயங்கி நிற்றல் என்பதைக் கூறலாம். எளிமையும், அழகும், ஆழமுமிக்க அவரது படைப்புக்களுக்குப் பதச்சோறாக அது விளங்குகிறது:

*எவரது தோப்பு இதுவென அறிவேன்*
*என்றே நினைக்கிறேன்*
*அவரது வீடு இவ்வூரிலிருப்பினும் வெண்பனி வீழ்ந்து தன்*
*தோப்பினை நிறைப்பதைக் காண நான்*
*தயங்கி இங்கே தாமதிப்பதை*
*அவர் காணுவதெங்ஙனம்?*
*என்சிறு குதிரையும் இதென்னவிந்தை*
*என்றே எண்ணிடும் -நிச்சயம்;*
*ஒரு பண்ணை வீடும் இல்லாஇடமதில்*
*இப்படி நிற்பதை.*
*உடல் மணி அசைத்திடும்*
*ஏதும் பிரச்சினை? என்றே கேட்பதாய்.*
*அதைவிடக் காதில்*
*விழுந்திடும் வேற்றொலி*
*காற்றினிரைச்சலும்*
*பனிச்செதில் உராய்வுமே!*
*தோப்பு, அற்புதம்!*
*அடர்ந்து, ஆழமாய்*
*ஆனால் - காத்திட வேண்டிய*
*வாக்குறுதிகள் பல.*
*படுக்க முதல் நான்*
*கடக்க வேண்டிய*
*பல மைல தூரம்.*


றொபேட்
ஃப்றொஸ்ற்

'சொற்கலைஞன்' என வர்ணிக்கப்படும் காள் ஸான்ட்பேக், பேச்சு மொழியைக் கவிதையாக்கிய பெருமைக்குரியவர்; புதுக்கவிதைப் பாங்கினைப் பின்பற்றியவர். அவருடைய நானே சனங்கள், நானே கும்பல் கவிதை, அமெரிக்கப் புதுக்கவிதை


காள்
ஸான்ட் பேர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலவரான வால்ற் விற்மனுடைய கவிதைகளையொத்தது எனப் போற்றப்படுவது:

*நானே*
*சனங்கள் - கும்பல் - கூட்டம் - வெகுசனம்*
*உலகின் உன்னதம்*
*எல்லாம் என்னூடே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09

அமெரிக்க இலக்கியத்துள் முற்று முழுதான தனித்துவங்கொண்ட இன்னோர் பிரிவுமுண்டு. அதுதான் கறுப்பு - அமெரிக்க இலக்கியம். தேசியரீதியில் 'அமெரிக்க இலக்கியம்' என்ற பெயரில் அடங்கினாலும் - ஆங்கிலத்திலேயே அதுவும் எழுதப்பட்டாலும் - பண்பியல் ரீதியாகப் பார்க்கையில் அது, 'எதிர்ப்பு இலக்கியம்' அல்லது 'விடுதலைக்கான இலக்கியம்' என்னும் வகையில் அடங்குவது. நிறவெறிக்கும் இன ஒடுக்குமுறைக்கும் எதிரான - அந்தத் தளைகளை உடைக்கும் - போராட்டத்தில் ஓர் ஆயுதமாக எழுந்தது இந்தக் கறுப்பு - அமெரிக்க - இலக்கியம். அதுமட்டுமின்றி, கறுப்பின மக்களின் அடையாளத்தையும் வேர்களையும் அவாவி நிற்கும் போக்கும் அதில் பிரதிபலிக்கின்றது. இந்தக் கறுப்பு - அமெரிக்க இலக்கியத்திற்குத் தனியான வரலாறுண்டு. ஆபிரிக்கத்துவத்தின் தொடர்ச்சியாய், அந்தச்சாடை வலுவாய்ப் படிந்து தெரிகிற பாடல்கள், கவிதைகளிலிருந்து இது தொடங்குகிறது.

இந்த நூற்றாண்டின் கறுப்பு - அமெரிக்க எழுத்தாளர்களில் முதலிற் குறிப்பிடப்பட வேண்டியவர் றிச்சாட் றைற். வெள்ளை நிற வெறிக்கும், ஒடுக்கு முறைக்கும் ஆளாகிய மனிதர்களின் துன்பதுயரங்களூடாக அவர்களை ஒடுக்கிய அவ்வுலகின் யதார்த்தத்தை றைற் எழுதினார். அவருடைய மண்ணின் மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றிச்சாட் றைற்

என்கின்ற நாவல், றைற் ஒரு மாபெரும் படைப்பாளி என்பதை நிரூபித்த ஒன்று. இந்நூற்றாண்டின் செம்மை இலக்கியங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுவது அது. சமூகத்தால் தம்மீது திணிக்கப்பட்ட அடையாளத்தை உடைப்பதற்கு வன்முறை ஒன்றே வழி என்பதை அந் நாவல் தெளிவாகக் கூறிற்று. மேலோட்டமாகப் பார்த்தால் விறுவிறுப்பான ஒரு துப்பறியும் நாவல் போலப்படுகிற மண்ணின் மகன், அடிப்படையில் தன்னை அடக்கி ஒடுக்க முனைகிற சமூகத்திற்கெதிராகக் கிளர்ந்தெழுகின்ற ஒரு தனிமனிதனைப் பற்றியது.

றைற்றின் எழுத்துக்களில், இந்த நாவலுடன், ரொம் மாமனின் பிள்ளைகள் என்ற கதைத் தொகுப்பு, கறுப்புப் பையன் என்ற தலைப்பிலான அவருடைய சுயசரிதை ஆகியவையும் பெரு வரவேற்பைப் பெற்றவையாகக் குறிப்பிடப்படுகின்றன. நிலத்தின் கீழ் வாழ்ந்த மனிதன் என்ற அவருடைய மகத்தான சிறுகதை, தன்னைத் துரத்துபவர்களுக்குத் தப்பி நிலத்தடியில் ஓடுகிற பெருங் கழிவு நீர்க், குழாய்க்குள் ஒளிந்து கொள்கிற ஒரு மனிதனைப் பற்றியது. கதைக்கப்பால் - வேறொரு தளத்தில் கறுப்பு மனிதனுக்கும் அமெரிக்க சமூகத்திற்கும் இடையிலான உறவை இக்கதை கூறுவதாகவும் கொள்ளமுடிகிறது.

அமெரிக்க கொம்யூனிஸ்ற் கட்சியின் உறுப்பினராய் இருந்த றைற், இரண்டாம் உலகப் பெரும் போரின் பிறகு கட்சியின் வரட்டுத்தனமான வியாக்கியானங்கள் என்று கூறப்பட்டவற்றால் சலிப்புற்று பொதுவுடமை வாதத்தைவிட்டு, பிரான்ஸுக்குச் சென்று, சார்த்தரால் வழி நடத்தப்பட்டுக்கொண்டிருந்த இருப்பியல்வாத வட்டத்தில் இணைந்து கொண்டார். எனினும் அமெரிக்காவிலிருந்த தன் சகோதரர்களுடனான ஒருமைப்பாட்டை விடாது பேணி வந்தார்.

றைற்றைத் தொடர்ந்து நினைவுக்கு வருபவர் ஜேம்ஸ் பால்ட்வின். இன வெறியின் முன் அமெரிக்கக் கறுப்பின மக்கள் உணரும் கோபத்தையும் இயலாமையையும் அவர் தமது கதைகள் மூலம் எடுத்துக்காட்டினார்.

நாடகம், நாவல், சிறுகதை, பாடல், வாழ்க்கைச்சரிதை என்றெல்லாம் எழுதிய போதும் - பத்திரிகை ஆசிரியராக, பத்தி எழுத்தாளராக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்பாளராக எல்லாம் செயற்பட்டபோதும் - 'கவிஞர்' என்றே முதன்மை அடையாளம் கொள்கிற ஒருவர் லாங்ஸ்ரன் ஹ்யூக்ஸ். நீக்ரோக் கலைஞனும் இனவாதமெனும் மலையும் என்ற தலைப்பில் ஹ்யூக்ஸ் பிரசுரித்த கட்டுரையானது, அவரதும் அவரது ச்காக்களதும் இலக்கியக் கொள்கைப் பிரகடனமாய் அமைந்ததுடன், அமெரிக்கக் கறுப்பு இலக்கியத்தில் புதுமுனைப்பொன்றின் வரவையும் அறிவித்தது.

<u>கனவுகள்</u>

*இறுகப் பற்றிக் கொள்*
*கனவுகளை,*
*இறக்குமெனில் அவை*
*இறக்கையில்லாப் பறவையென*
*ஆகுமே வாழ்வு*
*பற்றிக்கொள் கனவுகளை,*
*அவை கலைந்தால்,*
*வெண்பனி மூடிய*
*வெறும் வயல்போல*
*ஆகுமே வாழ்வு*


லாங்ஸ்ரன் ஹ்யூக்ஸ்

- தளைகளை அறுக்கத் திடங் கொண்ட கவிஞனின் 'கனவுகள்' எனும் போது, ஹ்யூக்ஸ் காட்டும் அர்த்தங்கள் ஆயிரம்.


அலெக்ஸ் ஹேலி

இந்த நூற்றாண்டுக் கறுப்பின அமெரிக்க ஆக்க இலக்கியவாதிகள் வரிசையில் தவிர்க்க முடியாத ஒருவர் அலெக்ஸ் ஹேலி. அவர் எழுதிய உலகப் புகழ்பெற்ற வேர்கள், புனை கதையன்று; ஏழு தலைமுறைகளுக்கு முன் எவ்வாறு தன் முன்னோன் ஒருவன் ஆபிரிக்காவின் காம்பியா நாட்டியிருந்து அடிமையாகப் பிடிக்கப்பட்டு வந்து அமெரிக்காவில் விற்கப்பட்டான் என்பதையும், அவன் சந்ததிகள் என்னென்ன இடர்தாண்டி எவ்வாறு அம்மண்ணில் விழுதுபரப்பி விரிந்தார்கள் என்பதையும், ஆதார பூர்வமாக படம் பிடித்துக்காட்ட முயலும் உண்மைக் காவியம் - ஸாகா - இது. தேடல்களை மேற்கொள்ளவும் அவற்றினடியாயத் தகவல்களைத் திரட்டவும் பன்னிரண்டு ஆண்டுகளை ஆய்வில் செலவிட்டார் ஹேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனையே விற்பனைப் பண்டமாக்கிய அடிமை வர்த்தகத்தின் கொடூரம், அதைத் தொடர்ந்து அடிமை அமைப்பைப் பேண முயன்ற ஒரு புது உலகின் நாகரிகம் - இவற்றை மீறி மேலெழுந்த மானுட முனைப்பு - இவை யாவற்றையும், வேர்கள் எம்மைத் தரிசிக்க வைக்கிறது.

அமெரிக்கக் கறுப்பின மக்களுக்குத் தமது வேர்கள் பற்றிய பெருமையையும் பிரக்ஞையையும் ஏற்படுத்தியதன் மூலம் அவர் சாதனை ஒன்றையும் ஈட்டினார். வேர்கள் பின்னர் தொலைக் காட்சிப்படமாகவும் வெளியாகிற்று.


ஜேம்ஸ் அலன் மக்ஃபெர்ஸன்

இந்த எழுத்தாளர்களின் அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர், நாற்பதுகளில் பிறந்த ஜேம்ஸ் அலன் மக்ஃபெர்ஸன். அவருடைய கதைகளும் கறுப்பின மக்கள் வெவ்வேறு விதங்களில் வெள்ளையரை எதிர்கொள்ளும் நிலைமைகளைத்தான் படம் பிடிக்கின்றன. அவற்றை வெவ்வேறு மட்டங்களில் நோக்குகின்றன. என்றாலும் றைற்றின் ஆக்கங்கள் போலப் பேரதிர்வுகளை உண்டாக்காது ஊசிபோல உணர்வில் உறுத்துவன அவை மக்ஃபெர்ஸன் எழுதிய ரயில்களில்.... சிறுகதை இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைகிறது. ரயில்பெட்டி சேவகன் கறுப்பினத்தவன் என்பதால் அவன் அந்தப்பெட்டியில் தம்முடன் இருப்பதையே கூட மூர்த்தண்யமாக ஆட்சேபிக்கும் ஒரு வெள்ளையினப் பெண்ணின் வெறி பற்றிய கதை அது மக்ஃபெர்ஸன், 1978ல் புலிற்ஸர் பரிசு பெற்றவர்.


அலிஸ் வாக்கர்

புலிற்ஸர் பரிசும், நோபல் பரிசும் பெற்ற ற்ரோனி மொறிஸன்; புலிற்ஸர் பரிசு பெற்ற அலிஸ்வாக்கர் ஆகியோரும் ஆபிரிக்க அமெரிக்க எழுத்தாளர்களின் பிந்திய தலைமுறையைச் சார்ந்தவர்கள்.


ற்ரோணி மொறிஸன்

'ற்ரோனி மொறிஸன்' என்பது, க்ளோய் வொஃபோர்ட் என்ற பெண்மணியின் புனைப்பெயராகும். 1937ல் பிறந்த இவர் 1988ல் புலிற்ஸர் பரிசையும் 1993ல் நோபல் பரிசையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றார். மிகு நீலவிழி, ஸுலா, ஜாஸ், சொர்க்கம் போன்ற பல நாவல்களின் ஆசிரியை இவர்.

கவிஞரும் நாவலாசிரியருமான அலிஸ் வாக்கர், தமது ஊதாநிறம் என்ற நாவலுக்காக புலிற்ஸர் பரிசு பெற்றவர், இந்நாவல் பின்னர் (ஸ்ரீவன் ஸ்பீல் பெர்க்கினால்) திரைப்படமாகவும் எடுக்கப்பட்டு பெருவெற்றி பெற்றது. தமது மாணவப் பருவத்திலிருந்தே சிவில் உரிமை இயக்கங்களில் ஈடுபட்ட அலிஸின் ஆக்கங்கள் அவ்வுரிமைகள் பற்றி மட்டுமன்றி, வறுமை, பெண்ணுரிமை, குடும்ப உறவுகள் போன்றவற்றைப் பற்றியும் பேசுவன. பெண்ணுரிமை பேசும் அதே வேளை, 'குடும்ப உறவுகள் புனிதமானவை' என்கிறார் வாக்கர்.

புலிற்ஸர் பரிசானது, 1917லிருந்து ஆண்டுதோறும் கொலம்பியா பல்கலைக்கழகத்தினால், எழுத்து, இசை, நாடகம், பத்திரிகைத்துறை போன்றவற்றிற்கு வழங்கப்பட்டு வருகிறது. எழுத்து என்ற வகையில், புனைகதை, கவிதை, சரித்திரம், தனிமனிதவரலாறு போன்றவை அடங்கும். ஆரம்பகாலங்களில் (1939) இப்பரிசை வென்ற ஒருநாவல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியாயிற்று. மாஜோரிகின்னான் றோலிங்ஸ் எழுதிய ஒரு வயது நாவல், இளமைக்கனவு என்ற பெயரில் வெளியானது.

புலிற்ஸர் பரிசு பெற்றவற்றில் படிக்கக் கிடைத்த இன்னொரு நாவல் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். விடியலால் செய்த வீடு என்ற இந்தச் சிறிய ஆனால் அற்புதமான - நாவலை எழுதியவர் ஓர் செவ்விந்தியர். ஸகொட்மொமாடே என்ற அவர், கியோவா இந்திய இனத்தைச் சேர்ந்தவர். ஆங்கிலப் பேராசிரியராகவிருந்த அவரின் இந்த முதலாவது நாவல், 1969ல் இப்பரிசினை வென்றது.

ஏபல் என்கிற செவ்விந்திய இளைஞனைப் பற்றிய கதை இது. தன் முன்னோர்களைப் போல இயற்கையோடிணைந்த ஒரு வாழ்வும், இயல்புக்கு மாறாக 20ம் நூற்றாண்டில் ஒரு வாழ்வுமாக வாழ்கிறவன் அவன். இந்தியர்களின் வாழ்க்கைக் கண்ணோட்டத்துடன் அவர்களிடையே வழங்கும் உப-கதைகளும், பாடல்களும் நாவலை அழகுறச் செய்து உயிரூட்டுகின்றன. நாவலின் தலைப்புக் கூட ஒரு பாடலிலிருந்து எடுக்கப்பட்டதுதான்:

*விடியலால் செய்த வீடு*
*மாலை ஒளியினால் செய்த வீடு*
*கருமுகிலினால் செய்த வீடு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆண்மழையினால் செய்த வீடு*
*மூடு பனியினால் செய்த வீடு*
*பெண் மழையினால் செய்த வீடு*
*மகரந்தத்தினால் செய்த வீடு*
*வெட்டுக்கிளிகளால் செய்த வீடு.....*



லெஸ்லி மாமொன் சில்க்கோ

அமெரிக்க இந்திய எழுத்தாளர்களில் லெஸ்லி மாமொன் சில்க்கோ என்பரின் மஞ்சள் பெண் என்ற அருமையான சிறுகதை, ஆண்-பெண் உறவுகளை, செவ்விந்தியரின் வஞ்சகமற்ற வாழ்வினூடாகச் சித்திரிப்பது. சில்க்கோ, ஆணா, பெண்ணா என்று கூட நூலிற் குறிப்பிடப் படவில்லை. எனினும், கதையைப் படித்து முடித்தபின் எழுதியவர் ஒரு பெண்ணாகத்தானிருக்க வேண்டும் என்ற ஒரு உணர்வு ஏற்பட்டது; அது ஏன் ஏற்பட்டதென்றோ, எந்தளவு சரியாபிருக்குமென்றோ தெரியாவிடினும்! பிறகு இன்னொரு தொகுப்பில் சில்க்கோ எழுதிய் ரோனி மாமனின் ஆடு என்ற இன்னொரு இயற்கையோடியைந்த வாழ்க்கையைக் கூறும் கதையைப் படித்தபோது, அத்துடன் அவர் பற்றிய மேலதிக விபரங்களிருந்தன. சில்க்கோ பெண்தான். 1948ல் நியூ மெக்ஸிக்கோவில் பிறந்தவர். லகுணா பியூப்லோ என்ற இந்திய இனக்குழுவைச் சேர்ந்த சில்க்கோ, பல சிறுகதைகள், சடங்கு என்ற நாவல், லகுணாப் பெண் என்ற கவிதைத் தொகுதி ஆகியவற்றின் ஆசிரியை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

**20ம்** நூற்றாண்டில் வட அமெரிக்காவின் இலக்கியப் பங்களிப்புக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல, தென்னமெரிக்காவின் பங்களிப்பு. லத்தீன் அமெரிக்க நாடுகள் என்று சொல்லப்படுகின்ற இந்தத் தென்னமெரிக்காவின் நாடுகள், இருபதாம் நூற்றாண்டில் இலக்கிய உலகத்தின் கவனத்தை மிகவும் ஈர்த்தன.

கொலம்பிய எழுத்தாளர் காப்ரியல் கார்சியா மார்க்வெஸ், ஆர்ஜென்ரீனிய எழுத்தாளர் ஜோர்ஜ் லூயி போர்ஹே, மெக்சிக்கோவின் கவிஞர் ஒக்ராவியோ பாஸ், சிலிக் கவிஞர் பாப்லோ நெருதா போன்றவரகள் உலக முழுவதாலும் அங்கீகரிக்கப்பட்ட இலக்கிய மேதைகளாய்த் திகழ்ந்தார்கள்.


ஜோர்ஜ் லூயி போர்ஹே

பல நாவல்களினதும் சிறுகதைத் தொகுப்புக்களினதும் ஆசிரியரான மார்க்வெஸ், ஒரு நூற்றாண்டுத் தனிமை என்ற தமது நாவல் மூலம் மிகுந்த கவனத்திற்குள்ளானவர். 1982இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றார். இவர் யதார்த்தத்துடன் மந்திரவாதமும் இணைந்த படைப்புக்களை உருவாக்கினார். போர்ஹேயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே. போர்ஹேயின் படைப்புக்களில் சாமானிய ஆர்ஜென்ரீனியர்களுடன் ஸ்காண்டிநேவிய புராணங்களில் வரும் கற்பனைப் பிராணிகளும் அருகருகே உலவின, மந்திரவாதமும் யதார்த்தமும் இணைகின்ற இப்போக்கு தென்னமெரிக்கர்களின் பண்பாடு, பாரம்பரியம் இவற்றினடியாக வந்து அவர்களின் சமகால இலக்கியத்தில் இடம்பெறுவது இயல்பானதாயிருத்தல் கூடும். (இந்த மந்திர யதார்த்தம், லத்தீன் அமெரிக்க எழுத்துக்களில் மட்டுமின்றி இதற்கு சமாந்தரமான பழைமை மரபினைக் கொண்ட ஆபிரிக்க எழுத்துக்களிலும் இடம் பெறுவதை நைஜீரியாவின் அமோஸ்டுட்டுவோலா போன்றோரின் படைப்புக்களிலும் காண முடிகிறது.)

அறுபதுகளின் தொடக்கத்தில் சாமுவல் பெக்கெற்றுடன் சேர்ந்து சர்வதேச இலக்கியப் பரிசொன்றினைப் பகிர்ந்து கொண்டபோதே - போர்ஹேயின் புகழ் பரவத் தொடங்கிவிட்டிருந்தது. எனினும், ஆர்ஜன்ரீனாவில் நாஸிச் செல்வாக்கை எதிர்த்த தமது அரசியல் நிலைப்பாட்டினால் அவர் பெருங் கஷ்டங்களைப் பின்னர் எதிர்நோக்க வேண்டி வந்தது.

முன்னர் நாம் சந்தித்த விளதீமிர் நபொக்கோவுக்கும், போர்ஹேக்கும் முக்கியமான இரண்டு ஒற்றுமைகள் இருந்தன. இருவரும் பிறந்தது ஒரே ஆண்டில் - 1899. இருவருக்குமே பலமொழிகளிலும் பலமொழி இலக்கியங்களிலும் மிகுந்த அறிவிருந்தது. ஆனால் இருவரின் எழுத்துகளும் பாணிகளும் மிகமிக வேறுபட்டவை.

ஒக்ராவியோ பாஸ், மெக்சிக்கோவின் முதன்மைக் கவிஞராக மட்டுமின்றி தென் அமெரிக்காவினதும் முழு உலகினதும் ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் வரிசையிலும் முன்னணி வகிப்பவராகவும் வைத்தெண்ணப் படுபவர். மெக்சிக்கோவின் இராஜதந்திர சேவையில் சேர்ந்து பணியாற்றிய பாஸ் அறுபதுகளில் இந்தியாவின் மெக்சிக்க தூதுவராக இருந்த வேளையில் கீழைத்தேயக் கலைகளிலும் தத்துவத்திலும் ஈடுபாடு கொண்டார். எனினும் மெக்சிக்கோ அரசுடன் கொண்ட முரண்பாடு காரணமாகத் தூதுவர் பதவியைத் துறந்தார். கவிதைகளால் மட்டுமின்றி தமது கட்டுரைகள் மூலமாகவும் பாஸ் மிகுந்த புகழ் பெற்றார். அவரது



ஒக்ராவியோ பாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமையின் தடுமாற்றங்கள் கட்டுரைத்தொகுதி செம்மை ஆக்கமெனப் புகழ் பெற்றது. பாஸ் தமது இலக்கியப் பங்களிப்புக்காக 1990ல் நோபல் பரிசு பெற்றார்.

சிலி நாட்டின் பெருங்கவிஞராக விளங்கிய பப்லோ நெருதா 1971ல் நோபல் பரிசு பெற்றவர் மக்கள் விடுதலைக்காகப் போராடிய ஒரு படைப்பாளி, அதிலும் முக்கியமானதென்னவெனில் அவர் இன்னுமொரு நாட்டின் மக்கள் போராட்டத்துடன் தம்மைப் பிணைத்துக் கொண்டமைதான். முப்பதுகளில் அவர் சிலியின் தூதுவராக ஸ்பெயினில் பணியாற்றியபோது ஸ்பானிய சர்வாதிகாரியான ஃபிராங்கோவிற்கும் அவனது கொடுங் கோலாட்சிக்கும் எதிரான மக்கள் போர் தொடங்கிற்று. வெளிநாடொன்றின் தூதுவரான நெருதா தமது இராஜதந்திர அந்தஸ்தையும் கூடக் கவனியாமல் ஸ்பானிய மக்களின் பக்கம் நின்று கொண்டார். அவர்களுக்கு தீவிர ஆதரவளித்தார். சிறந்த சர்வதேசவாதியாகவும் சமாதானப் பிரியராகவும் மிளிர்ந்த நெருதா மக்கள் போராட்டத்துடன் தம்மை இனங்காட்டியது மட்டுமின்றி இதயத்தில் இடம்பெற்ற ஸ்பெயின் என்ற நூலையும் எழுதினார்.


பாப்லோ
நெருதா

அந்நூல் மனதைத் தொடும் விதத்தில் ஸ்பெயின் நாட்டில் அச்சிடப்பட்டது. அதனைப் போராளிகளே பதிப்பித்தார்கள். அச்சுக்காகிதம் இல்லாத நிலையில் அதனையும் தாமே தயாரித்தனர். இரத்தம் சுவறிய தமது துணிகளிலிருந்து எதிரியின் கொடித்துணி வரை யாவுமே இத்தயாரிப்புகளுக்குப் பயன் படுத்தப்பட்டன என்றாலும் அக்கடதாசிகள் நேர்த்தியாக வந்தன. இந்தக் கடதாசிகளில் தம் கையால் அச்சுக் கோர்த்து, போராளிகள் நூலைப் பதிப்பித்தனர்.

நெருதா, இலங்கைக்கான சிலித் தூதுவராகவும் குறிப்பிட்ட காலம் பணிபுரிந்தார். அப்போது அவர் வெள்ளவத்தையில் தங்கியிருந்தாரென அறிய முடிகிறது.

மேற்குறிப்பிட்ட லத்தீன் அமெரிக்க இலக்கியவாதிகளனைவரும் ஸ்பானிய மொழியிலேயே தமது ஆக்கங்களைப் படைத்தனர். ஸ்பெயின் நாட்டிலும் இந்த நூற்றாண்டின் இணையற்ற புகழ்பெற்ற இலக்கியவாதி ஒருவர் இருந்தார். அவர் ஃபெடரிக்கோ கார்சியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோர்க்கா. கவிஞராகவும் நாடகாசிரியராகவும் திகழ்ந்தவர், லோர்க்கா. 'கவிதை உச்சரிப்புக்குரியது, ஏனெனில் அச்சில் அது இறந்து விடுகிறது' என்பது அவர் வாதம். ஸ்பானிய நாட்டு நாடோடிகளின் 'ஆழமான பாடல்'களால் அவர் கவரப்பட்டார். இப்பிராந்தியப் பாடல்களின் வர்ணனைகளையும் மெட்டையும், உலகளாவிய விஷயங்களைப் பாட அவர் பயன்படுத்தினார்.

அவரின் சமகாலத்தவரான ஸ்பானிய ஓவியர் ஸல்வடோர் டாலி போன்றவர்களின் மிகையதார்த்தப் போக்குகளால் பாதிக்கப்பட்டு, லோர்க்காவும், ஒன்றுடனொன்று தொடர்பில்லாதவை போலப்படுகிற படிமங்களையும் கருத்துக்களையும் தமது கவிதையில் தொடுத்தார்.

லோர்க்காவின் கிற்றார் என்னும் கவிதையில் தனிமனித உணர்வுகளே பெருமளவு பிரதிபலிப்பதுபோல தோன்றினாலும், உலகளாவிய உணர்வுகள் அதில் ஒலிப்பதைக் கேட்கலாம்.

**கிற்றார்**

*'இப்போது தொடங்குது*
*கிற்றாரின் அழுகை,*
*விடியலின் வானைப்*
*பிளந்து கொண்டு.*
*அதனை அடக்குவதியலாது*
*அமைதியாக்கிட முடியாது...*
*குறியேதுமில்லா அம்பினையெண்ணி*
*அழுகுது கிற்றார்.*
*விடியாது படுகிற*
*பொழுதினை நினைந்தும்....'*



காா்சியா
லோர்க்கா

லோர்க்காவின் அடுத்த பெரும் பங்களிப்பு நாடகம், தமது வாணாளின் கடைசி ஐந்து ஆண்டுகளை நாடகாசிரியராகவே அவர் கழித்தார். பெர்னாடா அல்பாவின் வீடு, யெர்மா, இரத்தக் கல்யாணம் போன்றவை உலகப் புகழ்பெற்ற அவரது படைப்புக்கள்.

லோர்க்கா, அரசியலில் ஈடுபடாதவராயிருந்தபோதுங்கூட, விடுதலை வாதிகளுடனான தொடர்புகள் காரணமாக சர்வாதிகாரி ஃபிராங்கோவின் வெறுப்புக்குள்ளானார். அவர் எழுதிய புத்தகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதுடன், அரசினால் அவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்கமாக எரிக்கவும் பட்டன. குரூரமான முறையில் லோர்க்கா கொல்லப்பட்டார். எனினும் ஸ்பானிய மக்களிடையேயிருந்த லோர்க்காவின் மதிப்பு சிறிதும் குறையவில்லை. தலைமுறைகள் தாண்டியும் அவர் மதிப்பு வளர்ந்தே வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

ஸ்பானிய ரத்தங்கொண்ட இன்னொரு இலக்கிய இமயம், அல்பர் கமூ, ஸ்பானிஷ் -பிரிட்டிஷ் பெற்றோர்களுக்கு மகனாக அல்ஜீரியாவில் பிறந்த கமூ, ஃபிரெஞ்சு மொழியில் எழுதினார். பின்னர் ஃபிரான்சிற்குக் குடி பெயர்ந்தார். நாற்பதுகளில் ஜெர்மனி, ஃபிரான்சை ஆக்கிரமித்த போது, அந்த ஆக்கிரமிப்பிற்கெதிரான இயக்கத்தில் அவர் தீவிர பங்காளியானார். குடியேறிய நாட்டின் விடுதலைப் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டார். போர் என்கிற தலைமறைவுப் பத்திரிகையின் ஆசிரியராகவும் பொறுப்பேற்றார்.

கமூவின் நாவல்கள்அவரது தத்துவார்த்த வளர்ச்சியைக் காட்டுபவையாக அமைகின்றன. அவருடைய மிகப்பிரபலமான படைப்பான அந்நியன், 42ல்- அதாவது போர்க்காலத்தில் - வெளியாயிற்று. மனிதனின் தனிமையையும் அந்நியமாதலையும் அது குறிக்கிறது. பலஸ்தீன் வம்சாவழியைக் கொண்ட பிரபல அமெரிக்க விமர்சகரான எட்வேட் ஸெய்ட், அந்நியன் நாவலில் இனவாத இழைகள் ஓடுவதைச் சுட்டிக்காட்டுகிறார். கொல்லப்பட்டவன் ஒரு அரபி; ஆகவே அவ்விஷயம் அதிக அக்கறையை உண்டாக்க வேண்டியது இல்லை. இது அல்ஜீரிய சுதந்திரத்திற்கெதிரான கமூவின் நிலைப்பாட்டை விளக்கக் கூடியது என்பது ஸெய்ட்டின் வாதம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சின் மீதான ஜெர்மனியின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப்போராடிய அல்பர் கமூ, பிரான்சின் குடியேற்ற நாடாக விளங்கிய அல்ஜீரியா தன் சுதந்திரத்திற்காகப் போராடிய போது எதிர்மறை நிலைப்பாட்டை - அதாவது அல்ஜீரியாவுக்கு சுதந்திரம் வழங்கப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டை - எடுக்க நேர்ந்தமை வியப்புக்குரியது. இந்த இரட்டைத் தன்மை புரிந்து கொள்வதற்குச் சிரமமானதேயெனினும், உலக இலக்கியத்திற்கு மட்டுமின்றி தத்துவத்திற்கும் கமூவின் பங்களிப்பு மகத்தானது. இவ்விரண்டும் இணைந்தே அவரிடமிருந்து வெளிப்பாடு கொண்டன.


அல்பர் கமூ

இருப்பியல் வாதத்தை முன்னெடுத்தவர்களுள் கமூவும் ஒருவர். 'ஸிஸிஃபஸ் புராணம்' என்ற கட்டுரையில், அல்பர் கமூ, இருப்பியல் தத்துவத்தை விளக்க முயல்கிறார். ஸிஸிஃபஸ் ஒரு கிரேக்கப் புராண பாத்திரம். கடவுளர் அவனுக்கு விதித்த தண்டனையின்படி, ஒரு பெரிய பாறாங்கல்லை அவன் மலைமேல் ஏற்றவேண்டும். ஆனால் ஒவ்வொரு தடவையும் கீழே உருண்டு விடுகிற பாறையை மேலே கொண்டு போக, ஸிஸிஃபஸ் மீண்டும் மீண்டும் தொடங்க வேண்டியிருக்கிறது. இந்த அபத்தத்திற்கு ஆட்படுத்தப்பட்டுள்ள அவன், கமூவுக்கு ஏற்ற குறியீடாகிறான். அதாவது, வாழ்க்கை என்பது அர்த்தமற்று மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படுகிற ஒன்று என்பதே, வாழ்வு ப்ற்றிய கமூவின் கண்ணோட்டம்.

என்றாலும், ஏனைய இருப்பியல்வாதிகள் போலன்றி, கமூ நம்பிக்கை கொண்டவராயிருந்தார். இது அவரை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டிற்று. எந்த நோக்கமோ, ஒழுங்கோ இல்லாத உலகில் ஒரளவுக்கு நேர்மைக்கும் திருப்திக்குமாவது இடமிருக்கிறது என்பதை கமூ பின்னர் நம்ப ஆரம்பித்தார். ஸிஸிஃபஸ் கூட, தன்னளவில் நேர்மையாயிருப்பதாலும், தன்னால் மாற்ற முடியாதது என்ற ஒன்றை ஏற்றுக் கொள்வதாலும் மகிழ்ச்சி அடையலாமே!

அந்நியனுக்கு ஐந்தாண்டுகளின் பின்னர் வெளியான கொள்ளைநோய் என்ற அவரது நாவல், குறியீட்டுத்தன்மை கொண்டது. பிரான்சைப் பற்றியிருந்த ஜெர்மன் ஆக்கிரமிப்பையே அவர் பயங்கரத் தொற்று நோயாகக் குறிப்பிட்டார். இந்த நாவல், ஒரு விதத்தில், அபத்தத்திற்கெதிரான மானுடத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமைப்பாட்டை வேண்டி நிற்பதாகவும் குறிப்பிடப்படுகிறது. இதனையடுத்து வெளியான வீழ்ச்சி என்ற நாவல் மற்றும் நாடு கடத்தலும் ராச்சியமும் என்ற சிறுகதைத் தொகுதி ஆகியவையும் பெரிதும் பேசப்படுவன. இக்கதைத் தொகுதி பற்றிக் குறிப்பிடுகையில் ஒரு விமர்சகர் இவ்வாறு கூறினார்:- 'முழுத்தொகுதியினதும் தொனி ஒன்றேதான் - தமக்கென்றொரு வீட்டை அமைத்துக்கொள்ள எல்லோருக்கும் ஒரு நாடு தேவை'.

1957இல் இலக்கியத்திற்கான நோபல்பரிசு பெற்றார் கமூ. இருப்பியல் வாதிகளின் பலமான குரலாக கமூ ஒலித்தாலும், சார்த்தர் போன்ற ஏனைய இருப்பியல்வாதிகளுடன் சேர்த்து தாம் நோக்கப்படுவதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை.


ழீன் போல் சார்த்தர்

'பிரெஞ்சு இருப்பியல் வாதத்தின் தந்தை' என்று போற்றப்படுகிற ழீன் போல் சார்த்தர், பல நாவல்கள், சிறு கதைகள், நாடகங்கள் எழுதியவர். பிரான்சின் மீதான ஜெர்மனியின் ஆக்கிரமிப்புக்கெதிராகத் தீவிரமாக ஈடுபட்டவர். அல்ஜீரிய சுதந்திரப் போராட்டத்திற்கு முழு ஆதரவும் அளித்தவர். சார்த்தருடைய விடுதலை நோக்கிய வழிகள் என்பது நான்கு நாவல்களின் தொகுப்பு. இதில் பிரான்சின் வீழ்ச்சி சித்தரிக்கப்பட்டாலும், அதனூடே சுதந்திரத்தின் பரிமாணமும் வெளிக்கொணரப்படுகிறது. சார்த்தருடைய சிறுகதைகள், நெருக்கம் என்ற தலைப்பில் வெளியாகின. நவீன வாழ்க்கை பற்றிய விமர்சனமாகவும், ஆசிரியருடைய வேறெந்தப் படைப்பிலும் பார்க்க அவருடைய இருப்பியல்வாதக் கண்ணோட்டத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தும் ஆக்கங்களாகவும் அவை அமைந்தன. இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள சுவர் என்ற கதை, பெரும் கவனிப்பையும் மதிப்பையும் பெற்றது. தமிழிலும் அது பெயர்க்கப்பட்டது. அரசியல், பொருளாதார, கருத்து வெளிப்பாட்டை சுதந்திரங்களினூடாக - அவற்றின் பெறுபேறாக - முழு மனித சுதந்திரத்தை அவாவி நின்றவராக சார்த்தர் கணிக்கப்படுகிறார். 1964ல் நோபல் பரிசுக்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சமகாலத்தில் ஃபிரெஞ்சு இலக்கியத்தின் கொடுமுடிகளாக விளங்கிய சார்த்தரும் கமூவும் நெருங்கிய நண்பர்களாக இருந்து, பின்னர் அபிப்பிராய பேதங் காரணமாக எதிரிகளாக மாறினர். கமூ ஒரு கலைஞன், கலைக்கும் அழகுக்கும் முதன்மை கொடுத்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்த்தரோ சிந்தனையாளர். அறிவே அவரது பலமாயிருந்தது. கமூவைப் போலன்றி, அவர் அல்ஜீரிய சுதந்திரத்தை ஆதரித்தவர். கமூ, சோவியத் கெடுபிடிகளை எதிர்த்தவர். அமைப்புக்களை ஆபத்தெனவும் அடக்கு முறையெனவும் கருதியவர். சார்த்தர் அப்படியன்று, இருவருடைய இளமை வாழ்விலும், பின்னணிகளிலுங்கூட வேறுபாடிருந்தது. கமூ வறுமையைச் சந்தித்தவர். சார்த்தர் பூர்ஷ்வா குடும்பத்தில் தோன்றியவர். விபத்து, அதிர்ஷ்டம் போன்றவற்றில் கமூவுக்கு நம்பிக்கை இருந்த அதே வேளையில் சார்த்தர் 'தானே பொறுப்பு' என நம்பியவர்.

51ல் வெளியான கமூவின் புரட்சியாளன் நாவலுக்கு சார்த்தர் எழுதிய விமர்சனத்தின் மூலம் அவர்களுக்கிடையிலான முரண் மேலும் அதிகரித்தது என்றறிய முடிகிறது.


ஸிமொன் த பொவா

சார்த்தர் பற்றிக் குறிப்பிடுகையில் தவிர்க்கவியலாத ஒரு பெயர் ஸிமொன் த பொவா. நாவலாசிரியையான த பொவா, சார்த்தருடன் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். அவருடைய இலக்கிய முயற்சிகளில் இணைந்து நின்றவர். 1980ல் சார்த்தர் இறக்கும் வரை அவருடைய நெருங்கிய சகாவாக இருந்தவர், அவரைப்போலவே இருப்பியல்வாதியாகவும் விளங்கியவர். த பொவா வின் எழுத்துக்கள் யாவும் பெண்கள் பற்றியவையே, அழிக்கப்பட்ட பெண் என்ற அவரது தொகுதியில் மூன்று நீண்ட சிறுகதைகள் உள்ளன. முதலாவது, வயதாவதைப் பற்றியும். அடுத்தது தனிமையைப் பற்றியும், மூன்றாவது புறக்கணிப்புப் பற்றியும் பேசுகின்றன. அவருடைய சுயசரிதமான கடமையுணர்வுள்ள ஒரு மகளின் ஞாபகங்கள், மற்றும் பெண்கள் பற்றிய ஆய்வு நூலான இரண்டாம் பால் ஆகியவையும் புகழ்பெற்றவை.

ஃபிரஞ்சு மொழி இலக்கியம் என்னும்போது, புகழ்பெற்ற படைப்பாளியாகிய (பின்னர் நாம் சந்திக்கப்போகும்) சாமுவல் பெக்கற் பற்றியும் குறிப்பிட வேண்டும். ஏனெனில் அவரைப்பற்றிய ருசிகரமான தகவல் ஒன்றுள்ளது. பெக்கற் ஐரிஷ்காரர், ஆங்கிலத்தில் அவர் படைப்புக்கள் வெளியாகின. எனினும் பெக்கற் - ஃபிரான்சில் குடிபெயர்ந்து வசித்த காரணத்தாலிருக்கலாம் - வழமையாக பிரெஞ்சு மொழியில் எழுதி, பின்னர் அவற்ன்றைத்தாமே ஆங்கிலத்தில் பெயர்ப்பாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃபீலிக்ஸ் ஃபெனியோன், இன்னொரு ஆர்வமூட்டும் பிரெஞ்சு எழுத்தாளர். பிரபல விமர்சகராயும் திகழ்ந்தவர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர், மூன்று வரிக்கதைகள் என்கிற மிகக்குறுகிய கதை வடிவமொன்றை எழுதிப் பார்த்திருக்கிறார். மாதிரிக்கு ஒன்று

*நாங்கிஸைச் சேர்ந்த சிறுபையன்கள் ஃபஸியா மற்றும்வாலோ விளையாட்டாக சில குற்றிகளை தண்டவாளத்தில் உருட்டிவிட்டார்கள், ஒரு சரக்கு ரயில் தடம்புரண்டது.*

1901ல், முதன்முதலாக, நோபல் இலக்கியப்பரிசைப் பெற்ற ஸல்லி புரூதம் ஒரு ஃபிரெஞ்சு எழுத்தாளர், கவிஞர். (உண்மையில் அந்த ஆண்டு, அப்பரிசு தல்ஸ்தோய்க்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றொரு - நியாயமான - எதிர்க்குரலும் அப்போது கிளம்பியிருந்தது பற்றி முன்னர் குறிப்பிட்டோம்.) 1921ல் நோபல் பரிசை வென்ற இன்னொரு ஃபிரெஞ்சு இலக்கிய மேதை, அனதோல் ஃபிரான்ஸ் ஆவர். தம்முடைய வாழ்நாளில் புகழின் உச்சத்திலிருந்தவர். 1924ல் அவருடைய மரண ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் தொகை 1919ல் இடம்பெற்ற வெற்றி விழாவில் கலந்துகொண்டோர் தொகைக்குச் சமமென்று கூறப்படுவதுண்டு.



அந்திரே
மால்றோ

ஸ்பானிய சிவில் யுத்தத்தை வைத்தெழுந்த மகத்தான நாவல்கள் இரண்டு எனக் கூறப்படுகிறது. ஒன்று, நாம் ஏற்கெனவெ பார்த்த ஹெமிங்வேயின் யாருக்காக சாவுமணி ஒலிக்கிறது ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. மற்றது ஒரு ஃபிரெஞ்சு மொழி நாவல் - மனிதனின் நம்பிக்கை. இதை எழுதிய அந்திரே மால்றோ அப்போரில் ஒரு விமானியாகப் பங்குபற்றியவர். அதற்கு முன் சீனாவின் சிவில் யுத்தத்தில் நேரடியாகக் கலந்து கொண்டவர். சீன அநுபவத்தினின்றும் கூட அவர் ஒரு நாவலெழுதினார் அதன் பெயர், மனிதனின் விதி. மால்றோவின் மகத்தான படைப்பாகக் கொள்ளப்படுவது. 'சரித்திரத்தைக் கலையாக்கும் சாதனையாளன்' எனப்போற்றப்படும் மால்றோவின் வாழ்வும் ஒரு சரித்திரம் போன்றதே. புதைபொருள் ஆய்வாளராயிருந்த அவர் கம்பூச்சியக் காடுகளில் கைவிடப்பட்ட கோவில்களையும், சஹாராவில் அழிந்துமறைந்த நகர்களையும் தேடி அலைந்தவர், சீனாவிலும் தென்கிழக்காசியாவிலுமிருந்த புரட்சிகர இயக்கங்களில் பங்குபற்றியவர். தீவிரமான கொம்யூனிஸ்ற் ஆதரவாளராயும் ஐந்தாவது பிரெஞ்சுக் குடியரசில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டலுவல்கள் அமைச்சராயுமிருந்தவர். இவ்வளவுமிருந்தும் அவரது எழுத்தே முதன்மை பெறுவது. 1938ல் முதலில் வெளியான மனிதனின் நம்பிக்கை பல பதிப்புக்களைக் கண்டது. பிரெஞ்சு மூலத்திலிருந்து அதனை ஆங்கிலத்திற் பெயர்த்தோர், ஸ்ருவாட் கில்பட் மற்றும் அலய்ஸ்ரர் மக்டொனால்ட் ஆகிய இருவருமாவர்.

நவீன பிரெஞ்சு இலக்கியத்தின் பிதாமகர் எனத்தக்க எமிலி ஸோலா, இருபதாம் நூற்றாண்டில் இரு ஆண்டுகளே உயிர் வாழ்ந்தார். அவருடைய படைப்புக்கள் யாவும் - மிகப் புகழ் பெற்ற நாநா, நிலம் போந்றவை உட்பட - அதற்கு முந்திய நூற்றாண்டிலேயே வெளியாகின. இன்னொரு ஃபிரெஞ்சு இலக்கிய இமயமான - நாவலாசிரியரும் நவீன சிறுகதை மேதையுமான - மாப்பஸான், ஸோலாவுக்கு பத்தாண்டுகள் முன்பே காலமாகி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

**1998ல்** இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர், போர்த்துக்கல்லைச் சேர்ந்த ஜோஸ் ஸரமகோ. படைப்பு பல்தஸாரும் ப்லிமுண்டாவும் என்ற நாவல். மூலப் படைப்பு 1982ல் போர்த்துக்கீசிய மொழியில் வெளியாயிற்று, ஆறாண்டுகள் கழித்து ஆங்கில மொழிபெயர்ப்பு வெளிவந்தது. 74இல் போர்த்துக்கல்லில் சர்வாதிகாரமும் தணிக்கையும் வீழ்ச்சிகண்டபின் வெளியான இலக்கியப் படைப்புகளில் முதன்மையும் முக்கியத்துவமும் பெற்ற படைப்பாக 'பல்தஸாரும் ப்லிமுன்டாவும்' கருதப்படுகிறது. ஏற்கனவே நாம் சந்தித்த லத்தினமெரிக்க எழுத்தாளர் காப்ரியல் கார்சியா மார்க்வெஸ்ஸினதும் மந்திர யதார்த்தத்தினதும் பாணியைக் கொண்டது இந் நாவல். பதினெட்டாம் நுற்றாண்டின் முற்பகுதியில் இடம்பெறுகின்ற கதை. சரித்திர உண்மைகள் கற்பனை இரண்டுங்கலந்த படைப்பு. இவற்றினூடாக அதிகாரங்கள், அவற்றின் பிரயோகங்கள் பற்றிக் கூறுகிறது.

1922ல் பிறந்த ஸரமகோ 79லிருந்து முழுநேர எழுத்தாளரானார் நாடகம், கவிதை, சிறுகதை, நாவல், - என எல்லா வடிவங்களிலும் இலக்கியம் படைத்தவர். இருபதிற்கும் மேற்பட்ட மொழிகளில் அவர் ஆக்கங்கள் பெயர்க்கப்பட்டுள்ளன. போர்த்துக்கல் நாட்டின் எழுத்தாளர்களில் உயிருடனிருப்போரில் மிகவும் செல்வாக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற எழுத்தாளர் ஸரமகோ எனினும், பல்தஸாரின் மொழிபெயர்ப்புடன்தான் ஆங்கில மொழி வாசகர்கட்கு அவர் நன்கு அறிமுகமானார். மனிதவாழ்வு இடம் பெறுமிடமெல்லாம் நல்லிலக்கியங்கள் பிறக்கவே செய்கின்றன, ஆனால், அவை யாவும் வெளியுலகின் கவனத்தைக் கவர்வதற்கு எவ்வளவு வாய்ப்புக்கிட்டுகிறதோ, அதை வைத்தே அவற்றின் புகழும் தாக்கமும் பின்னர் அமைகின்றன.

நாம் முன்னர் பார்த்த ஹெமிங்வேயின் போரே, நீ போ, யாருக்காக சாவு மணி ஒலிக்கிறது, மற்றும் ஃபிரெஞ்சு எழுத்தாளரான அந்திரே மால்றோவின் மனிதனின் நம்பிக்கை ஆகியவற்றுக்கிடையே இன்னொரு ஒற்றுமை உண்டு. இவற்றை எழுதியவர்கள், இன்னொரு தேசம் சென்று போர்களில் சம்பந்தப்பட்டவர்கள். எனினும், தம் படைப்புகளினூடாகப் போர் வெறுப்பையும், மனிதாபிமானத்தையும் முன்னிறுத்தியவர்கள்.


அந்தோனியோ லோபோ

இவ்வகையைச் சேர்ந்த இன்னொரு நாவலை ஒரு போர்த்துக்கேய எழுத்தாளர் எழுதினார். அவர் பெயர் அந்தோனியோ லோபோ அன்தியூன்ஸ். மருத்துவரான லோபோ, போர்த்துக்கீசிய இராணுவத்துடன் இரண்டாண்டுகள் அங்கோலாவில் பணியாற்றினார். தன் குடியேற்ற நாடாகிய அங்கோலாவின் மீது போர்த்துக்கல்லுக்கிருந்த ஆதிக்க முனைப்பு மற்றும் அதனால் விளைந்த நாசங்கள் போன்றவற்றை அவரால் உணரமுடிந்தது. இந்த அனுபவங்களினூடாக எழுந்தது அவரது 'இல்லாத ஓரிடத்தின் தெற்கே' என்ற நாவல். இதன் முக்கிய பாத்திரமும் அங்கோலா யுத்தத்தில் பங்கு பற்றிய ஒரு 'மெடிக' தான். தன் அனுபவங்களை அப்பாத்திரம் கூறுவதாகக் கதை நகர்கிறது. அந்த அனுபவங்கள் மறக்க முடியாதவை. மேலும் மூன்று நாவல்களை எழுதிய லோபோவின் இந்த ஒன்று மட்டுமே ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டதாகத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13

ஹிட்லரும் அவன் கூட்டாளிகளும், ஐரோப்பா முழுவதையுமே நாஸிஸத்தின் பிடியில் வைத்திருக்க முயன்றார்கள். இத்தாலி, அவன் சகாவான முஸோலினியின் பிடியிலிருந்தது. இத்தாலியில் இடம்பெற்ற முஸோலினியின் கொடுங்கோலாட்சிக்கு எதிராகத் தீவிரமாகச் செயற்பட்டவர். இக்னேஷியோ ஸிலோனி என்ற இத்தாலிய மொழியின் முன்னணி நாவலாசிரியர். தம் வாணாள் முழுதிலும் பாஸிஸக் கொடுமைக்கெதிராகப் போரிட்டவர் அவர். இதன் விளைவாக, முஸோலினி அரசினால் தீவிரமாகத் தேடப்பட்டவர். ஃபொன்ரமாரா, பாணும் வைனும், கை நிறையக்கனிகள், நரியும் கமெலியாப் பூக்களும் ஆகிய ஒப்பற்ற நவீனங்களை, தம் போராட்ட அனுபவங்களின் பயனாய் அவரால் படைக்க முடிந்தது. அவற்றில், சத்தியமும் சுதந்திர வேட்கையும் சுடர் விடுகின்றன. அதிலும், முதலிற் குறிப்பிடப்பட்ட இரு நாவல்களும், அடக்கு முறைக்கெதிராகக் குடியானவர்கள் கிளர்ந்தெழுந்தமையைச் சித்தரிக்கிற புரட்சிகர நவீனங்களாகும்.

ஃபொன்ரமாரா, இத்தாலியின் தென்பாகத்தில் ஒரு சிறிய கிராமம். பல ஆண்டுகளாகச் சுரண்டலுக்கும் அடக்கு முறைகளுக்கும் ஆளாகிவந்த அக்கிராமத்து மக்கள், ஒரு நாள் அரசாங்கத்தின் கொடுங்கோன்மையை எதிர்த்து எழுந்தார்கள். நிராயுதபாணிகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இக்னேஷியோ
ஸிலோனி

அவர்கள் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். இந்தக் கதையை, ஸிலோனி உயிர்த்துடிப்புடன் பதிவு செய்தார். மானிடத்தின் எதிர்காலத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது எனப் போற்றப்படுவது ஃபொன்ரமாரா. தன் காலத்தின் ஆன்மாவை உணர்ந்து கொணடவராகவும், மிக முக்கியத்துவம் வாய்ந்த எழுத்தாளராவும் ஸிலோனி கணிக்கப்படுகிறார். அவருடைய படைப்புக்கள் முஸோலினியின் இத்தாலியில் நீண்ட காலம் தடைக்குள்ளாகியிருந்ததில் வியப்பொன்றுமில்லை.

போரின் பயங்கரத்தை விளக்கும், இலக்கியத்தரம் மிக்க சிறுகதைகளுள் ஒன்று, நோபல் பரிசு பெற்ற இத்தாலிய நாடகாசிரியரும், எழுத்தாளருமான லூஜி பிராண்டெல்லோ எழுதிய போர். இந்த நூற்றாண்டின் இத்தாலிய மொழி எழுத்தாளரகளுள் மிக முக்கிய இடம் பெறுபவரான பிராண்டெல்லோவின் இச்சிறுகதை மிகச் சிறியது. நாடகப்பாங்கான வசனங்களுடன் நகரும் கதை, தவிர்க்க முடியாத துன்பியல் யதார்த்தங்களைச் சகித்துச் சமாளிக்கும் சனங்களைப் பற்றியது. பிள்ளைகளைப் போருக்கனுப்பிவிட்டுப் பதகளிக்கும் பெற்றோரின் வேதனையைக் கூறுவது. பிராண்டெல்லோவின் மகனும் அப்பெரும் போரில் பங்கு கொண்டிருந்ததால் அந்த வேதனைகளை அவரால் உயிர்த்துடிப்புடன் சித்தரிக்க முடிந்தது.



லூஜி
பிராண்டெல்லோ

மூன்று பக்கங்களுள் முடிகிற இக்கதை, உலகளாவிய உண்மைகளைக் கூறியது. கதையில் வருகிற முக்கிய பாத்திரமான பருத்த மனிதர் கேட்கிறார்: 'நாடும், சாப்பாடு போல: அதில்லாமல் சீவிக்க முடியாது. அது வேணுமெண்டா, அதை ஆராவது காக்கத்தானே வேணும்?' உள்ளத்தை நெருடும் உச்சக்கலை நேர்த்தி கொண்ட சிறுகதை. இக்கட்டுரையாளரால் தமிழிற் பெயர்க்கப்பட்டு, இருபது ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'வாரமுரசொலி' பத்திரிகையில் பிரசுரமாகிற்று.

இத்தாலிய மொழி எழுத்தாளரகளிடையே முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய இன்னுமிருவர் உளர். அவர்கள் அல்பேட்டோ மொறாவியா மற்றும் கிறேசியா டெலட்டா ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்பேட்டோ மொறாவியா, உலகப் புகழ்பெற்ற ஒருவர். ஜனரஞ்சகமும், இலக்கியத்தரமும் இணைந்த பெருந்தொகையான நாவல்களை அவர் படைத்தார். அவை யாவும் உடனுக்குடன் ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டு, பெரும் வரவேற்பைப் பெற்றன. ரோமாபுரிப் பெண் என்ற நாவல் அவற்றுள் முதன்மையானது.

மொறாவியா அளவுக்கு அறியப்பட்டிராத எழுத்தாளர், கிறேஸியா டெலட்டா. ஆங்கிலத்தில் வெளியான அன்னை என்ற அவருடைய நவீனம் மூலமே உலகவாசகர்கள் டெலட்டாவைப்பற்றி அதிகம் அறியமுடிந்தது. குடியானவர்களையும், சாதாரண சனங்களையும் பற்றி எழுதிய மேல் தட்டு வர்க்கப் பெண்மணி என்ற பெயர் டெலட்டாவுக்கு உண்டு. அன்னை என்ற நவீனம் ஒரு மதகுருவைப் பற்றியது. தன் மகனை மதகுருவாகவும், ஆன்மீகத்துறைத் தலைவனாகவும் காணவிழைந்த ஒரு தாய் இதில் முக்கிய பாத்திரம். மகனின் காதல் இந்த ஆசைக்குக் குறுக்கே வருகிற போது தாய், தன் உயிரையே அர்ப்பணிக்கிறாள். 1926ல் டெலட்டாவிற்கு நோபல் பரிசைப் பெற்றுக் கொடுத்தது இந்நாவல். 1955ல் தி. ஜானகிராமனின் மொழிபெயர்ப்பில் இது தமிழிலும் வெளியாயிற்று.


கிறேஸியா டெலட்டா

டெலட்டாவின் மிகவும் அறியப்பட்ட சிறுகதைகளுள் ஒன்றான காதற்கதை என்பதுவும் க.நா.சு.வால் மொழி பெயர்க்கப்பட்டு வெளியானது. உலகத்தரமிக்க பல்வேறு மொழி இலக்கியங்களைத் தமிழில் பெயர்த்து வெளியிடும் முனைப்பு ஒன்று 50களில் தமிழ் நாட்டில் நிலவியிருக்கிறது. இதற்கு இன்னொரு உதாரணமான க.நா.சு. மொழிபெயர்த்த நோர்வே நாவலான நிலவளம் என்பதைக் குறிப்பிடலாம். நட் ஹாம்ஸன் எழுதிய இந்நாவலும் (1920இல்) நோபல் பரிசு பெற்ற படைப்பு; ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்’ என்பதற்கு இலக்கியமாய் அமைந்தது இது. ஒரு விரிந்த படுதாவில், 20ம்நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்த நோர்வேயை, அதன் வாழ்வை இந் நவீனம் சித்தரித்துக் காட்டுகிறது. நட்ஹாம்ஸன் நோர்வேஜிய மொழியில் எழுதியவர். எனினும் அவரால் பாதிக்கப்படாத நாவலாசிரியர்கள் ஐரோப்பாவிலோ அமெரிக்காவிலோ இல்லை என்று சொல்லலாம், என விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நட்ஹாம்ஸன்

நட்ஹாம்ஸன் இவ்வளவு கவனிப்புப் பெற்றிருந்தாலும் பிறகாலத்தில் சொந்த நாட்டில் அவர் புகழுக்கு ஒரு களங்கமேற்பட்டமை துரதிருஷ்டவசமானது. இரண்டாம் உலகப்பெரும் போர்க் காலத்தில் நோர்வேயை ஆக்கிரமித்திருந்த ஜெர்மன் ஆக்கிரமிப்பாளர்களுடன் அவர் ஒத்துழைத்தார் என்பதால் தமது மக்களின் அபிமானத்தை அவர் இழக்க நேரிட்டது.

நோர்வே தந்த இன்னொரு இலக்கிய மேதை ஹென்றிக் இப்சன். நவீன நாடகத்தின் பிதாமகராகக் கொள்ளப்படுபவர். ஒரு பாவை வீடு போன்ற உலகப் புகழ்பெற்ற நாடகங்களின் ஆசிரியர். 20ம் நூற்றாண்டிலும் அவர் ஆறாண்டு காலம் வாழ்ந்திருந்தாரெனினும், அவரது படைப்புச் செயற்பாடுகள் 19ம் நூற்றாண்டுடனேயே நிறைவு பெற்றிருந்தன.

இப்ஸனின் சமகாலத்தவரும், ஆரம்பகால இலக்கிய நண்பரும், பிற்கால இலக்கிய வைரியுமான ஜோன்ஸ்ற்ஜன் ஜோன்சன், 1903ன் நோபல் பரிசை வென்றவர். நாவல், நாடகம், கவிதை - ஆகிய துறைகளில் ஈடுபட்டிருந்த அவர், சமுதாயப் பிரச்சினைகளையும், பாலுணர்வுப் பிரச்சினைகளையும் தம் படைப்புகளில் கையாண்டவராக அறியப்படுகிறார்.

நோர்வேஜியப் பெற்றோர்க்கு மகனாய்ப் பிறந்தும் ஆங்கிலத்தில் எழுதியவர் ரோல்ட் டால். தமது சிறுகதைகளாலும் குழந்தைகளுக்கான படைப்புக்களாலும் உலகப்புகழ் பெற்றவர். டால் பிறந்த வளர்ந்தது வேல்ஸில் என்பதால் இயல்பாகவே ஆங்கிலத்தில் எழுதலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

தமது தாய் மொழியிலேயே - அது எவ்வளவுதான் அறியப்பட்டிராத மொழியாயினும் அதிலேயே - எழுதி உலகின் கவனத்தையும் 1985இல் நோபல்பரிசையும் வென்றவர் ஐஸக் பஷேவிஸ் சிங்கர். இவர் யிட்டிஷ் மொழியில் எழுதினார். அநேகமாக எல்லாமே ஆங்கிலத்திலும் பிற உலக மொழிகளிலும் பெயர்க்கப்பட்டதாக அறிய முடிகிறது. அவருடைய முட்டாள் ஜிம்பல் என்னும் கதை அதிகம் பேசப்படுவது. சிங்கருடைய கருத்துக்களும் குறிப்புக்களும் சுவாரஸ்யமும் கனதியும் மிக்கவை. எதிரிகள் ஒரு காதற்கதை என்ற தம் நாவலின் முன்னுரையில், 'இதில் வருகிற பாத்திரங்கள் நாஸிஸப் பாதிப்புக்கு மட்டுமின்றி தத்தம் ஆளுமைகளாலும், விதிகளாலும் பாதிக்கப்பட்டவர்கள்' என்றார் அவர். 'எந்த ஒரு எழுத்தாளனும் தன் தாய் மொழியையும் அதிலுள்ள வளத்தையும் இழந்து விடலாகாது. சிறுகதை என்பது எழுதுபவனுக்கு இன்றைக்குக்கூட ஒரு பெருஞ் சவாலாகத்தானிருக்கிறது. கற்பனாலயத்துடனும் இறுக்கமாகவும் படைக்க முடியுமெனில் அது ஒரு சாதனையே' என்றார் சிங்கர்.

சிங்கர் ஒரு யூதர். ஹிட்லரின் யூத சங்காரத்தில் அவர் அகப்பட்டுக் கொள்ளவில்லை. 'அதில் அகப்பட்டுத் தப்பிப்பிழைக்கும் பேறு எனக்குக் கிட்டவில்லை' என நையாண்டியாக அவர் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐஸக் பஷேவிஸ்
சிங்கர்

சிங்கருடைய மொஸ்காட் குடும்பம், மிக நீண்ட ஒரு நாவல். இருபதாம் நூற்றாண்டின் முதல் நாலு தசாப்தங்களில் நடைபெறும் நான்கு தலை முறைக் கதைகளைக் கூறுவது. வார்சோவில் வசித்த மெஷுலாம் மொஸ்காட்டினதும் அவரின் பின்சந்ததிகளினதும் வரலாறு, அது.

நாவலின் தொனிப்பொருள், சிங்கரின் வழமையானதுதான்: யூத வாழ்முறையின் சரிவும் வீழ்ச்சியும் 1939ல் ஜெர்மன் ஊடுருவல்வரை வருகிற கதை.

ஹிட்லரின் நாஸிக் கொள்கையில் ஒரு முக்கிய அங்கமாக விளங்கிய 'யூத இன ஒழிப்பு' என்பது, உலகமே அதுவரை கண்டிராத ஒரு குரூரமாக அமைந்தது. ஒஷ்விட்ஸ் போன்ற பெயர்கள், இன்றைக்கும் மனித குலத்தைப் பொறுத்தளவில் ஒரு பயங்கரமாக ஒலிக்கக்கூடிய அளவிற்கு நாஸிகளின் 'பெருமைகள்' இருந்தன. 1945 இல், சோவியத் நாடு ஜெர்மனியைத் நோற்கடித்து நாஸிகளின் முதுகெலும்பை முறித்த பின்பே யூதர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்தது.



லியோன்
யூரிஸ்

என்றாலும் அப்போதுதான் அவர்கள் ஒரு விஷயத்தை உணர்ந்தார்கள். உலகெங்கும் எல்லா நாடுகளிலும் பரவி வாழந்தாலும் யூதர்களுக்கென்றொரு நாடு உலகிலே இல்லை என்பதுதான் அது! தமக்கென்றொரு நாட்டை நிறுவத் தீர்மானித்தார்கள்; இஸ்ரேல் உருவானது. யூதர்களின் வரலாற்றில் இந்தக் காலகட்டத்தைத் தம்முடைய நீண்ட பல நாவல்கள் மூலம் பதித்து வைத்தவர் உலகப் புகழ்பெற்ற நாவலாசிரியரான லியோன் யூரிஸ். அவருடைய படைப்புகளில் பெரும்பாலானவை யூதர்களின் ஜீவ மரணப் போராட்டத்தையும், விடுதலை வேட்கையையும் உள்ளத்தைத் தொடும் வகையில் சித்தரிப்பனவாகவே அமைந்தன. இதற்கு உதாரணமாக அவருடைய 'எக்ஸோடஸ்' (பெரும்பெயர்வு) 'மீஷா மாமாவின் படையாட்கள்' ஆகியவற்றைக் குறிப்படலாம்.

அவருடைய உன்னத படைப்பென்று கருதப்படுகிற 'எக்ஸோடஸ்' நாவலைத் தமிழாக்கும் முயற்சி, இலட்சிய நோக்குக் கொண்ட இளைஞர்கள் சிலரால், கடந்த எழுபதுகளின் தொடக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்டது. 'நமக்கென்றொரு நாடு' என்னுந் தலைப்பில், 'விடுதலை' என்னும் பத்திரிகையில் அது அப்போது தொடராக வெளிவரத் தொடங்கிய போதும், சில அத்தியாயங்களுடன் நின்று விட நேர்ந்தது. எனினும், பின்னர் - தொண்ணூறுகளின் தொடக்கத்தில் - தாயகம் நோக்கிய பயணம் என்னுந் தலைப்புடன் அது ஈழநாதம் வெளியீட்டகத்தினரால் வெளியிடப்பட்டது. லியோன் யூரிஸ், அண்மையில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15

இஸ்ரேலின் உருவாக்கமானது இன்னொரு பிரச்சினையையும் புதிதாக உருவாக்கிற்று. அது - இன்னமும் தீராதிருக்கின்ற - பலஸ்தீனப் பிரச்சினை. பலஸ்தீன மண்ணை இஸ்ரேல் அபகரித்துவிட்டதாகப் பலஸ்தீனியர்கள் உணர்ந்தார்கள். முதலாவது அரபு - இஸ்ரேல் யுத்தத்தின் போது பலஸ்தீனத்தின் முக்கால் பங்கு நிலப்பரப்பை இஸ்ரேல் கைப்பற்றியது. திட்டமிட்ட யூதக்குடியேற்றங்களாலும் வன்செயல்களினாலும் பலஸ்தீன் அரபு மக்கள் தமது சொந்த மண்ணிலிருந்து விரட்டப் பட்டனர். பலஸ்தீன் விடுதலைப் போராட்டம் உத்வேகம் பெற்ற வேளையில் இலக்கியமும் ஆயுதமாக மாறிற்று. பாரம்பரியம் வாய்ந்த அரபுக் கவிதை மரபு, பலஸ்தீனர்களின் இழந்த தாயகத்தைப் பெறும் போராட்டத்தில் வீரியமிக்கதோர் ஆயுதமானது.

1974இல் வெளியான பாலஸ்தீனப் போராட்டம் என்ற வெளியீடு பலஸ்தீனத்தின் நவீன கவிதை பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டது. 'மஹ்மூத் தர்விஷ், சமி அல் காசிம், தைஃபீக் சையத் போன்ற கவிஞர்களின் வரவுடன் போராட்டக் கவிதை மறு பிறப்பெடுத்தது. முந்திய தலைமுறைக் கவிதையில் காணப்பட்ட துன்பியலானது, விதியையே வெற்றி கொள்ளும் வீரமாக இப்போது வெளிப்பட்டது'. இந்தக் கவிஞர்களின் படைப்புகள், அகதிவாழ்வு, அபகரிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம், தாய்நாட்டின் மீதான பக்தி - இவற்றைப் பற்றிப் பேசுகின்றன. அதே வேளை போராடத் தயாரான துணிச்சல், இன அழிப்பை எதிர்த்து முகங்கொடுத்தல், அராஜகமிக்க அந்நிய ஆட்சியைப் புறக்கணித்தல் என்பவற்றைப் பற்றியும் அவை பேசுகின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட பலஸ்தீனக் கவிதைகளில் சிலவற்றை எம்.ஏ.நுஃமான் மொழிபெயர்த்து, ஒரு தொகுதியாக 80களில் வெளியிட்டார். அண்மையில் அதன் இரண்டாவது பதிப்பும் மூன்றாவது மனிதன் வெளியீடாக வெளியாகியுள்ளது.

பலஸ்தீனத்தின் தேசிய கவியாகக் கொள்ளப்படும் மஹ்மூத் தர்வீஷ், தனது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கெதிராகப் பாடியவர். பலஸ்தீன் விடுதலை இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவராக இருந்த அவர், ஒஸ்லோ சமாதான உடன்படிக்கை கையெழுத்தானதைத் தொடர்ந்து, தமது உறுப்புரிமையை ராஜினாமா செய்தார். இஸ்ரேலின் உயர்நிலைப் பள்ளிப் பாடத்திட்டத்தில் தர்வீஷின் சில கவிதைகளைச் சேர்க்கப் போவதாக இஸ்ரேலிய கல்வியமைச்சர் இரண்டாயிரமாம் ஆண்டில் அறிவித்தபோது, அது ஒரு அரசியல் புயலைக் கிளப்பியது.


மஹ்மூட் தர்வீஷ்

'கவிதைகள் ஒரு நாட்டை உருவாக்கி விட முடியாதுதான்; ஆனால் மக்களின் மனதில் தாயகம் பற்றிய ஒரு விம்பத்தை அவற்றால் உருவாக்கிவிட முடியும்' என நியூஸ் வீக் சஞ்சிகைக்கு (மார்ச், 2000) அளித்த பேட்டியொன்றில் அற்புதமாகக் குறிப்பிட்டிருந்தார் தர்வீஷ்.

பலஸ்தீனத்து அரேபியர்களின் நாற்பதாண்டு காலப் போராட்டத்தையும், வாழ்வையும் சித்தரித்த இன்னொரு முக்கிய கவிஞர் அபு சல்மா. புரட்சி, ஆயுதப்போராட்டம், இலட்சிய வேட்கை - ஆகியவற்றை இவரது கவிதைகள் பொதுப் பொருள்களாகக் கொண்டிலங்கின. அகதி, என் தாய் நாட்டின் பாடல்கள், எனது பேனா பலஸ்தீனத்திலிருந்து வருகிறது - ஆகிய கவிதைத் தொகுதிகளின் ஆசிரியர் இவர். தனது படைப்பாற்றலைத் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைத்த முதலாவது பலஸ்தீனக் கவிஞர் என அபு சல்மா குறிப்பிடப்படுகிறார்.


அபு சல்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலஸ்தீனத்திற்கப்பாலும், நவீன அரபுமொழி இலக்கியம் உலகத் தரத்திற்கு உயர்ந்துள்ளது என்பதை, நகீப் மஹ்ஃபவுஸ், யூசஃப் எல் ஸெபாய் போன்றோருடைய படைப்புகள் எடுத்துக்காட்டுவனவாய் அமைந்தன. நகீப் 1988ல் நோபல் பரிசு பெற்றவர்.

1911ல் பிறந்த எகிப்தியரான நகீப், சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதியவரெனினும் சிறுகதையாசிரியராகவே முதன்மை பெறுகிறார். அரபு மொழியில் அவரது பதின்நான்கு தொகுதிகள் வெளியாயின. முக்கியமானதென்னவெனில், அவர் கதைகளின் களமாக கெய்ரோ மட்டுமே அமைந்தது. எகிப்தின் கிராமப்புறங்களோ அன்றி, கெய்ரோவின் புறநகர்ப்பகுதிகளோ கூட அவரின் கதைகளில் வரவில்லை என்கிறார்கள், விமர்சகர்கள்.



நகீப்
மஹ்ஃபவுஸ்

நகீப்பின் சிறுகதைகளிற் பெரும்பாலானவை 67 - 71 கால கட்டத்திலேயே எழுதப்பட்டவை. அநேகமாக, அவை சாவு பற்றியே பேசுகின்றன. 67ல் இடம்பெற்ற எகிப்து-இஸ்ரேல் யுத்தத்தின் தாக்கமாக அதனைக் கொள்ள இயலும்.

யூசஃப் எல் ஸெபாய், எகிப்தின் முன்னணி எழுத்தாளர் மட்டுமின்றி அந்நாட்டின் கலாசாரத்துறை அமைச்சராயும், ஆசிய-ஆபிரிக்க எழுத்தாளர் ஒன்றியத்தின் செயலாளர் நாயகமாகவும், ஒன்றியத்தின் காலாண்டிதழான லோட்டஸ் சஞ்சிகையின் ஆசிரியராகவுமிருந்தவர். நாவல்கள், நாடகங்கள், கதைத்தொகுதிகள் கட்டுரை நூல்கள் என்று ஐம்பதிற்கும் மேல் எழுதியவர்.

அரபுச் சிறுகதை, இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் தான் தோற்றம் பெற்றதாகத் தெரிகிறது. எகிப்தில் தொடங்கிய இவ்வளர்ச்சி ஏனைய அரபு நாடுகளிலும் பரந்து, இன்று முழு அரபுலகிலுமே செல்வாக்குப் பெற்ற ஒரு இலக்கிய வடிவாக சிறுகதை விளங்குகிறது.

சமீரா ஆஸம், அமில் ஹபீபி, ரஷாட் அபு ஷாவர் போன்றோர் பலஸ்தீனத்தின் சிறந்த சிறுகதையாசிரியர்களாகக் குறிப்பிடப் படுகிறார்கள். இன்னும், எகிப்தின் இப்ராஹிம் அஸ்லம் மற்றும் யூசஃப் ஷரோனி, சிரியாவின் ஸக்காரியா தம்மர், ஈராக்கின் அல்-தாக்கர்லி, மற்றும் முஹம்மட் குதிர், மொரொக்கோவின் மொஹம்மட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிஃப்றஃப் போன்றோர் அரபுச் சிறுகதையுலகில், நன்கறியப்பட்டவர்கள். இவர்களில் ரஷாட் அபு ஷாவர் எழுதிய மழைக்கு முன், முஹம்மட் குதீர் எழுதிய கறுப்பு ராஜ்யம் ஆகிய சிறுகதைகள் இக்கட்டுரையாளரால், ஆங்கிலம் வழியாகத் தமிழிற் பெயர்க்கப்பட்டுப் பிரசுரம் பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

எப்படியிருப்பினும், அருகில் உள்ள ஆபிரிக்கா இந்த இருபதாம் நூற்றாண்டில் நிகழ்த்திய இலக்கியப் பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் அரபு இலக்கியம் - ஒப்பீட்டளவில் - பின் தங்கிவிட்டதாகவே படுகிறது.

முழு வளர்ச்சியுற்றிராத - எழுத்து லிபி கூட இருந்திராத பல நூற்றுக்கணக்கான குழு மொழிகளைப் பேசி வந்த - இந்த இருண்ட கண்டத்தின் மக்கள், ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் பெற்ற நவீன கல்வியின் பயனாய் இலக்கிய சாதனைகளை ஈட்டிக்காட்டினர். இரண்டாம் உலகப் போரின் முடிவோடு, ஆசியாவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் மட்டுமின்றி, ஆபிரிக்காவிலும் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. பிரிட்டிஷ், பிரெஞ்சு, போர்த்துக்கேய, அமெரிக்க, பெல்ஜிய, ஸ்பானிய ஏகாதிபத்தியங்கள் யாவற்றையும் மூன்றாம் உலக நாடுகள் தூக்கியெறிந்தன.

ஆபிரிக்காவைப் பொறுத்தளவில் பட்ரீஸ் லுமும்பா தலைமையில் கொங்கோ (ஸயர்)வும், க்வாமே நுக்குருமா தலைமையில் கானாவும் கென்னத் கவுண்டா தலைமையில் ஸாம்பியாவும், ஜோமோ கென்யாட்டா தலைமையில் கென்யாவும் - தீவிர போராட்டங்களின் பின்- தமது விடுதலைகளை வென்றெடுத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸாம்பியாவின் புரட்சிகர எழுத்தாளர் என்று முதலில் குறிப்பிடப்படக் கூடியவர் இன வெறிக் கெதிராகத் தீவிரமாகப் போராடி அந்நாட்டின் விடுதலைக்கு வித்திட்டவரும், அந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவருமாகிய கென்னத் கவுண்டா. கறுப்பு அரசாங்கம், ஸாம்பியா விடுதலை அடையும், ஆகிய அவருடைய நூல்கள், அவரது அனுபவங்கள் அபிலாசைகள் ஆகியவற்றை மட்டுமின்றி அவரது இலக்கிய ஆளுமையையும் எழுத்தாற்றலையும் வெளிப்படுத்த வல்லனவாயும் அமைந்தன.


ங்குகி வா தியங்கோ

பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பிற்கெதிரான கென்ய சுதந்திரப் போராட்டம் மாவ்மாவ் இயக்கத்தினரால், ஜோமோ கென்யாட்டா தலைமையில் நடத்தப்பட்டது. ஜோமோ என்றால் 'எரியீட்டி' என்று அர்த்தம். சர்வதேசப் புகழ் பெற்றவரான, சமகால கென்ய நாவலாசிரியர் ங்குகி வா தியெங்கோ, அந்த சுதந்திரப் போராட்ட காலத்திலே இளைஞராக இருந்தவர். போராட்டத்தின் பங்காளியாகவும், சாட்சியாகவும் விளங்கிய ங்குகி, தம்முடைய மக்கள் அனுபவித்த கஷ்டங்கள் அனைத்தையும் தாமும் அனுபவித்தார். ஜேம்ஸ் ங்குகி என்ற தம்முடைய முந்திய பெயரை - அது ஏகாதிபத்தியத்தின் அடையாளம் எனக் கருதி, மாற்றி, கென்ய முறைப்படி, அவருடைய கிகியு மரபிற்கேற்ப, ங்குகி வா தியெங்கோ என, அதாவது தியெங்கோவின் மகன் ங்குகி என அமைத்துக் கொண்டார்.

அவரின் கதைகளில், கென்ய மக்களின் இனக்குழு வாழ்வும், மந்திர மாயங்களும், காடும் இடம்பெறுகிற அதேவேளையில் அம்மக்களின் போராட்டங்களும், அவற்றின் பயனாய் அவர்கள் வென்றெடுத்த - அவர்கள் 'உஹுரு' என்றழைக்கின்ற - விடுதலையும், அதன்பின் எதிர் கொள்ள நேர்ந்த புதிய நிலைமைகளும் செவ்வனே இடம் பெற்றுள்ளன. 1963இல் கென்யா சுதந்திரம் பெற்றவேளை ஏற்பட்ட புதிய சூழல்களை வைத்து 66இல் ங்குகி எழுதிய ஒரு கோதுமை மணி என்கின்ற நாவல், கென்ய விடுதலையைப் பற்றிய ஒரு செம்மை சான்ற இலக்கியமாகக் கொள்ளப்படுகிறது.

சுதந்திரம் வந்ததும் எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு எப்படி ஏமாற்றமாகி விடுகிறது ஏன்பது இந்நாவல் காட்டுகின்ற யதார்த்தம். அழாதே குழந்தாய் என்ற ங்குகியின் முதலாவது நாவல், அவருடைய படைப்புக்களிலே சிறந்ததாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்படுவது. இரண்டு சிறுவர்களின் எதிர்காலக் கனவுகள் யாவும் எவ்வாறு ஏகாதிபத்திய கொடுமைகளினால் கொடூரமாகச் சிதறடிக்கப் படுகின்றன என்பதை அது கூறிற்று.

ஏகாதிபத்தியக் கொடுமைகளை எதிர்த்த அதே வீறுடனும் வேகத்துடனும், ங்குகி, சுதந்திரத்தின் பின் தலைதூக்கிய ஊழல்களையும் அநீதிகளையும் எதிர்க்க ஆரம்பித்தார். இரத்த இதழ்கள் என்ற அவரது நாவல், மற்றும் நான் விரும்பும் போது மணமுடிப்பேன் என்ற நாடகம் போன்றவை அதிகார வர்க்கத்துக்கெதிரான குரலாய் அமைந்தன. இப்படியான எழுத்துக்கள் - செயற்பாடுகளினால் ங்குகி சிறைவாசம் அனுபவிக்க நேரிட்டது. சிறையில், மலகூடக் கடதாசியில் அவர் எழுதிய சிலுவையில் சாத்தான் என்ற நாவல் சமகாலக் கென்யாவைப் பற்றிய தீவிர விமர்சனமாய் அமைந்தது. எவ்வித விசாரணையுமின்றி நீண்டகாலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ங்குகியை விடுதலை செய்யுமாறு உலகெங்குமிருந்து குரல்கள் ஒலித்தன. ங்குகி விடுதலை செய்யப்பட்டார். எனினும் சிறையிலிருந்த காலத்தில் அவர்பட்ட துன்பங்களை தடுப்புக் காவல் என்ற நூல் நன்கு எடுத்துக் காட்டியது.

கறுப்புத்துறவி, டெடான் கிமாதியின் வழக்கு விசாரணை போன்ற நாடகங்கள் ஆகியவையும் ங்குகியின் இலக்கியப் புகழுக்குப் பெரும் வலிவு சேர்த்தன. டெடான் கிமாதி, ஒரு உண்மையான பாத்திரம், கென்ய சுதந்திரப் போராட்ட வீரன். அடக்குமுறை ஆட்சியின் விசாரணைக்கு அவன் உட்படுத்தப்பட்டவன். ஆனால் நியெரி நகரில் இடம்பெற்ற 'அந்த அபத்தமான விசாரணையின் பிரதியல்ல இது; அறுபதாண்டுக் கால பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிக்கெதிராய்க் கிளர்ந்தெழுந்த கென்ய மக்களின் மனவுறுதி, சுதந்திர வேட்கை போன்றவற்றின் ஒட்டுமொத்த வெளிப்பாடாகக் கிமாதியை முன்னிறுத்தி அமைந்த நாடக வடிவம்' என ங்குகி இதைப்பற்றிக் குறிப்பிட்டார். இந்நாடகத்தை ங்குகியுடன் சேர்ந்து எழுதியவர் மிஸரே கித்தே மியூகோ என்ற அவரின் தோழியாவர். இவை தவிர இடையில் ஒருஆறு என்னும் நாவல் இரகசிய வாழ்க்கைகள் எனும் கதைத்தொகுதி போன்றவற்றினதும் ஆசிரியரான ங்குகி இன்று சர்வதேச கவனத்தையும் ஈர்த்த இலக்கியப் படைப்பாளியாக அமெரிக்காவில் வாழ்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

ஙுகியின் இலக்கியப் பெருமைக்குச் சமனான அல்லது, அதிலும் அதிகமெனக் குறிப்பிடக்கூடிய பெருமை கொண்ட இலக்கியவாதிகளிருவரை, நைஜீரியா உலகிற்குத் தந்தது. ஒருவர் சின்னுவ அச்சிபே - மற்றவர் வோலே சொயிங்கா. இருவருமே - ங்குகி போல - ஆங்கிலத்திலேயே எழுதினார்கள். அச்சிபே, நாவல்கள் சிறுகதைகள், கவிதைகள், சிறுவர் கதைகள் - எல்லாமே எழுதினாரெனினும், அவருடைய நாவல்களே அவருக்கு அழியாப்புகழைத் தேடிக் கொடுத்தன, சொயிங்கா , கவிதைகள், நாடகங்கள், நாவல் எழுதினார். எனினும், முதலிரண்டுடனுமே அவர் பொதுவாக அடையாளம் கொள்ளப்படுகிறார். நோபல் பரிசு பெற்ற படைப்பாளி அவர்.

சின்னுவ அச்சிபே, ஆபிரிக்காவின் மிகவும் அறியப்பட்ட நாவலாசிரியர். ஆபிரிக்க நாவலின் முன்னோடி எனக் குறிப்பிடப்படுகிறார். ஆபிரிக்காவின் கதையை - ஐரோப்பாவைச் சந்தித்த பிறகு அது எதிர்கொண்ட சரித்திரத்தை - ஆபிரிக்கக் கண்களாற் கண்டு எழுதியவர். அச்சிபே பற்றி இக்கட்டுரையாசிரியர் எழுதிய விரிவான கட்டுரை, 'மல்லிகை'யின் ஏபரல் 1978 இதழில் வெளியாயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிபேயுடைய நாவல்களைச் சுருக்கிச் சொல்வது மட்டுமல்ல, அவருடைய நாவல்களின் தலைப்பை மொழிபெயர்ப்பதும் அதைவிடக் கடினம், அவை கவிதை நடையும், கருத்தாழமும் மிக்கவை. இற்றுப் போகும் இழைகள் (திங்ஸ் ஃபோல் எபாட்), அற்றுப்போன அமைதி, ஆண்டவனின் அம்பு, மக்களில் ஒருவன், புல்வெளிப் புற்றுக்கள் போன்ற நாவல்களையும், போரில் யுவதிகள், கழிப்பு முட்டை முதலிய கதைத்தொகுதிகளையும், கவிதைத்தொகுதி ஒன்றினையும் எழுதினார் அச்சிபே. அவற்றில் முதல் நாவல் அவருக்குப் பெரும் புகழ் சேர்த்தது. உலகின் பல்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்ட அது, அண்மையில், 'சிதைவுகள்' என்ற பெயரில் கனடாவில் வாழும் என்.கே. மகாலிங்கம் அவர்களால் தமிழில் பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

அந்த நாவலின் நாயகன் உழைப்பாளி; வீரன், சமூகத்தால் மதிக்கப்படுபவன். பூமித்தேவதைக்கெதிராக அவன் தெரியாத்தனமாகச் செய்த பிழைக்குத் தண்டனையாக ஊரை விட்டுப்போக நேர்கிறது, திரும்பிவருகிறபோது, வெள்ளையர்களின் மதமும் அதிகாரமும் வேரூன்ற முயல்வதைப் புரிந்து கொண்டு, அதற்கெதிராகப் போராடத் தன் இனத்தாரைத் தூண்டுதிறான். அதில் தோல்வியுறுகிற அவன் தன்னை மாய்த்துக் கொள்கிறான்.


சின்னுவ
அச்சிபே

அந்த நாயகனின் பேரன் இரண்டாவது நாவலின் நாயகன். பாட்டன் தடுக்க முயன்று தோற்றுப்போன அந்த மாற்றங்களின் தாக்கங்களுக்குட்பட்ட ஒரு சமுதாயத்தின் அங்கம். புதிய நிலைமைகளுக்கும், நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக்கிற நிர்ப்பந்தத்தில் அவனும் தோற்றுப் போகிறான். ஆண்டவனின் அம்பு கூட தவிர்க்கவியலாத துன்பியலையே பேசுகிறது. மாற்றங்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாதுபோன ஆபிரிக்கர்களின் துன்பங்கள் இம்மூன்று நாவல்களிலுமே பேசப்படுகின்றள. இது அந்தந்தப் பாத்திரங்களின் தனிப்பட்ட பலவீனம் என்பதிலும் பார்க்க சரித்திரத்தின் போக்கில், நிர்ப்பந்தத்தில் - அகப்பட்ட - அதனைத் தடுக்கச் சக்தியற்றுப்போன - மனிதர்களின் கதி என்பதே சரி.

இறந்த காலத்திலிருந்து விலகி சம்காலப் பிரச்சனைகளுக்கு முகங்கொடுப்பவராக அச்சிபே தம்மை ஆக்கிக்கொண்ட பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்டதே - மக்களில் ஒருவன். சுதந்திர நைஜீரியாவின் ஊழல்களும் குழறுபடிகளும் நிரம்பிய அரசியல் நிலையை அது எடுத்துக் காட்டிற்று. எப்படியிருப்பினும், அச்சிபேயின் நாவல்களிலெல்லாம் கதையோட்டங்களின் அடிநாதமாக மனித ஆத்மாவும், வெற்றி பற்றிய நம்பிக்கையும் அழியாமல் ஒலிக்கின்றன.

ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு அச்சிபே எழுதிய நாவல் புல்வெளிப் புற்றுக்கள். 1987ல் வெளியான இந்நாவலும் தற்கால ஆபிரிக்கா பற்றிய ஒரு விமர்சனமேயாகும். எழுத்தாளனின் உண்மைப்பணி வெறுமனே நிகழ்காலப் படப்பிடிப்போ, சித்திரிப்போ அல்ல, மாறாக, எதிர்காலத்துக்குள் ஊடுருவி நோக்கி அதற்காக மக்களைத் தயார் பண்ணுவது என்றார் அச்சிபே.

1930ல் பிறந்த அச்சிபே, 1999ல் பெரும் கார் விபத்தொன்றில் அகப்பட்டதைத் தொடர்ந்து கால்கள் செயலிழந்த நிலையில் தற்போது அமெரிக்காவில் வாழ்வதாக அறிய முடிகிறது.

நைஜீரியாவின் முக்கிய இனங்கள் மூன்று; ஹௌஸா, இபோ, யொருபா, அச்சிபே இபோ இனத்தைச் சேர்ந்தவர். பெரும்பான்மையினரான ஹௌஸாக்களின் எதேச்சாதிகாரத்துக்கும், லாகோஸிலிருந்த அவர்களுடைய இராணுவ அரசாங்கத்துக்கும் எதிராக, 1967இல் இபோ இன மக்கள் கிளர்ந்தெழுந்து, 'பயாஃப்ரா' எனுந் தங்கள் சொந்த மண்ணின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தார்கள். நைஜீரிய அரசு, போர் தொடுத்தது. பயாஃப்ரா மக்கள் எதிர்த்துப் போராடினர். எனினும் சரியான போராட்ட வழிமுறைகளோ, ஆளுமைமிக்க போராட்டத் தலைமையோ இல்லாததாலும், அந்நிய வல்லரசுகள் நைஜீரியா சார்பாக போரில் தலையிட்டதாலும், அந்த விடுதலைப் போராட்டம் பரிதாபகரமாக நசுக்கப்பட்டது.

பயாஃப்ரா பிரச்சினையின்போது, நீதிக்கும், தம்விதியைத் தாமே தீர்மானிக்கிற உண்மையான சுதந்திரத்திற்குமான தம்மக்களின் புரட்சிப் போராட்டத்தில் அச்சிபேயும் இணைந்து நின்றார். 'நான் ஒரு நைஜீரியனாயும், நைஜீரிய ஐக்கியத்தில் பெருநம்பிக்கை கொண்டவனாயும் இருந்தேன்; நைஜீரியாவை உணர்ந்து நேசித்தவன் நான். ஆனால் இப்போது அப்படியல்ல', என 68இல் பத்திரிகைக் கடிதமொன்றில் பிரகடனஞ் செய்த அதே அச்சிபே, பயாஃப்ரா தலைதூக்க முடியாமல் நசுக்கப்பட்ட சோகத்தின் பிறகு, 'மீண்டும் நைஜீரியனாயிருப்பதில் திருப்தியே' எனக் கூற வேண்டி வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ப்பந்தம், அவருடைய முதல் மூன்று நாவல்களின் பாத்திரங்களின் துன்பியலுக்கு எவ்விதத்திலும் குறைந்ததன்று. எது எப்படியிருப்பினும், இந்த நூற்றாண்டில் ஆபிரிக்கா உலகுக்களித்த மகத்தான இலக்கியவாதிகளில் அச்சிபே முதன்மையானவர் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.

பயாஃப்ரா போரைப் பற்றி எழுந்த இலக்கியங்களாக இரண்டைக் குறிப்பிட வேண்டும். முதலாவது பிரபல பிரிட்டிஷ் நாவலாசிரியரான ஃபிரெட்ரிக் ஃபோஸைத் எழுதிய பயஃப்ராவின் கதை. இது புனைகதையன்று; ஆனால் உயிர்த்துடிப்புமிக்க விவரணங்களடங்கிய செம்மை இலக்கியம். ஃபோஸைத், பயஃப்ரா போர்க்காலத்தில் தாம் நேர்நின்று கண்டவற்றை எழுதினார். முதலில் பி.பி.ஸி நிருபராகவும் சொந்த விருப்பிலும் அங்கு சென்று விவரங்களைத் திரட்டியவர் அவர். இந்நூலின் முகவுரையில், 'இந்த நூல், பயாஃப்ரா மக்கள் ஏன் நைஜீரியாவிலிருந்து தம்மைப் பிரித்துக் கொள்ள விரும்பினார்கள் என்பதையும், தம்மேல் திணிக்கப்பட்டவற்றை அவர்கள் எவ்வாறு எதிர்கொண்டார்களென்பதையும் கூறுகிறது. நான் பயாஃப்ராவின் பக்கஞ் சார்ந்து நிற்பதாக என்மேல் குற்றஞ் சுமத்தப்படலாம்', என ஃபோஸைக் குறிப்பிட்டார்.


சைப்ரியன் எக்வென்ஸி

அடுத்தது இந்தப் பின்னணியை வைத்து எழுந்த ஆக்க இலக்கியங்களிலொன்று. சமாதானத்துக்குத் தப்பிப்பிழைத்தல் என்ற இந்த நாவலின் ஆசிரியரான சைப்பிரியன் எக்வென்ஸி, நைஜீரியாவின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவர். இபோ இனத்தவர். 1976இல் வெளியான இந் நாவல், ஹெளஸா - இபோ உறவுகளிலேற்பட்ட முறுகல் நிலை, அது விடுதலைப் போராட்டமாக வெடித்த விதம், அதன்பின் ஏற்பட்ட விளைவுகள் - எல்லாவற்றிக்கும் இலக்கிய வடிவு கொடுத்தது. 'போருக்குத் தப்புதல் பெரும் கஷ்டம்; ஆனால் சமாதானத்திற்குத் தப்புதல் அதனிலும் கஷ்டம்!' - என இந்நாவல் கூறுகிறது. பயாஃப்ரா போரின் காரணிகளையும், விளைவுகளையும் கூறும் ஒரு செம்மை இலக்கியமாக இது கொள்ளப்படுகிறது. எரியும் புற்கள், நகரின் மாந்தர், இஸ்கா ஆகிய நாவல்களையும் லோக்கோ பட்டினம் போன்ற கதைத் தொகுப்புக்களையும் எக்வென்ஸி எழுதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலாசிரியரும் சிறுகதையாசிரியருமான பென் ஒக்ரி வயதில் மிக இளையவர் 1959ல் நைஜீரியாவில் பிறந்த ஒக்ரி, தமது குறுகிய பாதை என்ற நாவலுக்காக 1991ல் புக்கர் பரிசு பெற்றார். அஸாரோ என்கிற பையனின் கதையூடாக, ஆவியுலகு, ஆபிரிக்க மரபு, சமகால சமூகம் - என்பவற்றைப் பற்றியும் சொல்கிற அழகான - நீண்ட நாவல் அது. பூக்களும் நிழல்களும், உள்ளிருக்குந் தரைத் தோற்றம், கோவிலில் நடந்தவை போன்ற நாவல்களையும் ஆபிரிக்கத் துயர்ப்பாடல் என்ற கவிதைத் தொகுதியையும், இரு கதைத் தொகுதிகளையும் எழுதியுள்ள ஒக்ரி லண்டனில் வசிக்கிறார்.

நைஜீரியாவின் மிக முக்கியமான இன்னொரு இலக்கியப் படைப்பாளி, வோலே ஸொயிங்கா. கவிஞர், நாடகாசிரியர், இயக்குநர், நாவலாசிரியர், ஒப்பீட்டு இலக்கியப் பேராசிரியர், எனப் பல்பரிமாணங் கொண்ட ஸொயிங்கா 1986ல் நோபல் பரிசு பெற்றவர். அவருடைய படைப்புகள் வாசகர்களுக்குச் சவாலாக விளங்குபவை. அவர்களுடைய ஆழ்ந்த கவனத்தை நாடிநிற்பவை. அவருடைய சிங்கமும் நவமணியும், ஜெரோ நாடகங்கள், போன்றவை பெரும் வரவேற்பைப் பெற்றவை. தொலைபேசி உரையாடல் என்ற ஸொயிங்காவின் சிறிய வசன கவிதை, அங்கதச் சுவை கொண்ட மிளிர்கிற அதேவேளை, நிறவெறியின் அபத்தங்களையும், வக்கரிப்புகளையுங் கூட வெளிப்படுத்தி நிற்பது.


வோலே
ஸொயிங்கா

நைஜீரியாவின் கப்ரியல் ஒக்காரா, ஆபிரிக்காவின் முக்கிய கவிஞர்களிலொருவரென்றாலும், அவருக்குப் பெருங்கணிப்பைப் பெற்றுக் கொடுத்தது அவரது குரல் என்ற நாவலாகும். ஆபிரிக்கப் பாரம்பரியத்தையும் மொழியையும், ஐரோப்பிய இலக்கிய வடிவமான நாவலுடன் இணைக்க முயன்ற பரிசோதனை முயற்சி எனக் குரல் போற்றப்படுகிறது. என்றாலும் இந்நாவலில் இடம் பெறுகிற ஆங்கில நடை, மரபுக்கு மாறானதும் ஒப்புக் கொள்ளப்பட வியலாததுமாகுமென வாதிடும் விமர்சகர்களுமுளர்.

ஒக்காரவின் கவிதைகளில் அவரது போர் பற்றிய கவிதைகள் விதந்து கூறப்படுபவை. மனித உறவுகளைச் சீர்குலைக்கும் பிரிவுகளை வெறுக்கவும், ஒற்றுமைக்காக ஏங்கவும் ஒக்காராவைச் செய்தது போர். 'பயாஃப்ரா' யுத்தத்தின் பாதிப்பிற்குட்பட்டவர் அவர். வாளிக்குள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் என்ற கவிதை அவரது 'போர்க்கவிதை'களுக்கு எடுத்துக் காட்டாகச் சுட்டப்படுவது.

*பாருங்கள் வாளிக்குள்*
*கறள்வாளி அழுக்கு நீரில்*
*பளபளக்குந் தட்டொன்று*
*இரவின் இளங்காற்றில்*
*ஆடும் நிலா.........*
*அழுக்கும் கலங்கலும்*
*கறைப்படுத்தா அது,*
*சமாதானம்.*


**கப்ரியல் ஒக்காரா**

இந்த எழுத்தாளர்களின் படைப்புகளிலெல்லாம், அடக்கு முறையும் அதற்கெதிரான கிளர்ச்சிகளும், ஆபிரிக்க வாழ்வின் பண்புநிலை மாற்றமும் இயல்பாகவே இடம் பெறுதல் புரிந்து கொள்ளப்படக் கூடியதே. எனினும் சொந்த நாட்டு அரசின் நடவடிக்கைகளுக் கெதிராகக் குரலெழுப்பி, சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளுக்காக வீறுடன் போராடி, அதற்காகத் தம்முயிரையே ஈந்த ஒரு நைஜீரிய எழுத்தாளருமிருந்தார். அவர் கென் சரோ-விவா. இலக்கியவாதி, எழுத்தாளன், கவிஞன், பத்தி எழுத்தாளன், அரசு அதிகாரி, பல்கலைக்கழக ஆசான், வெற்றிகரமான வர்த்தகர் - என்றெல்லாம் விளங்கிய சரோ-விவா, தமது நிலைப்பாட்டின் நிமித்தம் அத்தனைக்கும் மேலாக ஒரு போராளியானார். நைஜீரியாவில் பயாஃப்ரா பகுதியைச் சேர்ந்த ஒகோனி இனத்தவரான அவர், நைஜீரியாவின் பெற்றோலியத்துறை வளர்ச்சிக்காக எங்ஙனம் ஒகோனி மக்களின் நிலங்கள் யாவும் சூறையாடப்பட்டன என்பதை எதிர்த்துக் குரலெழுப்பினார். இதன் மூலம் அரசின் விரோதியாக நேரிட்டது.


**கென் சரோ விவா**

சரோ-விவா, வழக்கொன்றில் மாட்டி வைக்கப்பட்டார். அவரது மறுப்பும், உலக நாடுகளின் எதிர்ப்புங்கூடக் கவனத்தி லெடுக்கப்படாது, அவரும் சகாக்கள் எண்மரும் 1995ல் தூக்கிலிட்பட்டனர். பூக்காடு சிறுகதைத் தொகுப்பு, பாஸியும் சகாக்களும் வானொலி நாடகம், ஸோஸாபாய் நாவல் என்பன அவரது புகழ்பெற்ற படைப்புக்களாகும். சரோ- விவாவின் கவிதைகள் சில, அண்மையில் மறைந்த கே.கணேஷ் அவர்களின் மொழி பெயர்ப்பில், 'மாற்றுக் கருத்தின் மதிப்பு' இதழில் வெளியாகியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

ஆபிரிக்காவின் மேற்குக்கரையிலுள்ள கானாவிலிருந்து தோன்றியவர், ஆய் க்வெய் ஆர்மா. அழகானவை இன்னும் பிறக்கவில்லை. நாம் ஏன் இவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டோம? போன்ற நாவல்களை எழுதியவர். கானாவின் முன்னணி நாவலாசிரியர், ஆபிரிக்காவின் இரண்டாந் தலைமுறை நாவலாசிரியர்களிடையே முதல் வரிசையிலிருப்பவர் எனக் கூறப்படுவர் ஆர்மா. இரண்டாயிரம் காலங்கள், குணப்படுத்துவோர், ஆகியவை அவரது ஏனைய படைப்புக்கள்.

காம்பியாவில் பிறந்து, ஸியாராலியோனுக்குக் குடிபெயர்ந்த நாலலாசிரியர் லென்றி பீற்றேஸ். தொழிலால் மருத்துவர். அவருடைய இரண்டாந்தடவை என்ற நாவல் சுயசரிதக் கூறுகளைக் கொண்டது. இதேபோல, 'சுயசரித நாவல்' எனக் குறிப்பிட்டு எழுதப்பட்ட மண்ணின் மைந்தன் என்ற நாவலை, ஸிம்பாப்வே எழுத்தாளரான வில்ஸன் கற்றியோ எழுதினார்.

ஆபிரிக்காவின் - குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய - முக்கிய இலக்கியவாதிகளில் ஒருவர், அகஸ்தினோ நெட்டோ, போர்த்துக்கல்லின் ஆட்சியிலிருந்த அங்கோலா, 1975இல்தான் விடுதலை பெற்றது. இந்த விடுதலைப் போரட்டத்தை முன்னெடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகஸ்தினோ
நெட்டோ

'அங்கோலா மக்கள் இயக்கத்தை' நிறுவுவதில் முன்நின்றவரும், அங்கோலா மக்கள் குடியரசின் முதல் ஜனாதிபதியாக இருந்தவருமான நெட்டோ, ஆபிரிக்காவின் முதன்மைக் கவிஞர்களிலொருவர். தம் மாணவப் பருவத்திலிருந்தே சிறந்த கவிஞனாக இனங் காணப்பட்டிருந்த நெட்டோ, அக்கால கட்டத்திலேயே தம் அரசியல் வாழ்வையும் ஆரம்பித்தார். அரசியலும் இலக்கியமும் அவர் வாழ்வில் முப்பதாண்டுகளாக இணைந்து சென்றன. அவருடைய தூய நம்பிக்கை என்ற கவிதை மிகவும் புகழ் பெற்றது. உலக மொழிகள் பலவற்றிலும் அது பெயர்க்கப்பட்டது.

அங்கோலாவின் இன்னொரு சிறந்த இலக்கிய கர்த்தா ஜோஸ் லுவாண்டினோ வியைரா என்ற விடுதலைப் போராளி. அங்கோலா மக்கள் இயக்கத்தின் தீவிரச் செயற்பாட்டாளரான ஜோஸ், போர்த்துக்கல் ஏகாதிபத்திய சர்வாதிகாரத்தால் துன்புறுத்தப்பட்டவர். பல்லாண்டுகளைச் சிறையில் கழித்தவர். அவருடைய லுவாண்டா என்ற கதைத்தொகுதி, போர்த்துக்கீசிய மற்றும் கிம்புண்டு மொழிக்கலப்பில் எழுதப்பட்டது. பத்தாண்டுகட்கும் மேலாகத் தடை செய்யப்பட்டிருந்தது என்பதே அதன் வீரியத்திற்குச் சான்றாகிறது.

நெட்டோவைப் போல, ஜனாதிபதியாகவும் கவிஞராகவும் திகழ்ந்த இன்னுமொருவரும் ஆபிரிக்காவில் இருந்தார். அவர் செனகல் நாட்டின் தலைவராயிருந்த லியபோல்ட் ஸெடார் செங்கோர். 'செங்கோர்' என்ற பெயர் தமிழாய்வில் ஈடுபட்டோருக்கும் மிகவும் பரிச்சயமானது. அவருடைய ஆர்வத்திற்குரிய துறைகளில் தமிழாய்வு ஒன்றாயிருந்தது. ஆராய்ச்சி மகாநாடுகளிலும் கல்ந்துகொண்ட செங்கோர், ஆபிரிக்கர்களும் திராவிடர்களும் பொதுவான பாரம்பரியமொன்றிலிருந்து கிளைவிட்டுப் பிரிந்தவர்கள் என்ற கொள்கையுங் கொண்டிருந்தார். இவற்றைப் பற்றிய விபரங்களை, தம்முடைய செந்தமிழ் ஸெடார் செங்கோர் என்ற நூலில் க.ப. அறவாணன் அவர்கள் தருகிறார். செங்கோர், தமது படைப்புகளை பிரெஞ்சு மொழியில் ஆக்கினார்.

அவரைப் போலவே பிரெஞ்சில் எழுதி உலகப்புகழ் பெற்ற இன்னொரு ஆபிரிக்க இலக்கியவாதி கமரா லே. கினி நாட்டைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த லே, தொழிலால் ஒரு பொறியியலாளர். பொறியியற் கல்விக்காக பாரிசுக்குப்போன அவர் அங்கு தனிமையையும், துயரையும் அடைந்தார். அவ்வேளையில், அவற்றிலிருந்து தப்பிப்பதற்காக அவர் எழுதிய அவருடைய இளம்பருவ நினைவுகள் ஆபிரிக்கச் சிறுவன் என்ற நூலாக உருவெடுத்தன. இந்த ஒரு நூல் மட்டுமே இலக்கிய உலகின் கவனத்தை அவர்பால் ஈர்க்கப் போதுமானதாயிருந்தது. இதன் தொடர்ச்சியாய், பன்னிரண்டு ஆண்டுகளின் பிறகு லே எழுதிய ஆபிரிக்காவின் கனவு என்ற நூல் ஆபிரிக்காவெங்கும் அலைவீசிய சுதந்திரப் போராட்டங்களின் பின்னணியில் எழுந்தது.



லியோ போல்ட்
ஸெடார் செங்கோர்

கென்யாவின் தெற்கேயுள்ள தன்ஸானியாவிலும் திறமைவாய்ந்த படைப்பாளிகளுள்ளார்கள் என்பதற்குச் சான்றாய் விளங்குபவர் அப்துல் ரஸாக் குர்ணா. 'அமைதியை நாடுதல்' என்ற அவரது நாவல், இடப்பெயர்வு பண்பாட்டு அடையாளங்கள் போன்றவற்றைப் பேசுவது. இதைத்தவிர வேறு நான்கு புகழ்பெற்ற நாவல்களை குர்ணா எழுதியுள்ளாரென்றும், அவற்றில் 'சொர்க்கம்' என்பது 1994ல் புக்கர் பரிசுக்காகப் பரிந்துரைக்கப்பட்டதென்றும் அறிய முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

ஏகாதிபத்தியத்திற்கும் இன வெறிக்கும் எதிராகப் போராடிய நாடுகளில், தென்னாப்பிரிக்கா முதன்மையானதென்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அதன் போராட்ட வரலாறு மிக நீண்டது. இந்த நீண்ட போராட்டத்தின்போது தமது பங்களிப்பை நல்கிய இலக்கியவாதிகள் தொகையும் அதிகம்.

மற்றெந்த ஆபிரிக்கக் கவிஞர்களையும் போலவே தென்னாப்பிரிக்கக் கவிஞர்களும், ஒடுக்கு முறைகளுக்கெதிராகவும், விடுதலைக்காகவும் பாடினார்கள். ஒருகலைஞன் தன்படைப்பில் ஏதோ ஒன்றைச் சொல்லவோ, ஏதோ ஒன்றை எதிர்க்கவோ முயல்வான். அப்படியான எந்த கலை வெளிப்பாட்டிலும், கலைஞனைப் பாதிக்கிற விஷயங்களே முதன்மை பெறும், இது தவிர்க்க முடியாதது. இதனால்தான் விடுதலையை நாடிய ஆபிரிக்கக் கவிஞர்கள் நிலவையும், வானையும், இயற்கையையும், காதலையும் பாடாமல், காலனித்துவ ஒடுக்குமுறைகளை உடைத்தெறியும் விஷயங்களையே தம் கவிதைகளின் கருப்பொருளாக்குவது இயல்பாய் அமைந்தது.

கமராடோ ஜோர்ஜ் றெபேலா என்கிற கவிஞன் இப்படிப் பாடினான்,

*இந்தக் கனவெலாம் எதுவாகும்?*
*எனக்குச் சொல், நீ.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பூமி மலரும்*
*புதுநாள் ஒன்று வரும்.*
*போனதெல்லாம் மீட்டெடுப்போம்.*
*இது நடக்கும்.*
*இதன் பிறகு -*
*சொற்களைத் தொடுப்பேன்*
*குழந்தைகளுக்கும் புரிகிற சொற்கள்*
*எல்லா வீட்டிலும் நுழைகிற சொற்கள்*
*- காற்றைப் போல்.*
*அவை.*
*செஞ்சுடராய் ஒளிவீசும்*
*எம் மக்கள் இதயமெலாம்.*

மொங்கேன் ஸெரோட் என்பவர் இளைய தலைமுறைக் கவிஞர். இலட்சியத்திற்காகத் தன்னை அர்ப்பணித்தவர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், தென்னாபிரிக்க அரசின் ஈவிரக்கமற்ற கொடுமைகளுக்கு ஆளானவர். தன்னைப் போலவே இக்கொடுமைகளுக்கு முகங்கொடுத்தவரும் ஆட்சியாளரால் வாய்ப்பூட்டு போடப்பட்ட கவிஞரும் பத்திரிகையாளருமான டொன் மட்டேரா என்பவர் பற்றி எழுதினார். 'தடை செய்யப்பட்ட கவிஞனுக்கு 'என்ற அக்கவிதை கூறுகிறது:

***இது***
***காய்ந்து வெளிறிய காலம்,***
***சகோதரா***
***அசையாமல் நிற்பதன் வேதனையை***
***அம் மரங்களே அறியும்.***
***இரும்புத் தூணென கிளைகள் இறுகி,***
***நிற்பதன் வலியை,***
***உண்மையிலே இது***
***காய்ந்து வெளிறிய காலமேதான் !***
***ஆனால் -***
***காலங்கள் மாறியே தீரும்.***

இன ஒதுக்கலுக்கும் ஒடுக்கு முறைகளுக்குமெதிராகப் போர்க்குரல் கிளப்பிய கவிஞர்களில் முக்கியமானவர், டெனிஸ் புரூட்டஸ். தன் கவிதைகளால் மட்டுமன்றி, செயற்பாடுகளாலும் தீவிரமாகப் போராடியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தை ஊடகமாய்க் கொண்ட பெரும் ஆபிரிக்கக் கவிஞர்களில் ஒருவர் டெனிஸ் புரூட்டஸ். அக்கவிஞர்களிடையே 'மிகவுங் குறைந்த ஆபிரிக்கத் தன்மை கொண்டவராகவும், தாய் நாட்டின் மரபுகளிலிருந்து கூடுதலாக அந்நியப்பட்டுப் போனவரெனவும்' அறியப்படுபவர் அவர். ஆனால் அவர் கவிதைகளின் பாடு பொருட்கள் யாவும் தென்னாபிரிக்க அநுபவங்களை அடிப்படையாக் கொண்டவை. அடக்கு முறைக்குட்பட்ட கறுப்பு மனிதனின் வாழ்வனுபவங்களைக் கூறுபவை.

*காற்றில் கிறீச்சிடும்*
*மரம் நான்தான்*
*வெளியில் இரவில்*
*முறுகிப் பிடிவாதமாய்.......*


டென்னிஸ் புரூட்டஸ்

புரூட்டஸின் முதற்தொகுதி, சங்கொலிகள், மொளிகள், சப்பாத்துகள் என்பது. தலைமறைவு வாழ்வின் பின் இன்னொரு புகழ் பெற்ற தொகுதி. அவர் கவிதைகள் எளிமையும் ஆழமும் மிக்கவை. ஆங்கிலக் கவிதை மரபின் தாக்கங்கள் அவர் கவிதைகளிலிருப்பதாகக் கூறப்படுகிறது, எனினும் இனவெறி ஒடுக்கு முறைகளிலிருந்து விடுதலை தேடும் தன் செயற்பாடுகள் மூலமும் கவிதைகளின் மூலமும் தீவிர போராளியாகத் திகழ்ந்தவர் புரூட்டஸ். எந்த ஒரு பொது நிகழ்ச்சியிலோ, அரசியல் நிகழ்ச்சியிலோ கலந்து கொள்ளக் கூடாதென தென்னாபிரிக்காவின் வெள்ளை ஆட்சியினால் மிரட்டப்பட்டவர். அவரின் எழுத்துக்கள் தடைசெய்யப்பட்டன, போராட்டமும் சிறைவாழ்வும் அவர் வாழ்வில் - கவிதையைப் போலவே - பிரிக்க முடியாத அம்சங்களாயிருந்தன.

ஆபிரிக்கர் ஒருவரால் முதன்முதலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நாவல் எனக்கருதப்படும் முஹூடியை எழுதியவரும் ஒரு தென்னாபிரிக்கரேயாவார். அவர் ஸொல் ரி பிளாற்ஜே; தென்னாப்பிரிக்க சுதேசிகள் தேசிய கொங்கிரசின் நிறுவுனர்களிலொருவர். 1930ல் வெளியான இந்நாவல், பின்னர் 58ல் வெளியான அச்சிபேயின் இற்றுப்போகும் இழைகள் (திங்ஸ் ஃபோல் எபாட்) இல் காணப்பட்ட தொனிப்பொருட்கள் சிலவற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஏனெனில் வெள்ளையர் வருகையின் பின் ஆபிரிக்க மக்கள் வாழ்வில் இடம்பெற்ற மாறுங் காலகட்டத்தையே முஹறூடியும் சித்திரிக்கிறது.


நடீன் கோடிமர்

தென்னாபிரிக்க எழுத்தாளர்களில் மிகவும் முக்கியமானவர்கள், பீற்றர் ஏப்ரஹாம்ஸ், அலன் பேற்றன் ஆகியோர். ஏப்ரஹாம்ஸ் எழுதிய சுரங்க வேலையாள் என்ற நாவல், கறுப்பின மக்கள் வெள்ளையரால் நடத்தப்பட்ட விதத்தை எடுத்துக் கூறும் தொடக்க காலப் படைப்புக்களிலொன்று. அது அவருக்கு நிலையானதொரு புகழையும் தேடிக் கொடுத்தது. அலன் பேற்றனுடைய அழு என் அருமை நாடே என்ற நாவலும் தென்னாபிரிக்க இனப்பிரச்சனையை நுணுக்கமாகக் கையாண்ட படைப்பு எனப் போற்றப்படுவது. இந்நாவல், அன்னையின் குரல் என்ற பெயரில் தமிழிலும் பெயர்க்கப்பட்டு, ஐம்பதுகளில் வெளியாயிற்று.

தென்னாப்பிரிக்காவின் வெள்ளை இன மக்களிடையேயிருந்து தோன்றிய பெண் எழுத்தாளரான நடீன் கோடிமர், தற்கால ஆங்கிலச் சிறுகதையாசிரியர்களில் மிகச்சிறந்த ஒருவர் எனப் போற்றப்படுபவர். பாய்ச்சல், சர்ப்பத்தின் மென்குரல், தேசத்தின் ஆறு அடி, பிரசுரத்திற்கன்று, லிவிங்ஸ்ரனின் கூட்டாளிகள் போன்ற பல கதைத்தொகுதிகளின் ஆசிரியை. கறுப்பின எழுத்தாளர்களின் தீவிரமில்லாது விட்டாலும் கோடிமரின் கதைகளும் இனப்பிரச்சனை பற்றியே பேசுகின்றன. இந்த நூற்றாண்டின் தென்னாபிரிக்க இலக்கியமானது எவ்வகையிலும் அப்பிரச்சினையை மறந்துவிட முடியாது என்பதுதான் உண்மை, கோடிமரின் கதைகள், இன ஒதுக்கல், இனப்பாகுப்பாடு போன்றவற்றின் அரசியல் சமூக விளைவுகளையே கருப்பொருளாக்கின என்றாலும், வெறுமனே யதார்த்த விவரணங்களாக மட்டும் அமைந்துவிடாமல், இலக்கியங்களாக மிளிர்வதற்கு அவரின் கலையாற்றலே காரணமாயிற்று.

1923ல் ஜோஹன்னஸ்பேர்க் அருகில் பிறந்த நடீன் பல நாவல்களும் எழுதியுள்ளார். ஜூலையின் ஆட்கள் என்ற நாவலுக்காக 1991ல் நோபல் பரிசு பெற்றார். கலவரத்தின் பயங்கரங்களிலிருந்து தப்புவதற்காகத் தமது கறுப்பின வேலையாளான ஜூலையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் தஞ்சமடையும் வெள்ளையரான ஸ்மேல்ஸ் குடும்பத்தின் அநுபவங்களைக் கூறுவது இந்நாவல். உறவு நிலை மாற்றங்களூடாக, கறுப்பர் - வெள்ளையரிடையேயான புரிந்துணர்வுகள், தப்பபிப்பிராயங்களை இந்நாவல் சித்திரிக்கிறது. நோபல் பரிசுடன், புக்கர் பரிசும் வேறுபல சர்வதேசப் பரிசுகளும் பெற்றவர் கோடிமர்.


ஜே.எம். கொயட்ஸி

1999ல் புக்கர் பரிசு பெற்றவரும் ஒரு தென்னாப்பிரிக்க நாவலாசிரியரேயாவார். ஜே.எம். கொயட்ஸி என்ற அவர், தமது அவமானம் என்ற நாவலுக்காக இப்பரிசினை வென்றார். கேப்ரவுண் பல்கலைக் கழகத்தின் ஆங்கில இலக்கிய விரிவுரையாளரான டேவிட் லூரியின் கதையூடாகத் தென்னாபிரிக்காவில் தற்போதைய வெள்ளையரின் சங்கட நிலையைப் படம் பிடிக்கும் படைப்பு இது. இதனை, கொயட்ஸியின் சுய அநுபவத்தினூடாகப் பிறந்த நாவல் எனக் கருத இடமுண்டு. இதற்கு முதலில், 1983லும், தமது மைக்கல் கேயின் வாழ்வும் காலமும் என்ற இன்னொரு நாவலுக்காக ஏற்கெனவே புக்கர் பரிசு பெற்றவர் கொயட்ஸி.

சிங்கத்தின் கீழே என்ற நாவலை எழுதிய ஸ்ரீவ் ஜேக்கப்ஸ், இன்னொரு தென்னாபிரிக்க நாவலாசிரியர். பெயர் குறிப்பிடப்படாத ஒரு குடியரசில் நிகழ்வதாகக் கூறப்படும் கதை, உண்மையில் தென்னாபிரிக்காவின் குழப்பங்களினடியாகப் பிறந்ததே. வழக்கறிஞரான ஜேக்கப்ஸ் பத்திரிக்கையாளராகவும், மனித மற்றும் பிராணிகள் உரிமை இயக்கத் தீவிர செயற்பாட்டாளராகவுமிருப்பவர்.

அஃப்ரிக்கான்ஸ் மொழியில் எழுதும் தென்னாப்பிரிக்கர் எற்றியன் லெரோ. அவருடைய மூன்று நாவல்களின் தொகுப்பொன்று ஆங்கில மொழி பெயர்ப்பில், ஒரு நிச்சயமற்ற மீட்சிக்கு, என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.

இவையெல்லாவற்றையும் தூக்கியடித்து விடக்கூடிய நெருப்புச் சங்கிலி எனும் நாவலை, பெவர்லி நாயுடு என்பவர் எழுதினார். 'இனப்பாகுபாடுகளுக்குச் சட்ட அங்கீகாரம் பெற்ற ஒரேயொரு சமூகமான தென்னாபிரிக்க சமூகத்தில் வளந்தவர் நாயுடு' என்பதைத் தவிர எழுதியவர் பற்றிய வேறெந்த விபரங்களையும் இந்நூலிலிருந்து அறியமுடியவில்லை. ஆனால், பெயரிலிருந்து, இந்திய வம்சாவழியினராயிருக்கலாமெனப் புரிகிறது. போஃபெலோங் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தைச் சேர்ந்த நலெடி என்ற பதினைந்து வயதுச் சிறுமியும், ரிறோ என்கிற அவளது தம்பியுமே இதில் முக்கிய பாத்திரங்கள். இனவாத அரசினால் அக்கிராம மக்கள் துரத்தப்பட்டு, அவர்களுக்கென்றொதுக்கப்பட்ட வரண்ட இடத்திற்குச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்படுகையில், அதற்கெதிரான எதிர்ப்பியக்கம் உருவாகிறது. பள்ளி மாணவர்களின் எதிர்ப்பு ஊர்வலமொன்றை ஏற்பாடு செய்வதில் நலெடி உதவுகிறாள். நாய்கள், சவுக்குகள், துவக்குகள் சகிதம் வருகிற பொலிஸை ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது. சிறுவர்களென்றாலும் எதிர்க்குரல் எழுப்பியவர்களை மிருகத்தனமான முறையில் அடக்குவதற்குத் தென்னாபிரிக்க அரசு தயங்காது என்பது தெளிவாகிறது. எதிர்ப்பெனும் நெருப்பு அணையுமா, பற்றிப் படருமா என்ற கேள்வியை நாவல் எழுப்புகிறது. 1989ல் வெளியான இப்படைப்பு, உண்மைச் சம்பவங்களிலிருந்து உருவானதென்றும், இதற்கு முதல் பெவர்லி நாயுடு எழுதிய ஜோகன்னஸ்பேர்க் பயணம் என்ற - விருது பெற்ற - ஒரு நாவலின் தொடர்ச்சி என்றும் தெரிகிறது.


அலெக்ஸ் லா குமா

அலெக்ஸ் லா குமா, பிந்திய தலைமுறையொன்றைச் சார்ந்தவர். தீவிரமான இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டவர். இரவில் உலவுதல் என்ற கதைத்தொகுதி கல் விளையும் பூமி நாவல் போன்ற படைப்புகளால் கவனம் பெற்றவர். இன ஒடுக்குமுறைக்கெதிரான தீவிரமான எழுத்துப் போராளியும் சர்வதேசப்புகழ் பெற்றவருமான அவர், தென்னாபிரிக்க அரசால் பலமுறை சிறையிடப்பட்டவர். அவர் ஒரு முறை சொன்னார்: 'ஒரு தென்னாபிரிக்க எழுத்தாளனென்கிற முறையில், துப்பாக்கிகளை ஏந்தவும் நான் தயராயிருக்கிறேன். ஏனெனில் தென்னாபிரிக்காவில் எம்மை எதிர்கொள்ளும் நிலைமை அதுதான் - நாங்கள் எழுத்தாளராயிருந்தாலென்ன, தொழிலாளர்களாயிருந்தாலென்ன!' ஆபிரிக்க - ஆசிய எழுத்தாளர் சங்கம் போன்றவற்றில் முன்னின்று உழைத்த குமா, 'தாமரைவிருது' பெற்றவர். அறுபதுகளில் நடுப்பகுதியில் அவர் கியூபாவில் குடியேறினார்.

லா குமாவின் எலுமிச்சைத் தோட்டம் என்ற சிறுகதை, இக்கட்டுரையாளரால் தமிழில் பெயர்க்கப்பட்டு, 98ல் 'தாயகம்' சஞ்சிகையில் வெளியாகிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டத்தில் பங்காற்றிய இன்னொரு கவிஞர் பாரி ஃபெய்ன்பேக். ஒரு ஓவியருமான ஃபெய்ன்பேக், 'தென்னாபிரிக்க மக்கள் கவிஞர்கள்' பற்றிய அறிமுகத்தில் இவ்வாறு எழுதினார். 'புரட்சிகரக் கவிஞனும் எழுத்தாளனும் மக்களின் கனவுகளுக்கு வடிவங் கொடுக்கிறார்கள், அவ்வடிவங்களை விடுதலைப் போராட்டங்கள் வென்றெடுக்கின்றன'. இக்கூற்று, ஏலவே நாம் பார்த்த மஹ்மூத் தர்வீஷின் கூற்றுடன் ஒப்புநோக்கத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

கியூபா, உலக அரங்கில் தனியிடம் பெற்றுத் திகழ்கின்ற நாடு. சோவியத் முகாமிலிருந்த இச்சிறிய நாடு சோவியத் யூனியனின் சிதைப்புக்குப் பின்னும், தன்னையும் தன் நிலைப்பாட்டையும் காத்துத் தலை நிமிர்ந்து நிற்கிறது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஸ்பெயினிடமிருந்து சுதந்திரம் பெற்றாலும், உடனடியாகவே அது அமெரிக்காவின் மறைமுக ஆதிக்கத்துக்குள்ளாயிற்று. 1959 கியூபாப் புரட்சி அங்கு ஒரு புதுயுக விடிவைக் கொண்டு வரும் வரை இந்நிலை நீடித்தது. எனினும் அதைத் தொடர்ந்து வந்த காலத்தில் மற்றெந்தத் துறையையும் போல இலக்கியமும் அங்கு புது வளர்ச்சி கண்டது.

புரட்சியைத் தொடர்ந்து மலர்ந்த புதிய கியூபாவின் இலக்கியப் படைப்பாளிகளில் மிகப் பெரும்பான்மையானோர் யதார்த்தவாதிகளாக இருந்தனர். சர்வாதிகாரி பட்டிஸ்டாவின் ஆட்சி, புரட்சிப் போராட்டங்கள், கஸ்ட்ரோவின் தலைமையின் கீழான பொதுவுடைமை அரசு, அமெரிக்காவின் எதிர்ப்புரட்சி முயற்சிகள், பொருளாதாரத் தடைகள் என்ற பற்பல அனுபவங்களுக்கு - மிகக் குறுகியகாலத்துள் - முகங் கொடுத்தவர்கள் அவர்கள். இந்த அனுபவங்களின் பயனாய் குறிப்பிடத்தக்க படைப்புக்களை அவர்களால் தரமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியூப இலக்கியத்தைப் பொறுத்தளவில் 'திறந்த இலக்கியக் கொள்கை' அதன் முக்கிய அம்சமாய் அமைந்தது. வெளியுலகின் இலக்கியத் தாக்கங்களுக்கெல்லாம் அது தன்னை உட்படுத்திக் கொண்டது. குறிப்பாக அமெரிக்க அரசியல் முறைக்கும், ஆக்கிரமிப்பு முயற்சிகளுக்கும் இடங் கொடுக்காத கியூபா, அமெரிக்காவின் நல் இலக்கியப் போக்குகளை நயப்பதிலும் வரவேற்பதிலும் பின் வாங்கவில்லை. ஆனாலும் இவற்றினூடே, ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகளின் இலக்கியப் போக்குகளை ஒத்த ஒரு போக்கும், ஆபிரிக்க மூலத்தினடியாய்க் கிளைத்த இன்னொரு போக்கும் கியூப இலக்கியத்தில் தடம் பதித்தன. றெனால்டோ கொன்சாலஸ், அனா மரியா சிமோ போன்ற அருமையான சிறுகதையாசிரியர்கள், நவீன கியூப இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பவர்கள். கொன்சாலஸின் ஜீப்பில் நால்வர், ஸிமோவின் செடியின் வளர்ச்சி போன்றவை இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

இந்த ஆபிரிக்க - கியூப இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவராய்த் திகழ்ந்தவர் நிக்கொலாஸ் கில்லன். ஜிப்சிகளின் பாடல்களையும் இசையையும் எவ்வாறு ஸ்பெயினின் லோர்க்கா தமது கவிதைகளுக்கு ஆதாரமாய்க் கொண்டாரோ, அதே போல கில்லனும், நீக்ரோ நாட்டுப் பாடல்களைத் தம் கவிதைகளுக்கு ஆதாரமாய்க் கொண்டார். முப்பதுகளில் எழுதப்பட்ட அவரின் கவிதைகள் மனதை ஈர்க்கும் லயத்துடன் சோஷியலிஸக் கருத்துக்களைத் தாங்கி மிளிர்ந்தன. கியூபாவின் கரும்புத் தோட்டங்களில் உழைப்பதற்காக, ஆபிரிக்காவிலிருந்து அடிமைகளாகப் பிடிக்கப்பட்டு வந்து மனிதப் பண்டங்களாக விற்பனை செய்யப்பட்ட அந்த நீக்ரோக்களின் பண்பாட்டு, இலக்கிய மரபு இவ்வாறு ஓரளவிலேனும் தன்னைத் தக்கவைத்து வெளிப்படுத்திக் கொண்டது.

இதற்குச் சமாந்தரமான - அல்லது இதையே போன்ற ஒரு நிகழ்வினை மேற்கிந்தியத் தீவுகளிலும் நாம் காண முடியும். இருபதாம் நூற்றாண்டு இலக்கியப் போக்கில் இன்னொரு முக்கிய அம்சம், இந்த கரீபிய இலக்கியத்தின் அதீத வளர்ச்சியாகும். கரீபியன் கடலையொட்டியுள்ள தீவுகள் மேற்கிந்தியத் தீவுகள் என அறியப்படுபவை. பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளாக இருந்தவை. அமெரிக்கக் கறுப்பிலக்கிய எழுச்சியின் எதிரொலியாய் கரீபிய இலக்கியம் பெருமளவில் அமைந்தது. இந்தியாவிலிருந்து கூலி அடிமைகளாகக் கொண்டுவரப்பட்டவர்களின் சந்ததிகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்க - உலகின் கவனத்தையும் ஈர்த்த - இலக்கியவாதிகள் தோன்றினர். இவர்களில் முக்கியமானவர் வி.எஸ். நைபோல். இந்தியாவின் உத்தரப் பிரதேசத்திலிருந்து டிரினிடாட்டுக்கு தொழிலாளியாக வந்த ஒருவரின் பேரன் அவர். இங்கிலாந்தில் படித்த நைபோல் முழு நேர எழுத்தாளாராக மாறியதுடன் அதி விரைவிலேயே ஆங்கில இலக்கிய உலகத்தின் கவனத்திற்கும் உள்ளானார்.

அவருடைய படைப்புக்கள் பெற்ற பரிசுகள் அவர் பெற்ற அங்கீகாரத்தின் அடையாளமாய் அமைந்தன. சுதந்திர தேசத்தில் என்ற அவரது நாவல் 1971இல் புக்கர் பரிசு பெற்றது. இது தவிர வேறுபல நாவல்களையும் சிறுகதைகளையும் நைபோல் வெளியிட்டார். அவற்றில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது எல்விராவின் தேர்தல் என்ற சிறிய நாவல்.


வி.எஸ். நைபோல்

எந்த மூன்றாம் உலக நாட்டினதும் தேர்தல் போலவே, டிரினிடாட்டின் எல்விரா பிரதேசத்தின் இந்தத் தேர்தலும் நடைபெறுகிறது ! இந்துக்களின் வாக்குகள், முஸ்லிம்களின் வாக்குகள், நீக்ரோக்களின் வாக்குகள் - எல்லாவற்றையும் அந்தந்த வகையில் அந்தந்த முறையில் வசீகரிக்க வேண்டிய எல்லாம் செய்யப்படுகின்றன, டாக்ஸி ஓட்டுநர்களுக்கு, மதுக் கடைக்காரர்களுக்கு எல்லாம் அன்பளிப்புகள் தாராளமாகக் கொடுக்கப்படுகின்றன. ஒலி பெருக்கி பூட்டிய வான் வருகிறது...... எளிமை குன்றாமல் மனதில் உறைக்கும்படி இலக்கியமாக்கியுள்ளார் நைபோல்.

புக்கர் பரிசு பெற்ற அவருடைய மேற்குறித்த சுதந்திர தேசத்தில் என்ற நாவல் பாதி புனைகதையாகவும் பாதி உண்மைப் பதிவாகவும் அமைந்தது. ஆபிரிக்காவின் சுதந்திர தேசமொன்றில் நிகழ்கின்ற கதை, அந்நாட்டின் உள்நாட்டுக் கலவரத்தைக் கூறுவதாய் நைபோல் அமைத்திருக்கிறார். தீவில் ஒரு கொடி என்ற தலைப்பில் அவரின் சிறுகதைகள் வெளியாயின. மிகுவல் தெரு என்ற நைபோலின் படைப்பு, முழு டிரினிடாட்டையும், - ஒரு சேரி என்றழைக்கப்படக் கூடிய - ஒரு தெரு வர்ணனை மூலமும் சித்திரிப்பது. திரு. பிஸ்வாசுக்கு ஒரு வீடு என்ற நாவல், எவ்வாறு ஒரு சாதாரண் மனிதனின் கனவு எட்டாக்கனவாகவே தொடர்கிறது என்பதைக் கூறுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்க இலக்கியவாதியாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்ட நைபோல், பின்னர் பயண இலக்கியத்திலும் பெரும் கவனஞ் செலுத்தலானார். தமது வேர்களைத் தேடி அவர் இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம், ஒரு கரும் பரப்பு என்ற பெயரில் இலக்கியமாயிற்று. தம் தேடலின் போது தமக்கேற்பட்ட அனுபவங்களை, எவ்வித ஒளிப்பு மறைப்புமின்றி நைபோல் எழுதினார். வெறும் பயணக் கட்டுரையாகவன்றி ஆசிரியரின் இலக்கிய ஆளுமையையும் அறிவாற்றல் நேர்மையையும் எடுத்துக் காட்டிய சிறந்த இலக்கியமாக இது கொள்ளப்படுகிறது. இதேபோல ஈரான், பாகிஸ்தான், இந்தோனேசியா, மலேசியா - போன்ற இஸ்லாமிய நாடுகளில் அவர் மேற்கொண்ட பயணம் நம்புபவர்களிடையே .... என்ற பெயரில் இலக்கியமாயிற்று.

வி.எஸ். நைபோலின் சகோதரராகிய ஷிவா நைபோலும் ஓர் எழுத்தாளராவார். தெற்கின் வடக்கு என்ற பெயரில் அவர் எழுதிய ஆபிரிக்கப் பயண நூலும் மேற்குறித்த பயண நூல்களின் வகையைச் சார்ந்தது. பயண இலக்கியங்களை மெய்யான இலக்கியங்களாக்கும் வகையில், நைபோல் சகோதரர்களின் வெற்றி குறிப்பிடப்பட வேண்டியது. மின்மினிகள் என்ற நாவலையும் ஷிவா எழுதினார்.

வி.எஸ். நைபோலுக்கு, 21ம் நூற்றாண்டின் முதலாவது ஆண்டில்தான் (2001) நோபல் பரிசு கிடைத்ததெனினும், அது அவருடைய கடந்த காலப் பங்களிப்பிற்காகவே என்பது வெளிப்படை. ஷிவா நைபோல் காலமாகிவிட்டார். ‘நைபோல் வெள்ளையர்களின் எழுத்தாளர். மூன்றாம் உலகைப்பற்றிய வெள்ளையரின் வியாக்கியானத்திற்கமைவாகவே நைபோல் எழுதினார்’ என்றார் எட்வேட் ஸெய்ட். (ஏற்கனவே கமூ பற்றிக் குறிப்பிட்ட அதே ஸெய்ட்) நைபோலுடைய ஒரு கரும்பரப்பு பயணநூல் இக்கூற்றை நிரூபிப்பதாகவே படுகிறது. இக்கூற்று வி.எஸ.நைபோலுக்கு மட்டுமின்றி அவர் சகோதரருக்கும் மிகப்பொருந்தும் என்பது, ஷிவாவின் கிழக்கு ஆபிரிக்கப் பயண நூலான தெற்கின் வடக்கினைப் படிப்பவர்க்குத் தெற்றெனவே புலப்படும்.

கரிபிய நாவலாசிரியர்களில், வி.எஸ்.நைபோலுக்கும் முன்னவராகக் கொள்ளப்படுபவர் ரோஜர் மெய்ஸ். அவருடைய அண்ணன் நாவல், ஒரு செம்மை இலக்கியமாகக் கொள்ளப்படுவது. ஐம்பது ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த மெய்ஸின் பன்முகத்திறன்கள் யாவற்றையும் ஒரு சேரப் பிரதிபலிக்கும் படைப்பாக இது மிளிர்கிறது. இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு முக்கிய விஷயமென்னவெனில், ஜமேய்க்காவின் அரசியலாளரான மார்க்கஸ் கார்வியால் முன்னெடுக்கப்பட் 'ரஸ்தஃபாரியனிஸம்' என்ற 'வழிபா'ட்டுப் போக்கின தோற்றுவாய்களை நாவல் சித்தரிப்பதாகும். மெய்ஸ், இதைத்தவிர கறுப்பு மின்னல், மலைகள் ஒன்றாய் மகிழ்ந்திருந்தன என்ற நாவல்களையும் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

படிக்கக் கிடைத்த இன்னொரு கரீபிய நாவல், உடம்பைப் போல் வலியில்லை என்பது. டிரினிடாட்டில் பிறந்து கனடாவுக்குக் குடிபெயர்ந்து தம்முடைய இருபத்தெட்டாவது வயதில் அகால மரணத்தைத் தழுவித் கொண்ட ஹரல்ட் ஸொனி லடூ என்பவரின் படைப்பிது. மேற்கிந்தியத் ·தீவுகளின் இந்து, விவசாயக் குடும்பமொன்றின் வாழ்க்கைப் போராட்டமே கதை.

*அமைதியைப் போல ஆனந்தமில்லை*
*ஆசையைப் போல நெருப்பில்லை*
*வெறுப்பைப் போல இழப்பில்லை*
*உடம்பைப் போல வலியில்லை*

-என்ற 'தம்மபத' சூத்திரத்தினின்று நாவலின் தலைப்பு பெறப்பட்டுள்ளது.

இன்னொரு மேற்கிந்திய நாவலாசிரியரான வி.எஸ்.றெய்ட் எழுதிய சிறுத்தை என்னும் சிறிய நாவலும் விசேஷ கவனத்திற்குரியது. ஏனெனில் ஜமேய்க்கரான றெய்ட், இந் நாவலில் கென்ய சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி எழுதுகிறார். மாவ் மாவ் இயக்க காலத்தைப் பின்னணியாய்க் கொண்டு கதை நகர்கிறது. கடல்தாண்டி, கண்டந்தாண்டி, ஆபிரிக்க சகோதரர்களுடனான தமது ஆதரவு - உறுதிப்பாட்டினை கதை முழுவதும் பறைசாற்றுகிறது. அமெரிக்கா, ஆபிரிக்கா, கரீபியன் - எங்கும் ஒரு பேரலையாய் எழுந்த கறுப்பின விடுதலையுணர்வும் அதன் வெளிப்பாடான இலக்கிய ஆக்கங்களும் என்றே, அண்ணன் மற்றும் சிறுத்தை இவற்றை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. பல பரிசுகளும் விருதுகளும் பெற்ற றெய்ட், புதிய தினம், ஜமேய்க்கர்கள் போன்ற நாவல்களையும் எழுதியுள்ளார்.

கரீபியக் கவிஞர்களில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவர்கள் டெரக் வால்கொட், எட்வேட் பிராத் வெய்ற் மற்றும் ஃபோட் ஸ்மித் ஆகியோர். வால்கொட், தமது ஸ்தானத்தை நிலைப்படுத்திக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டெரக்
வால்கொட்

கொண்ட ஒரு மூத்த கவிஞர். ஒரு 'முரட்டு' மொழி பேசும் சமூகத்திலிருந்து வந்தவரெனினும் ஆங்கிலத்தை, அம்மொழியின் மாயமுணர்ந்து கையாளும் திறன் பெற்றவர். அவர் படைப்புக்கள், மேற்கிந்தியக் கறுப்பு மனிதனின் மேற்குல - வெள்ளை உளவுகளையும், ஆபிரிக்கப் பாரம்பரியத்தையும் கொண்டுள்ள உள யதார்த்தத்தை குறியீடுகளாகச் சித்திரிப்பவை எனப் போற்றப்படுகின்றன. 1992ல் வால்கொட், நோபல் பரிசு பெற்றார்.

போகும் உரிமை, முகமூடிகள், தீவுகள் - ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகளையும் அறுபதுகளின் நடுப்பகுதியில் மூன்று அடுத்தடுத்த ஆண்டுகளில், வெளியிட்டு அவற்றை ஒரு 'முக் - கவிதை' நூலாக்கி, மேற்கிந்தியக் கறுப்பின மக்களின் போற்றுதலுக்குரிய காவியமாகத் தந்தவர் பிராத்வெய்ற். கவிஞராக மட்டுமன்றி, விமர்சகராகவும், சரித்திரவியலாளராகவும் அடையாளம் கொண்ட அவரின் போகும் உரிமையின் முன்னுரையில் இவ்வாறு:

*முரசுத் தோல் சவுக்கு*
*விளாசும், சூரியனின்*
*வெட்டும் விளிம்பு*
*சூடு, விறைத்திறுகும்*
*பொருட்களின் பரப்புகள்*
*நான் பாடுகிறேன்*
*கத்துகிறேன் நான்.*
*முனகுகிறேன்*
*கனவு காண்கிறேன்*
*பாலைவனத்தின்*
*மணல் பருக்கைகள் பற்றி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21

இக்கட்டுரைத் தொடரை படித்துவந்த ஒரு நண்பர், ருஷ்ய இலக்கியத்திற்கும் சோவியத் இலக்கியத்திற்கும் வித்தியாசம் உண்டா என்று கேட்டார். உண்டு; இரண்டும் வெவ்வேறு. ருஷ்ய இலக்கியம் எல்லாம் சோவியத் இலக்கியம் அல்ல சோவியத் இலக்கியம் எல்லாம் ருஷ்ய இலக்கியமுமல்ல - இரண்டிலும் அடங்கும் பொதுவான படைப்புகளும் உள்ளனவெனினும்.

காலங்காலமாக ருஷ்ய மொழியில் எழுதப்பட்டு வந்த இலக்கியங்கள் யாவும் புரட்சிக்கு முன்பும், சோவியத் யூனியனின் உடைவுக்குப் பின்னும் எழுதப்பட்டவை உட்பட - ருஷ்ய இலக்கியங்கள்.

சோவியத் இலக்கியம் என்பது சோவியத் கட்டமைப்புடன் இணைந்து, சோஷலிஸ யதார்த்த கண்ணோட்டத்துடனும், அதன் அடிப்படையிலும் எழுந்தது. இப்பிரிவில், ருஷ்ய இலக்கியங்கள் மட்டுமன்றி சோவியத் யூனியனில் வழங்கிய உக்ரேனிய, ஜோர்ஜிய, ஆர்மேனிய மொழிகளுட்பட்ட நூற்றுக்கணக்கான மொழிகளின் அக்கால கட்டத்து இலக்கியங்களும் அடங்கும். தல்ஸ்தோய் சேகவ், தஸ்தயேவ்ஸ்கி, புஷ்கின், பாஸ்தர்னாக், போன்றோரின் படைப்புக்கள் ருஷ்ய இலக்கியங்கள், அவை சோவியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களாகா. ரசூல் கம்ஸ்தோவ், சிங்கிஸ் ஐத்மாத்தவ் போன்றோர் படைப்புக்கள், சோவியத் இலக்கியங்களேயன்றி ருஷ்ய இலக்கியங்களன்று. ஆனால், மாக்ஸிம் கோர்க்கி, ஷோலக்கவ் போன்றோரின் படைப்புக்கள் இரண்டிலும் அடங்கும்.

முன்னாள் சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் பதினைந்திலும் முதலிடம் பெற்றிருந்த ருஷ்ய சமஷ்டியின் ஓர் அங்கமாக இருந்தது தாகெஸ்தான். ருஷ்ய நாடு உட்படப் பல சுயாட்சிக் குடியரசுகளையும், சுயாட்சி மாநிலங்களையும், சுயாட்சிப் பிரதேசங்களையும் ருஷ்யசமஷ்டி கொண்டிருந்தது. அவற்றுள் தாகெஸ்தான் ஒரு சுயாட்சிக் குடியரசாயிருந்தது. கோகஸஸ் பகுதியில் கஸ்பியன் கடலை அண்டியிருந்த இப்பிரதேசம் வெவ்வேறு மொழிகளைப் பேசும் பல தேசிய இனங்களைக் கொண்டது.

இம் மொழிகளுள் முதன்மை பெற்றிருந்த அவார் மொழியின் கவிஞன், ரசூல் கம்ஸதோவ். அக்கால சோவியத்நாட்டையும் தாண்டி, ஆசிய - ஆபிரிக்க நாடுகளில் புகழ்பெற்றிருந்தார் கம்ஸதோவ். அவருடைய கவிதைகளின் கலையழகிற்காகவும், சமூகப் பொறுப்புணர்ச்சிக்காகவும் அவர் கவனம் பெற்றார். தான் ஓர் அவார் இனத்தவனாக இருப்பது, தாகெஸ்தான் பிரஜையாக இருப்பதையோ, சோவியத் குடிமகனாக இருப்பதையோ எவ்விதத்திலும் முரண்கொண்டதாக்கவில்லை என கம்ஸதோவ், தமது தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளின் மொழி பெயர்ப்புத் தொகுதி முன்னுரையில் குறிப்பிட்டார். இதில் இடம் பெற்ற நாரைகள் எனும் கவிதை மிகவும் புகழ் பெற்றது.

*'பெரும் கொடும் போர்களில்*
*உயிர்களை நீத்தவர்*
*புறமுதுகிடாப் பெருவீரர்*
*புதைகுழிகளிலே*
*மறைவதில்லை...'*

இக்கவிதைத் தொகுதியைவிட எனது தாகெஸ்தான் என்ற அவரது வசனத்தினாலான படைப்பும் ஆங்கிலத்தில் வெளியாயிற்று. இது வெறும் கட்டுரை நூலன்று, கவிதைகள், சிறுகதைகள், பழமொழிகள் எல்லாம் இடம் பெறுகிற - ஒரு படைப்பாளியின் உணர்வுக் கதம்பம்.

கம்ஸதோவ் பற்றிக் குறிப்பிடுகையில் உடன் நினைவுக்கு வருகிற இன்னொரு படைப்பாளி சிங்கிஸ் ஐத்மத்தோவ் சோவியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியரசுகளில் ஒன்றாயிருந்து இப்போது பிரிந்துவிட்ட கிர்கீஸியாவின் புகழ்பூத்த நாவலாசிரியர். ஜமீலா என்ற அவரது நாவலுடன் பெருங் கவனம் பெற்றார். இதைத் தவிர அவருடைய அன்னை வயல், போய் வா குல்ஸாரி ஆகிய நவீனங்களும் தீவிர வாசகர்களின் ஆர்வத்திற்கும் அக்கறைக்கும் உரியவையாக விளங்கின. இம் மூன்று படைப்புக்களுமே தமிழிலும் பெயர்க்கப்பட்டு வெளியாகின.


சிங்கிஸ் ஐத்மத்தோவ்

ஐத்மத்தோவின் படைப்புக்களில், கிர்கீஸியாவின் மலைகளையும், எல்லையற்றுப் பரந்த ஸ்தெப்பி வெளிகளையும் மட்டுமின்றி, மானுடப் பண்புகளுக்கு இலக்கணமாய் அமைகிற பாத்திரங்களையும் சந்திக்க முடியும். போரின் கொடுமைகளுக்கு முகங்கொடுப்பதுடன், மனத்திடத்திற்கு உதாரணமாயும் திகழ்கிற ஒரு மூதாட்டியின் கதை அன்னை வயல், 'உலகின் சிறந்த காதல் நவீனங்களுள் ஒன்று' என லூயி அரகனால் பாராட்டப்பட்டது ஜமீலா.

சோவியத் நாடு உடைக்கப்பட்டதானது உலகின் சமநிலையை இல்லாதொழித்ததுடன் நடுநிலைமை. அணிசேராமை போன்ற பதங்களையும் கூட அர்த்தமற்றதாக்கி விட்டது. அரசியல் ரீதியான இந்நிலைகள் ஒரு புறமிருக்க மூன்றாம் உலகின் கலை இலக்கியவாதிகளுக்கு அந்த உடைவு பெரும் இழப்பாகவும் அமைந்தது.

'சர்வதேசியம்' என்ற இலட்சியத்தின் கீழ் இலக்கியச் செல்வங்கள் யாவற்றையும் உலக முழுமைக்கும் பொதுமையாக்க சோவியத் தேசம் பெருமுயற்சிகளை மேற்கொண்டது. அங்கு வழக்கிலிருந்த உடெகே, யுகாகிர் போன்ற மொழிகள் எழுத்து வடிவம் கூட இல்லாதிருந்தன. எனினும் ஐம்பது ஆண்டுகளுள் அம் மொழிகள் தம் சொந்த எழுத்தாளர்களையும், இலக்கிய நூல்களையும் பற்றிப் பெருமை கொள்ளும் அளவிற்கு வளர்ச்சி கண்டன. இரண்டாயிரம் பேர் மட்டுமே பேசிக்கொண்டிருந்த சாமிமொழி ஆயிரத்தைந்நூறுக்கும் குறைவானோரைக் கொண்டிருந்த இத்தல்மன் மொழி - இவற்றிற் கூட இலக்கியப் படைப்புக்கள் நூலுருவில் வெளியாகியிருந்தன. இருபது லட்சத்துக்குச் சற்று அதிகமான கிர்கீஸியருடைய - சிங்கிஸ் ஐத்மாத்தோவும். அதில் கால்வாசி கூட இராத அவார்களின் ரசூல் கம்ஸதோவும், சோவியத் நாட்டின் எல்லைகளுக்கப்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகளாவிய இலக்கிய வாசகர்களுக்கு மிக நெருக்கம் கொண்ட படைப்பாளிகளாயிருந்தனர். சோவியத் நாடு 'தேசிய இனங்களின் சிறைச்சாலையாய் இருந்ததா, என்பது இக்கட்டுரைத் தொடருக்கு அப்பாற்பட்டது. எனினும் இன்றைய சர்வதேச நிலவரங்களின் கீழ் அது மிக முக்கிய ஆய்வாக அமையும்.

எப்படியிருப்பினும், மேற்சொன்ன 'சர்வதேசியம்' என்ற பதாகையின் கீழ் சோவியத் அமைப்பானது தமிழ் மொழிக்கும், மக்களுக்கும் ஆற்றியபணி மகத்தானது. இக்கட்டுரைத் தொடரின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட பல படைப்புகள் உட்பட உலகப் புகழ் பெற்ற செம்மை இலக்கியங்கள், குழந்தை இலக்கியங்கள், நவீன அறிவியல்துறை - சகலதும் - சார்ந்த நூல்கள் யாவற்றையும் நினைத்தும் பார்க்க முடியாத மலிவு விலையில் தலைமுறைகளுக்கும் நிலைக்கும் விதத்தில் அது வெளியிட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22

மேலைநாட்டு இலக்கியங்கள் எமக்கு எட்டியதைப்போல கீழைத்தேய - அதாவது தூரகிழக்கு தேசங்களின் - படைப்புக்கள் வந்து எட்டாமைக்குப் பல காரணங்களுள. முக்கியமாக ஜப்பான் பொருளாதார, தொழில்நுட்ப, பண்பாட்டுத் துறைகளில் பெருவளர்ச்சி கண்ட நாடாக இருந்துங்கூட, அதன் படைப்பிலக்கிங்கள் பற்றி - ஜப்பானிய சினிமாவைப்பற்றி நாம் அறிந்துள்ள அளவுக்காவது - அறியமுடியாது போனமை துரதிர்ஷ்டமே. 'ஹைக்கூ' மட்டும் புறநடை. ஜப்பானிய மொழியின் பழைமைமிக்க இந்த இலக்கிய வடிவம் கடந்த இரண்டு, மூன்று தசாப்தங்களில் தமிழ்க் கவிஞர்கள் கவிதை ஆர்வலர்கள் ஆகியோரின் அக்கறைக்குரிய ஒரு வடிவமாக மாறிவருகிறது.

புனைகதைகளைப் பொறுத்தளவில், யஸுநாரி கவபட்டா, யுகியோமிஷிமா, ஷுஷாகு என்டோ, கென்ஸாபுரோ ஒய், கஸுவோ இஷிகுரோ ஆகியோர் பற்றி ஓரளவு அறியவும் அவர்களின் படைப்புகளில் அநுபவம் பகிரவும் வாய்ப்புக்கள் கிட்டின.

கவபட்டா, 1968இல் நோபல் பரிசை வென்றதுடன் உலகின் கவனத்தை ஈர்த்தார். இலக்கியத்துக்கான நோபல் பரிசை வென்ற முதல் ஜப்பானியரும் அவரே. தூங்கும் அழகிகளின் வீடு, கோட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆகிய இரு படைப்புக்களும் அவருக்கு இக்கௌவரத்தைப் பெற்றுக் கொடுத்தன. அவரது முதலில் வெளியான இஸு நடனக்காரர்கள் என்ற சிறிய நாவலுடன் தொடங்கிய படைப்புச் செயற்பாடு, தொடர்ந்த உற்சாத்துடன் நீடித்தது. பனி படர்ந்த நாடு அவர் நாவல்களில் மிகவும் அறியப்பட்டதொன்று. கவபட்டாவின் இலக்கிய அந்தஸ்தை நிலை நிறுத்த இந்நாவல் பெரிதும் உதவிற்று.



யஸூநரி
கவபட்டா

இரண்டாம் உலகப் பெரும் போர் முடிவடைந்தபின் தொடர்ந்த ஆண்டுகள் கவபட்டாவின் படைப்பு உத்வேகம் பெற்ற காலமாகக் குறிப்பிடப்படுகின்றன. மலையின் ஒலி, வாவி போன்ற நாவல்கள் இக்காலகட்டத்தில் உருவானவை. மலையின் ஒலி நாவலின் நாயகனான கிழவன் ஷிங்கோ கேட்கிற அந்த ஒலி அவனது பிரமையாயும், குறியீடாயும் அமைகிறது.

1954இல் வெளியான வாவி, கதை சொல்லும் பாங்கினாலும், கையாளும் பொருளாலும் வாசகர்களைக் கவர்வது. ஜிம்பி என்ற ஆசிரியன் ஒருவனின் மிக நுணுக்கமான உணர்வுகளைச் சுற்றிப் படர்கிற கதை, வாழ்வின் அழகற்ற தன்மைகளை அவன் எதிர்கொள்வதைக் காட்டுவதுடன், 'அழகு-அழகற்றது' என்பனவற்றையும் கேள்விக்குள்ளாக்குகிறது.

கவபட்டா, சிறந்த விமர்சகராகவும் விளங்கினால். மிஷிமா போன்ற எழுத்தாளர்களை இனங்கண்டு ஊக்குவித்தவரும் அவரே.

கவபட்டாவுக்குக் கால்நூற்றாண்டு கழித்துப் பிறந்த யுகியோ மிஷிமாவும் ஜப்பானின் இருபதாம் நூற்றாண்டு இலக்கியத்தில் தடம் பதித்தவராகக் கொள்ளப்படுதிறார். 40 நாவல்கள், இருபதிற்கு மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகள், வெற்றிகரமாக அரங்கேறிய பதினெட்டு நாடகங்கள் போன்றவற்றை மிஷிமா படைத்தார். ஒரு முகமூடியின் ஒப்புதல்கள். அலைகளின் ஓசை தடை செய்யப்பட்ட நிறங்கள், வசந்தகாலப்பனி, விடியலின் கோவில் போன்ற அவரது படைப்புகள் பெரும் புகழ் பெற்றவை.

இவற்றுள் விடியலின் கோவில் கீழைத்தேய சிந்தனைகள், நம்பிக்கைகள், தத்துவம் - இவற்றினடியாய் எழுந்தது. யதார்த்தத்திலிருந்து விலகி அதற்குமப்பால் தேடலைத் தொடர்கிற படைப்பு, நடுக்கோடை மரணம் என்ற மிஷிமாவின் 9 கதைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு ஜப்பானிய வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவதாகப் போற்றப்படுகிறது. பிரார்த்தனைச் சடங்குகள் என்ற 7 கதைகளின் தொகுப்பு அவருடைய மேதைமைக்கு இன்னொரு உதாரணமாகக் கொள்ளப்படுவது. மிஷிமாவின் பெயர் 3 தடவைகள் நோபல் பரிசுக்கு விதந்துரைக்கப்பட்டது. தம்முடைய குறுகிய வாழ்நாளிலேயே - 45 ஆண்டுகள் - தமது முக்கியமான நாவல்கள் பலவும் ஆங்கிலம் உட்படப் பல்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்டுப் புகழீட்டியதை அவர் கண்டார்.


கென்ஸாபுரோ ஓய்

இரண்டாம் உலகப் போருக்குப் பின். மிஷிமா; அமெரிக்கா சென்றார் - 'பாட்டிஸான் றிவ்யூ' அழைப்பின் பேரில். மிஷிமா சற்று மாறுபட்ட போக்குடைய படைப்பாளியாயிருந்தார். ஜப்பானிய ஏகாதிபத்திய அமைப்பினதும், அதன் இறந்தகால பாரம்பரியங்களிலும் அவருக்கு ஆர்வமிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பாரம்பரியங்கள், மேலைத்தேய தாக்கங்களால் இழக்கப்படுவதாக அவர் வருந்தினார். நடிகர், திரைப்பட - நாடக இயக்குநர்,, இசைக்குழு நடத்துநர் - என்று மட்டுமன்றி, சிறந்த வாள்வீச்சுக்காரனாகவும் மிஷிமா மிளிர்ந்தார். தம் உடலைப் பேணுவதிலும் அக்கறை காட்டி, தசைப் பயிற்சிகளையும், பளுதூக்குதல் போன்றவற்றையும் செய்து வந்த மிஷிமா, தம் நாற்பத்தைந்தாவது வயதில் சகா ஒருவருடன் இணைந்து பாரம்பரிய முறையிலான 'ஹரா-கிரி' சடங்கு மூலம் - தம் உயிரை மாய்த்துக் கொண்டதன் மூலம், உலகை வியப்பிலாழ்த்தினார்.

தமது இளைய சகாவின் இந்தத் தற்கொலை கவபட்டாவையும் பெருமளவில் பாதித்தது. இரண்டாண்டுகளுக்குள்ளாகவே, கவபட்டாவும் இதே முறையில் தம்முயிரை மாய்த்துக் கொண்டார்.

கவபட்டாவுக்குப் பிறகு நோபல் பரிசுபெற்ற ஜப்பானியர் கென்ஸாபுரோ ஓய். 1994ல், தமது குருத்துக்களைக் கிள்ளுங்கள், குழந்தைகளைக்க கொல்லுங்கள் என்ற நாவலுக்காக அவர் அப்பரிசைப் பெற்றார். இதில் விசேஷமென்னவென்றால் 1958ல், ஓய் தமது 23வது வயதில் எழுதிய நாவல் அது.

குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய இன்னொரு படைப்பாளியான ஷூஷாகு எண்டோ, அமைதி, கடலும் நஞ்சும், அற்புதமான முட்டாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நாவல்களையும், துக்கப்பாடல்கள், கண்ணாடி வில்லைகள் போன்ற கதைத் தொகுதிகளையும் எழுதினார். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மிகவும் அறியப்பட்டவராகவும், விரும்பி வாசிக்கப்படுபவராகவும், குறிப்பிடப்படும் என்டோவின், போர்த்தலைமுறை என்ற சிறுகதை மிகவும் பிரபலம் பெற்றது.



ஷூ ஷாகு
என்டோ

இக்கதை, இரண்டாம் உலகப் போரை வைத்தெழுதப்பட்டது, போரில் நேரடியாகப் பங்குபற்றாவிட்டாலும் அதன் தாக்கங்களுக் குள்ளானவர் என்டோ. போரிலிருந்து வேர்விடும் மனிதப் பலவீனங்களையும் முனைப்புகளையும் இப்படைப்பில் அவர் ஆராய முற்படுகிறார். இப்படித் தனிப்பட்ட முறையிலும், தேசமென்ற ரீதியிலும், பாதிக்கப்பட்டது போர்த்தலைமுறை என்பதே என்டோ கூற விழைவது. மிகவும் நுணுக்கமாகவும், மிகுந்த கலையழகுடனும், மனதை ஈர்க்கும் விதத்தில் எழுதப்பட்ட கதை போர்த்தலைமுறை.

மிகவும் பிந்திய தலைமுறையொன்றினைச் சேர்ந்தவர். கசுவோ இஷிகுரோ 1954ல் பிறந்த அவர் 1989ல், நாளின் மீதி என்ற தமது நாவலுக்காக புக்கர் பரிசினை வென்றார். இளம் வயதிலேயே வேறும் பல இலக்கியப் பரிசுகளை வென்ற இஷிகுரோவின் படைப்புகள் ஏறத்தாழ 30 மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. நாதியற்று நாமிருந்த போது என்ற அவரது நாவல், உலகப்பெரும் போர்களிரண்டிற்குமிடையிலான காலத்தை வைத்தெழுதப்பட்டது. போரானது சாதாரண சனங்களின் வாழ்வை எப்படிப் பாதிக்கிறது என்பதைக் காட்டுவது.

ஜப்பானுக்கு அடுத்ததாக - தூர கிழக்கு நாடுகள் மட்டில் - பிலிப்பைன்ஸ் பற்றி சற்று அறிய முடிகிறது. பிலிப்பைன்ஸின் இலக்கியம் பல்வேறு மொழிகளில் படைக்கப்படுகிறது. அங்கு பேசப்படும் கிளை மொழிகளுள் அறியப்பட்டவை மட்டும் எண்பத்தேழு. அறியப்படாதவை இன்னுமிருக்கலாம் என்கிறார்கள். இவற்றில் நாலோ ஐந்தில்தான் ஓரளவேனும் படைப்பிலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், இந்த மொழிகளை விட மேலதிகமாக அங்கு வழக்கிலுள்ள - காலனியாதிக்கவாதிகளால் புகுத்தப்பட்ட - மொழிகள் இன்னுமிரண்டு. அவை ஆங்கிலம், ஸ்பானிஷ். இம்மொழிகளில் குறிப்பிடத்தக்க படைப்புகள் சில உருவானதாயும், அவை வெளியுலகின் கவனத்தை ஈர்த்துள்ளதாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகிறது. இந்த எழுத்துக்கள் மேலைத்தேயத் தாக்கங்கட்குட்பட்டவையாகவும் இருப்பதில் வியப்பில்லை.

எனினும், பிலிப்பைன்ஸின் படைப்பாளிகள் தமக்கென்றொரு அடையாளத்தை நிறுவவும், அந்த அடையாளத்துடன் சர்வதேச அரங்கில் தம்மைப் பொருத்திக் கொள்ளவும் முனைப்புடன் செயற்படுகிறார்கள். இதற்குச் சான்றாக, அறுபதுகளின் பிற்பகுதியில் வெளியான உணர்ச்சிக் காற்றுகள் என்ற தொகுப்பு நூலைக் குறிப்பிடலாம். இந்த நூற்றாண்டில் இனங்காணப்பட்ட படைப்பாளிகள் பலரது சிறுகதைகள், கவிதைகளைக் கொண்டதாக அத்தொகுப்பு வெளியாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

ஆஸ்திரேலிய இலக்கியம் பற்றி - எம்மவர் இவ்வளயு தொகையில் அங்கு போய்க் குடியேறிய பின்னரும்கூட - மொழிபெயர்ப்புகள் மூலமாகவேனும் குறிப்பிடத்தக்க அளவு அறியமுடியாமல் போவது துரதிர்ஷ்டவசமானது. தேடல்களில் கிட்டியவற்றுள் முக்கியமான ஒன்று இந்தச் சுதந்திரம் என்கிற கதைத் தொகுதி. ஆஸ்திரேலியாவின் தனித்துவம் வாய்ந்த படைப்பாளியாகிய ஜோன் மொறிஸன் எழுதியவற்றின் தொகுப்பு. மொறிசன் சாதாரண மனிதர்களின் கதைகளை உணர்ச்சிபூர்வமாக கலையழகு ததும்ப உருவாக்குகிறார்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் பிறந்த மொறிஸன் தமது 19 ஆவது வயதில் ஆஸ்திரேலியாவில் குடியேறினார். தொடர்ந்த இலக்கிச் செயற்பாடுகளின் விளைவாக பல சிறுகதைத் தொகுதிகள் வெளியாகின. சிறுகதைகளை மட்டுமே எழுதித் தமக்கெனத் தனியிடமொன்றை நிறுவிக் கொண்டவர் மொறிஸன்.

அவருடைய மார்கிறற்றுக்கு மற்றும் மாலுமிகள் கப்பல்களுக்குரியவர்கள் போன்ற கதைகள் அற்புதமான கலைப்படைப்புக்கள். 1986ல் ஆஸ்திரேலியாவின் 'பட்றிக் வைற்' விருது பெற்றவர் அவர்.

பட்றிக் வைற் யாரென்றால், 1973ல் இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்ற ஆஸ்திரேலியர். இங்கிலாந்தில் பிறந்தாலும் இளம் வயதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பட்றிக் வைற்

பெற்றோருடன் ஆஸ்திரேலியாவிற்குக் குடி பெயர்ந்தவர். இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனின் விமானப்படையில் விமானியாகப் பணியாற்றியவர்.

நாடகங்கள், கவிதைகள், சிறுகதைகள் என்றெல்லாம் பல புகழ்மிக்க படைப்புக்களை ஆக்கிய போதிலும், முதலில் ஒரு நாவலாசிரியராகவே இனங்காணப்படுபவர், வைற்.

பரிணாமக் கொள்கையை முன் வைத்த சாள்ஸ் டாவினின் வேலையாளாகவிருந்து அவருடைய பயணங்களிலும் ஆய்வுகளிலும் பங்கேற்ற ஸிம்ஸ் கொவிங்ரன் என்பவருடைய உண்மைச் சரிதத்தை ஆதாரமாய் வைத்து திரு டாவினின் உதவியாள் என்ற ருசிகரமான நாவலை ரோஜர் மக்டொனால்ட் என்ற ஆஸ்திரேலியர் எழுதினார்.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், சமய நம்பிக்கைகள், மனித உறவுகள், ஓரளவுக்கு சாகசங்கள் எல்லாம் இணைந்த இந்நாவலை எழுதிய ரோஜர் இதற்கு முன் வேறு ஐந்து நாவல்களை எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

ஆஸ்திரேலியாவின் 'அபோ' - அபோறிஜின் - பூர்வகுடி - மக்களின் ஓவியங்கள் சமீபகாலமாக உலகின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியுள்ளன. எனினும் அவர்களின் இலக்கியங்கள் அந்தளவுக்குக் கவனம் பெற்றதாய்த் தெரியவில்லை. இதன் அர்த்தம், அவர்களிடையே உலகத்தரம் வாய்ந்த இலக்கியங்கள் எழவில்லை என்பதன்று. பூர்வகுடி மக்களின் நவீன இலக்கியப் படைப்பாற்றலுக்கு சான்றாயமைவது எழுதாத கொள்கை என்கிற சிறுகதை. அவர்களின் அரசியல் மற்றும் பண்பாட்டு இலக்கியங்களில் முன்னணி வகித்தவரான குளோறியா பிறெய்ன்னன் எழுதிய கதை அது. மேற்கு ஆஸ்திரேலியாவின் 'வொங்காய்' இனக் குழுவைச் சேர்ந்தவர் குளோறியா பூர்வ குடிகளுக்கெதிராக நிலவும் பாகுபாட்டை, ஒரு 'வொங்காய்' இன யுவதியின் கண்ணோட்டத்தில் - மிக எளிமையாக, அதேநேரத்தில் கூர்மையாக - எடுத்துக் கூறும் அருமையான சிறுகதை அது.

நியூஸீலாந்தைப் பொறுத்தமட்டில் அந்நாட்டு இலக்கியத்தின் பிதாமகன் என்று கொள்ளப்படுவர் ஃபிராங்க் ஸர்கேசன். 1903இல் பிறந்த அவர் நியூஸிலாந்து சிறுகதையுலகில் தனித்துவம் வாய்ந்தவராகவும் போற்றப்படுகிறார். ஒரு கோழியும் சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டைகளும் என்கிற அவரது எளிமை நிறைந்த சிறிய கதை இதனை நிரூபிப்பதாயுள்ளது.


கத்தறீன் மான்ஸ்ஃபீல்ட்

மிகக் குறைவாகவே எழுதினாலும், சிறுகதை உலகில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்திய ஒருவர், நியூஸிலாந்தில் பிறந்து வளர்ந்தவரான கத்தறீன் மான்ஸ்ஃபீல்ட். சாராரண சம்பங்களும், இயல்பான நிலைமைகளுங்கூட அவர் கலையாற்றல் காரணமாகக் கச்சிதமான இலக்கிய வடிவங்கொண்டன. இந்த் அற்புதம், இலக்கிய உலகில் அவருக்கும் நிலையான ஓரிடத்தைப் பெற்றுக் கொடுத்தது. இங்கிலாந்திலும் நியூஸீலாந்திலுமாகத் தம்வாழ்வை மேற்கொண்ட கத்தறீன், இளம் வயதிலேயே - 35 ஆண்டுகளில் - காலமானார். அவருடைய ஐந்து கதைத்தொகுதிகளில் மூன்று அவரது மறைவின் பின்னரே வெளியாகின. ஒரு ஜெர்மன் விடுதியில், நந்தவன விருந்து ஆகியவை பெரும் வரவேற்பைப்பெற்ற அவரது படைப்புக்கள், நியூஸீலாந்தைச் சேர்ந்த இன்னொரு சிறந்த சிறுகதை ஆசிரியர், பாபறா அன்டர்சன், புகழ்மிகு விஷயங்கள் என்ற தொகுதியை எழுதியவர். இதுதவிர இன்னுமொரு தொகுதியும், ஐந்து நாவல்களும் வெளியாகியுள்ளன.


கிம் ச்சி ஹா

பெரியநாடு, சிறியநாடு, அபிவிருத்தியடைந்த நாடு அபிவிருத்தியடைந்து வருகிற நாடு என்றெல்லாம் பேதமின்றி, எங்கெல்லாம் மனிதர்கள் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் நல்லிலக்கியம் உருவாகும் என்பதை எடுத்துக்காட்டுகிவது சமோவாவின் இளைய எழுத்தாளரான ஸியா ஃபிஜியெல் எழுதிய முன்னால் நாம் இருந்த இடம் என்ற நாவல். சமோவா, ஆஸ்திரேலியாவுக்கும் ஹவாய்க்கும் இடையே பசுபிக் சமுத்திரத்தின் நடுவில் அமைந்துள்ள தீவுகளின் கூட்டம். ஸியா, கவிஞராக அங்கீகாரம் பெற்றவர், கவியரங்குக் கவிஞர். இந்த நாவல் அவரை கலையாற்றல் மிக்க நாவலாசிரியையாகவும் உலகுக்குக் காட்டிற்று. சமோவா மக்களின் கதைசொல்லும் பாரம்பரியத்தினடியாகக் கிளைத்ததாய்க் கூறப்படும் இந்நாவல், வளரிளம் பருவத்து - கிராமியப் பெண்ணொருத்தியின் கண்ணோட்டத்தில் நகர்வது. இறந்தகாலத்துக்கும் எதிர்காலத்திற்குமிடையில் சிக்கித்திணறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்முறையும் பண்பாடும் இங்கு படமாக்கப்படுகின்றன. பிராந்திய இலக்கியப் பரிசினை வென்ற படைப்பு இது.

உலக அரங்கில் முன்னணி நாடாக விரைந்து உருவாகி வரும் தென்கொரியாவின் கவிஞன் கிம் ச்சி ஹா, உலகின் கவனத்தை ஈர்த்த ஒரு படைப்பாளி, எனினும், தமது அரசியல் நிலைப்பாடு காரணமாகவும், கவிதைகளில் எதிரொலித்த அவரது போர்க்குரல் காரணமாகவும், தென்கொரிய அரசினால் மிகக்கடுமையாகப் பழிவாங்கப்பட்டவர். அவருடைய படைப்புக்கள் யாவும் ஆங்கில மற்றும் ஜப்பானிய மொழிகளில் பெயர்க்கப்பட்டதாக அறிய முடிகிறது. மஞ்சள் மண், மக்களின் அழுகுரல் ஆகிய தொகுதிகள் பெருங்கவனத்தை ஈர்த்தவை.

கவிஞராக மட்டுமின்றி, விமர்சகர், பத்திரிகையாளர் எனவும் அடையாளங் கொண்டிருந்த ஹா, சுதந்திரத்துக்கும், ஜனநாயகத்துக்குமான மக்கள் போராட்டத்தில் இணைந்து நின்றதன் காரணமாக அரசின் அதிருப்திக்கு ஆளானவர். முதல்தடவை அவர் கைது செய்யப்பட்டபோது, சார்த்தர், ஸிமோன் த பூவா, உள்ளிட்ட பல படைப்பாளிகள், சிந்தனையாளர்கள் போன்றோரின் எதிர்ப்புக்குரல் காரணமாக விடுதலை செய்யப்பட்டார். எனினும், விரைவிலேயே - இளைஞர்கள், மாணவர்கள் போராட்டத்தை ஆதரித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் - மீண்டும் கைது செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டார். திரும்பவும் எழுந்த சர்வதேச அழுத்தங்காரணமாக, இத்தண்டனை பின்னர் ஆயுள்தண்டனையாக மாற்றப்பட்டது. ஹாவின் கவித்துவத்திற்கும் போர்க்குணத்திற்கும் நல்லதொரு எடுத்துக்காட்டாயமைவது அவருடைய கடல் எனும் கவிதை.

*அசைவேதுமற்று, ஆழம் தெரியாமல்*
*அவர் தம்முகங்களில்*
*கடல்...*
*காய்ந்தொடுங்கிய முகங்களில்*
*சவுக்கடித்த தழும்பினில்*
*குழி விழுந்த கண்ணில்*
*கடல்.....*
*வரண்டு, வாய்திறவா, உதடுகளில்*
*ஒரு போதும் திறவாத சிறைக்*
*கதவில்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கடல்......*
*ஆழந்தெரியாது*
*அமைதி காட்டும் கடல்.*
*ஆனால்*
*அது ஒருநாள் ஆர்ப்பரிக்கும்*
*அகிலமெல்லாம் நடுநடுங்க*
*அலை புரளும்*
*அதுவரைக்கும் ஆழம் தெரியாது*
*ஊழி ஒன்று உருவாகும் வரை.*

ஹா வைப் பொறுத்தளவில் கவிதையும் போராட்டமும் பிரிக்க முடியாதவையாயிருந்தன, ஒரு கவிஞனின் உள்ளுணர்வு, ஆன்மிக தீர்க்க தரிசனம், அரசியல் வீச்சு - இம் மூன்றினதும் கலவையாய் உருப்பெற்ற படைப்புக்கள் என, ஹாவின் கவிதைகள் வர்ணிக்கப்படுகின்றன.

தென்கொரியாவில் மட்டுமின்றி ஆசியா - ஆபிரிக்காவிலும் கூட மிகச் சிறந்த கவிஞர்களிலொருவராக ஹா மதிப்பிடப்படுகிறார். 1975இல் 'தாமரை' விருது பெற்ற அவர் புத்துலகொன்றின் உருவாக்கத்திற்காகத் தமது கலையாற்றலை மட்டுமன்றி வாழ்வையும் அர்ப்பணித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24

'யூ.கே' என அறியப்படும் ஐக்கிய இராச்சியத்தின் ஒரு பகுதியான அயர்லாந்து இருபதாம் நூற்றாண்டு இலக்கியவாதிகளில் குறிப்பிடத்தக்க பலரை உலகுக்களித்துள்ளது.

அவர்களில் மூத்தவரும், முதன்மையாகக் கொள்ளப்படுபவருமான பேர்னாட் ஷா 19ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டிலும் - சம அளவுகளில் - தமது நீண்ட வாழ்வைக்கண்டவர். ஆங்கில இலக்கியத்தில் - குறிப்பாக நாடக இலக்கியத்தில் - ஷேக்ஸ்பியருக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுபவர். ஷேக்ஸ்பியரையே மிஞ்சிவிட்டாரெனுமளவிற்கு ஷா பற்றிய போலிப் பெருமைகள் பேசப்பட்டாலும் உண்மை அவ்வாறில்லை என்பது விமர்சகர்களின் திடமான கருத்தாகும்.


ஜோர்ஜ் பெர்னாட் ஷா

தரத்திலும் தொகையிலும் மிக்க தமது நாடக ஆக்கங்களுக்காக, ஷா, 1925இல் நோபல் பரிசினைப் பெற்றார். மானுடனும் அதிமானுடனும், மேஜர் பாபரா, பிக்மேலியன் போன்ற அவரது புகழ்பூத்த படைப்புக்கள். 20ம் நூற்றாண்டிலேயே வெளியானவை. சமூக உணர்வு மிகக்கொண்டிருந்த ஷா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவையுணர்வும் மிக்கவராக விளங்கியமையால், அவரது பெரும்பான்மையான நாடகங்கள் அங்கதச்சுவை கொண்ட விமர்சன - சீர்திருத்தப்படைப்புக்களாக அமைந்து வெற்றி கண்டன.

இலக்கியம், ஓவியம், சங்கீதம் - இவற்றில் மட்டுமன்றி, சமூக சீர்திருத்தத்திலும் அக்கறை கொண்டவராக ஷா இருந்தார். சோஷலிஸ சாயல் கொண்ட ஃபேபியன் இயக்கத்தில் இணைந்து செயற்பட்டார். அரசியலிலும் ஈடுபட்டார். இவற்றால் மட்டுமன்றி, சிறந்த மேடைப் பேச்சாளராகவும், வாசாலகம் மிக்க சொல்லாடல்காரராகவும் ஷா புகழ்பெற்றார்.

ஆங்கில மொழியைச் சீரமைப்பதிலும் எளிமையாக்குவதிலும் கூட அவர் பெரும் அக்கறை கொண்டிருந்தார். ஷாவின் கிண்டலுக்கும், ஆங்கில மொழியின் உச்சரிப்புச் சீரின்மைக்கும் எடுத்துக்காட்டாக இதைக் கூறலாம்.

'FISH' என்பது 'GOTI' எனவும் எழுதப்படலாம் என அவர் கேலி செய்தார். அதாவது 'GH' என்பதை 'ENOUGH' என்பதில் வருவது போலவும் 'O' என்பதை 'WOMEN' என்பதில் வருவது போலவும், 'TI' என்பதை 'TION' என்னும் விகுதியில் வருவது போலவும் உச்சரித்தால் 'GOTI' என்பதை 'FISH' போன்று உச்சரிக்கலாம் என்றார், அவர்!

மேலே குறிப்பிட்ட அவரது பிக்மேலியன் நாடகப்பிரதியிலும், ஆங்கில மொழி எளிமையாக்கம் பற்றிய அவரது கருத்துக்கள் இடம் பெற்றிருப்பதைக் காணமுடியும். இந்நாடகம் ஷாவின் சீர்திருத்தக் கருத்துக்கள் பலவற்றையும் எடுத்துக்கூறிய ஒரு படைப்பு. தமது எழுத்துலக வாழ்வை ஒரு விமர்சகராகவே தொடங்கிய ஷா நடுத்தர வயதின் பின்னரே படைப்பாளியாக மாறினார். எனினும் தொடர்ந்த தீவிரமான செயற்பாடு காரணமாக நாற்பத்தேழு நாடகங்களை எழுதினார்.

அவருடைய ஆக்கங்கள், சிக்கலான, சர்ச்சைக்குரிய பொருளமைதி கொண்டிருந்தமையால், தமது நாடக நூற்களின் அறிமுகமாகவும் முன்னுரையாகவும் மிகநீண்ட கட்டுரைகளை அவர் எழுதினார்.

ஷாவுக்கு அடுத்ததாக, முக்கியத்துவம் பெறுகிற ஐரிஷ் இலக்கியப் படைப்பாளி, ஜேம்ஸ் ஜொய்ஸ், உண்மையில் இருவரது இலக்கியப்பாணியும் கண்ணோட்டங்களும், கையாண்ட பொருட்களும், வடிவமும் வெவ்வேறு. ஆனால், இருவரும் தங்களை ஐரிஷ் என அடையாளப்படுத்தியது குறைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேம்ஸ் ஜொய்ஸ்

ஜொய்ஸ், ஒருவிதத்தில் இருபதாம் நூற்றாண்டுக்கேயுரிய ஓர் இலக்கியப் போக்கின் முன்னோடி எனக் குறிப்பிடப்பட வேண்டியவர். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய - இலக்கியமைல் கற்களாக அமைந்த - நாவல்களையும், சிறுகதைகளையும் எழுதினார். கரு, மொழிநடை, பாத்திரவார்ப்பு, உத்தி - என எல்லாவற்றிலுமே பரிசோதனைகளையும் புதுமையையும் புகுத்திய மேதை. பின், தொடர்ந்த காலத்தில் - இவற்றின் காரணமாக - அவருடைய செல்வாக்கும் பாதிப்பும், பெருமளவில், உலகப்படைப்புகள் பலவற்றிலும் ஆதிக்கம் செலுத்தவே செய்தன.

ஜொய்ஸின் சிறுகதைகள், டப்ளின்வாசிகள் என்ற தலைப்பில் வெளியாகி, இன்றளவும் புதுமையும் புகழும் குன்றாது மிளிர்வன. இதேபோல அவருடைய யுலிஸஸ் நாவலும் பெரும் புகழ் பெற்றது. இவை தவிர, வேறிருபடைப்புக்களையும் அவர் வெளியிட்டார். அவருடைய ஆக்கங்கள் பெரும்பாலும் சுயசரிதைப் பாங்கு கொண்டவை - அதாவது, சொந்த அனுபவங்களினடியாக உருவாக்கம் பெற்றவை எனக் கூறப்படுகின்றன. அத்துடன் புற உலகச் செயற்பாடுகளின் முதன்மைக்குப் பதில், உள்ளார்ந்த உணர்வுகளும், செயற்பாடுகளுமே ஜொய்ஸினால் தீட்டப்பெற்றன. இதனால் அவர் ஆக்கங்கள் வாசகர்கட்கு சவாலாக அமைகின்றன. இதன் காரணமாக அவரது படைப்புக்களை ஆரம்பத்தில் வெளியிடுவதிலும் அவர் பெரும் தாமதங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

மிகச்சிறந்த ஒரு வாசகராகவும், பன்மொழி அறிவு வாய்க்கப் பெற்றவராகவும் ஜொய்ஸ் திகழ்ந்தார். தாம் பிறந்து வளர்ந்த நகரான டப்ளின் மீது ஒருவித சலிப்புக் கொண்டவராக அவரிருந்தார். 'முடங்கிப்போன ஒரு நகரம்' என அதை அவர் குறிப்பிட்டார். டப்ளின் வாசிகள் தொகுப்பில் அமைந்துள்ள கதைகள் யாவும், அந்நகரையும் அதில் வசிப்பவர்களையுமே பற்றிப் பேசுவனவாக அமைந்தன. உலகின் ஒரு முழுமையான சிறுபகுதியாகவே, ஜொய்ஸ், டப்ளினை நோக்கினார். டப்ளின்வாசிகள் மூவரின் ஒருநாள் பற்றிய கதையே யுலிஸஸ் நாவலாக உருவெடுத்தது. அதனுடைய திறந்த தன்மை காரணமாக, யுலிஸஸ், நீண்ட காலம் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் தடைசெய்யப்பட்டிருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த ஆங்கிலக கவிஞராகக் கொள்ளப்படும் வில்லியம் பட்லர் யீட்ஸ் ஒரு ஐரிஷ்காரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டப்ளினில் கல்வி கற்றார். ஓவியக் கலையையும் பயின்ற யீட்ஸ், ஒரு தொழில் ரீதியான எழுத்தாளராக மாறவேண்டி, தம் கல்வியை நிறுத்திக் கொண்டார். எனினும், அவரது படைப்பாற்றல் உச்சம் பெற்று மிளிரும் சிறந்த கவிதைகளை, அவரால் தமது ஐம்பதாவது வயதின் பின்பே படைக்க முடிந்தது.


வில்லியம் பட்லர் யீட்ஸ்

யீட்ஸ் பற்றிய இன்னொரு முக்கியமான விடயமென்னவெனில் - ஷா வைப்போலவோ அன்றி ஜொய்ஸ் போலவோ இல்லாமல் - அவர் ஒரு ஐரிஷ் தேசியவாதியாக - ஐரிஷ் உணர்வுமிக்கவராக - திகழ்ந்தார். பிரிட்டிஷ் மேலாதிக்கத்தினின்று விடுபட்டு, சுதந்திர அயர்லாந்துக் கொள்கையை முன்னெடுத்த ஐரிஷ் தேசிய இயக்கத்தின் தலைவியாய் இருந்த மோட் கொன்னின்பால் அவர் கொண்டிருந்த கவர்ச்சியும் இதற்கு ஓர் உந்து சக்தியாயமைந்தது. எப்படியிருப்பினும், ஐரிஷ் மறுமலர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செலுத்தியவர் யீட்ஸ். பின்னர் அரசியலிலும் ஈடுபட்டார்.

கற்பனாலயக் கவிஞராக எழுதத் தொடங்கிய யீட்ஸ், கவிஞர்கள் பிளேக், மற்றும் ஷெல்லியின் பாதிப்புக்கும், பிரெஞ்சுக் குறியீட்டு வாதத்தின் செல்வாக்குக்கும் உட்பட்டவராக அடையாளம் காணப்படுகிறார். அவரது கவிதைகளில் பெருமளவு பிரதிபலிக்கும் பிரபஞ்சக் கண்ணோட்டம் தனித்துவம் வாய்ந்த ஒன்று. தத்துவமும் சரித்திரமும் இணைந்த் பார்வை என்ற வசன நூல் ஒன்றினையும் யீட்ஸ் வெளியிட்டார்.

யீட்ஸினுடைய இரண்டாவது வருகை என்ற கவிதை, அவருடைய சொந்தக் கோட்பாடொன்றின் அடிப்படையிலமைந்தது. இந்தக் கோட்பாட்டின்படி, இயற்கையும் சரித்திரமும் ஒவ்வொரு இரண்டாயிரம் ஆண்டுகட்கும் ஒருமுறை சுழன்று வருகின்றன. இக்காலகட்டத்தில் ஒரு நாகரிகம் தோன்றி, வளர்ந்து, செழித்து, அழிந்து, அற்றும் போய்விடுகிறது. அதன்பின் அதனிடத்தினை ஒரு புதிய நாகரிகம் எடுத்துக் கொள்கிறது. இரண்டாவது வருகை என்ற தலைப்பு, உலக முடிவில் யேசு மீண்டும் வருவார் என்ற புதிய ஏற்பாட்டின் கூற்றைச் சுட்டுகிறது.

இந்தக் கவிதையைப் பொறுத்தளவில், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய இன்னொரு விடயம் என்னவெனில், ஏற்கெனவே நாம் பார்த்த நைஜீரிய எழுத்தாளர் சின்னுவ அச்சிபேயின் புகழ்பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலான 'திங்ஸ் ஃபோல் எபாட்' என்பதன் அத்தலைப்பானது, இக்கவிதையிலிருந்தே எடுக்கப்பட்டது.

(அதே போல், அச்சிபேயின் இன்னொரு நாவலின் தலைப்பான 'நோ லோங்கர் அற் ஈஸ்' (அற்றுப்போன அமைதி) என்பது, ரி.எஸ். எலியட்டின் 'ஜேர்ணி ஓஃப் த மஜி' (மூவிராசாக்களின் பயணம்) கவிதையின் வரியொன்றிலிருந்து எடுக்கப்பட்டது. )

கவிஞர் யீட்ஸ், தமது ஆரம்பக் காலங்களில் சிறுகதைகளும் எழுதியுள்ளார். அவற்றிலொன்றான ஒதுக்கப்பட்டோனைச் சிலுவையிலறைதல் என்பது, அவரது பிற்கால வளர்ச்சிப் போக்கினைக் காட்டுவதாயமைந்தது. 1923ல் யீட்சுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அயர்லாந்திலிருந்து தோற்றம் பெற்ற இன்னுமொரு முக்கிய நாடகாசிரியர், ஸிஞ்ஜ். ஜோன் மில்லிங்ரன் ஸிஞ்ஜ் என்ற முழுப்பெயரைக் கொண்ட ஸிஞ்ஜ், கடலில் போவோர் என்ற தமது அதி அற்புதப் படைப்பின் மூலம் மிகுந்த கவனமும் புகழும் பெற்றார். ஐரிஷ் மறுமலர்ச்சியுடன் இணைந்ததாய் உருவான 'அபே அரங்கு'டன் ஸிஞ்ஜ் மிகுந்த தொடர்புகளை வைத்திருந்தார். அயர்லாந்தின் ஏரன் தீவுகளுக்கு அவர் பல தடவைகள் மேற்கொண்ட பயணங்கள் அவரது படைப்புக்களுக்கான செழுமைமிக்க அனுபவங்களையும் கவித்துவம் வாய்ந்த மொழி நடையையும் அளிப்பனவாய் அமைந்தன. கடலிற் போவோர், மிகவும் சிறியது. ஆனால் மிகவும் கனதி கொண்டது. ஏரன் தீவு மக்களின் துன்பமும் தீரமும்மிக்க வாழ்வினைப் பதிவு செய்த நாடகம் அது.

வேறு பல நாடகங்களையும், இரண்டு பயண நூல்களையும் சில கவிதைகளையும் கூட ஸிஞ்ஜ் எழுதினார். எனினும் கடலிற் போவோர் அவரின் முதன்மைப் படைப்பாயும் அவரது பெயரை என்றென்றும் நிலை நாட்டுவதாகவும் அமைந்தது. ஏறத்தாழக் கால் நூற்றாண்டுக்கு முன் அதன் தழுவலொன்று தமிழில் இங்கு வெளியாயிற்று.

சமகால ஐரிஷ் இலக்கியவாதிகளுள் முக்கியமானவர், ஷொண் ஓ ஃபாலின் தமது அற்புதமான சிறுகதைகள் மூலம் தனியிடம் பெற்றவர். ஜோய்ஸின் தொடர்ச்சியாக, ஐரிஷ் சிறுகதைப் பாரம்பரியத்தையும் அதன் செழுமையையும் முன்னெடுத்தவர். எனினும், ஜோய்ஸிலும் பார்க்க எண்ணிக்கையில் மிக அதிகமான கதைகளையும் ஃபாலின் படைத்தார். அவை வெளி விவகாரங்கள்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் மரங்கள் போன்ற தொகுப்புக்களாக வெளியாகின. வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் முக்கியமாக, 'சுதந்திர'த்தின் அர்த்தம் பற்றியும் அவர் கதைகள் பேசின.

ஐரிஷ் உணர்வுமிக்கவராகத் திகழ்ந்த ஃபாலின், தமது பதினாறாவது வயதில் தமது பெயரையும் மேற்குறித்தவாறு முற்றுமுழுதான ஐரிஷ் பெயராக மாற்றிக்கொண்டார். ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் ( ஐ.ஆர்.ஏ ) உறுப்பினராகவும் ஆறாண்டுகள் செயற்பட்டார். சிறுகதைத் தொகுதிகளைவிட நாவல், இலக்கிய விமர்சனம், பயணநூல் போன்றவற்றையும் ஃபாலின் எழுதினார். 'எளிய மக்களின் அன்றாட வாழ்வைப் பற்றி எழுதுவதற்கே அற்புதமான விஷயங்கள் எழுத்தாளர்களுக்கு உள்ளன' என்றார் ஃபாலின்.


சாமுவெல் பெக்கற்

அயர்லாந்து தந்த இன்னொரு முக்கியமான இலக்கிவாதி, சாமுவேல் பெக்கற். டப்ளினில் பிறந்த பெக்கற், தமது கொடோவுக்காகக் காத்திருத்தல் என்ற நாடகத்தின் மூலம் உலகப்புகழ் பெற்றவர். வாழ்வின் அபத்தத்தை உணர்த்தும் முயற்சியாக முனைப்புப் பெற்ற 'அபத்த நாடகம்' என்கிற வகையைச் சார்ந்தது இந்நாடகம். ஒருபோதுமே வராத ஒருவருக்காகக் காத்திருக்கும் இரண்டு பேர் பற்றியது.

"ஒன்றும் நடப்பதில்லை, ஒருவரும் வருவதில்லை, ஒருவரும் போவதில்லை, அதிசயந்தான் !" என்று கூறுகிறது இப்படைப்பு. வாழ்வின் சாரமும் அதுதான் என அதன்பொருள் தொனிக்கையில் எமக்கு அது அந்நியமாகப்படுவதில்லை.

இந்த நாடகத்தைத் தவிர, விழுகிற எல்லாம், மகிழ்ச்சியான நாட்கள், - போன்ற பல நாடகங்களையும், நாவல்களையும் பெக்கற் எழுதினார். அர்த்தங்களையும் சேதிகளையும் கூறுவதை விடுத்து அனுபவங்களையும் வாசகர்கட்குத் தொற்றவைக்கவே அவரது படைப்புக்கள் முயன்றன.

ஜேம்ஸ் ஜொய்ஸின் நண்பராகவும் விளங்கியவர் பெக்கற், பாரிசில் இருவரும் வசித்த நாட்களில் அவர்களிடையே நெருங்கிய நட்பு நிலவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25

சாமுவேல் பெக்கெற் பற்றிக் குறிப்பிடுகையில் 'அபத்த நாடகம்' பற்றிக் கூறாமலிருக்க முடியாது. இந்தப் பெயர் - அதாவது அபத்த நாடகம் என்பது-1961ல் தான், ஆங்கில விமர்சகரான எஸ்ஸின் என்பவரால் சூட்டடப்பட்டது. அயனெஸ்கோ, பெக்கெற், பின்ரர் - போன்றவர்களை எஸ்ஸின் இவ்வகைக்குட்படுத்தினார். பொதுவாகச் சொல்வதாயின், 'அபத்தம்' என்னும் போது, அது 'உயிர் வாழ்தல்' என்பதிலேயே ஒரு அடிப்படைக் கிண்டலைக் காண்கிறது; காட்டுகிறது.

பிரிட்டனின் மிக முக்கிய நாடகாசிரியர்களிலொருவரான ஹரோல்ட் பின்ரரின் நாடகங்கள் இதற்கு நல்ல உதாரணம். அவருடைய பாத்திரங்கள், வெகு இயல்பாகவே - இப்சனுடைய அல்லது சேகவுடைய பாத்திரங்கள் போலவே- பேசவோ, செயற்படவோ செய்கின்றன. •ஆனால் அவர்களின் நடத்தைகள் எந்த நோக்கத்தையுமே காட்டாதவையாக, புதிராக, அமைந்து விடுகின்றன. பின்ரருடைய மௌனசாட்சி இதற்கு நல்ல உதாரணம். பென், குஸ் - ஆகிய இருவர், நிலவறையொன்றில் தம் எசமானின் கட்டளைக்காகக் காத்திருக்கும் வேளையில் உரையாடத் தொடங்குகிறார்கள். அப் பேச்சுக்கள், நோக்கமோ அர்த்தமோ அற்று, நேரத்திற்கு நேரம் மாறிக் கொண்டுமிருக்கின்றன. மேலேயிருந்து ஒரு 'உயர்த்தி' இறங்கி வந்து நிற்கிறது எசமானின் கட்டளைகளோடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹறோல்ட் பின்ரர்

மேலே இருப்பது யார்? என்ன கட்டளைகள் வந்தன? இவர்களிருவரும் ஏவப்படுபவர்கள்; அடியாட்கள்; பணிந்து போகப் பழகிக் கொண்டவர்கள். இருந்தாற்போல ஒன்று நிகழ்கிறது. அது என்ன? ஏன் நிகழ்கிறது? எப்படி நிகழ்கிறது? பின்ரரின் எழுத்துக்களின் 'உண்மை' எவருக்கும் புரியாது பார்வையாளர் உட்பட. பின்ரருக்குங் கூட?

பின்ரர் பற்றிக் கூறுகையில் உடனே ஞாபகத்திற்கு வருகிறவரும், பல விதங்களில் பின்ரரிலிருந்து முற்றும் மாறுபட்டவருமானவர், பெர்ரோல்ற் பிரெக்ற். பிரெக்ற் ஒரு மார்க்சியர். அடிமட்ட மக்களோடு தம்மை இனங்காட்டிக் கொண்டவர். ஆனால் அவர் படைப்புகள் பிரச்சாரங்களாகவன்றி கலை வடிவங்களாயமைந்தன.

அவருடைய வீரத்தாய் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. இது, பிரெக்ற்றின் மிகச் சிறந்த படைப்பாக மட்டுமின்றி, இருபதாம் நூற்றாண்டின் முக்கியமான நாடகங்ளிலொன்றாகவும் கொள்ளப்படுகிறது. போரின் அனர்த்தங்களைக் கூறும் இந்நாடகம், 17ம் நூற்றாண்டை நிலைக்களனாய்க் கொண்டெழுதப்பட்டது. தம்முடைய தத்துவார்த்தமான 'விஞ்ஞான பூர்வமான மானுடநேயம்' என்பதன் மூலங்களை பிரெக்ற் அங்கு கண்டாரென்று படுகிறது.

தன்னுடைய விற்பனை வண்டியும், மூன்று பிள்ளைகளுமாய்; வியாபாரத்திற்காக இராணுவங்களைப் பின் தொடர்ந்து செல்லும் அன்னா ஃபியர்லிங்கின் முப்பதாண்டு காலப் போராட்ட வாழ்வையும், மூன்று பிள்ளைகளையும் இழக்க நேர்ந்த போதும் இழக்காத ஆன்மதிடத்தையும் கூறும் நாடகம் இது. ஒரு விதத்தில், கீதையின் தத்துவங்களை வாசகருள் கிளர்த்தும் படைப்பாகவும், பல இடங்களில் வீரத்தாய் அமைந்து விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

இருபதாம் நூற்றாண்டின் ஆங்கில இலக்கியத்தில் தவறாது குறிப்பிடப்பட வேண்டியவர்கள், டி.எச்.லோறன்ஸ், ஜோர்ஜ் ஓவெல், வேர்ஜினியா வூல்ஃப் மற்றும் கவிஞர்கள், ரி. எஸ். எலியட், டிலான் தோமஸ், ஓடன் - போன்றோராவர்.

தொகையிலும் தரத்திலும் மிக்க படைப்புக்களை அளித்த டி.எச்.லோறன்ஸ், நவீன இலக்கியத்தின் இலக்கணங்களை வகுத்தோரில் ஒருவராகக் கணிக்கப்படுபவர். அவருடைய சாட்டர்லி சீமாட்டியின் காதலன் என்ற நாவல் திரைப்படமாகவும் வெளியானதன் மூலம் இலக்கியவாதிகளுக்கப்பால்- பரந்த அளவிலும் - அவர் பெயர் பரவியிருந்தது. சாட்டர்லி சீமாட்டி, பெருஞ் சர்ச்சைகளைக் கிளப்பிய படைப்பு. பல நாடுகளில், பல காலம் தடைக்குள்ளாகியிருந்ததுடன் இங்கிலாந்தில் 'ஆபாச பிரசுரங்கள், சட்டத்தின்' கீழ் நடவடிக்கைக்கும் உள்ளானது. மேலோட்டமாக பார்வையில் இப்படைப்பின் இலக்கிய ஆழத்தை உணர்ந்து கொள்ளாமை காரணமாகத் தொடுக்கப்பட்ட வழக்கின் முடிவில், இப்படைப்பு 'குற்றமற்றது' என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டதானது இலக்கியவாதிகளுக்கு ஆறுதலும் மகிழ்ச்சியும் தரும் ஒன்றாக அமைந்தது. வழக்கு விவரங்களே பின்னர் தனியொரு நூலாக வெளியாகி, இந்நூலும் பெரும் வரவேற்பைப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் லொறன்ஸின் மெய்யான புகழும் பெருமையும் இவற்றில் தங்கியிருக்கவில்லை. 'உண்மையில், சாட்டர்லி சீமாட்டியின் காதலன் லோறன்ஸின் தரமற்ற படைப்புக்களிலொன்று' என்பார். ஏ.ஜே.கனகரத்னா. மகன்களும், காதலர்களும், வானவில், காதலிற் பெண்கள் போன்ற நாவல்களிலும் அவருடைய இலக்கிய நயம் வாய்ந்த கட்டுரை - பயண நூல்களிலும், எல்லாவற்றுக்கும் மேலாக 'குறுநாவல்' என்ற வடிவத்தில் அவர் படைத்தளித்த உன்னத ஆக்கங்களிலுமே அவரது திறமையும் பெருமையும் தங்கியுள்ளன. 'குறுநாவல்' வடிவத்திற்குப் புத்துயிரும் புதுத் தெம்புமளித்தவர் லோறன்ஸ் எனில் மிகையன்று.


டி.எச். லோறன்ஸ்

அவருடைய நரி, கன்னியும் நாடோடியும், இளவரசி, கப்ரினின் பொம்மை போன்ற குறுநாவல்கள் அந்தவகைப் படைப்புக்களுக்கே உதாரணமாயக் கொள்ளத்தக்கவை. லோறன்ஸ் புனைகதை ஆசிரியராக மட்டுமின்றி கவிஞராகவும் ஓவியராகவும் கூடத் திகழ்ந்தார். தொழிற்புரட்சியின் விளைவு பற்றிய பிரக்ஞையுடனேயே அவரது பெரும்பாலான படைப்புக்கள் உருப்பெற்றன என விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள். அதாவது விஞ்ஞான - தொழில் யுகமானது மனிதனை இயற்கையிலிருந்தும் அவனது உள்ளார்ந்த உணர்வுகளினின்றுங் கூட அந்நியமாக்கி விட்டது என அவர் உணர்ந்தார். இந்த இடைவெளிகள் நிரப்பப்பட வேண்டுமென்பதை அவரது படைப்புக்கள் உணர்த்தவும் முயன்றன.

ஜோர்ஜ் ஓர்வெல் ஆங்கில எழுத்தாளர்களில் மிக முக்கியமான ஒருவர். அவருடைய விலங்குப் பண்ணை மற்றும் 1984 ஆகிய நாவல்கள் அதிகம் பேசப்படுவன. 1984 நாவல், ஒரு கட்சி சர்வாதிகாரத்தின் பரவல் பற்றிய ஓர்வெல்லின் தீர்க்க தரிசனமான எச்சரிக்கை. 1949ல் வெளியான இந்நாவல், எழுபதுகளின் பிற்பகுதியில் 'முத்தண்ணா' என்பவரால் தமிழிற் பெயர்க்கப்பட்டு வெளியானதாகத் தெரிகிறது.

ருஷ்யப் புரட்சியின் பின் அமைந்த அரசு பின்னர் திசைமாறி அதிகாரப் போட்டியிலும் எதேச்சாதிகாரத்திலும் சிக்குண்டு, புரட்சியின் இலட்சியங்களையே மறந்து, மக்கள் விரோதப் போக்கில் செயற்படத் தொடங்கியதாக ஓர்வெல் உணர்ந்தார். அதனைக் கிண்டல் செய்து, விமர்சிப்பதாயமைந்தது, விலங்குப் பண்ணை என்ற சிறுநாவல். விலங்குகள் குறியீட்டுப் பாத்திரங்களாக வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜோர்ஜ் ஓர்வெல்

ஈசாப் கதைகள் பாணியில் நாவல் நகர்ந்தாலும் அது சொல்லும் சேதி மிகவும் தெளிவாகவே அமைகிறது.

ஓர்வெல், ஒரு சத்திய ஆவேசத்துடனேயே விலங்குப் பண்ணையை எழுதியிருக்க வேண்டும்; அவரது சரித்திரத்தைப் பார்த்தால் அது புரியும். எரிக் ப்ளெய்ர் என்ற இயற்பெயர் கொண்ட ஓர்வெல், 1903இல் கிழக்கு வங்காளத்தில் பிறந்தார். ஆங்கில சாம்ராஜ்யத்தின் ஓர் அடிநிலை அதிகாரியான தந்தையின் தொழில் காரணமாக, குடும்பம் இந்தியாவிலிருந்தது. என்றாலும், படிப்பிற்காக மகனைத் தாய்நாட்டிற்கே அனுப்பி வைத்தார் தந்தை. ஓர்வெல்லுக்கு அங்கு ஒத்து வரவில்லை. முற்றுமுழுதான ஆங்கிலேயமாக இருந்தும், இந்தியாவிலிருந்து போனதாலும், பொருளாதார ஏற்றத்தாழ்வு காரணமாகவும் அவர் அந்நியமாக உணர்ந்தார். இந்த அனுபவங்கள், அவரை உழைக்கும் வர்க்கத்தின்பாலும், அநீதிக்குள்ளானவர் பேரிலும் அனுதாபம் கொள்ளவைத்தன.

பின்னர் கல்லூரிப் படிப்பை மேற்கொள்ளாது, ஏகாதிபத்தியத்தின் காவல்துறையில் சேர்ந்து பர்மாவில் கடமையாற்றிய காலத்தில் இந்த நிலைப்பாடுகள் மேலும் வலுவுற்றன. வேலையை விட்டு இங்கிலாந்து திரும்பி, ஒரு தொழிலாளியாக வாழ்க்கை நடத்தலானார். ஒடுக்கப்பட்ட - போராடும் - மக்கள் பாலிருந்த ஈடுபாடு காரணமாக, ஸ்பானிய உள்நாட்டுப் போரிலும் கலந்து கொண்டு சர்வாதிகாரியின் படைகளுக்கெதிராகப் போரிட்டுக் காயமடைந்தார். இது நடந்தது 1936 இல். ருஷ்யாவின் புதிய, இளைய அரசின் மீது அன்பும் அபிமானமுங் கொண்டிருந்த ஓர்வெல், இந்த ஸ்பானியப் போரில் குடியரசுவாதிகளுக்கு ருஷ்ய ஆதரவு- எதிர்பார்த்ததுபோல்- கிடைக்காததில் ஏமாற்றமடைந்தார். புதிய சோவியத் அமைப்பானது, ஸ்தாலின் ஆட்சியின் கீழ் திசைமாறி, அடக்குமுறை அரசொன்றிற்கு இட்டுச் செல்வதாக அவர் உணர்ந்தார். இந்த நிலைப்பாட்டினடியாய் உருவானவையே மேற்சொன்ன இரு நாவல்களும்.

இவ்விரண்டையும்விட, அவரது செழுமையான அனுபவங்களின் விளைவாய், பர்மிய நாட்கள், பாரிசிலும் லண்டனிலும், கற்றலோனியாவிற்கு வணக்கம் ஆகிய படைப்புக்கள் உருவாகின. இவற்றில் ஈற்றில் குறிப்பிடப்பட்டது. ஓர்வெல்லின் மிகச் சிறந்த சாதனையாகப் பலராலும் கொள்ளப்படுகிறது. இதைத்தவிர,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைமயலலாம் ஆன்ந்தம் என்ற தலைப்பில் தமது அனுபவங்களையும் அவர் நூலாக்கினார். சோவியத் அரசின் போக்கை விமர்சித்தார் என்பதற்காக ஏகாதிபத்தியப் போக்கினை அவர் ஏற்றுக் கொண்டார் என்பதன்று. அமெரிக்க - பிரிட்டிஷ் அரசுகளையும் அவர் விமர்சிக்கவே செய்தார்.

ஓர்வெல்லின் கருத்துக்களுடன் முரண்பட்டவர்கள் கூட, அவர் தம் வாழ்விலும் எழுத்திலும் மனச்சாட்சிக்கு விசுவாசமாய் நடந்து கொண்டார் என்பதையும் மனிதகுல மேம்பாட்டிற்காகத் தம் கலையாற்றலையும் வாழ்வையும் அர்ப்பணித்தார் என்பதையும் கட்டாயம் ஏற்றுக் கொள்ளவே செய்வார்கள்.


வர்ஜினியா வூல்ஃப்

குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு பிரிட்டிஷ் படைப்பாளி, வேர்ஜினியா வூல்ஃப். சக எழுத்தாளரும் இலங்கை நிலைக்களனில், காட்டிலொரு கிராமம் என்ற நாவலை எழுதியவருமான லெனாட் வூல்ஃபின் மனைவி நாவலாசிரியையாக மட்டுமின்றிச் சிறந்த விமர்சகராவும் திகழ்ந்தவர். ஜேம்ஸ் ஜொய்ஸைப் போலவே நனவோடை உத்தியைக் கையாண்ட முன்னோடிகளில் ஒருவர். தமது விமர்சனக் கட்டுரைகளின் மூலம் நவீன புனைகதை இலக்கியத்திற்கு வரையறை வகுக்க முயன்றவர்.

1983ல் நோபல் பரிசைப்பெற்ற வில்லியம் கோல்டிங், ஒரு பிரிட்டிஷ் நாவலாசிரியர். 'பூச்சிகளின் இறைவன்' என்ற அவரது நாவல் பெரிதும் பேசப்படுவது. 'தெரியும் இருள்' என்ற அவரது இன்னொரு படைப்பு. ஒன்றின் மேல் ஒன்றாய் நிகழ்வுகளை அடுக்குவதன் மூலம் பார்வையைத் தீவிரமாக்கும் உத்தியைக் கையாள்வது.

இந்த நூற்றாண்டின் ஆங்கிலக் கவிஞர்களில் முதலிடம் வகிப்பவர் ரி.எஸ்.எலியட். 1948 இல் நோபல் பரிசு பெற்றவர். நவீன கவிதை முன்னோடியாகவும் மிக்வும் செல்வாக்குப் பெற்ற கவிஞராகவும் திகழ்ந்தவர்.

அவருடைய ஆரம்பகாலக் கவிதைகள் அந்நியமாதலையும், ஆன்மீக வறுமையையும் சுட்டி நின்றன. ப்றூஃப்றொக், வெறும் நிலம், வெற்று மனிதர், ஆகிய தொகுதிகள் அவை. ஆனால் இவற்றின் பிறகு விழித்துக் கொண்ட எலியட்டின் ஆன்மீக உணர்வு, அவருடைய பிற்காலக் கவிதைகளில் எதிரொலிக்கலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவில் பிறந்த எலியட், தமது 27 ஆவது வயதில் இங்கிலாந்தில் குடியேறி, பின்னர் அந்நாட்டுப் பிரஜையாகவே ஆனார். ஆங்கிலத் திருச்சபையில் சேர்ந்தபின் அவர் எழுதிய விபூதிப் புதன், அவநம்பிக்கையிலிருந்து நம்பிக்கைக்கும் விரக்தியிலிருந்து விசுவாசத்திற்கும் அவர் ஏற்றம் பெற்றதைக் காட்டுவது.


ரி.எஸ். எலியட்

முதலாம் உலகப் போரினைத் தொடர்ந்து வாழ்வு பற்றிய தம் கண்ணோட்டத்தை மாற்றிக் கொண்ட ஒரு தலைமுறைக் கவிஞர்களைச் சேர்ந்தவர் எலியட். நவீன வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடமுயன்றவர் அவர். கவிதையானது, உணர்வுகளை நேரடியாகக் கூறக்கூடாது என்பது அவர் கொள்கை. பதிலாக, படிமங்களைக் கவிஞன் தேர்வு செய்யும் முறைமையினூடாக, அவை வாசகருள் உணர்வுகளைத் தூண்ட வேண்டும் என அவர் நம்பினார்.

அமெரிக்காவில் பிறந்த எலியட் பிரிட்டனைத் தமது தாயகமாக்கினாரென்றால், பிரிட்டனில் பிறந்த ஒரு கவிஞர், அமெரிக்காவைத் தாயகமாக்கிக் கொண்டார். அவர் ஓடென். எலியட்டின் சமகாலத்தவர் மட்டுமன்றி, யீட்சுக்கும் எலியட்டுக்கும் அடுத்தாற்போல முக்கியத்துவம் வாய்ந்த நவீன காலக் கவிஞராகவும் மதிப்புப் பெறுபவர்.

ஓடெனில் வாழ்வும் ரசமானது. நாம் ஏற்கனவே பார்த்த ஜெர்மன் நாவலாசிரியரான தோமஸ் மானின் மகளை அவர் மணமுடித்தார். அதே- 37- ஆம்- ஆண்டில், ஸ்பானிய உள்நாட்டுப் போரில் ஜனநாயக சக்திகளுக்கு உதவுமுகமாக- ஓர்வெல் போலவே ஓடெனும் ஸ்பெயினுக்குப் போனார். இரண்டாண்டுகள் கழித்து அவர் அமெரிக்காவில் குடியேறினார். 'புலிட்ஸர்' பரிசும் பெற்றார். எலியட்டைப் போலவே ஓடெனும் ஆத்மீகத்திற்கு திரும்பியபின் அவரின் படைப்புக்கள் கனதி கொண்டு மிளிர்ந்ததாகக் கூறப்படுகிறது. இந்தத் தீவில், தற்காலிகமாக, அவதிக்காலம் - ஆகியன அவரின் பிரபலமான படைப்புக்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27

இருபதாம் நூற்றாண்டின் இன்னொரு முக்கிய இலக்கிய முனைப்பு, ஆசியர்களும் - குறிப்பாக இந்தியர், இலங்கையர் - ஆங்கிலத்தில் எழுத முன் வந்து வெற்றியும் பெற்றமையாகும். ஆங்கில இலக்கியப் படைப்புகள் மூலம் உலகின் கவனத்தை ஈர்த்த இந்தியர்கள் பலர். ரவீந்திரநாத் தாகூர், சரோஜினி நாயுடு, தோரு தத் எனத் தொடங்கிய இப்பரம்பரை இன்று வரை நீண்டு பரந்து செல்கிறது.



**ரவீந்திரநாத் தாகூர்**

மகாகவி ரவீந்திரநாத் தாகூர், இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஒரே இந்தியர். 1913ல் அவருக்கு இப்பரிசு கிடைத்தது. கவிஞராக மட்டுமின்றி, நாவலாசிரியராகவும் தம்மை இனங்காட்டியவர் தாகூர். அவருடைய கோரா, சுதேசி இயக்கத்தை அடிப்படையாய்க் கொண்டெழுந்த குறிப்பிடத்தக்க நாவல்களுள் ஒன்று.

வங்காள நாடகத்திலும் மறுமலர்ச்சியை உண்டு பண்ணியவர் தாகூர். அவருடைய சித்ரா, அஞ்சலகம், சண்டாளிகா, போன்றவை நன்கறியப்பட்ட நாடகங்கள். சண்டாளிகா, பௌத்த கர்ண பரம்பரைக் கதையொன்றை அடியொற்றி எழுந்த ஒரு நாட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம். 1933ல் கவியரசரால் வங்காளத்தில் எழுதப்பட்ட அந்நாடகம், பின்னர் அவராலேயே ஆங்கிலத்திலும் மொழி மாற்றம் செய்யப்பட்டது. ஆனந்த என்ற இளம் பௌத்தத் துறவிபால் ஈர்க்கப்படும் பிராகிருதி என்ற பெண்ணின் கதை அது.

இந்தோ ஆங்கில இலக்கியமும், ஆங்கிலோ இந்திய இலக்கியமும் வெவ்வேறானவை. ஆங்கில மொழியில் இந்தியர்களால் எழுதப்பட்டவை, முதலாவது வகை. ஆங்கிலேயர்களால் இந்தியாவைக் களமாக வைத்தெழுதப்பட்டவை இரண்டாவது.

ஆர்.கே.நாராயண், முல்க்ராஜ் ஆனந்த், ராஜாராவ் - மூவரும் இந்தோ - ஆங்கில நாவலின் மும்மூர்த்திகள் என்றழைக்கப்படுபவர்கள். உண்மையில் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு வெளிப்பாடாகவே இந்த எழுத்து முயற்சிகளும் இடம் பெற்றன எனக் கூறுவது தவறாகாது. இம் மூவருக்கும் முன்னவரெனக் குறிப்பிடத்தக்க கா.சி.வேங்கடரமணியின் முருகன் ஓர் உழவன், தேசபக்தன் கந்தன் ஆகிய நாவல்கள், இருபது - முப்பதுகளில் வெளியாகின. (இவை பின்னர் தமிழிலும் மொழி மாற்றம் பெற்றன)


ஆர்.கே. நாராயண்

ஆர்.கே.நாராயண், ஒப்பீட்டளவில் எம்மவர்க்கு அதிகம் அறிமுகமானவர். எளிய ஆங்கில நடையில் கலையழகு மிக்க நாவல்களையும் சிறுகதைகளையும் எழுதி, தென்னிந்திய வாழ்வை உலகுக்கு அறிமுகஞ் செய்தவர். 'மால்குடி' என்றொரு கற்பனையூரைச் சிருஷ்டித்து தம் படைப்புக்கள் மூலம் அதற்குச் சாகாவரமளித்தவர். சுவாமியும் நண்பர்களும், கலைப்பட்டதாரி, இருட்டறை, ஆங்கில ஆசிரியர், திரு.சம்பத், பொருளியல் நிபுணன், மகாத்மாவுக்காகக் காத்திருத்தல், வழிகாட்டி, மால்குடி ஆட்கொல்லி, இனிப்பு வியாபாரி, நாகராஜின் உலகம் போன்ற நாவல்களையும், கதைத் தொகுதிகள், கட்டுரைகள், பயணநூல்கள், வாழ்க்கை நினைவு போன்றவற்றையும் நாராயண் எழுதினார். கிரஹாம் கிறீன் போன்ற நாவலாசிரியர்களால் பாராட்டப்பட்டது மட்டுமின்றி, அவர்களுடன் ஒப்பிடப்படக் கூடியவர் எனவும் நாராயண் கருதப்படுகிறார்.

முல்க்ராஜ் ஆனந்த் எழுதிய தீண்டத்தகாதான், கூலி ஆகிய இரு நாவல்களும், அடிமட்ட மக்களின் வாழ்வைப் பிரதிபலித்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீண்டத்தகாதான், ஆனந்த்தின் முதல் நாவல். 1935ல் முதலில் வெளியானது. தீண்டாமை பற்றிய ஒரு துண்டுப் பிரசுரத்தை எழுதுமாறு மஹாத்மா காந்தி ஆனந்திடம் 1930ல் கேட்டுக்கொண்டமையே பின்னர் இந் நாவலாக உருப்பெற்றதாகக் கூறுவர். தீண்டாமை பற்றிய ஒரு தீர்க்கமான சமூக விமர்சனமாக இந்நாவல் அமைந்ததில் வியப்பில்லை. இந்திய மற்றும் மேற்கத்திய பாணி எழுத்துக்களை வெற்றிகரமாக இணைத்தவராகக் கொள்ளப்படும் ஆனந்த் தமது ஐம்பது ஆண்டு கால எழுத்துலக வாழ்வில், பத்திற்கும் மேற்பட்ட நாவல்கள், ஏறத்தாழ எழுபது சிறுகதைகள் போன்றவற்றை எழுதினார்.

ராஜாராவ், காந்தபுர, பாம்பும் கயிறும் ஆகிய இரு நாவல்களை எழுதினார். அவரது முதல் நாவலான காந்தபுர, காந்தியால் வழிநடத்தப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டம் தென்னிந்தியக் கிராமமொன்றில் எவ்வாறு இடம் பெறுகிறது என்பதைக் கிராமிய மணங்கமழ விபரிக்கிறது. உண்மையான கதை மாந்தர்கள், வரலாற்றுத் தலைவர்களுடன், புராண, இதிகாச பாத்திரங்களும் நாவலில் உலவுகிறார்கள். கடந்த காலம், நிகழ்காலத்துடன் பின்னிப்பிணைகிறது. சுதந்திரப் போராட்டத்துடன் மட்டும் நின்று விடாது சமூகத்தின் ஏனைய பிரச்சனைகளும், முரண்களுங் கூட நாவலில் இடம் பெறுகின்றன. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டியது நாவலின் மொழிநடை. கிராமிய மொழி நடையைப் பிரதிபலிக்கும் ஆங்கிலம் நாவலின் சிறப்பாயமைகிறது.

இந்தியாவில் அதன் சுதந்திரத்தையும், பிரிவினையையுமொட்டிய வேளையில் - இடம்பெற்ற இன, மதக் கலவரங்களினடியாகப் பிறந்த படைப்பிலக்கியம், குஷ்வந்த் சிங்கின், பாகிஸ்தானுக்குப் போகும் ரயில்.


குஷ்வந்த் சிங்

இந்நாவல், உடனடியாகவே பெருங்கவனத்தை ஈர்த்தது. பஞ்சாபி- முஸ்லிம் உறவுகள் பற்றி அது கூறிற்று. பிரிவினையையொட்டி, பாகிஸ்தானுக்குச் செல்ல நேர்ந்த மக்களின் நிலையையும், அதன் பின்னணிகளையும், பரிமாணங்களையும் சிங் இந்தச் சிறு நாவலில் அடக்குவதில் வெற்றி பெற்றார் என்றே கூற வேண்டும். சினிமாவாகவும் வெளியான இப்படைப்பு, 1998ல் கொழும்பில் இடம் பெற்ற திரைப்பட விழாவிலும் காட்டப்பட்டது. இலக்கியகர்த்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதிலும் பார்க்க, 'பத்திரிகையாளன்' என்பதே சிங்கின் முதன்மை அடையாளமாகும். புகழ்பெற்ற இல்லஸ்ரேட்டட் வீக்லி ஒஃப் இந்தியாவின் ஆசிரியராகவும் நீண்டகாலம் இருந்தவர் அவர்.

ஒரு பிடி சோறு நாவலை எழுதிய கமலா மார்க்கண்டேயா, நாவல்களுடன் நாடகங்களுமெழுதிய சாந்தாராமராவ், கவிஞராயும் நாடகாசிரியராயும் அறியப்பட்ட நிஸிம் எஸக்கியேல் போன்றோரும் ஆங்கில மூலம் இந்திய வாழ்வை வெளியுலகிற்கு அறிமுகஞ் செய்தனர். சுதந்திரத்திற்குப் பின் தோற்றம் பெற்ற இந்தோ ஆங்கில நாவலாசிரியர்களிடையே தனித்துவம் மிக்கவராகக் கருதப்படுவர் கமலா மார்க்கண்டேயா. முல்க் ராஜ் ஆனந்த், ராஜாராவ், ஆர்.கே.நாராயண் ஆகியோருக்கு அடுத்த படியில் வைத்தெண்ணப்படக்கூடியவர் தென்னிந்தியக் கிராமிய வாழ்வைச் சித்திரிப்பதாகப் புகழ் பெற்ற அவருடைய வலையில் வைத்த தேன் (இத்தலைப்பு கோல்றிட்ஜின் கவிதை வரியொன்றிலிருந்து எடுக்கப்பட்டது) நாவலின் மூலம் பரவலாக அறியப்பட்டவர். எனினும் இந் நாவலைப் படிக்கும் போது, அவருடைய சமூக அக்கறை தெளிவாகத் தென்பட்டாலும், அதில் தயாரிப்புத் தன்மை தெரிவதை மறுக்க இயலாது. ஒரு பிடி சோறு, இரு கன்னியர் போன்ற நாவல்களையும் கமலா மார்க்கண்டேயா எழுதியுள்ளார்.

குறிப்பிடத்தக்க இன்னொரு நாவலாசிரியை, அனித்தா தேசாய் ஆவார். ஏறத்தாழப் பத்து நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள்; சிறுவர் இலக்கியங்கள் எனப்படைத்த தேசாயின் மூன்று நாவல்கள் மூன்று ஆண்டுகளில் புக்கர் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டவை. அவற்றில் ஒன்றான காவலில் என்பது வட இந்தியப் பட்டினமொன்றில் வாழும் ஓர் கல்லூரி விரிவுரையாளரைப் பற்றியது. அண்மையில் இந்நாவல் திரைப்படமாக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தோ ஆங்கிலக் கவிஞர்களில் முன் வரிசையில் வைத்தெண்ணப்படும் நிஸிம் எஸக்கியேல், பம்பாயில் பிறந்தவர். யூதப் பாரம்பரியத்தைக் கொண்டவர். அவருடைய கவிதைகள் ஐந்து தொகுப்புகளாக வந்துள்ளன. அவற்றில், அதே பெயர், முழுமையுறா மனிதன், இரண்டும் மிகவும் அறியப்பட்டவை. அதே பெயர் தொகுப்பிலுள்ள தேளின் இரவு எஸக்கியேலுடைய புகழ் பெற்ற படைப்பு. தாயன்பின் பெருமையை தொனிப்பொருளாகக் கொண்டது. இந்தியா தான் எனது களம், அதிலிருந்து நான் விலகவில்லை என்று குறிப்பிட்ட எஸக்கியேலுடைய கவிதைப் பண்புகளுக்கும் எடுத்துக்காட்டாக அமைவது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏ.கே. ராமானுஜன்

பிரபல கவிஞரான ஏ.கே.ராமானுஜன் ஒரு தமிழர், கன்னட தேசத்திலும் பின்னர் பலகாலம் அமெரிக்காவிலும் வாழ்ந்து சில ஆண்டுகளுக்கு முன் மறைந்தார். தனித்துவம் வாய்ந்த ஆங்கில மொழிப் படைப்பாளியான அவரது கீதை ஓதும் ஹிந்து, இரண்டாவது பார்வை போன்ற தொகுதிகள் பெருவரவேற்பைப் பெற்றவை. கவிஞராக மட்டுமின்றி, அகநானூறு - புறநானூற்றுப் பாடல்களை ஆங்கிலத்தில் பெயர்த்தும் புகழ் பெற்றவர்.

'அவர்களுடைய 2000 ஆண்டு இலக்கிய வாழ்வில் சங்கப் பாடல்களுக்கு இணையான எழில் கொண்ட கவிதை ஏதும் தமிழர்கள் எழுதவில்லை. உலக இலக்கியத்தில் இவற்றிற்கீடான சாதனை மிகச்சிலவே'- என ராமானுஜன் எழுதியிருப்பதாக அறியமுடிகிறது. தமிழ், கன்னடம், ஆங்கிலம் - ஆகிய மூன்று மொழிக் கலாசாரங்களும் அவரது ஆளுமை உருவாக்கத்திற்குக் காரணிகளாயின. சிறிய விஷயங்களூடாகவும் பெரிய தரிசனங்களைக் காட்டவல்லன அவர் கவிதைகள். தெரு நாய்க்கொரு கல்வெட்டு, ஒரு சிறு தியாகம், சாவும் நல்ல குடிமகனும் போன்றவை நல்ல எடுத்துக்காட்டுகள்.

1966ல் வெளியான ராமானுஜனின் தொகுப்பில் இடம்பெற்ற ஆறு எனும் கவிதை, வைகை நதியை வைத்தெழுந்தது. ஆற்றின் வரட்சியை மட்டுமன்றிக் கவிஞர்களின் உணர்வு மற்றும் ஆத்மீக வரட்சியையும் குறிப்பிடும் ஆக்கமாகக் கொள்ளப்படுவது. நவீன தமிழ்க் கவிதையில் தனித்துவ ஆற்றல் அற்றுப் போனதையிட்டு இக்கவிதை அக்கறை கொள்கிறது என விமர்சகர் எம்.கே.நாயக் கூறுவது ஒப்புக்கொள்ளவியலாதது.

ஏ.கே.ராமானுஜனை இந்தியாவின் மிக முக்கிய ஆங்கிலக் கவிஞர்கள் இருவரில் ஒருவராகக் கருதுகிறார் விமர்சகர் சையத் அமானுதீன். அமானுதீன் குறிப்பிடும் அடுத்தவர், டொம் மொறாயஸ்.

டொம் மொறாயஸும் பம்பாயில் பிறந்தவர்தான். 1938ல். அவர் தந்தை, மிகவும் புகழ் பெற்ற பத்திரிகையாளரும் எழுத்தாளருமாகிய ப்றாங் மொறாயஸ். 12 வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கிய டொம்மின் முதலாவது தொகுப்பு, ஒரு தொடக்கம், இருபது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதிற்குள்ளாகவே வந்ததுடன் மேற்குலத்தின் கவனத்தையும் உடனடியாகவே பெற்றது. கவிதைத் தொகுப்புகள் நான்கும் உரைநடை நூல்கள் இருபதற்கு மேலும் எழுதியிருந்த போதும், மொறாயஸ் கவிஞராகவே கணிப்புப் பெறுகிறார். என் மகனின் தந்தை என்பது அவருடைய சுயசரிதை நூலின் பெயர். உலகின் எல்லா நாடுகளுக்குமே சென்றுவந்ததாகக் கூறும் அவருடைய சுயசரிதம் எனுங் கவிதை, ஒரு தொடக்கம் தொகுப்பில் உள்ளது. பட்டம் விடும் பையனாயிருந்த காலம் முதல், தனக்குத்தானே நிச்சயமற்றுத் தோன்றும் முதிர்ச்சி வந்த காலம் வரையான நிகழ்வுகளை அசாதாரண அடர்த்தியுடன், ஒன்றன் பின் ஒன்றான படிமங்களாய் படிப்போர் மனதில் தீட்டுவதில் வெற்றி பெறும் படைப்பு அது.



கமலாதாஸ்

ஆங்கிலத்தில் எழுதி உலகின் கவனத்தை ஈர்த்த இந்திய எழுத்தாளர்களுள் கமலாதாஸ் பெயர் மறக்கப்பட முடியாதது. தம்முடைய கவிதைகள் மூலமும், என்கதை என்ற நூல் மூலமும் பரவலாக அறியப்பட்டவர். என்கதை அவரது வாழ்க்கைச் சரித்திரம். நடைச்சித்திரங்களின் தொகுப்பு. பலத்த சர்ச்சைகளையும் பரபரப்புகளையும் - வெளியான வேளையில் ஏற்படுத்திற்று.

'வண்ணமயமான என் இளமை பின்னால் போய்விட்டது. எனது பானங்களைக் கவனயீனமாகக் கலந்தது போல எனது இன்பங்களையும் ஒருவேளை கவனயீனமாகக் கையாண்டு வாழ்வெனும் படுக்கையிலே அதை விரைந்து விரயமாக்கிவிட்டேனோ', என்கிற கழிவிரக்கம் கதையெங்கும் இழையோடுவதாகவே படுகிறது. கமலாதாஸ், தமது தாய் மொழியான மலையாளத்தில் சிறுகதைகளையும் எழுதினார். அக்கதைகள் பலவும் ஆங்கிலத்திலும் பெயர்க்கப்பட்டு, சந்தன மரங்கள் என்ற தொகுதியாக வெளியாகின. கலை நேர்த்தி மிக்க கதைகள் பல இத்தொகுப்பில் உள்ளன. கமலாதாஸின் ஆங்கிலக் கவிதைகள், கல்கத்தாவில் ஒரு கோடை, வழிவந்தோர் மற்றும் தேர்ந்த கவிதைகள் போன்ற தொகுதிகளாக வெளியாகின. கமலாதாஸ், சில ஆண்டுகட்கு முன்னால் இஸ்லாத்தைத் தழுவி, தம் பெயரையும் மாற்றிக் கொண்டார்.

தம்முடைய 'சாத்தானின் கவிதைகள்' நாவல் உருவாக்கிய புயல் காரணமாக உலகின் கவனத்தை ஈர்த்தவர் ஸல்மான் ருஷ்டி. 1989இல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சல்மான் ருஷ்டி

இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் விருதுகளை வென்ற இந்நாவல், முஸ்லிம்களுடைய மத உணர்வுகளைப் புண்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஈரானின் ஆன்மீகத் தலைவரினால் ருஷ்டிக்கு மரணதண்டனையும் விதிக்கப்பட்டது. தண்டனைக்குத் தப்பி வாழ்கின்ற நிர்ப்பந்தத்தினிடையிலும் ருஷ்டி தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. ருஷ்டியின் இன்னொரு புகழ்பெற்ற படைப்பு 'நள்ளிரவின் பிள்ளைகள்' முதலில் புக்கர் பரிசும், பின்னர் 25 ஆண்டுகள் அப்பரிசினைப் பெற்ற படைப்புகளுள் சிறந்ததாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது இந்நாவல்.

இவ்விரண்டையும் விட வேறு மூன்று நாவல்களையும், 'கிழக்கு மேற்கு' என்ற கதைத் தொகுதியையும், கட்டுரைகளையும் ருஷ்டி வெளியிட்டுள்ளார். அவருடைய படைப்புக்கள் ஏறத்தாழ இருபத்தைந்து மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

சிறிய விஷயங்களின் கடவுள் என்ற தமது நாவல் 97இல் 'புக்கர்' பரிசை வென்றதனால், ஒரேநாளில் புகழ் பெற்ற எழுத்தாளரானவர் அருந்ததிராய். 'அயமனம்' என்கிற கேரளக் கிராமமொன்றில் நடைபெறுகின்ற கதை. சாதிக் கொடுமை, பெண்ணடிமை, நிறுவனமயப்படுத்தப்பட்ட இடதுசாரிகளின் எல்லைப்பாடுகள், குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகம் - என்ற பல்வேறு விஷயங்களை அருந்ததி இந்நாவலில் கையாள்கிறார். ஆனால், எதுவுமே துருத்திக் கொண்டோ பிரசாரவாடை வீசிக் கொண்டோ நிற்காமல் இயல்பான கதையோட்டத்துடன் கலந்து கலைவடிவம் பெற்றுள்ளன. இதிற்குறிப்பிட வேண்டிய இன்னுமொன்று, ஆசிரியையின் ஆங்கிலமொழி நடை. புதுமையும் தனித்துவமும் கலந்த அந்த நடையும் அக்கதையின் தொனிப் பொருட்கள் போலவே, விமர்சனங்களை எதிர்நோக்கிற்று.


அருந்ததிரோய்

அருந்ததிரோய், தொழிலால் கட்டடக் கலைஞர். சிறிய விஷயங்களின் கடவுள் அவருடைய முதல் நாவல். ஆனால், முதற்படைப்பென்று கூற முடியாத முதிர்ச்சி நாவலில் பளிச்சிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28

**1997ல்** அருந்ததிரோய் அதனைப் பெற்றதன் பின்பே, புக்கர் பரிசுபற்றி இந்திய மற்றும் தமிழ் வாசகர்கள் அக்கறையும் அறிவுங் கொண்டார்களெனினும் அப்பரிசு 1969ல் இருந்து வழங்கப்பட்டு வருகிறது.

புக்கர் மக் கொன்னல் நிறுவனத்தால் உபகரிக்கப்பட்டு ஐக்கிய ராச்சியத்தின் தேசியப் புத்தகக் கழகத்தால் வழங்கப்படும் இப்பரிசு, ஒவ்வோராண்டும் ஐக்கிய ராச்சியம் மற்றும் பொதுநலவாய நாடுகளில் இருந்து வெளியாகும். சிறந்த முழு நீள நாவலுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் பெறுமதி இருபதினாயிரம் பவுண்கள்.

1971ல் அதைப் பெற்ற வி.எஸ்.நைபோல், 1974ல் பெற்ற நடீன் கோர்டிமர், 1981ல் பெற்ற ஸல்மான் ருஷ்டி, 1983லும் 1999லுமாக இருதடவைகள் அதனை வென்ற ஜே.எம்.கோயற்ஸி, 1991ல் பெற்ற பென் ஓக்ரி, 1989ல் பெற்ற கஷுவோ இஷிகுரோ ஆகியோர் பற்றித்தான் இக்கட்டுரைத்தொடரில் இதுவரை பார்த்தோம். 1975ல் அப்பரிசை வென்ற றுத் புரோவர் ஜாப்வாலா, 1992ல் பெற்ற மைக்கல் ஒண்டாஜே, 1992ல் ஒண்டா ஜேயுடன் அதனைப் பகிர்ந்து கொண்ட பாரி அன்ஸ்வேத், 1995ல் பெற்ற பற் பார்க்கர் ஆகியோரின் படைப்புக்களும் படிக்கக் கிட்டின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாப்வாலாவின் சூடும் புழுதியும் என்ற நாவலுக்குத்தான் புக்கர் பரிசு கிட்டியது. எனினும் எனக்கு எட்டியது 'ஒரு பிற்போக்கான இடம்' என்ற படைப்பு. இந்தியாவைக் களமாய்க் கொண்ட கதை. ஜாப்வாலாவின் பெயரும் இந்தியப் பெயராய் ஒலிக்கிறது. எனினும் அவர், போலிஷ் பெற்றோர்க்கு ஜெர்மனியில் பிறந்தவர் என்றறிய முடிகிறது. பல நாவல்களுடன், நான்கு கதைத்தொகுதிகளும், பல நாடகங்களும், திரைச்சுவடிகளையும் கூட அவர் எழுதியிருப்பதாகவும் தெரிகிறது.

பாரி அன்ஸ்வேத்தின் 'புனிதப் பசி' தான், ஒண்டாஜேயின் 'ஆங்கில நோயாளி' யுடன் பரிசைப்பகிர்ந்த நாவல்.

பதினெட்டாம் நுற்றாண்டின் அடிமைத்தனத்தைப் பற்றிய கதை. முழுவதும் கப்பல் ஒன்றிலேயே நடந்து முடிகிறது.. நாவல் நீண்டு செல்வதால் படித்து முடிக்கவும் நிறையப் பொறுமை தேவைப்படுகிறது. பத்துக்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியவர் பாரி.

பிசாசுப் பாதை என்பது, பற் பார்க்கரின் நாவலின் பெயர். முதலாம் உலகப்போரின் அவலங்களை மையமாக வைத்தெழுந்தது. எத்தனை புத்தகங்கள்தாம் எழுதப்பட்டாலும், போரின் அவலங்களை அவை எவையுமே முழுதாகக் காட்டி விட முடியாதென எண்ண வைக்கிற நாவல், பார்க்கரின் புகழ்பெற்ற 'முந்நாவல்' வரிசையில் ஒன்று இது. மற்றிரண்டும் மீளுருவாக்கம், கதவிலொரு கண் என்பன. வாசிப்பைப் பொறுத்தளவில் இதற்கு முன்குறிப்பிட்ட புனிதப்பசிக்கு மாறானது - நீளம் குறைவு, விறுவிறுப்பு அதிகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29

இந்தியாவைப்போலவே, பாகிஸ்தான் மற்றும் மலேசியாவில் இருந்துங்கூட ஆங்கில மொழி மூலமான படைப்பாளிகள் உலகிற்கு அறிமுகமாகி இருந்தார்கள்.

பாகிஸ்தானில் பிறந்து அமெரிக்காவில் வசிப்பவரும், ஆங்கிலத்தில் கவிதை, புனைகதை, விமர்சனம் ஆகியவற்றை எழுதுபவருமான ஸுல்ஃபிகார் கோஸ் ஆங்கிலேய மற்றும் அமெரிக்க எழுத்தாளர்கள் பலரையேகூட மிஞ்சக் கூடியவரெனப் போற்றப்படுகிறார். ஐந்திற்கு மேற்பட்ட கவிதைத் தொகுதிகள், பத்திற்கு மேற்பட்ட புனைகதை ஆக்கங்கள் ஆகியவற்றை அவர் படைத்துள்ளார்.

தம் இளம் பிராயத்தின் முதல் பதினேழு ஆண்டுகளை இந்தியாவில் கழித்து அதன் பின் இங்கிலாந்தில் குடியேறியதும், புது மண்ணில் வேர் விடுவதிலும் புதிய சூழலோடு இயைவு கொள்வதிலும் எதிர் கொள்ளும் தயக்கங்கள் பற்றி, இக்காட்சி, இம்மக்கள் என்ற தமது கவிதையில் கோஸ் கூறுகிறார். இப்பிரச்சினை புலம் பெயர்கிற எவருக்கும் பொதுவானதாகவே படுகிறது. பம்பாயின் வெள்ளிக்கடற்கரையில் நீந்தி, வானிலிருந்து தேங்காய் பறித்தவருக்கு, கண்ணாடிப்பெட்டியில் வைத்த ஒரு காட்சிப் பொருளாகவே இங்கிலாந்து முதலிற் படுகிறது. இந்த ஒட்டாமை அவரைத் தொடர்வதோ எனும் ஐயத்தைப் பின்னர் வெளியான அவரது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயசரிதையின் தலைப்பான ஒரு சுதேச அந்நியனின் ஒப்புதல்கள் என்பதுவும் எழுப்பியபோதிலும் கோஸ் தம் கவிதையிற் காட்டும் முடிவு யதார்த்தமானதே.

சிசில் ராஜேந்திரா மலேசியாவின் பினாங் நகரில் பிறந்தவர். பல நாடுகளில் அறியப்பட்ட கவிஞர். தமது லண்டன் வாழ்வின் போது கறுப்புக் குரல்கள் என்ற பெயரில், மூன்றாம் உலகின் பண்பாட்டு அமைப்பு ஒன்றினை நிறுவிச் செயற்பட்டார். அகதிகளும் அவநம்பிக்கைகளும், கரு, மற்றக் குரல்கள் - மற்ற இடங்கள் போன்ற தொகுதிகளாக அவர் கவிதைகள் வெளிவந்தன.

அகதிகளும் அவநம்பிக்கைகளும் தொகுதி, 'யசுநாரிக்கு' என சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இது நாம் ஏற்கனவே பார்த்த ஜப்பானிய இலக்கிய மேதை யசுநாரி கவபட்டா என்றே கருத இடமுண்டு. ஹிந்து மற்றும் சீனப் பாரம்பரிய சிந்தனை மரபுகளுக்கூடாகத் தோற்றம் பெற்றாலும், ராஜேந்திராவின் கவிதைகள் சமகால உலக நிலவரங்கள் பற்றிய விமர்சனப் பார்வை நிரம்பியவை. அநீதிகளின் பால் கோபமும், பாதிக்கப்பட்டவர்கள் பால் பரிவும் அவர் கவிதைகளில் தெரிகின்றன. எழுபதுகளின் துன்பியல் நிகழ்வான வியட்நாம் அகதிகள் பிரச்சினை பற்றி, அகதி என்ற கவிதை இவ்வாறு கூறுகிறது.

..........................................

*சிங்கப்பூரிலிருந்து ஸ்ரொக்ஹோம் வரை*
*லண்டனிலிருந்து பேர்லின் வரை*
*இறுக மூடிய உதடுகளையே*
*நான் கண்டேன்*
*நீட்டிய என் கரம்*
*கண்டு கனன்றன கண்கள்*
*நானொரு அந்நியன்*
*என் சொந்த மண்ணிலேயே.*
*அகதிகளைச் சுடுகிறார்களாம்,*
*இல்லையா?*



சிசில்
ராஜேந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30

**நா**ட்டுப் பிரிவினை, அதையொட்டி எழுந்த இனக்கலவரத்தின் பயங்கரம் - இவற்றை வைத்துப் பார்க்கையில், சுதந்திரத்திற்காக இந்தியா கொடுத்த விலை அதிகமென்று தான் கூறவேண்டும். மற்றெந்தப் பகுதியிலும் பார்க்க அதிகம் பாதிக்கப்பட்டது பஞ்சாப்தான். இந்துக்கள், சீக்கியர், முஸ்லீம்கள் - என்று எல்லா இனத்தவரும் பாதிக்கப்படவே செய்தனர். இந்தப் பாதிப்புகள் - சகல இனத்தையும் சார்ந்த - நுண்ணுணர்வாளர்களையும் விட்டு வைக்கவில்லை. இதன் பயனாய்ப் பல இலக்கியங்களும் உருவெடுத்தன. முன்னர் குறிப்பிடப்பட்ட குஷ்வந்த்சிங்கின் பாகிஸ்தானுக்குப் போகும் ரயில், அவற்றுள் ஒன்று. அதேயளவு முக்கியத்துவம் பெற்ற இன்னொரு நாவல் கர்த்தார் சிங் துக்கல் எழுதிய நகமும் சதையும்.

குஷ்வந்த் சிங் போல ஆங்கிலத்தில் எழுதாமல் தம் தாய்மொழியான பஞ்சாபியில் எழுதியவர் துக்கல். தம்முடைய இந்த நாவலில், தாம் ஒரு பஞ்சாபி என்பதற்கப்பால், ஒரு மானுடநேயமிக்க படைப்பாளியாக நின்று அந்தத் துரதிருஷ்டமிகுந்த காலகட்டத்தையும் சம்பவங்களையும் கலைப்படைப்பாக்கினார், துக்கல். அந்த நிலைமைகளின் தீவிரத்தின் "கீழும் மனிதாபிமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு மரிக்காமல் நின்று சுடர் விட்டது என்பதைத் தமது நாவலில் கூறினார். தம் கிராமத்திலிருந்த சீக்கியரையும் இந்துக்களையும் காப்பதற்காகத்தான் உயிரைத் தியாகம் செய்கின்ற ஒரு முஸ்லிம். அந்த மனிதருக்கு நன்றிக்கடன் தீர்க்க விழைகிற ஒரு **சீக்கியர்**- என இந்த நாவலில் வருகிற பாத்திரங்கள் உண்மைச் சம்பவங்களினடியாய் உருக்கொண்டவர்கள் என்பது ஒப்புக் கொள்ளச் சிரமமான ஒன்றன்று.



கர்தார் சிங் துக்கல்

ராவல்பிண்டிக்கருகில் பிறந்து வளர்ந்து லாகூரில் கல்வி கற்ற துக்கல், **பிரிவினையுடன்** இந்தியப் பகுதிக்குக் குடி பெயர்ந்தார். ஆங்கில இலக்கியத்திலும் நாட்டாரிலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டிருந்த அவர், ஆல் இந்தியா ரேடியோவில் பணியாற்றினார். பதினாறு கதைத் தொகுதிகள், ஆறு நாவல்கள், நாடகங்கள், கவிதைகள் என - எல்லாம் பஞ்சாபி மொழியிலேயே - எழுதிய துக்கலின் படைப்புகள் உர்து, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன நாவலைத்தவிர அணையிட்ட தீ எனும் அவரது கதைத் தொகுப்பொன்றும் ஆங்கிலத்தில் வெளியாகியுள்ளது. பஞ்சாபி மக்களின் வாழ்முறை, பண்பாடு, பரபரப்பான அரசியல் - என்றெல்லாவற்றையும் பதிவு செய்கின்ற கதைகள் அவை. எளிமையான கருப்பொருட்களூடு, மிகவும் சிறிய வடிவத்தில் இவை எல்லாவற்றையும் எம்மால் பரிச்சயம் கொள்ள முடிகிறது.

பாகிஸ்தானுக்குச் சேர்மதியாகிவிட்ட புறத்திலிருந்து இந்திய எல்லைக்குள் வந்த சீக்கிய எழுத்தாளர் துக்கல் என்றால், இந்தியாவுக்குச் சேர்ந்து விட்ட பகுதியிலிருந்து புதிய பாகிஸ்தானில் போய்க் குடியேறிவிட்ட அற்புதமான முஸ்லிம் எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவர் சாதத் ஹஸன் மண்டோ. மெய்சிலிர்க்க வைக்கும் சிறுகதைகளைப் படைத்த மேதை.

பஞ்சாபின் லூதியானா மாவட்டத்தில் 1912 இல் பிறந்த மண்டோ, தம் வாழ்வின் முக்கியமான பகுதியை பம்பாயில் கழித்தார். 1948 ஜனவரியில் பாகிஸ்தானுக்குக் குடி பெயர்ந்தார். துக்கல் போலவே மண்டோவும் ஆல் இந்தியா ரேடியோவுக்காகப் பணியாற்றினார். பம்பாயில் வாழ்ந்த காலத்தில் திரையுலகுடன் நெருங்கிய தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தது மட்டுமன்றி, பல திரைப்படங்களுக்கான கதைகளையும் எழுதினார். அவருடைய படைப்புகளில் 'ஆபாசமிருந்தது' என்ற குற்றச்சாட்டின் பேரில் மண்டோ, ஆறு தடவைகள் விசாரணைகளை எதிர் நோக்க வேண்டியும் வந்தது. அவருடைய மகத்தான சிறுகதைகளாகக் கொள்ளப்படும் ஐஸிலும் குளிரானது, மற்றும் 'திரும்புதல்' ஆகியுவை கூட பாகிஸ்தானிய அதிகாரிகளால் ஆபாசம் எனக் கருதப்பட்டன. 1955இல் லாகூரில் காலமான மண்டோவின் வாழ்வின் இறுதி ஏழு ஆண்டுகளிலுமே அவரது படைப்பாற்றல் உச்சம் பெற்றிருந்தது எனக் கூறப்படுகிறது.

இருநூற்றுறைம்பதிற்கு மேற்பட்ட கதைகள், பல நாடகங்கள், கட்டுரைகள் போன்றவற்றையும் எழுதி, பத்திரிகையாளர், வானொலி-திரைப்பட எழுத்தாளர் என்றெல்லாங் கூட பன்முக அடையாளங் கொண்டவராகத் திகழ்ந்திருந்த போதிலும், மண்டோவை இலக்கிய உலகில் சிரஞ்சீவியாக ஆக்கி வைத்திருக்கும் பெருமை அவரது அற்புதமான சிறுகதைகளுக்கும் குறுங்கதைகளுக்குமே உரியது. மண்டோ, தமது ஆக்கங்களை உர்து மொழியிலேயே படைத்தார். அவற்றுள் முக்கியமானவை ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. நவீன இந்திய சிறுகதையைப் பொறுத்தளவில் ஒப்பாரும் மிக்காருமில்லாத ஒருவர், மண்டோ - என்றார், ஸல்மான் ருஷ்டி.


சாதத் ஹஸன் மண்டோ

மண்டோவின் குறுங்கதைகளுக்கு உதாரணமாகப் பின்வரும் இருகதைகளைக் காணலாம். பிரிவினையையொட்டி எழுந்த பயங்கர இனக்கலவரத்தைப் பின்னணியாகக் கொண்டவையே இவ்விரண்டும்.

## மிஷ்ரேக்

*வயிற்றைக் கீறிப்பிளந்த கத்தி, நட்ட நடுவே நேராக வந்தது. வந்த வரத்தில், கீழே இறங்கி, அந்த ஆள் போட்டிருந்த பிஜாமாவைக் கட்டியிருந்த கயிற்றையும் அறுத்துவிட்டது.*

*கத்தியுடன் நின்றவன் ஒரு தரம் சரியாகக் கவனித்து விட்டுக் கத்தினான் 'அட, சே! மிஷ்ரேக்'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'என்ன நன்றிகெட்ட சனமடா, இது? எவ்வளவு கஷ்டப்பட்டு ஐம்பது பன்றிகளை இந்த மசூதிக்கு முன்னாலை வைச்சு வெட்டினேன்? வாங்கிறதுக்கு ஒரு பயலாவது வாறானா, பார்? அந்தப்பக்கம், ஒவ்வொரு கோவிலுக்கும் முன்னாலை மாட்டிறைச்சி வாங்கிறதுக்கு எவ்வளவு சனம் கியூவிலை நிற்குது தெரியுமா?'*

மண்டோ பற்றிக் குறிப்பிடுகையில், பிரேம்சந்த் நினைவில் வருவது தவிர்க்க முடியாதது. உர்துவிலும் இந்தியிலும் எழுதியபோதும், நவீன இந்திமொழிப் புனைகதை முன்னோடி எனவே பிரேம்சந்த இன்றும் அடையாளம் பெறுகிறார். ருபாப்ராய் என்ற இயற்பெயர் கொண்ட பிரேம்சந்த், இந்தி நாவல் இலக்கியத்திற்குப் புதுத்தென்பும் புத்துயிருமளித்தவர். அவருக்கு முற்பட்ட இந்தி நாவல்கள், மண்ணில் காலூன்றாமல் கதை சொல்லிச் சென்றன. இந் நிலையில் அவருடைய கோதான் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. பிரேம்சந்தின் சிறுகதைகளும் அவருடைய நாவல்துறைப் பங்களிப்புக்குச் சற்றும் குறைந்தவையல்ல. சிறுகதைக்கு இலக்கணமாகக் கொள்ளப்பட்ட பல கதைகளை பிரேம்சந்த் எழுதினார்.

சமூகப் பொறுப்புணர்வுடன் ஆக்கப்பட்ட படைப்புகள் அவை. நாட்டின் அன்றைய சமூக, பொருளாதார நிலைமைகளை உயிரோட்டத்துடன் படம் பிடிக்க முற்பட்டமையுடன் அமையாது. பிரச்சினைகளுக்குத் தீர்வைச் சுட்டவும் அவை முனைந்தன. பிரேம்சந்த் வெறும் எழுத்துடன் மட்டும் நின்றவரல்லர். காந்திஜியின் ஒத்துழையாமை இயக்க அறைகூவலுக்குச் செவிசாய்த்து, பாடசாலைப் பரிசோதகர் என்ற தமது அரசு உத்தியோகத்தைத் துறந்தவர்.

இந்தியாவின் நவீன இலக்கியத்தில் பரிசோதனை முயற்சிகளைச் செய்து பார்த்தவராகக் குறிப்பிடப்படுபவர். 'ஆக்யேய' என்ற புனைபெயரைக் கொண்டிருந்த சச்சிதானந்த வாத்ஸ்யாயன். இந்தி இலக்கியத்தில் இரண்டு தசாப்தங்கட்கு மேல் பெரும் செல்வாக்குச் செலுத்தியவர் இவர். நாவல்களும், கவிதைகளுமாக, இருபதுக்கும் மேற்பட்ட நூல்களாக அவரது ஆக்கங்கள் வெளியாயின. அவரவர் அந்நியர் என்ற ஆக்யேயவின் சிறிய நாவல், இருத்தல், இறப்பு, இறைவன், போன்ற விஷயங்களைப் பேசுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இந்தி எழுத்தாளர் தலைமுறையைச் சார்ந்தவர்கள், ஸ்ரீகாந்தவர்மா, ஸ்ரீலால் சுக்ல போன்றோர். இவர்களில் பின்னவர் எழுதிய தர்பாரிராகம் என்ற நாவல், பிந்தியகால இந்திமொழி நாவல்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகக் கருதப்பட்டு - தமிழ் உட்பட இந்திய மொழிகள் யாவற்றிலும் 'நேஷனல் புக்ட்ரஸ்ட்-இந்தியா' வால் வெளியிடப்பட்டது. நகரங்களிலும், கிராமங்களிலும் அரசியலும் ஏனைய சந்தடிகளும் ஏற்படுத்தும் குழப்பங்களை அங்கதச்சுவையுடன் கூறும் படைப்பு இது.

அதிகம் அறியப்பட்டிராத ஒரு உர்து எழுத்தாளர் இஸ்மத் சுக்தாய். 1915லிருந்து 1991 வரை வாழ்ந்திருந்த இவர். இந்தியாவிலேயே முதன்முதலில் BA பட்டமும் ஆசிரியர் பட்டமும் பெற்ற முஸ்லிம் பெண்மணி என்ற பெருமைக்குமுரியவர்.

தமது 26வது வயதில் அவரெழுதிய பஞ்சடைத்த விரிப்பு எனும் நாவல் புரட்சிகரமான கதையம்சங் கொண்டது. ஓரிரு ஆண்டுகட்கு முன் பரபரப்பினை உண்டுபண்ணிய 'நெருப்பு' படத்தினது போன்ற ஒருகதை அது. 'ஆபாசம் எழுதினார்' என்ற குற்றச்சாட்டில் இரண்டாண்டுகள் வழக்கு நடந்தது! தமது கணவரான சினிமா இயக்குனர் ஷாகீட் லத்தீஃப் அவர்களுடன் சேர்ந்து ஆறுபடங்களையும் பின்னர் தனியாக ஆறு படங்களையும் இயக்கினார். இலக்கியத்திற்கான 'இக்பால் விரு'தினை 1989ல் பெற்றார். அவருடைய சிக்கிய கயிறு, இந்தியா ஏகாதிபத்தியத்திலிருந்து சுதந்திரத்தை நோக்கி நடந்து கொண்டிருந்த காலத்தில் வளர்ந்து கொண்டிருந்த ஒரு இளம் பெண்ணைப் பற்றியது.

இஸ்மத்தைப் போன்ற இன்னொருவர் அல்தாஃப் ஃபத்திமா, பெண்கள் என்பதை விட, இருவருமே உர்துவில் எழுதினர் என்பதும், இந்தியாவில் பிறந்து பிரிவினையின் பின் பாகிஸ்தானியராகினர் என்பதும் அவர்களிடையே பொதுவானது. ஃபத்திமாவின் கேட்காத ஒருவர் நாவலும் அநேகமாக சிக்கிய கயிற்றை ஒத்ததே.

வங்காளத்தைப் பொறுத்தளவில், 19ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தே வங்காளி இலக்கியத்தில் நாவல்களின் செல்வாக்கும் ஆரம்பமாகிவிட்டது. பங்கிம் சந்திரர் காலத்து நாவல்களை, மேலும் பல படிகள் முன்னெடுத்தவர் சரத் சந்திரர். 20ம நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவர் கையாண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பொருள்கள் அக்காலத்தைப் பொறுத்தளவில் - மிக மிகப் புரட்சிகரமானவையாகவே அமைந்தன. எண்ணிக்கையில் மட்டுமன்றி, தரத்திலும் கூடிய பல நாவல்களை எழுதியவர் சரத் சந்திரர்.

இவர்களைத் தொடர்ந்து வந்த தாராசங்கர் பானர்ஜி, விபூதி பூஷண், மாணிக் பந்தோபாத்யாய போன்றோர் வங்காளி இலக்கியத்தின் - குறிப்பாக நாவலின் - வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர்களாவர். இந்த இலக்கிய மேதைகளின் படைப்புகள் பலவும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், இருபதாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்திலிருந்து ஆறாம் தசாப்தம் வரையான தமிழ் வாசகர்களிலும், எழுத்தாளர்களிலும் பெரும் செல்வாக்குச் செலுத்தின எனக் கூறுவதும் மிகையாகாது.

இந்த வரிசையில், எண்பதுகளின் தொடக்கத்தில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு - இந்தியன் நேஷனல் புக் ட்ரஸ்ட்டால் - வெளியிடப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க நாவல், நீலகண்டப் பறவையைத் தேடி. இதை எழுதியவர், அதீன் பந்தோபாத்யாய. முதலில் 'கிழக்குப் பாகிஸ்தான்' ஆகவும் பின்னர் 'பங்களாதேஷ்' ஆகவும் ஆகிவிட்ட கிழக்கு வங்காளத்தில் பிறந்தவர் அதீன். இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து இந்தியராகவே தொடர்ந்திருந்தபோதும் அவருடைய இளமை நினைவுகளின் களமாகிவிட்ட கிழக்கு வங்கமே இந்நாவலின் களமுமாய் அமைந்தது.

இந்நாவலின் அத்தியாயங்கள் பல, தனிச் சிறுகதைகளாகவே முதலில் உருப்பெற்றவை. நாவலின் தொனிப் பொருளும் - இது போன்ற ஒரு - பல்நோக்குக் கொண்டது. சுதேசி இயக்கம், இன வேற்றுமைகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், என்று பலவற்றை அது தொட்டுச் செல்கிறது. இயற்கையிலிருந்து பிரிக்கப்பட முடியாத ஒரு வாழ்வையும் சூழலையும் கொண்டு நகர்கிறது. மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையில் அலைவு கொள்ளும் நீலகண்டப் பறவை இந்நாவலில் ஒரு குறியீடாகவே அமைகிறது. நாட்டு, மத எல்லைகளுக்கப்பால் - இன்னொரு வங்காளியான - 'வங்க பந்து' என்றழைக்கப்படும் - ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கு சமர்ப்பிக்கப்பட்ட படைப்பு இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31

இந்திய மொழி இலக்கியங்களில், மலையாள மொழி இலக்கியங்கள் முன்னே நிற்கின்றன என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. நவீன மலையாள இலக்கிய மலர்ச்சி, இந்நூற்றாண்டின் ஆரம்பத்துடன் தொடங்கிற்று. மலையாள இலக்கியத்தின் மகா கவிகள் எனப் போற்றப்படும் குமாரன் ஆசான், வள்ளத்தோள் இருவரும் கவிதை வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள். இவர்களுடன் மூன்றாமவராக, உள்ளுர் பரமேஸ்வர ஐயரும் - இவர் பிறப்பால் தமிழர் - கணிக்கப்படுகிறார். இவர்களைத் தொடர்ந்து, பாரதீய ஞானபீடப் பரிசை முதலில் பெற்றவரான ஜி.சங்கரக்குரூப், சங்கம் புழை (கிருஷ்ணபிள்ளை), வயலார் (ராமவர்மா), ஓ.என்.வி.குரூப், பாஸ்கரன், சுகதகுமாரி, கிருஷ்ண வாரியார், எம்.கோவிந்தன், ஐயப்பப்பணிக்கர் - என ஒரு நீண்ட பரம்பரை உருவானது. மலையாளக் கவிதைகள் தமிழ் மொழிபெயர்ப்பில் கிட்டியதிலும் பல மடங்கு அதிகமாக மலையாளப் புனைகதைகள் தமிழில் வெளியாகின. இதனால் நவீன தமிழ் இலக்கியக்காரருக்கு மலையாளப் புனைகதைகளுடனான பரிச்சயமும், பாதிப்பும் அதிகமாகவே கிட்டின.

முப்பதுகள் மற்றும் நாற்பதுகளின் சோஷலிஸ யதார்த்தவாதம், மார்க்ஸீயப் பார்வை - இவற்றால் உருவானவர்கள் தகழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசங்கரப்பிள்ளை, கேசவதேவ், பொன்குன்னம் வர்க்கி ஆகியோர். தகழி என்றவுடன் - ஏன் மலையாள இலக்கியம் என்றாலே கூட - அநேகமானவர்களின் நினைவில் முதலில் வருவது, அவருடைய செம்மீன் நாவல் தான். மீனவக் கிராமமொன்றின் மக்களின் கதை அது. மீனவப் பெண்ணான கருத்தம்மாவிற்கும், மீன் வியாபாரியான பரீத் குட்டி என்ற முஸ்லீம் இளைஞனுக்குமிடையிலான காதலையும் அது கூறுகிறது. சாகாவரம் பெற்ற இந்நாவல், இந்திய சாகித்ய அகாடமி பரிசு பெற்றதுடன், அனைத்து இந்திய மொழிகளிலும், ஆங்கிலம் மற்றும் ருஷ்யன், செக், அரபி, பேர்ஷியன் மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. அறுபதுகளில் வெற்றிகரமான ஒரு திரைக்காவியமாகவும் செம்மீன் வெளியாகி, ஜனாதிபதி பரிசையும் பெற்றது.

தகழி சிவசங்கரபிள்ளை ஏறத்தாழ இருபது நாவல்களும் அதே அளவு எண்ணிக்கையான சிறுகதைத் தொகுதிகளையும் எழுதியுள்ளார். செம்மீன் தவிர, அவருடைய கயிறு, ஏணிப்படிகள், ரண்டிங்கழி, தோட்டியின் மகன் போன்ற நூல்களும் மிகுந்த புகழ் பெற்றவை. இவை தவிர, நாடகம், பயணநூல் மற்றும் சுயசரிதம் போன்றவற்றையும் அவர் எழுதியுள்ளார்.

சமூகத்தின் அடித்தள மக்களது வாழ்க்கையையும், புதிய கருத்துக்களின் பிரதிநிதிகளாக வரும் பாத்திரங்களையும் வைத்து புனைகதை படைத்த மற்றொருவர், கேசவ்தேவ். அவருடைய சாக்கடையிலிருந்து, அழகியின் சுயசரிதை, அண்டை வீட்டார், ஆகிய படைப்புகள் மலையாள இலக்கியத்தில் தனியிடம் பெற்றவை.

அடுத்து முக்கியமாகக் குறிப்படப்பட வேண்டியவர், வை.மு. பஷீர் என்றறியப்பட்ட வைக்கம் முகம்மது பஷீர். மலையாளப் படைப்புலகில் என்றைக்குமே மறக்கப்பட முடியாத ஒருவர். நீண்ட வாழ்வும், நிறைந்த அனுபவங்களையும் கொண்டிருந்த பஷீரின் படைப்புக்கள் இலக்கிய மைல்கற்களாக மதிக்கப்படுபவை. அவருடைய பாத்தும்மாவின் ஆடு இளம்பருவத்துத் தோழி, என் தாத்தாவுக்கு ஒரு ஆனை இருந்தது போன்ற நாவல்கள் அவை. சிறுகதைகள், நாடகம் போன்றவற்றையும் எழுதிய பஷீரின் மதிலுகள் என்ற குறுநாவலும் மிகுந்த புகழ்பெற்றது.

இம் மும்மூர்த்திகளுடன் சேர்த்தெண்ணப்படத்தக்கவர்கள், பொற்றக்காடு, உறுப் இருவரும். இவர்களை அடுத்துவந்த தலைமுறையில் பாறப்புறத்து, மலையாற்றூர் ராமகிருஷ்ணன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசுதேவன் நாயர், கோவிலன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாய் விளங்கினர். மத்தாய் என்ற இயற் பெயர் கொண்ட பாறப்புறத்து, சிறந்த நாவலாசிரியுராக அறியப்பட்டவர். நாட்டிற்காகத் தம்முயிரைப் பலியிடும் துணிவு கொண்ட இளைஞர்களின் உணர்வுகளையும் கனவுகளையும் இலக்கியமாகப் படைத்தவர் என்று பாறப்புறத்து குறிப்பிடப்படுகிறார். அவருடைய அரைநாழிகை நேரம், பணிதீராத வீடு ஆகிய நாவல்கள் புகழ் பெற்றவை.

இவர்களைத் தொடர்ந்து வந்தோரில், ஓ.வி. விஜயன், ஆனந்த், முகுந்தன், பத்மநாபன், சுகுமாரன், மாதவிக்குட்டி முதலியோர் சிறந்த புனைகதைப் படைப்பாளிகளாக இனங்காணப்பட்டு, மலையாள இலக்கியத்தைச் செழுமைப்படுத்தலாயினர்.

ஓ.வி.விஜயன் நாவல்கள், சிறுகதைகள், அரசியல் கட்டுரைகள் எனப்பலவற்றை எழுதியவர். அத்துடன் ஒரு சிறந்த கேலிச்சித்திரக்காரராகவும் புகழ் பெற்றார். மலையாளத்தில் எழுதிய கதைகளில் இருபத்தொன்றை அவரே ஆங்கிலத்தில் பெயர்த்து அவை தூக்கிலிட்ட பின் என்ற அற்புதமான தொகுப்பாக வெளியாகியுள்ளன. இந்திராகாந்தியின் அவசரகாலச் சட்டம் பற்றிய கதைகளிலிருந்து, ஆசிரியரின் பரிசோதனை முயற்சிகள் வரை இதில் உள்ளன.

தென்னிந்திய மொழிகளுள் கன்னடத்திலும், கடந்த சில தசாப்பதங்களாகக் குறிப்பிடத்தக்க கலை இலக்கிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரை நூற்றாண்டுக் காலத்திற்கும் மேல் கன்னடத்தில் நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள் என எழுதியவர், கே.சிவராம காரந்த். அவருடைய சோமனதுடி சிறிய நாவலேயெனினும் பெரும் புகழ் பெற்றது. பின்னர் திரைப்படமாக வெளியாகி, ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் வென்றது. 'சோமனின் பறை' எனப் பொருள்படும் தலைப்பில், தனக்கென்றொரு துண்டு நிலத்தை வைத்திருக்க முயலும் சோமன் என்கிற தலித் ஒருவனின் போராட்டங்களை காரந்த் சித்திரிக்கிறார்.


சிவராம காரந்த்

கிரீஷ் கர்னாட், நாடகாசிரியர், நடிகர், இயக்குநர் எனப் பல்லாற்றல் வாய்ந்த ஒரு கலைஞர். அவருடைய நாடகங்களில் தனித்துவமான கன்னட அடையாளம் என்பதிலும், இந்திய அடையாளமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோங்கி நிற்கும். ஐதீகத்தில் அல்லது சரித்திரத்தில் வேரூன்றிய கதைகளைக் கொண்ட நாடகப் பிரதிகளை ஆக்கிய அவருடைய முதலாவது நாடகம், ய்யாதி. சரித்திரத்தைத் தளமாகக் கொண்ட இரண்டாவது நாடகம் துக்ளக், கர்நாட்டின் தனித்துவ முத்திரைகளையுங் கொண்டிருந்தது மட்டுமின்றிப் பெரு வெற்றியுங் கண்டது. இந்த வெற்றியை, மூன்றாவது நாடகமான ஹயவதனா உறுதி செய்தது. முதலில் கன்னடத்தில் எழுதிய பிரதியைப் பின்னர் கர்னாட் ஆங்கிலத்திலும் பெயர்த்தார்.


யு.ஆர். அனந்த மூர்த்தி

அறுபதுகளில் வெளியான யு.ஆர். அனந்தமூர்த்தியின் ஸம்ஸ்காரா மிகவும் பிரபலமடைந்த ஒரு கலைப்படைப்பாகும். அது நாவலென்று கூறப்பட்டாலும் கன்னடத்திலிருந்து ஆங்கிலத்திற்கு அதனை மொழி பெயர்த்த ஏ.கே.ராமானுஜன், 'குறுநாவல்' எனவே குறிப்பிடுகிறார். கர்நாடகக் கிராமமொன்றில், சிதிலமடைந்து போகிற ஒரு பிராமணக் குடியிருப்புப் பற்றிய - சமய - நாவல், ஸம்ஸ்காரா.

'ஸம்ஸ்காரா' என்ற சொல்லுக்குக் கன்னட மொழியில் பல அர்த்தங்களுள எனக் கூறப்படுகிறது. முழுமையாக்கல், மெய்யுணர்வு, தயாராதல், தூய்மைப்படுத்தல், சடங்கு, இறந்தோருக்கான கிரியைகள் - எனப் பல அர்த்தங்கொண்ட இச்சொல் இந்நாவலுக்குத் தலைப்பாயமைவது மிகவும் கனதியைக் கொடுக்கிறது. உண்மையில் கதையின் பாதியை தலைப்பே கூறுவதாகவும் படுகிறது. இந்து மதத் தத்துவங்களை - கதையோட்டம் மூலமாகவே - அலசும் இந்நாவல் பல கேள்விகளை எழுப்புகிறது. நாரணப்பா, பிராணேசாச்சார்ய - ஆகிய இரு பாத்திரங்களுமே சமூகத்தினதும் அதன் மாறுபடும் வளர்ச்சிப் போக்குகளினதும் குறியீடுகளாய்க் கொள்ளத் தக்கவர்களே. இப்படியான ஒரு பின்னணியிலன்றி வேறொரு பின்னணியில் இவ்விரு பாத்திரங்களும் முழுமைகொள்ளுமா என்ற கேள்வியும் வாசகருள் எழுவது தவிர்க்க முடியாதது.

வெளியான வேளையில் விமர்சகர்களாலும் வாசகர்களாலும் ஒருசேர வரவேற்கப்பட்ட இந்நாவல் ஐந்தாறு ஆண்டுகளுக் குள்ளாகவே சர்ச்சைக்குரிய ஒரு திரைப்படமாகவும் வெளியாகி, பரிசில்களையும் பெற்றது. இந்நாவலின் தமிழ்மொழி பெயர்ப்பொன்று சில ஆண்டுகட்கு முன் வெளியான போதிலும் அதன் நடை காரணமாக மனமொப்பி வாசிப்பதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமாக்கிவிடுகிறது. இக்குறைபாடு ஆங்கில மொழி பெயர்ப்பில் தெரியவில்லை. இரண்டு மொழிகளை அறிந்திருப்பது மட்டுமே ஒரு மொழி பெயர்பாளனுக்குரிய தகுதியாகக் கொள்ள இயலாதுதான், அது ஆக்க இலக்கியமாக இருந்தாலென்ன, அறிவியல் விஷயமாக இருந்தாலென்ன.

தமிழ் மொழிபெயர்ப்புகள் பற்றிக் குறிப்பிடுகையில் சோவியத் நாட்டின் அந்திமகாலத் தமிழ் வெளியீடுகள் பற்றியும் கூற வேண்டும். ஏற்கனவே சிறந்த தமிழ் மொழி பெயர்ப்புகளாக வந்த நூல்களை - அவற்றில் பல இக்கட்டுரைத் தொடரின் ஆரம்பப் பகுதிகளில் குறிப்பிடப்பட்டவை - பின்னர் புதிய பதிப்புகளாக வெளியிட்ட வேளையில் அவற்றிற்கு 'மெருகூட்டும் பணி' செய்யப் புகுந்த ஒருவரால் அந்தச் சுவை மிக்க செம்மை இலக்கியங்கள் பலவும் படிப்பதற்கியலாத தமிழாய் ஆக்கப்பட்டு விட்டமை பெரும் அவப்பேறேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32

இந்தத் தசாப்தத்தில் உலகின் கவனத்தை ஈர்த்த இலக்கியப் படைப்பாளியொருவரை பங்களாதேஷும் உருவாக்கியிருந்தது. அவர் தஸ்லிமா நஸ்ரீன். 1993ல் வங்காள மொழியில் தஸ்லிமா எழுதிய லஜ்ஜா (வெட்கம்) என்ற சிறிய நாவல், இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் ஆத்திரத்தைக் கிளப்பிற்று. இதன் விளைவாய் இளம் மருத்துவரான இந்நாவலாசிரியை பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியும் வந்தது. ஸல்மான் ருஷ்டி முகங்கொடுக்க நேர்ந்த அத்தனை பயமுறுத்தல்களையும் தஸ்லிமாவும் சமாளிக்க வேண்டியிருந்தது. எனினும் ருஷ்டி போலவே - தஸ்லிமாவும் தம் நிலையினின்றும் பின்வாங்கினாரில்லை.



தஸ்லிமா நஸ்ரீன்

92 பிற்பகுதியில் அயோத்தியில் இந்து தீவிரவாதிகள் பாபர் மசூதியை இடித்துத் தள்ளிய போது அதன் எதிர்விளைவாய், வங்காளதேசத்தில் சிறுபான்மையினராயிருந்த இந்துக்கள் பெரும்பான்மை முஸ்லீம்களின் தாக்குதலுக்கிலாக்காக நேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பின்னணியை வைத்தெழுதப்பட்ட நாவல் லஜ்ஜா. பரம்பரை பரம்பரையாக வங்க மண்ணில் வாழ்ந்து வந்த பல இந்துக் குடும்பங்கள் தாய் நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் அடைக்கலம் புகுந்தபோதும், அவ்வாறு புறப்பட மறுத்து - தன் சொந்த மண் தன்னைக் கைவிடாது என்ற நம்பிக்கையுடன் - தங்கிவிட்ட ஓர் இந்துக் குடும்பம் எதிர்கொள்ளும் பயங்கரங்கள், அழிவுகள் - இவற்றுக்கெல்லாம் மேலாக - ஏமாற்றங்கள் எல்லாவற்றையும் கூறுகிறது நாவல்.

தஸ்லிமா, முஸ்லிமாக இருந்த போதிலும், வகுப்புவாதத்தையும், அடிப்படை வாதத்தையும் எதிர்த்தார். அவற்றின் பயனாய் விளைந்த - வன்முறைக்கெதிரான குரலாய் உரத்து ஒலித்த - இப்படைப்பு உலகின் கவனத்தை ஈர்க்கத் தவறவில்லை. இன ஒற்றுமையைக் குலைக்கிறது என்று கூறி பங்களாதேஷ் அரசு நாவலைத் தடை செய்தது. அடிப்படைவாதக் குழுவொன்று ஆசிரியைக்கு மரண தண்டனையும் விதித்தது. தலை மறைவு வாழ்க்கை, நாட்டை விட்டு வெளியேறும் நிர்ப்பந்தம் எல்லாம் நேர்ந்தன. மூல நூல் வெளியான அடுத்த ஆண்டிலேயே ஆங்கில மொழிபெயர்ப்பும் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றது.

கவிஞராகவே தமது இலக்கிய வாழ்வைத் தொடங்கிய தஸ்லிமா, பின்னர் கட்டுரைகளையும் நாவல்களையும் எழுதலானார். லஜ்ஜாவின் எதிர்விளைவுகளால் இன்னமும் அலைப்புறும் தஸ்லிமா, தம் எதிர்காலமானது இலக்கியத்தினின்றும் விலகாது என்பதிலும் திடமாயுள்ளார். வங்க மொழி இலக்கியத்திற்கு அவரது பங்களிப்பு தனித்துவமானது.

குறிப்பிடத்தக்க இன்னொரு பங்களாதேஷ் எழுத்தாளர், ஷௌகத் ஒஸ்மான் ஆவார். இந்தியராகப் பிறந்து, பாகிஸ்தானியாகிப் பின்னர் பங்களாதேஷ் பிரஜையானவரெனினும், அவர் எழுதியதெல்லாம் வங்க மொழியிலேதான். ஐம்பதிற்கும் மேற்பட்ட இலக்கியப் படைப்புக்களை வெளியிட்ட ஒஸ்மானின் ஆக்கங்களில், விவசாயி - தொழிலாளிகளும் நகர்ப்புற ஏழைகளுமே கதாமாந்தர்கள்.

அவருடைய ஜனனி என்ற நாவல், இரு இந்து-முஸ்லிம் விவசாயக் குடும்பங்களிடையேயான உறவையும், சமூகப் பிரச்சினைகளையும் பற்றியது. ஒஸ்மானின் நாவல்கள் சாதி, சமய, அரசியல், சுமைகளிலிருந்து சாமான்ய மக்களை விடுவிக்க முயல்பவை எனப் போற்றப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33

இலங்கையிலிருந்து ஆங்கிலத்தில் ஆக்க இலக்கியம் படைக்க முன் வந்தோரில், கவிஞர் தம்பிமுத்து, ஜே.விஜயதுங்க, அழகு சுப்பிரமணியம், ராஜா புரக்டர், புண்ணியகாந்தி விஜேநாயக்க, ஆன் ரணசிங்க, யஸ்மின் குணரத்ன, ஜீன் அரச நாயகம், ஜேம்ஸ் குணவர்த்தன, ரெஜி சிறிவர்தன, பட்ரிக் பெனாணடோ, லக்தாச விக்ரமசிங்க என்றொரு நீண்ட வரிசை உண்டு. இவ்வரிசை இப்போது மைக்கல் ஒண்டாஜ்ஜே, ஷ்யாம் செல்வதுரை, ரொமேஷ் குணசேகர - என்று நீட்சி கொள்கிறது.

யாழ்ப்பாணத்தில் அச்சுவேலியைச் சேர்ந்த கவிஞர் தம்பிமுத்து 1915ல் பிறந்தவர்: தமது 25வது வயதிற்குள்ளேயே அவர் இங்கிலாந்து சென்றடைந்தார். இரண்டாம் உலகப் பெரும் போர்க்காலம். எனினும், ஆர்வமும் திறமையுங் காரணமாகப் பொயட்றி லண்டன் என்ற சஞ்சிகையினைத் தொடங்கி அதன் மூலம் தன் முத்திரையைப் பொறித்தார். ஏற்கனவே இக்கட்டுரையில் நாம் சந்தித்த ரி.எஸ்.எலியட், ஜோர்ஜ் ஒவெல், போன்ற இலக்கிய மேதைகளோடு பரிச்சயமும் நட்புங் கொண்டிருந்தார். 1983ல் தம்பிமுத்து காலமானார்.

இலங்கையிலும் இங்கிலாந்திலும் நீண்டகாலம் பத்திரிகையாளராகப் பணியாற்றிய ஜே.விஜயதுங்க, இலங்கையைப் பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவைப்பற்றியும் பல நூல்களை எழுதியவர். எனினும் அவரது இலக்கிய ஆளுமையை நிருபித்து. அவருக்குச் சாகாவரமளித்த ஆக்கம் என் பாதங்களுக்கான புல் என்பது. இது புனைகதையன்று, ஆசிரியரின் இளமைக்கால கிராம வாழ்க்கையனுபங்களைக் கலையழகுடன் படம் பிடித்துக் காட்டும் சொற்சித்திரங்களின் தொகுப்பு. ஏறத்தாழ எழுபதாண்டுகட்கு முன் வெளியான இப்படைப்பு அன்றிலிருந்து இன்றுவரை புத்தழகு மாறாது மிளிர்கிறது.

அழகு சுப்பிரமணியமும், கவிஞர் தம்பிமுத்து போலவே யாழ்ப்பாணத்தவர். இங்கிலாந்துக்குச் சென்று 'பரிஸ்டர்' பட்டம் பெற்றவர். அங்கிருந்த காலத்தில் பல்வேறு ஆங்கில இலக்கியவாதிகளுடனும் இல்க்கியச் செயற்பாடுகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். இலங்கைக்கு மீண்டு வந்த பின் பெரிய பிள்ளை, மூடும் நேரம் ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டார். யாழ்ப்பாண வாழ்வை வெளியுலகிற்குத் தெளிவுறக் காட்டும் ஆக்கங்களாக அவையமைந்தன.

பிரிட்டனின் ஆட்சி கீழிருந்த காலத்தில் இலங்கைக் கடற்படையில் ஒரு அதிகாரியாயும் பின்னர் வர்த்தகக் கப்பல்களில் அதிகாரியாகவும் பணியாற்றிய ராஜா புரக்டர், மீனவன் மகள், கள்ளத் தோணி ஆகிய இரு நாவல்களையும், குழந்தை அழ வேண்டும், எப்போதைக்குமான வாழ்வு ஆகிய இரு கதைத் தொகுதிகளையும் எழுதியவர். கள்ளத்தோணி நாவல், தென்னிந்தியாவிலிருந்து நம்பிக்கைகளோடும் எதிர்பார்ப்புக்களோடும் இலங்கைக்கு வந்த ஜகதீசன் என்பவனின் கதை.

இன்னமும் இலங்கையில் வாழ்ந்து கொண்டும், குறிப்படத்தக்க ஆங்கில ஆக்க இலக்கியப்படைப்பாளிகளாக வெளியுலகினால் இனங்காணப்பட்டும் இருப்போர் வேறு சிலரும் உளர். அவர்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய மூவருமே பெண்கள் என்பதும் முக்கியமானது.

இவர்களுள் முதலிற் கூறப்பட வேண்டியவர் திருமதி. புண்ணியகாந்தி விஜேநாயக்கா. தமது புனைகதைகள் மூலம் நிலையான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர். ஏறத்தாழ கடந்த நாலு தசாப்தங்களாகக் குன்றாத செயலூக்கத்துடன் எழுதி வரும் விஜேநாயக்கவின் பல படைப்புக்கள் நூலுருவில் வெளிவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது பெண், பாக்குவெட்டி, வெற்றிலைக்கொடி, புரட்சியாளன் போன்ற அவரது நாவல்களும், கதைத் தொகுப்புக்களும் நன்கறியப்பட்டவை. கிராமிய வாழ்வைப் பின்னணியாகக் கொண்டு பெரும்பாலும் உண்மைத் தகவல்களை அடியொற்றி எழுந்தவையே அவர் ஆக்கங்கள் எனக் கூறப்படுவதுண்டு. அண்மையில் வெளியான அவருடைய கதைத் தொகுதி உள்ளிருக்கும் எதிரி, இதே தலைப்பைக் கொண்ட ஒரு குறுநாவலையும் சில சிறுகதைகளையும் உள்ளடக்கியது. இக்குறுநாவலானது ஆசிரியையின் மனிதாபிமான உணர்வுகளை வெளிப்படுத்தும். அதே வேளை, அவருடைய மட்டுப்படுத்தப்பட்ட அனுபவங்களையும் எல்லைப்பாட்டுக்குட்பட்ட கண்ணோட்டத்தையும் கூட இலங்கை வெளிப்படுத்துவது. மத்திய வங்கிக் குண்டு வெடிப்பை வைத்து எழுதப்பட்டது இது. 'போருடன் எவ்விதத்திலும் சம்பந்தப்படாத சாதாரண சனங்கள் ஒரு வழமையான நாளில் தமது முறையில் கருமங்களை ஆற்றப் போய்க் கொண்டிருந்தவர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டனர் என்பதைக் கூற முனைவது. ஆனால் இதுபோன்ற எத்தனை, எத்தனை சம்பவங்கள் இலங்கையில் வடக்கு கிழக்கில் இடம்பெற நேர்ந்தது என்பதை அவர் அறிந்திராது போனது ஒன்றும் வியப்பானதன்று!

அடுத்ததாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் திருமதி. ஆன் ரணசிங்க. உலகறிந்த கவிஞர்.ஜெர்மனிய யூதராகப் பிறந்து, நாஸிக் கொடுமையின் காரணமாக - இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் - தம் உற்றார், உறவினரை இழந்த ஒரு சிறுமியாக, அரும்பொட்டில் தப்பி இங்கிலாந்து சென்று, அங்கு தாதியர் கல்வி பெற்று, சிங்களவரான ஒரு மருத்துவப் பேராசிரியரை மண முடித்து, இலங்கையைத் தமது தாயகமாக்கிக் கொண்டிருக்கும் இவரது வாழ்வும் உயிர்த்துடிப்புள்ள ஒரு நாவலாக அமையவல்லது. இலங்கை வந்தபின், தமது ஜேர்மன் இளமைக்கால அனுபவங்கள் யாவற்றையும் அவர்ஆறுமாத காலத்திற்கு - தொடராக - 'வீரகேசரி' வார வெளியீட்டில் எழுதினார். இத்தொடருக்காக இரை மீட்க நேர்ந்த அவருடைய இளைமைக்கால நினைவுகள் - அந்த முப்பதுகளின் பிற்பகுதியில் இழக்க நேர்ந்த தம் உறவுகளைத் தேடும் தாபத்தைத்தூண்டவும் காரணமாயின.

ஆன் ரணசிங்கவின் கவிதையில் அவரது அந்த அழிக்கவொணா வடுக்கள் இடம் பெறுவதென்பது மிகமிக இயல்பானதே. நாஸிக் கொடுமைகள், நரகவர்ணனைகளையும் மிஞ்சிய 'ஒஷ்விற்ஸ்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற யூத இன ஒழிப்பு முகாம்கள் போன்றவை பற்றிய பதிவுகளும் படிமங்களும் அவர் கவிதைகளில் இடம் பெறுவன. துவம்சம் - 1944 என்ற கவிதையில் தம் தாயாரை இப்படி நினைவு கூர்கிறார்.

'உலகின் எந்த மூலையில்
உனை அவர் புதைத்தனர்
அறியேன்.
உன் புதைகுழி மேற் படர்ந்து
காய்ந்திறுகிக் குத்தும்
கட்டைப் புற்களில்
எந்த ஊதற் காற்றின்
ஊளை இரைகிறதோ

மென்னீல உறைபனியின்
குத்தும் கொடுங்குளிரில்
நிர்வாணமாகி நீ
உடல் விறைக்க நடந்த
அந்த டிசம்பர்க் காலை
அப்போதெனை நீ
நினைந்தாயோ அம்மா
சாம்பல் பூத்த விடிகாலை
வானின் கீழ்
அதுவே முடிவென அறிந்து நீ
நடந்த அக்கணம்
வெறுமையின் முடிவு
வெறுமையின் தொடக்கமும்
அப்போதெனை நீ நினைந்தாயோ


ஆன் ரணசிங்ஹ

என் மனதில் உன் நினைவே
என்னுயிரே
வெளிறிய கரம் விரித்து
நீ வாழ்த்துங் கோலம்
மெழுகுதிரிகளின் மேல்
ஒளியாயுன் கண் சுடர
ஆசிர்வதிப்பாயே அம்மா'
அந் நினைவு
ஆண்டவருக்கு தோத்திரம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இதிலேதான் இதயவலி*
*பெருந்துயரின் பிரமாண்டம்*
*இத்தனைக்குப் பிறகும்*
*உன் மரணம்*
*உயிர்க்கொடையாய் என்றன்றி*
*வியர்த்தமாய்*
*வெறும் சாவாய்*
*வெறுமையின் முடிவது*
*வெறுமையின் தொடக்கமும்*
*நான் வடிக்கும் கண்ணீர்*
*இரத்தம்*
*உன் இரத்தம்.*

ஆன் ரணசிங்கவின் கவிதைகள் உலகை உறிஞ்சி வரட்டும் சூரியன், சொற்களால் எமது வாழ்வை எழுதுகிறோம், கருணை வேண்டுதல், நிழல்கள் கூட அன்று - போன்ற ஏறத்;தாழ பத்துத் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. ஆங்கிலத்தில் மட்டுமன்றி, ஜேர்மன் மொழியிலும் அவ்வப்போது எழுதும் அவர், ஜேர்மனிலிருந்து மொழி மாற்றங்களும் செய்துள்ளார். அவர் எழுதிய சிறுகதைகள் - அவா, மற்றும் கடிதமும் ஏனைய கதைகளும் ஆகிய இரு தொகுதிகள் - குறிப்பிடத்தக்கவை, தற்போது கொழும்பில் வசிக்கும் ஆன் ரணசிங்க, இலங்கை, ஆங்கில எழுத்தாளர் கூட்டுறவு அமைப்பின் உயிர் நாடியாகவும் செயற்பட்டு வருபவர்.

குறிப்பிட்ட மூவரில் அடுத்தவர், திருமதி ஜீன் அரசநாயகம். பறங்கியர் சமூகத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் தமிழர் ஒருவரை மணமுடித்து, தமிழ் விழுமியங்களையும் ஓரளவு வரித்துக்கொண்டவர். கவிஞர், சிறுகதை ஆசிரியராக மட்டுமன்றி, ஜீன் அரசநாயகம் குறிப்பிடத்தக்க ஓவியராகவும் கணிக்கப்படுபவர். கவிதைகள், பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இன வன்முறை பற்றி அவர் அதிகம் எழுதியிருப்பதாகக் கூறப்படுகிறதெனினும், அதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட ஒருவரின் பார்வையினின்றும் அவர் பார்வையும், உணர்வுப் பரிமாணங்களும் மாறுபடுவது புரிந்து கொள்ளப்படக்கூடியதொன்றே. எல்லாம் எரிகின்றது என்ற கதைத் தொகுதியையும், மயில்களும் கனவுகளும் என்ற வாழ்க்கைச் சித்திரங்களையும் கூட ஜீன் அரசநாயகம் வெளியிட்டுள்ளார். பின்னது, நாற்பது ஐம்பதுகளில் இருந்த யாழ்ப்பாண வாழ்வைப் படம்பிடிக்க முயலும் நடைச் சித்திரத் தொகுப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சமகால ஆங்கிலப் படைப்பாளிகள் என நோக்கும் போது, யஸ்மின் குணரத்தின பற்றியும் அவசியம் குறிப்பிடவே வேண்டும். குடிபெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வசிக்கும் அவர் ஓர் ஆங்கிலப் பேராசிரியை. மூன்று கவிதைத் தொகுப்புகளையும் பல திறனாய்வு நூல்களையும் எழுதியவர். இலங்கையின் முக்கிய கவிஞர்களில் ஒருவராக இன்னமும் கணிக்கப்படுபவர்.



மைக்கல் ஒண்டாஜ்ஜே

மைக்கல் ஒண்டாஜ்ஜேயின் வருகையுடன் தான் இலங்கையின் ஆங்கிலப் படைப்புகள் உலகின் கவனத்தை முழுமையாக ஈர்த்துக் கொள்வது சாத்தியமாயிற்று. 1992ல், அவர் 'புக்கர்' பரிசினை வென்றார். ஆனால், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது என்னவெனில் அவருக்கு இப்பரிசினை ஈட்டித்தந்த படைப்பு, எவ்விதத்திலும் இலங்கையின் வாழ்வையோ இலங்கையர் வாழ்வையோ தொடக்கூட இல்லை என்பதாகும். ஆங்கில நோயாளி என்ற இந்த நாவல் திரைப்படமாகவும் வெளியாகி 1997ல் 'ஒஸ்கார் விருது' பெற்றதன் மூலம் மீண்டும் உலகெங்கும் பேசப்பட்டது. எனினும், இதற்கு முன் வெளியான அவரது படைப்பான குடும்பத்தின் கதை, இக்குறையை அடியோடு நீக்கவல்லது. தமிழ், சிங்கள மற்றும் டச்சு மூவின கலப்பு பாரம்பரியத்தில் தோன்றிய ஒண்டாஜ்ஜேயின் பின்னணிகளை சமூகவியல் பதிவாகவும் கலைப்படைப்பாகவும் நாம் காண முடிகிறது. தமக்கு கிடைத்த 'புக்கர்' பரிசு பணத்தின் மூலம், 'கிறேஷியன் விருது' என்ற ஒன்றினை ஒண்டாஜ்ஜே நிறுவினார். ஒவ்வோராண்டும் இலங்கையில் வெளியாகும் சிறந்த ஆங்கிலப் படைப்பிலக்கியத்திற்கு இது வழங்கப்படுகிறது. ஒண்டாஜ்ஜே தற்போது கனடாவில் வசிக்கிறார்.



ரொமேஷ் குணசேகர

ரொமேஷ் குணசேகர எழுதிய கடற்பாறை இங்கிலாந்தில் குடியேறியிருக்கும் ஒருவரின் நினைவோட்டத்தில் இலங்கையின் அண்மைக்கால அரசியல் சமூக நிகழ்வுகளை சித்திரிக்க முயல்வது. ஆங்கில வாசகர்களிடையே வரவேற்பைப் பெற்றிருப்பினும், இலங்கைத் தமிழனான ஒரு வாசகனுக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க படைப்பாக அமையுமா என்பது சந்தேகமே. ரொமேஷின் மணற்குடுவை என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலும் வெளியாகியுள்ளது. அவருடைய முதலாவது நூல், ஒன்பது கதைகளின் தொகுப்பாக வெளிவந்தது. அதனைப்படித்த போது ஆசிரியர் தம் வாணாளிற் பெரும் பகுதியை வெளிநாடுகளில் - பிலிப்பைன்ஸ், இங்கிலாந்து - கழித்திருக்கிறார் என்கின்ற குறிப்பின் பொருள் புரிந்தது.

ஷ்யாம் செல்வதுரை, கொழும்புத் தமிழர், அவருடைய விசித்திரமான பையன், இலங்கைத் தமிழர் பிரச்சினையைச் கூறுவதாக வெளி உலகில் பெரிதாக பேசப்பட்டபோதும், அப்படி அங்கு ஒன்றுமில்லை என்பது எம்மவர் படித்தால் புரியும். இனக்கலவரம் (83) வருகிறது. அதில் பாதிக்கப்படுகிற மேல் தட்டுக் கொழும்புத் தமிழ்க் குடும்பம் ஒன்று வருதிறது. இவற்றினிடையே, ஒரு பாலுறவு கொள்கிறவனான கதையின் முக்கிய பாத்திரம் வேறு. அவன்தான் கதை சொல்பனுங் கூட. இலங்கைத் தமிழர் பிரச்சனையை ஆங்கிலத்தில் ஆக்க இலக்கியமாக உருவாக்க வேறெவரும் இல்லாமல் போன ஒரு காரணத்தை விட இந்த நாவலும் இதன் ஆசிரியரும் இவ்வளவு பேசப்படுவதற்கு, வேறெந்தக் காரணமும் இருப்பதாகப் படவில்லை. செல்வதுரையின் அடுத்த படைப்பான கறுவாக்காடும் ஒரு சாதாரண நாவல்தான். எனினும் - மேற்குறிப்பிட்ட காரணத்தினால்தான் இருக்க வேண்டும் - விமர்சன விளம்பரங்களால் ஊதிப் பெருப்பிக்கப்பட்டதாகப்படுதிறது. வழமையான செல்வதுரை மசாலா இதிலுமுண்டு. இன உறவுகள் சக ஒரு - பால் உறவு. போதாக்குறைக்கு, பொன், இராமநாதனின் சாயலில் ஒரு பாத்திரம். ஆசிரியரின் 'தமிழ்' தன்மையைக் காட்டவோ, என்னவோ, ஒவ்வொரு அத்தியாயத் தொடக்கத்திலும் ஒரு திருக்குறள் வேறு ! ஆங்கில மொழி பெயர்ப்பில். 1920களில் இருந்த அழகான இலங்கையைப் படம் பிடிப்பதாகக் கூறப்பட்டாலும் அக்கால கொழும்புத் தமிழர் பற்றியும், யாழ்ப்பாண - மலேசிய தொடர்புகள் பற்றியுமான குறிப்புகளில் மட்டுமே உயிரோட்டமுள்ளது.

யாழ் - மலேசிய தொடர்புகள் பற்றிக் கூறுகையில், மூன்று தலைமுறைக்கு முன் மேற்கு மலேசியாவில் குடியேறிய குடும்பமொன்றில் தோன்றிய எழுத்தாளரான ஷாலினி ராஜேந்திரன் பற்றிச் சொல்ல வேண்டும். புலம் பெயர்ந்தோரின் பண்பாட்டு அடையாளச் சிக்கல் பற்றிய அவருடைய தீபகற்பத்திலிருந்து தீபகற்பத்திற்கு என்ற கட்டுரை சுவையானது. தன்னை ஒரு 'மலேசிய' யாழ்ப்பாணத் தமிழ், கிறிஸ்தவப் பெண் என ஆசிரியை இனங்காண்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கூறுவதாகச் சொல்லப்படும் இன்னொரு நாவல், நினைவு சாகையில். யாழ்ப்பாணத் தமிழராகப் பிறந்த அம்பலவாணர் சிவானந்தனும் பல்லாண்டுகட்கு முன்பே கொழும்புவாசியாகி, 1958 கலவரத்துடன் இங்கிலாந்தில் குடியேறியவர், இடதுசாரியும் தொழிற்சங்கவாதியுமான சிவானந்தனின் இந்த நாவல், மூன்று தலைமுறைகளின் கதையையும் அதன் மூலம் இலங்கையின் சம கால சரித்திரத்தையும் வெளிப்படுத்த முயலும் நீண்ட படைப்பு. எனினும் முதலிரு தலைமுறைகளூடு இலங்கையின் அரசியல் - தொழிற்சங்க இயக்கங்களின் வரலாறு, வளர்ச்சி பற்றி உணர முடிகிற உண்மையையும் உணர்வையும், மூன்றாவது தலைமுறையின் கதையில் - இன விடுதலைக்கான ஆயுதப்போர் பற்றிய பகுதியில் - காணவே முடியவில்லை என்பது ஒன்றும் அதிசயமானதல்ல. இந்த மண்ணினின்றும் எப்போதோ அந்நியப்பட்டுப்போய், வெறும் செய்திகளை வைத்து 'இலக்கியம் தயாரிக்கும்' வேலைகளில் இப்படியான ஆபத்துக்கள் நிகழ்வது தவிர்க்க முடியாதது. ஆனால், அவலமென்னவெனில், இவற்றையே தமிழரது வாழ்நிலையினதும, போராட்டத்தினதும், படப்பிடிப்பாக வெளியுலகு ஏற்றுக் கொள்ள வேண்டியிருப்பதுதான். நல்லதோ கெட்டதோ புலம் பெயர்ந்தோரின் தமிழ் எழுத்துக்கள் ஏற்படுத்தும் பாதிப்பிலும் ஆங்கில எழுத்துக்கள் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு பல மடங்கு அதிகம்.

நாமறிகிற வரையில் பல்வேறு பலவீனங்களுடன் வருகிற இப்படியான படைப்புகள் புகழும் போற்றுதலும் பெறும் போது நியாயமான பயமொன்று எழுவதும் தவிர்க்க முடியாததாகிறது. புகழும் போற்றுதலும் பெறும் படைப்புகள் - எல்லாமென்று இல்லாவிட்டாலும், பல அல்லது கணிசமானவை - இப்படித்தானோ?

காள் முல்லர், இலங்கையின் பறங்கியர் சமூகத்தைச் சார்ந்தவர். 'ஜாம் மரம்' என்ற நாவலுடன் அறிமுகமான முல்லர் அதன் மூலம் பரவலான வரவேற்பும் பெற்றார். கீழ் மத்தியதரப் பறங்கியர் குடும்பமொன்றின் கதையை - அச்சமூகத்தின் குறியீடாகவும் - இந்நாவலில் முல்லர் பதிய வைத்தார். அவருடைய இன்னொரு தனித்துவமான அம்சம், கலைக்கு ஊறு செய்யாமல் இழைந்தோடும் நகைச்சுவை. ஜாம் மரத்தைத் தொடர்ந்து யக்கட யக்கா, கொழும்பு, சிங்கராஜாவின் பிள்ளைகள் போன்ற படைப்புகளும் வெளியாகின.

இந்த இடத்தில் றெஜி சிறிவர்த்தனவின் எனது நினைவுப் பொருட்களிடையே என்ற நாவல் பற்றிக் குறிப்பிட வேண்டும். புத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவியாகவும் நாடகாசிரியராகவும், எல்லாவற்றிலும் மேலாக விமர்சகராகவும் அடையாளம் பெற்றிருந்த சிறிவர்த்தனவின் இரண்டாவது படைப்பு இது. முதலாவது, தொலைந்த லெனோர் அவ்வளவு குறிப்பிடக்கூடியதன்று. எனது நினைவுப் பொருட்களிடையே ஒரு விதத்தில் சிவானந்தனின் நாவலை ஒத்தது. முப்பதுகளில் இருந்து நகர்கிற கதை. எனினும், உண்மை அனுபவங்களின் பிறப்பாக இப்படைப்பு அமைவதால் சிவானந்தனின் படைப்பிலும் சிறப்பானதாகவே படுகிறது.

படிக்கக்கிடைத்த வித்தியாசமான வேறிரு நூல்களைப் பற்றியும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும். ஒன்று சோமச்சந்திர விஜேசூரிய என்பவர் எழுதிய முதல் எழுச்சி எனும் நாவல். '56 லிருந்து' 71 வரையான 16 ஆண்டு கால கட்டத்தில் ஒரு கீழ்த்தட்டு மத்தியதரக் குடும்பத்தின் கதையைக் கூறுகிறது; அதாவது பண்டாரநாயகாவின் தேர்தல் வெற்றியிலிருந்து ஜே.வி.பி. யின் கிளர்ச்சி வரை. 'இப்படியான எழுத்துக்கள் காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்பவை' எனப் பிரபல விமர்சகர் பேராசிரியர் திரு.கந்தையா குறிப்பிடுகிறார்.

அடுத்த புத்தகம், ஜோர்ஜ் அழகையா என்பவர் எழுதிய ஆபிரிக்காவுக்கான ஒரு பயணம் என்கிற பயண/சுயசரிதை. மட்டக்களப்பில் பிறந்த அழகையா, தம் ஐந்தாம் வயதில் - 1960 - பெற்றோருடன் கானாவுக்குக் குடி பெயர்ந்தார். ஆரம்பக் கல்வியை அங்கும், இடைநிலை, உயர்நிலைக் கல்வியை இங்கிலாந்திலும் பெற்று, பிபிஸியில் சேர்ந்து நிருபராயும் செய்தி வாசிப்பாளராயும் புகழ் பெற்றார். ஊடகத்துறை விருதுகள் பலவற்றை வென்றார். அரசியல் அகநோக்கையும் சொந்த அனுபவக் கூறுகளையும் இணைத்து இந்நூலை அழகையா எழுதியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை பற்றிய சிறந்த இலக்கியங்களை உருவாக்க வேண்டுமென்ற நன்நோக்கு சிங்கள - ஆங்கில மொழி எழுத்தாளர்கள் பலரிடையே இருந்தாலும் பிரச்சினை பற்றிய பூரணமான புரிந்துணர்வின்மையும் சரியான கண்ணோட்டம் மற்றும் அவசியமான அனுபவங்கள், உணர்வுகள் என்பன மட்டுப்படுத்தப்பட்டமையும் காரணமாக, அவர்களின் படைப்புகள் ஒன்றில் திரிபு கொண்டவையாகவோ அன்றி உயிரற்று எதுவுமேயில்லாதவையாகவோ போய்விடுகின்றன. ஒரு விதத்தில் பார்த்தால் தமிழிலேயே கூட இந்த வெற்றிடமும், இயலாமையும் இன்னுந் தொடர்கையில் பிற மொழிகளில் சரியான ஆக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவரவில்லை என எண்ணுவதும் கூட சற்று அதிகப்படியானதாகவே படுகிறது. எப்படியோ, எம்மண்ணினதும் மக்களினதும் சமகால வரலாறானது எந்த மொழியிலென்றாலும் சரியான இலக்கியங்களாகப் பரிணமித்து, உலக இலக்கியப் பரப்பில் பொருந்திக்கொள்ள வேண்டிய தேவையும், அதற்கான வெற்றிடமும் இன்னமும் இருக்கவே செய்கின்றன. இந்த வாழ்வின் வெளிப்பாடான இலக்கியங்கள் 20ம் நூற்றாண்டில் இல்லாவிட்டாலும் 21ம் நூற்றாண்டிலாவது உருவாகி, உலக இலக்கிய வரிசையில் இடம் பிடிக்கும் என்பது எவ்விதத்திலும் எதார்த்தத்திற்கு முரணான எதிர்பார்ப்பன்று.

●○●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபதாம் நூற்றாண்டில், இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1901 | - | சல்லி புருதொம் | ஃபிரான்ஸ் |
| 1902 | - | தியோடர் மொம்ஸன் | டென்மார்க் |
| 1903 | - | ஜோன்ஸ்ரன் ஜோன்ஸன் | நோர்வே |
| 1904 | - | ஃப்றெட்றிக் மிஸ்ட்ரால் | ஃபிரான்ஸ் |
| | | ஜோஸ் எச்சகாரி | ஸ்பெயின் |
| 1905 | - | ஹென்றிக் ஸியன்கியேவிக்ஸ் | போலந்து |
| 1906 | - | ஜியோசு கார்டுஸி | இத்தாலி |
| 1907 | - | ருட்யாட் கிப்ளிங் | இங்கிலாந்து (ஐ.இ) |
| 1908 | - | ருடோல்ஃப் இயுகென் | ஜேர்மனி |
| 1909 | - | ஸெல்மா லாகர்லாஃப் | ஸ்வீடன் |
| 1910 | - | போல் ஹெய்ஸ் | ஜெர்மன் |
| 1911 | - | மொறிஸ் மேற்றலிங் | பெல்ஜியம் |
| 1912 | - | கெர்காட் ஹோப்ற்மன் | ஜெர்மன் |
| 1913 | - | ரவீந்திரநாத் தாகூர் | இந்தியா |
| 1914 | - | (வழங்கப்படவில்லை) | --- |
| 1915 | - | றொமெய்ன் றோலண்ட் | ஃபிரான்ஸ் |
| 1916 | - | வெர்னர் வொன் ஹெய்டன்ஸ்ராம் | ஸ்விடன் |
| 1917 | - | காள் ஜெல்லரப் | டென்மார்க் |
| | | ஹென்றிக் பொன்ரோபிடான் | டென்மார்க் |
| 1918 | - | (வழங்கப்படவில்லை) | --- |
| 1919 | - | காள் ஸ்பிற்ரலர் | ஸ்விற்ஸர்லாந்து |
| 1920 | - | நட் ஹாம்ஸன் | நோர்வே |
| 1921 | - | அனற்ரோல் ஃபிரான்ஸ் | ஃபிரான்ஸ் |
| 1922 | - | ஜசின்ரோ பெனாவென்ரே | ஸ்பெயின் |
| 1923 | - | வில்லியம் பட்லர் யீற்ஸ் | அயர்லாந்து (ஐ.இ) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 1924 | - | விளாடிஸ்லாவ் றேமன்ற் | போலந்து |
| 1925 | - | ஜோர்ஜ் பெர்னாட் ஷா | அயர்லாந்து (ஐ.இ) |
| 1926 | - | கிறேஸியா டெலட்டா | இத்தாலி |
| 1927 | - | ஹென்றி பெர்க்ஸன் | ஃபிரான்ஸ் |
| 1928 | - | ஸிக்ரிட் உன்ட்ஸெற் | நோர்வே |
| 1929 | - | தோமஸ் மான் | ஜெர்மன் |
| 1930 | - | ஸிங்க்லயர் லூயிஸ் | அமெரிக்கா |
| 1931 | - | எரிக் அக்ஸல் காள்ஃபெல்ற் | ஸ்வீடன் |
| 1932 | - | ஜோன் கால்ஸ்வேதி | இங்கிலாந்து |
| 1933 | - | இவான் புனின் | ருஷ்யா |
| 1934 | - | லூஜி பிராண்டெல்லோ | இத்தாலி |
| 1935 | - | (வழங்கப்படவில்லை) | --- |
| 1936 | - | இயுஜின் ஓ நீல் | அமெரிக்கா |
| 1937 | - | ரோஜர் மாட்டின் டுகாட் | ஃபிரான்ஸ் |
| 1938 | - | பெர்ள் பக் | அமெரிக்கா |
| 1939 | - | ஃபிரான்ஸ் ஈமெல் சில்லான்பா | ஃபின்லாந்து |
| 1940 | - | (வழங்கபடவில்லை) | --- |
| 1941 | - | (வழங்கபடவில்லை) | --- |
| 1942 | - | (வழங்கபடவில்லை) | --- |
| 1943 | - | (வழங்கப்படவில்லை) | --- |
| 1944 | - | ஜொஹனஸ் வி ஜென்ஸன் | டென்மார்க் |
| 1945 | - | கப்ரியெல்லா மிஸ்ட்ரால் | சிலி |
| 1946 | - | ஹெர்மன் ஹெஸெ | ஜெர்மன் |
| 1947 | - | அந்திரே கிடெ | ஃபிரான்ஸ் |
| 1948 | - | ரி.எஸ். எலியட் | அமெரிக்கா இங்கிலாந்து |
| 1949 | - | விலியம் ஃபோக்னர் | அமெரிக்கா |
| 1950 | - | பேர்ட்ரன்ட் றஸல் | இங்கிலாந்து (ஐ.இ) |
| 1951 | - | பார் வாகர்க்விஸ்ற் | ஸ்வீடன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 1952 | - | ஃபிராங்கோயிஸ் மொறியாக் | ஃபிரான்ஸ் |
| 1953 | - | வின்ஸ்ரன் சேர்ச்சில் | இங்கிலாந்து (ஐ.இ) |
| 1954 | - | ஏணஸ்ற் ஹெமிங்வே | அமெரிக்கா |
| 1955 | - | ஹோல்டர் லக்ஸ்னெஸ் | ஐஸ்லாந்து |
| 1956 | - | ஜுவான் றமொன் ஜிமென்ஸ் | ஸ்பெயின் |
| 1957 | - | அல்பர் கமூ | அல்ஜீரியா ஃபிரான்ஸ் |
| 1958 | - | போரிஸ் பாஸ்தர்நாக் | ருஷ்யா |
| 1959 | - | ஸல்ரோர் குவாஸி மோடோ | இத்தாலி |
| 1960 | - | ஸெயின்ற் ஜோன் பெர்ஸ் | ஃபிரான்ஸ் |
| 1961 | - | இவோ அன்ட்றிக் | யூகோஸ்லேவவியா |
| 1962 | - | ஜோன் ஸ்டீன்பெக் | அமெரிக்கா |
| 1963 | - | ஜியோகஸ் ஸெஃபரிஸ் | கிரேக்கம் |
| 1964 | - | ழீன் போல் ஸார்த்தர் | ஃபிரான்ஸ் |
| 1965 | - | மிஹயீல் ஷோலக்கவ் | ருஷ்யா (சோ.யூ) |
| 1966 | - | சாமுவல் அக்னொான் | இஸ்ரேல் |
| | | நெல்லி ஸாக்ஸ் | ஜேர்மன்/ ஸ்வீடன் |
| 1967 | - | மிகுவல் ஏங்கல் அஸ்தூரியாஸ் | குவாதமாலா |
| 1968 | - | யஸூநரி கவபட்டா | ஜப்பான் |
| 1969 | - | சாமுவேல் பெக்கற் | அயர்லாந்து (ஐ.இ) |
| 1970 | - | அலெக்ஸாந்தர் ஸல்ஸெனித்சின் | ருஷ்யா (சோ.யூ) |
| 1971 | - | பாப்லோ நெரூதா | சிலி |
| 1972 | - | ஹென்றிக் போல் | ஜெர்மன் |
| 1973 | - | பட்றிக் வைற் | ஆஸ்திரேலியா |
| 1974 | - | இவின்ட் ஜோன்ஸன் | ஸ்வீடன் |
| | | ஹரி மாட்டின்ஸன் | ஸ்வீடன் |
| 1975 | - | இயுஜினியோ மொன்டேல் | இத்தாலி |
| 1976 | - | ஸோல் பெல்லோ | அமெரிக்கா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 1977 | - | விஸென்ரி அலக்ஸான்ட்ரே | ஸ்பெயின் |
| 1978 | - | ஐஸக் பஷேவிஸ் சிங்கர் | போலந்து/ அமெரிக்கா |
| 1979 | - | ஒடிஸியஸ் இலிற்றில் | கிரேக்கம் |
| 1980 | - | செஸ்லாவ் மிலோஸ் | போலந்து/ அமெரிக்கா |
| 1981 | - | எலியாஸ் கனற்றி | பல்கேரியா |
| 1982 | - | கப்ரயல் கார்சியா மார்க்வெஸ் | கொலம்பியா |
| 1983 | - | வில்லியம் கோல்டிங் | இங்கிலாந்து (ஐ.இ) |
| 1984 | - | ஜாரஸ்லாவ் ஸெய்ஃபேட் | செக்கோஸ்லவாகியா |
| 1985 | - | குளோட் ஸிமோன் | ஃபிரான்ஸ் |
| 1986 | - | வோல் ஸொயின்கா | நைஜீரியா |
| 1987 | - | ஜோஸஃப் ப்ரொட்ஸ்கி | ருஷ்யா (சோ.யூ)/ அமெரிக்கா |
| 1988 | - | நகீப் மஹ்ஃபவுஸ் | எகிப்து |
| 1989 | - | கமிலியோ ஜோஸ் ஸெலா | ஸ்பெயின் |
| 1990 | - | ஒக்ராவியோ பாஸ் | மெக்ஸிகோ |
| 1991 | - | நடீன் கோர்டிமர் | தென்னாபிரிக்கா |
| 1992 | - | டெரக் வால்கொற் | கரீபியன் - மேற்கிந்திய தீவுகள் |
| 1993 | - | ரோனி மொறிஸன் | அமெரிக்கா |
| 1994 | - | கென்ஸாபுரோ ஓய் | ஜப்பான் |
| 1995 | - | ஸீமஸ் ஹீனி | அயர்லாந்து (ஐ.இ) |
| 1996 | - | விஸ்லாவா ஸிம்போர்ஸ்கா | போலந்து |
| 1997 | - | டாரியோ ஃபோ | இத்தாலி |
| 1998 | - | ஜோஸ் ஸரமகோ | போர்ததுக்கல் |
| 1999 | - | குந்தர் கிறாஸ் | ஜெர்மனி |
| 2000 | - | காவோ ஹிங்ஜியான் | சீனா/ஃபிரான்ஸ் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புக்கர் பரிசு வென்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1969 | - | பி.எச். நியூபி |
| 1970 | - | பேணிஸ் றூபென்ஸ் |
| 1971 | - | வி.எஸ, நைபோல் |
| 1972 | - | ஜோன் பேர்கர் |
| 1973 | - | ஜே.ஜி. ஃபர்ரல் |
| 1974 | - | நடீன் கோர்டிமர் |
| 1975 | - | றுத் புறோவர் ஜாப்வாலா |
| 1976 | - | டேவிட் ஸ்ரோறி |
| 1977 | - | போல் ஸ்கொட் |
| 1978 | - | ஐரிஸ் முர்டொக் |
| 1979 | - | பெனிலோப் ஃபிற்ஸ்ஜெரால்ட் |
| 1980 | - | வில்லியம் கோல்டிங் |
| 1981 | - | ஸல்மான் ருஷ்டி |
| 1982 | - | தோமஸ் கெனியலி |
| 1983 | - | ஜே.எம். கொயற்லி |
| 1984 | - | அனிற்ரா ப்ரூக்னர் |
| 1985 | - | கேரி ஹல்ம் |
| 1986 | - | கிங்ஸ்லி எமிஸ் |
| 1987 | - | பெனிவோப் லைவ்லி |
| 1988 | - | பீற்றர் கேரி |
| 1989 | - | கஸூவோ இஷிகுரோ |
| 1990 | - | எ.ஏஸ். பியாட் |
| 1991 | - | பென் ஒக்ரி |
| 1992 | - | மைக்கல் ஒண்டாஜ்ஜே; பாரி அன்ஸ்வேத் |
| 1993 | - | றொட்டி டோய்ல் |
| 1994 | - | ஜேம்ஸ் கெல்மன் |
| 1995 | - | பற் பார்க்கர் |
| 1996 | - | கிரஹாம் ஸவிஃப்ற் |
| 1997 | - | அருந்ததி ரோய் |
| 1998 | - | இயன் மக் இவான் |
| 1999 | - | ஜே.எம், கொயற்ஸி |
| 2000 | - | மார்கறற் அற்வூட் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படத்தில் இடமிருந்து வலமாக
எழுத்தாளர் சாந்தன்
எழுத்தாளர் எஸ்.ஷங்கரநாராயணன்
நண்பர் சிராஜ்
எழுத்தாளர் ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

அய்யாத்துரை சாந்தன் சிலோன் தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று டிராஃப்ட்ஸ்மேனாக, ‘காட்’ பயிற்சியாளராக, பொறியாளராக, விரிவுரையாளராகப் பணிகள் ஆற்றியவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் படைப்பளிக்கிறார். ஒரு நாவல், மூன்று சிறுகதைத் தொகுதிகள், ஒரு புதுக்கவிதைத் தொகுதி என ஆங்கிலத்தில் வெளியாகியுள்ளன. தமிழில் ஒரு நாவல், சோவியத் யூனியன், கென்யப் பயண அனுபவக் குறிப்புகள் உட்பட பதினைந்து நூல்கள் வெளியாகியுள்ளன. தமிழ் எழுத்தாளராக 1975லும், ஆங்கில எழுத்தாளராக 2000லும், இருமுறை ஸ்ரீ லங்கா தேசிய சாகித்ய விருதினைப்பெற்றவர். இவரது கதைகள் பல்வேறு திரட்டுகளிலும், ருஷ்ய சிங்கள இந்தி மொழிகளிலும் இடம் பெற்றன. தற்போது யாழ்ப்பாணத்தில் வசிக்கிறார்.

ISBN 819092111-8

ரூ.100/-

pbd
0304013011 390.00
ULLAM ULA ILLAKIYAM
01/04/2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org